தியகூத முண்டாகின்றது. யாண்டு மண்டன்மையாயிய விசேஷ ணத்தின் ஞானமும் இந்திரிய கட சையோகமு முண்டாகின்ற னவோ, ஆண்டு மண் ணிருக்கின்ற தென்னும பிரதியகூத முண் டாகின்றது. யாண்டுக் கடதத்தன்மை மண்டன்மை யென்னும இரண்டு விசேஷணங்களின் ஞானமும் இந்திரிய சையோகமு முண்டாகின்றனவோ, ஆண்டுக் கடமண் ணென்னும் பிரத்தியகூத முண்டாகினறது. இவ்வாறுமுல கடத்தோடு இந்திரியத்தின் சை யோகமாகிய காரணம ஒன்றும; விஷயமாகிய கடமும ஒன்றும. கடதத்தன்மை மண்டன்மைச சாதிகள் கடத்தில் என்று மிரு க்கின்றன ; என்றுமும கடத்தன்மையோடு கூடிய கடமாதிர தைத ஞானகூ விஷயஞ செய்கின்றது. திரவியத தன்மை மண் டன்மை முதலிய ஜாதிகளையும உருவமுதலிய குணங்களையும கட மிருக்கிற தென்னும ஞானம விஷயஞசெய்கிறதில்லை. ஓகாலதது மண்ணிருக்கினற தெனனும கடஞானம கடதத்தில் கடதத்தன்மை யையும விஷயஞ செய்கிறதில்லை; ஆனால் மண்டனமையையும கா தலையும அங்ஙனமே மண்டனமையின சமபநததையும விஷ யஞ செய்கின்றது; ஓ காலதது மண்டன்மை கடதனமைச சாதிகளையும, அவறறிறகுக் கூடததிலுள்ள சமபநததையும, அங்ஙனமே கடதனகளைம விஷயஞசெய்கின்றது. இவ்வாறுல ஞானத்தின மேலுமை ராபகங்களின பேதமினறிச சாப வியாது. ஆண்டு விசேஷண ஞானமாயிய சாமகரியின் பேதமே ஞானதத்தின விலக்ஷணத்தனமைககு ஏதுவாம. யாண்டுக் கடமிரு ககின்ற தெனனும ஞான முண்டாகினறதோ, ஆனைக் கடமும, கடத்தன்மையும, கடதத்தில கடதத்தனமையின் சமவாய சமபந்த மும விளங்குகின்றன. யாண்டு மண்ணிருகின்ற தெனக் கடத்தின் ஞான முண்டாகின்றதோ, ஆண்டுக கடமும, மனடன்மையும், கடத்திலுள்ள மண்டன்மையின் சமவாயசமபந்தமும விளங்கு கின்றன.

## கரு. விசேஷண விசேஷியங்களின் சொரூபம்.

ஆண்டுக் கடதத்தனமை மண்டன்மைகள விசேஷணமும,கட்ம விசேஷியமுமாம. ஏனெனின், சமபநதத்தின பிரதியோகி விசே ஷணமெனப் படும, சமபநதத்தின் அநுயோகி விசேஷிய மெனப படும. எதன் சமபநத முண்டாகின்றதோ அது சமபநதத்தின் பிரதியோகியெனப்படும், எதிற சம்பநத முண்டாகிறதோ அது அநு

யோகியெனப்படும். குடத்தன்மை மண்டன்மைகளின் சமவாய சம்பந்தம கடத்திற் காணப்படுகின்றது. ஆகலின், குடத்தன்மை மண்டன்மைகள்சமவாயசம்பந்தத்தின் பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமாம், சம்பந்தத்தின் அதுயோகி கடமாகலின் விசே ஷியமாம. யாண்டுத் தண்டி புருஷனென்னும் ஞான மூண்டாகின்ற தேர, ஆண்டுத் தண்டத்தன்மை விசிஷ்டதண்டம் சையோகசம் பந்தத்தால புருஷத்தன்மை விசிஷ்ட புருஷனிடத்துக் காணுகின் றது. அதன் ஞானமே காஷ்ட்மூடைய மனிதனென உண்டாகின் றது. ஆண்டுக் காஷ்டதன்மை விசிஷ்ட 'தண்டம் மனிதத்தன்மை விசிஷ்ட புருஷனிடத்துச சையோக சமபந்ததால் தோற்றுகின் றது. முதல் ஞானதில் தண்டத்தன்மை விசிஷ்டதண்டம் சையோகதின் பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமாம்;புருஷ த்தன்மை விசிஷ்ட புருஷன் சையோகத்தின் அதுயோகியா யிருத் தலின் விசேஷியமாம. இரண்டாவது ஞானத்தில் காஷ்டத்தன் மை விசிஷ்ட தண்டம பிரதியோகியாம, மனிதத்தன்மை விசிஷட புருஷன் அதுயோகியாம. இரண்டு ஞானங்களினும் தண்டம் விசேஷணமும புருஷன் விசேஷியமுமா யிருக்கினும, முதல்ஞான தநிலோ, தண்டதில் தண்டதனமை தோற்றுகின்றது; காஷட த்தன்மை தோன்றுகின்றதிலலீ. புருஷனிடதுப் புருஷதன்மை தோற்றுகிறது; மனிதத்தன்மை தோறறுகிறதிலலீ. அங்ஙனமே இரண்டாவதுஞான தநிலும் தண்டதில் காஷ்டதனமைதோற்று கின்றது; தன்டத் தன்மை தோறறுகிற திலலீ. புருஷனிடதது மனிதத்தன்மை தோற்றுகின்றது; புருஷத்தன்மை தோற்றுகிற திலலீ. தண்டத்தனமையும காஷ்டத தன்மையும தண்டத்தின் விசேஷணங்களாம. ஏனெனின், தண்டத்தன்மை முதலியவற்றி ற்குத் தண்டத்திலுள்ளீ சமபந்த மெதுவோ, அதன் பிரதியோகி தண்டததன்மை முதலியனவாம. தண்டத்தன்மை முதலியவற்றி ற்குத் தண்டததில் சமபந்த மிருக்கின்றது. ஆகலின் சம்பந்தத் திற்கு அதுயோகியா யிருத்தலின தண்டம் விசேஷியமாம். இவ் வாறாற்றல் தண்டததன்மைக்குத் தண்டம விசேஷியமாம; புருஷனு க்குத்தண்டம் விசேஷணமாம;ஏனெனின், தண்டததிற்குப் புருஷ னிடத்துள்ள சையோகசமபந்த மெதுவோ, அதன் பிரதியோகி தண்டமாம; ஆகலின் அது புருஷனுக்கு விசேஷணமாம், அச் சையோகததிற்குப் புருஷன் அதுயோகியாகலின் விசேஷியமாம்.

புருஷனுக்குத் தண்டம விசேஷணமாதல் போலவ புருஷத்தன்மை மனிதத் தன்மைகளும் புருஷனுக்கு விசேஷணங்களாம். ஏனெனின், தண்டத்திற்குப் புருஷனெடு சையோக சமபந்தம் தோற்றுவதுபோலப் புருஷத்தன்மை முதலியசாதிக்குச் சமவாயசம்பந்தந தோற்றுகின்றது. அசசமபந்தத்திற்குப் புருஷத தன்மைமுதலியன பிரதியோகியா யிருத்தலின் விசேஷணமும, புருஷன் அதுயோகியா யிருத்தலின் விசேஷியமுமாம. ஆனல் இத்துணைப் பேதமுண்டு:— புருஷனது தாமமீகிய புருஷத்தன்மை மனிதத்தன்மைமுதலியன எவையோ, அவை கேவல்ம புருஷவியக்தியின்விசேஷணங்களாம. புருஷத்தன்மைமுதலிய தாமவிசிஷ்ட புருஷவியக்தியில் தண்டமுத லியன விசேஷணமாம. தண்டமுதலியனவும், தண்டதத்தன்மைமுத லிய தர்மங்களின் விசேஷியமும, புருஷத்தன்மை முதலியவற்றின் விசேஷணமுமாம. ஆனல தண்டத்தன்மைமுதலிய விசேஷணங்க ளின் சமபநதத்தைக்கொண்டு புருஷன் முதலிய விசேஷியத்தின் சமபநதி உதாதர காலத்தில தண்டாதிகளாம. இவ்வாற்றல் கேவல வியக்தியில் புருஷத்தன்மை மனிதத்தன்மைகள் விசேஷணமாம். புருஷத்தன்மை அல்லது மனிதத்தன்மை விசிஷ்ட புருஷ வியக்தியில் தண்டத்தன்மை அல்லது காஷ்டத்தன்மை விசிஷ்டதண்டம் விசேஷணமாம. கேவலதண்டவியக்தியில தண்டத்தன்மையல்லது காஷ்டத்தன்மை விசேஷணமாம.

இவ்வாற்றல், ஞானதாறகு விஷயமாதலிவிசாரிக்கின் வெகு சூக்ஷ்மமாம. இதனிச சக்கரவர்த்திகதாதர பட்டாசாரியர் சங்கதி யென்னும நூலில எழுதியிருக்கின்றனர. ஜயராமபஞ்சானன பட் டாசாரியரும, அங்ஙனமே இரகுநாதபட்டாசாரியரும விஷயத் தன்மைவிசார மென்னுநூலில எழுதியிருக்கின்றனர. சூக்ஷ்ம பதா ர்த்தங்கள் சமஸ்கிருதவாக்கூனன்றி எழுதப்படா; அதிதற் கரியன வுமாம். அதுபற்றி மிகவும ஸ்தூலமான விதமாதிரம ஈண்டு அமி விக்கப்பட்டிருக்கின்றது.

## கசு. விசேஷண விசேஷியங்களினது ஞானத்தின் பேதபூர்வகமான நியாயமதத்தினது பிரமஞானத்தின் சமாப்தி.

இவ்வாற்றால், விசிஷ்ட ஞானத்திற்கு ஏது விசேஷண ஞான மாம்; அவ்விசேஷணதத்தின் ஞானம் சிலவிடத்து ஸமிருதிரூபமாம, சிலவிடத்து நிரூவிகற்பமாம.' சிலவிடத்து விசிஷ்டஞானமே விசே ஷணமாம். விசேஷியத்திற்கு முன் விசேஷண மாத்திரத்தோடு இந் திரியத்திற்குச் சம்பந்தமுண்டாகின்றது. ஆண்டுவிசேஷணம் விசே ஷண மாத்திரமாக இந்திரிய சமபந்த ஜந்தியமாம். அதுவும் விசிஷ்ட ப்பிரதியக்ஷமேயாம். யாண்டுப் புருஷனின்றிக் கேவல தண்டத் தோடுஇந்திரியத்திற்குச் சமபந்தமுண்டாய்ப் பிற்கணத்தில் புருஷ னுஞ்செ ம்பந்தமாகின்றதோ, ஆண்டுத் தண்டரூபவிசேஷணத்தின் ஞானம் விசேஷணமாத்திரத்தின் சமபந்தத்தா னுண்டாகின்றது. அதற்குப் பிற்கணத்தில் தண்டிபுருடன் என்னும விசிஷ்டத்தின் ஞானமுண்டாகின்றது.கடமிருகிற தென்னும் முதல்விசிஷ்டஞான மெதுவோ, அதற்குமுன் கடத்துவருபவிசேஷணத்தின் நிர்விகற்ப ஞானம் இந்திரிய சமபந்தததா னுண்டாகின்றது. பிற்கணதத்தில்கட மிருக்கிறதென்னும்கடத்துவவிசிஷ்டகடஞானம்உண்டாகின்றது. எவ்விந்திரிய் சம்பந்ததத்தால் கடத தன்மையின் நிர்விகறப ஞான முண்டாகின்றதோ, அவ்விந்திரிய சம்பந்தத்தாற்றானே கடத்துவ விசிஷ்டகடத்தின் சவிகற்ப ஞானமுண்டாகின்றது. கடத்தன்மை யின் நிர்விகற்ப ஞானதத்தில் இந்திரியம கரணமும, இந்திரியத்தின் சையுக்த சமவாய சமபந்தம வியாபாரமு மாம. கடத் தன்மை விசிஷ்ட கடத்தின் சவிகற்ப ஞானத்தில் இந்திரியத்தின் சையுக்த சமவாய சம்பந்தம கரணமும்,நிரூவிகற்பஞானம் வியாபாரமுமாம். இவ்வாறு ஓர் ஆதுனிக(நவீன)யையாயிகர் நிர்விகற்பக சவிகற்பக ஞானங்களில் கரணதத்தின் பேதம கூறியிருக்கின்றனர்.

அது சம்பிரதாயதத்திற்கு விருத்தமாம். ஏனெனின், வியாபார முண்டய அசாதாரண காரணம் கரணமெனப்படு மென்னும் மதத் தில் பிரத்தியக்ஷ ஞானதத்திற்குக் காணமாயிருத்தலால் இந்திரி யமே பிரத்தியக்ஷப் பிரமாணமெனப் படுகின்றது. ஆதுனிகர் கிரம ப்படி சவிகற்பகஞானதத்தின் கரணமாயிருததலால், இந்திரியத்தின் சமபந்தத்தையும பிரமாண மெனல் வேண்டும. சம்பிரதாயமுடை

யோர் சம்பந்தத்தைப் பிரமாணமாகக் கூறினுலல்லவாகலின், இர ண்டு பிரத்தியகூ ஞானங்களுக்கும இந்திரியமே காரணமாம. ஆத லால் இந்திரிய பிரத்தியகூப் பிரமாணமாம். ஆனல் நிர்விகற்பக ஞானத்தில் இந்திரியதின் சமபந்தமாத்திரம வியாபாரமாம். சவி கற்பஞானத்தில் இந்திரியத்தின் சமபந்தமும் நிர்விகற்பஞானமு மாகிய இரண்டுமே வியாபாரமாம. இருவகைப பிரத்தியகூ ஞானத் திற்குங் காரணமாயிருத்தலால் இந்திரியம பிரத்தியகூப் பிரமாண மாம. தாமதாமிகளின் சமபந்தத்தை விஷயஞ செய்யும ஞானம் சவிகற்பகஞான மெனப்படும. கடமிருக்கின்றது என்னும ஞானத் தால் கடத்தில் கடத தன்மையின சமவாயம விளங்குகின்றதாக லின், சவிகற்ப ஞானத்திறகுத காரண தர்மி சமவாயமென்னும் மூன்றும் விஷயமாம. ஆதலால் கடமிருக்கிறது என்னும விசி ஷ்டஞானம சமபந்தத்தை விஷயஞ்செய்தலால் சவிகறபக மென ப்படுகின்றது. அதனின் வேறாய ஞானத்தை நிருவிகற்பக ஞான மென்பர். சவிகற்பக நிருவிகறபக ஞானங்களின் இலக்கண சித கண்டியில விவரதாரமாய் எழுதப்பட்டிருகின்றது. அவ்வர்த்தம் சூக்ஷ்மமா யிருததலின் ஈண்டு விவரதாரமாய் எழுதப்படவில்லை. இவ்வாறறின் முதல்விஷிஷட ஞானததை யுண்டுபண்ணும் விசேஷ ணஞானம் நிருவிகற்பக ஞானமாம். ஒருமுறை கடமிருக்கிறது என்னும் விசிஷ்டஞான முண்டாயப் பினனாக் கடத்தின் விசிஷ்ட ஞான முண்டாகுமிடத்து, கடததோடு இந்திரியதிற்குச் சமபந்த மிருக்கின்றது. முன் அநுபவித்த அதே கடததன்மையின் ஸ்மிருதி யுண்டாகினறது. அதறகுப் பிற்கனததில் கடமிருக்கிற தென் னும் விசிஷ்டஞான முண்டாகின்றது. இவ்வாறறின் இரண்டாவது முதலிய விஷிஷட ஞானத்திற கேதுவாகிய விசேஷண ஞானம் ஸ்மிருதிரூபமாம்.

யாணடித் தோஷதமோகாடுகடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜு வோடாயினும் சுத்தியோடாயினும சமபந்த முண்டாகின்றதோ, ஆண்டுத் தோஷத்தின் வலியால் சாப்பத்தன்மையின் அல்லது இரஜதத்தன்மையின் ஸ்மிருதி யுண்டாகின்றது; இரஜ்ஜுத்தன்மை சுத்தித் தன்மைகளின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை. விசிஷ்ட ஞானத்திற் கேதுவாகிய விசேஷண ஞானம் எத் தர்மத்தை விஷ யஞ செய்கின்றதோ, அத்தர்மமே விசிஷ்டஞானத்தோடு விஷயத்

தில் விளங்குகின்றது. சாபபத் தன்மை இரஜதத் தன்மைகளின் ஸமிருதி ஞானம் இரஜ்ஜுத்தன்மை சுத்தித்தன்மைகளே விஷயஞ் செய்கிற தில்லை; ஆனால் சாப்பத் தன்மை இரஜதத் தன்மைகளே விஷயஞ செய்கின்றது. ஆகலின் சாப்ப மிருக்கிறது என்னும இர ஜ்ஜுவின் விசிஷ்ட ஞானத்தால் இரஜ்ஜுவில் சர்ப்பத் தன்மை தோற்றுகின்றது. இரஜதம் இருக்கின்ற தென்னும சுத்தியின் விசி ஷ்டஞானத்தால் சுத்தியில் இரஜதத்தன்மை தோற்றுகின்றது. சர் ப்பமிருக்கின்ற தென்னும விசிஷ்டப் பிரமத்தில் விசேஷியம இர ஜ்ஜு, சர்ப்பத்தன்மை விசேஷணம். ஏனெனின், சர்ப்பத்தன்மை யின சமவாய சமபந்தம இரஜ்ஜுவில் தோற்றுகின்றது. அச் சம வாயத்திற்குச் சர்ப்பதன்மை பிரதியோகியும, இரஜ்ஜு அநு யோகியுமாம. அங்ஙனமே வெள்ளியிருக்கின்றது என்னும பிரமத் தால் சுததியில் இரஜதத்தன்மையின் சமவாயம தோற்றுகின்றது. அசசமவாயதற்குப் பிரதியோகி இரஜதத்தன்மையாகலின் அது விசேஷணமாம; சுததி அநுயோகியாகலின் விசேஷியமாம். இவ் வாற்றால் சகல பிரமஞானங்களுக்கும விசேஷணத்தின் அபாவ மூடையதன்கண் விசேஷணம் தோற்றுகின்றது. ஆகலின் நியாய மதத்தில் விசேஷணத்தின் அபாவமுடையதன்கண் விசேஷணந் தோறறுதல் பிரமம் (மயக்கம) எனப்படும். அதனையே அயதார்த்த ஞான மென்பர்; அந்நியதாக்கியாதி யென்னும கூறுவர். பிரமஞானத் தின்கண் சூக்ஷமவிசாரத்தைஅந்நியாதக்கியாதிவாதமென்னும்நூலில் சக்கரவர்த்தி கதாதரபட்டாசாரியர் எழுதியிருக்கின்றனர். அஃது அறிதற்கரியதாகலின் ஈண்டெழுதப்படவிலலை.இவ்வாற்றால் நியாய மதத்தில் சாப்பமுதலிய பிரமத்திற்கு விஷயம இரஜ்ஜுமுதலியன வாம; சர்ப்பாதிக ளன்று. பிரத்தியக்ஷவடிவமான பிரம(மயக்கம) ஞானமும இந்திரிய ஜந்தியமாம்.

## கஎ. வேதாந்த சித்தாந்தத்தின் அநுசாரமாக இந்திரிய ஜந்தியமாகாத பிரமஞானத்தின்றன்மை.

வேதாந்த சித்தாந்தத்தில் சர்ப்பப்பிரமத்திற்கு விஷயம இரஜ் ஜுவன்று; அநிாவசனீய சர்ப்பமாம. பிரமஞானம் இந்திரியஜந்திய மன்று. நியாய மதத்தில் சகல ஞானங்களுக்கும் ஆசிரயம ஆத்மா வாம். வேதாந்த மததில் ஞானத்திற் குபாதானகாரணம் அநதக் காரணமாகலின் அந்தக்கரணம் ஆசிரயமாம. நியாயமதத்தில் சுக மூதலியவற்றை ஆதமாவின் குணமென்பர். அவை மூலுவதும

அந்தக்கரணத்தின் பரிணமமாம். ஆகிலின் அந்தக்கரணத்தின்தர்மமாம. ஆத்மாவின் தர்ம மன்று. ஆனல் பிரமஞானம் அந்தக்கரணத்தின் பரிணம மன்று; அவித்தையின் பரிணமமாம. இதனை விசாரச்சாகரத்தில் எழுதியிருத்தலால், நாண்டு எழுதுவதனற் பயனில்லை.

பிரமஞானத்தின் சுருக்கமாகிய தன்மை இதுவாம்:—சாப்ப சம்ஸகாரத்தோடு கூடிய புருஷனது தோஷ சகித நேத்திரத்திற்கு இரஜ்ஜுவுடன் சம்பந்த மூண்டாகுங்காலத்து இரஜ்ஜுவின் விசேஷ தாமமாகிய இரஜ்ஜுத்தன்மையும தோற்றுகிறதில்லை; இரஜ்ஜுவினுள்ள வைக்கோல் வடிவமாகிய அவயவம் யாதோ அதுவும் தோற்றுகிறதில்லை; ஆனல் இரஜ்ஜுவில் சாமானிய தர்மமாகிய இதந்தை (இதுவெனுந்தன்மை) தோற்றுகின்றது. அங்ஙனமே சுத்தியில் சுத்திதன்மையும், கருமுதுகுடைமையும், முக்கோணத் தன்மையும் தோற்றுகிற தில்லை. ஆனல் சாமானிய தர்மமாகிய இதந்தை தோற்றுகின்றது. ஆகலின் நேதந்திர வாயிலாக அநதக்கரணம இரஜ்ஜுவை யடைநது இதுவென்னும வடிவினதாகிய பரிணமத்தை யடைகின்றது. அநத இது வென்னும வடிவினதாய விருத்தி யுபகித (விருத்தியை யுபாதியாக வுடைய) சேதனதத்தின்கணுள்ள அவித்தையின் சரிப்பாகாரம் ஞானகாரமென்னும் இரண்டு பரிணமங்க ளுண்டாகின்றன. அங்ஙனமே தண்ட சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷத்தோடுகூடிய நேத்திரத்திற்கு இரஜ்ஜுவின் சமபந்தத்தால் மாண்டு விருத்தி யுண்டாகின்றதோ, ஆண்டுத் தண்டமுழி அதன் ஞானமும அவித்தையின் பரிணமங்க ளாகின்றன. மாலையும் அதன் ஞானமும், மாலைச சம்ஸ்காரத்தோடு கூடிய புருஷனது தோஷ சகித நேத்திரத்திற்கு இரஜ்ஜுவோடு சமபந்தமுண்டாக, எதனாது இதுவென்னும வடிவினதாய விருத்தி யுண்டாகின்றதோ, அதனாது விருத்தி யுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணமமாகின்றன. மாண்டு ஒரு இரஜ்ஜுவோடு மூன்று புருஷாகளது தோஷத்தோடுகூடிய நேத்திரங்களுக்குச சமபநத முண்டாக, சாப்பம் தண்டம் மாலையென்னும் ஒவ்வொன்றன் பிரமம அவர்களுக் குண்டாகின்றதோ, ஆண்டு எவன் விருத்தி யுபகிதத்தில எவ்விஷய முண்டாயிருக்கின்றதோ, அவனுக்கு அவ்விஷயமே காணப்படுகின்றது. மற்றவனுக்குக் காணப்படுகிறதில்லை. இவ்வாற்றுல் பிரமஞானம் இந்திரிய,

ஜந்திய மன்று; அவித்தையின் விருத்தி ரூபமாம். ஆனல் எந்த விருத்தி யுபகித சேதனத்திலுள்ள அவித்தையின் பரிணமம் பிரம மோ, அவ்வித்துவென்னும் வடிவினதாய விருத்தி நேத்திரத்தோடு இரஜ்ஜு முதலிய விஷயங்களுக குண்டாம் சம்பந்தத்தா னுண்டா கின்றது. இதனல் பிரம ஞானதத்தில் இந்திரிய ஜந்நியத் தன்மை தோற்றுகின்றது. அதிாவசனீயகயாதியின்நிரூபணமும்அந்நியதா க்கியாதி முதலியவற்றின் கண்டனமும் கௌடப் பிரஹ்மாநந்தராற் செய்யப்பட்ட கியாதிவிசாரதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவை மிகக் கடினமாகலின் ஈண்ட டெழுதப்படவில்லே. இவ்வாற்றல் வேதாந்த சித்தாந்ததத்தில் பிரமஞானம் இந்திரிய ஜந்நியமன்று.

## கஅ. நியாயத்திற்கும் வேதாந்தத்திற்குமுள்ள அந்நிய வேற்றுமை.

வேதாந்த சித்தாந்தத்தில அபாவதத்தின் ஞானமும் இந்திரிய ஜந்நியமன்று. அதுபலப்தியெனனும் வேறு பிரமாணத்தால்அபாவ த்தின் ஞான முண்டாகின்றது. ஆகலின் அபாவத்தினது பிரத்தி யகூஷதத்திற் கேதுவாக விசேஷணத தன்மைச சமபந்தத்தை அங் கீகரித்தல் நிஷ்பலமாம். ஜாதிக்கும் வியக்திக்கும் சமவாய சம்ப நதமில்லே. ஆனல் தாதாத்மிய சமபந்த முண்டு. அந்நனமே குண த்திற்கும் குணிக்கும, கிரியைக்கும காததாவிற்கும, காரியததிற் கும உபாதான காரணதத்திறகும தாதாத்மிய சம்பந்த முண்டு. ஆகையால் சமவாய ஸ்தானத்தில் தாதாத்மியத்தைக் கூறுகின்ற னர். துவக்கு முதலிய இந்திரியங்கள் எந்நனம பூத ஜந்நியமோ, அந்நனமே சுரோத்திரேந்திரியமும ஆகாய ஜந்நியமாம; ஆகாய வடிவமன்று. மீமாம்ஸாமதத்தில சத்தம நிரவிய மாம். வேதாந்த மதத்தில குணமாமம. ஆனல நியாயமதத்திலோ சத்தம ஆகாயத் தின் குணமேயாம. வேதாநத மதத்தில வித்தியாரணிய சுவாமி கள பஞ்ச பூதங்களுக்கும குணம கூறியிருக்கின்றார். வேதாந்த மதத்தில்வாசஸபதிமிசிரா மனமஇநதிரியமெனக்கொண்டிருக்கின் றார். மற்றைய நூலாசிரியாகள் மனதை இநதிரியமெனக் கொள்ள வில்லே. எவர்கள் மதத்தில மனம் இந்திரிய மன்றே, அவர்கள் மதத்தில் சுக துகங்களின் ஞானம பிரமாண ஜந்திய மன்று; ஆகையால் பிரமையன்று. ஆனலசுகதுக்கங்கள்சாக்ஷிபாவியமாம் வாசஸ்பதிமிசிரர் மதத்தில சுக முதலிப்வற்றின் ஞானம் மனரூபப்

பிரமாண ஜந்நியமாம். ஆகையாற் பிரமையாம். பிரஹ்மத்தின் அபரோக்ஷ ஞானமோ இரண்டு மதங்களிலும் பிரமையாம. அது வாசஸ்பதிமிஸ்ரர்மதத்தில் மனரூப பிரமாணஜந்நியமும, மற்றை யோர் மதத்தில் சப்தரூப பிரமாண ஜந்நியமுமாம்.

## ககக. சாரக்கிராகி (சாரத்தைக் கிரகிக்கும்) திருஷ்டியினுல் வாசஸ்பதி மத்தின் (மனதினது. இந்திரியத்தன்மையின்) அங்கீகாரம்.

எவர்கள் மதத்தில் மனம இந்திரிய மன்றோ, அவாகள மதத்தில் இந்திரிய ஜந்நியத்துவம பிரதத்தியக்ஷ ஞானத்தின் இலக்ஷண மன்று. ஆனல் விஷய சேதனத்திற்கு விருத்தி சேதனத்தோடுள்ள அபேதமே பிரத்தியக்ஷ ஞானத்தின் இலக்ஷணமாம். விருத்திசேதனத்திற்கும் விஷய சேதனத்திற்கும அபேத முண்டாகுந் தன்மை விசார சாகரத்தில் ஸ்பஷ்டமாம. வாசஸ்பதியின் மதமும நன்றே. ஆனல, வாசஸ்பதியின் மதத்தில் இத்தோஷங்கள் கூறுகின்றனர:— (க) மனத்திற்கு அசாதாரண விஷய மிலலை. ஆகலின் மனம இந்திரிய மன்று. (உ) கீதையின் வசனத்திற்கும விரோதமாம. கீதையின் மூன்றுவது அத்தியாயத்தின நாற்பத்திரண்டாவது சுலோகத்தில் மனம இந்திரியங்களின் பரமாம (இந்திரியங்களுக்கு மேலானதாம்) என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மனமும் இந்திரியமாகுமாயின் இந்திரியத்தினும மனம பரமெனல் சமபவிபாது (ஈ) மானசஞானத்திற்குப்பிரஹ்மமவிஷயமாகீதென்று சுருதி ஸ்மிருதிகளில எழுதப்பட்டிருக்கின்றது. வாசஸபதியான வர்மனத்திற்கு இந்திரியத்தன்மையை அங்கிகரித்தபிரஹ்ம சாக்ஷாத்காரமும் மனரூப இந்திரிய ஜந்நியமாமாகீலின் மானசமாமெனக் கூறியிருக்கின்றனர். அஃ விருத்தமாம். (ச) அந்தக்கரணத்தின் அவஸ்தையை மன மென்பா. அவ்வந்தக்கரணம பிரத்தியக்ஷ ஞானத்திற்கு ஆசிரயமா யிருத்தலின் கர்த்தாவாம். யாது கர்த்தாவாகுமோ, அது கரணமாகாது. ஆகலின் மனம் இந்திரிய மன்று. எத்தோஷங்கள் மனதின் இந்திரியத்தன்மையில் சொல்லப்படுகின்றனவோ, அவை விசாரிதலுப் பாக்குமிடத்தில தோஷமாகா. ஏனெனின், (க) மனதின் அசாதாரண விஷயங்கள் சுகம் துக்கம இச்சை முதலியனவாம். அந்தக்கரண விசிஷ்டன் ஜீவன். (உ) கீதை

யில் இந்திரியங்களுக்குப் பரம் மன மெனக்கூறப்பட்டிருக்கின்றது. ஆண்டு இந்திரிய சப்தத்தால் புற விந்திரியங்கள் கொள்ளப்படுகின்றன. ஆகலின் புற விந்திரியங்களினும மன விந்திரியம பரமா மென்பது கீதாவசனத்தின் அர்த்தமாதலால் விரோதமில்லை.

(ரூ)மானசஞானத்திற்குவிஷயம் ப்ரஹ்மமன்றெனக் கூறுதற்கு இஃதப்பிராய மாம்:— சம தமாதி சமஸகார மின்றிய விகற்பித்த (கலக்கமுள்ள) மனதினுண்டாகியஞானதத்திற்கு விஷயம பிரஹ்ம மன்று. மானச ஞானத்தின் பலவியாப்பியத் தன்மை பிரஹ்மதத்தி லில்லை.விருத்தியிற் சிதாபாசன்பலமெனப்படுவன். அவனுக்கு(சிதா பாசனுக்கு) விஷயம பிரஹ்மமன்று. கடமுதலிய அநாத்மபதார்த் தங்களே விருத்தியடையுங்காலத்து விருத்திசிதாபாசனென்னுமிர ண்டற்கும பதார்தங்கள் வியாப்பிய (விஷய) மாகின்றன. பிரஹ் மாகார விருத்தியிற் சிதாபாசனுக்குப் பிரஹ்மம வியாப்பிய(விஷய) மன்று;விருத்திமாத்திரதிற்கு விஷயமாம்.இவ்விஷயம விசாரசாக ரத்தின் நான்காவது தரங்கத்தில தெளிவாகச் சொல்லப்பட்டிருக் கின்றது. பிரஹ்மதினிடதது மனதிற்கு விஷயமாக தன்மை நிஷேத திக்கபபட டிருத்தல்போலச சத்ததிற்கு விஷயமாக தன்மையும் நிஷேதிகக பட்டிருக்கின்றது. "யதோவாசோநிவர்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ - வாக்கானது மனதோடு சென்றடையாது எதனினின்றும திரும்புகின்றதோ" என்பது(சுருதி) நிஷேதவசனம். ஆண்டுசதத்ததாதாறேறுன்றியஞானத்திற்குவிஷயும் பிரஹ்மமன்று என்னுமபொருளை அங்கீகரிக்கின்றகாவாக்கியங்களுஞசத்தரூபமே யாம். அவற்றுனுண்டாகிய ஞானத்திற்கும் பிரமம் விஷயமாகாது; சித்தாந்தத்திற்கும பங்கமுண்டாகும். ஆதலால் நிஷேத வசனத் திற்கிது பொருளாம:—பிரஹ்மம் சத்தத்தின் சக்திவிருத்தி ஜந்ய ஞானத்திற்கு விஷயமாகாது;ஆனல் சுத்தத்தின் இலக்ஷணவிருத்தி ஜந்ய ஞானத்திற்கு விஷயமாகும் என்பதாம. அங்ஙனமே இல க்ஷணை விருத்தி ஜந்ய ஞானத்திலும சிதாபாச ரூப பலத்திற்குப் பிரஹ்மம விஷய மன்று.ஆனல் ஆவரண பங்கரூப விருத்தி மாத்திர த்திற்கு விஷயமாந் தன்மை பிரஹ்மத்தின்கண் ணுளது. சப்த ஜந் ய ஞானதிற்கு விஷயமாந்தன்மை முற்றிலும் நிஷேதிக்கப் படுவதில்லை. அதுபோல மானஸ ஞானதிற்கு விஷயமாந்தன்மை யும முற்றிலும நிஷேதிக்கப்படுகிறதில்லை. ஆனற் சம்ஸகாரமின்

மிய மனதிற்குப் பிரஹ்ம ஞானத்தில் ஏதுவாந் தன்மை யில்லை. மானச ஞானத்திலுள்ள சிதாபாச அம்சம் ஏதுவோ, அதற்கு விஷயமாந் தன்மையு மில்லை. சங்கை:—பிரஹ்ம ஞானத்தில் மனதிற்குக் கரணத் தன்மை யிருக்கின், பிரஹ்ம ஞானம் இரண்டு பிரமாணத்தாற் ரோன்றியதா மெனல் வேண்டும. ஏனெனின், மகாவாக்கியங்களில் பிரஹ்ம ஞானத்தின் கரணத்தன்மை யுள தெனப் பாஷ்யகாரர் முதலியோர்களால் எங்கும் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆதலால் அதன் நிஷேதமோ பொருந்தாது. மனதிற்கும் கரணதன்மை கூறுவோமாயின், பிரமையின் கரணம் பிரமாண மெனப்படி மாகலான், பிரஹ்மப் பிரமைக்குச் சத்தம் மனமென்னும் இரண்டு பிரமாணங்கள் சித்தமாகின்றன. ஆயின் அது திருஷ்ட விருத்தமாம். ஏனெனின், சாக்ஷ முதலிய பிரமைகளுக்கு நேத்திர முதலியன ஒவ்வொன்றே பிரமாணமாம். ஓர் பிரமைக்கு இரண்டு பிரமாணம் ஏதுவாதலைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. கையாயிகரும சாக்ஷமுதலிய பிரமையில் மனதிற்குச கசகாரித்தன்மையை யங்கீகரித்து, நேத்திர முதலியவற்றிற்கே பிரமாணத்தன்மை ஒப்பி யிருக்கின்றனர். மனதிற் கொப்பவில்லை. சுகமுதலியவற்றின் ஞானத்தில் கேவல மனதிற்கே பிரமாணத்தன்மை யங்கீகரித்திருக்கின்றனர். மற்றவற்றிற் கில்லை. ஆகலின் ஒரு பிரமைக்கு இரண்டினைப் பிரமாணமாகக் கூறுதல் திருஷ்ட விருத்தமாம். சுடத்தில் நேத்திரம் துவக்கு என்னும் இரண்டிந்திரியங்களுக்கும யோக்கியதை யிருத்தல்போல யாண்டு ஒரு பதார்த்தத்தில் இரண்டு இந்திரியங்களுக்கு யோக்கியதை யுண்டாகின்றதோ, ஆண்டும இரண்டு பிரமாணத்தால் ஒரு பிரமை யுண்டாகிற தில்லை. நேத்திரப் பிரமாணத்தால் சுடத்தின் சாக்ஷப் பிரமையும், துவக்குப் பிரமாணத்தால் துவாசப் பிரமையு முண்டாகின்றன. இரண்டு பிரமாணங்களால் ஒரு பிரமையின் உற்பத்தி காணப்படுகிற தில்லையென்று இவ்வாறு கூறுவானுயின், அச்சங்கை பொருந்தாது. ஏனெனின், பிரதியபிஜ்ஞாபிரத்தியக்ஷ முண்டாகுமிடத்துப் பூர்வ அநுபவமும இந்திரியமுமாகிய இரண்டு பிரமாணங்களால ஒருபிரமை யுண்டாகின்றது; ஆகலால் திருஷ்ட விருத்த மாகாது. யாண்டுப் பிரதியபிஜ்ஞை யுண்டாகின்றதோ, அண்டுப் பூர்வ அநுபவம சமஸ்காரவாயிலாக ஏதுவாம். சையோகமுதலிய சமபந்த வாயிலாக இந்திரியம் ஏதுவாம்.

ஆகலின் சப்ஸ்கரூப வியாபாரமுடைய காரணம் பூர்வ அநுபவ மாம். சம்பந்தரூப வியாபாரமுடைய காரணம் இந்திரியமாம். ஆக லின் பிரமைக்குக் காரணமாயிருத்தலின் இரண்டும் பிரமாணமாம்.

அங்ஙனமே பிரஹ்மசாகூஷாத்காரமாகிய பிரமைக்குச் சப்தம் மனமென இரண்டு பிரமாணங்க ளுளவெனக் கூறுதலில் திருஷ்ட விரோதமின்று.* மாறுகிய பிரஹ்மசாகூஷாத்காரத்திற்கு மனமாகிய இந்திரியத்தாற் ரேன்றிய தன்மை அங்கீகரிக்கின் பிரத்தியகூஷத் தன்மை விவாதமின்றிச் சித்திக்கின்றது. பிரஹ்ம ஞானத்திற்குச் கேவலம் சப்தத்தாற் ரேன்றிய தன்மை யங்கீகரிக்கின் விவாதத் தாற் பிரத்தியகூஷத்தன்மை சித்திக்கின்றது. தசம திருஷ்டாந்தத் திலும் இந்திரியத்தாற் ரேன்றிய தன்மை சத்தத்தாற் ரேன்றிய தன்மைகளுக்கு விவாதமுளது. இந்திரிய ஜந்திய ஞானத்திற்குப் பிரத்தியகூஷத தன்மையில் விவாத மில்லை. பிரத்தியபிஞ்ஞாபிரத்தி யகூஷத்தில் பூர்வ அநுபவத்தாற் ரேன்றிய சம்ஸ்காரம் சககாரியும் கேவல இந்திரியம பிரமாணமுமாமெனக் கூறின், அதற்குச் சமா தானம் இதுவாம்:—பிரஹ்மசாகூஷாத்காரமாகிய பிரமையினும் சத் தம் சககாரியும், கேவல மனம் பிரமாணமுமாம். வேதாந்த பரி பாஷை முதலிய நூல்களில் இந்திரிய ஜந்திய ஞானத்திற்குப் பிரத் தியகூஷதன்மை கூறுதலில் எதுதோஷம சொல்லப்பட்டிருக்கின் றதோ, அதற்குச் செவ்வையான சமாதானம் நியாய கௌஸ்துப முத லிய நூல்களில் எழுதப்பட் டிருக்கின்றது. அதனைத் தெரிய விரு ம்புவோர் அவற்றிற்கண்டுகொள்க. (சு) ஞானத்திற்குஆசிரயமாயிரு த்தலின் அந்தக்கரணம் கர்த்தாவாம்; ஆகலின் ஞானத்திற்குக் கரண மாகாதென மனதிற்கு இந்திரியத் தன்மையில் எந்தத் தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அந்ததோஷமுமில்லை. ஏனெனின் தர்மியாகிய அந்தக்கரணம் ஞானத்திற்கு ஆசிரயமாயிருத்தலின் கர்த்தா வாம். அந்தகரணத்தின் பரிணமமாகிய மனம் ஞானத் திற்குக் கரணமாம். இவ்வாறுன் மனமும் பிரமை ஞானத்திற்குக் கரணமாம். ஆகலின் பிரமாணமாம்.

---

* பிரபஞ்ச திருஷ்டி பகிர்முகமும் பிரஹ்ம திருஷ்டி அந்தர்முகமுமா யிருத்தலின் மாறுகிய பிரஹ்மசாகூஷாத்கார மென்றார்.

யாண்டு இந்திரியத்தால் திரவியத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றதோ, ஆண்டு நியாய வேதாந்தமதங்களில் வேற்றுமையில்லை. திரவியத்திற்கு இந்திரியதோடுண்டாம சையோகமே சமபந்த மாம். இந்திரியத்தோடு திரவியத்தினது ஜாதி அல்லது குணத்தின் பிரத்தியக்ஷ முண்டாகுமிடத்து நியாய்மதத்திலோ சையுக்த சமவாய சம்பந்த மிருக்கின்றது. வேதாந்த மதத்தில் சையுக்த தாதாத்மிய சம்பந்த மிருக்கின்றது. ஏனெனின், நியாயமதத்தில் எவற்றிற்குச் சமவாய மூண்டோ, அவற்றிற்கு வேதாந்த மதத்தில் தாதாத்மிய சம்பந்த முண்டு. குணத்தினது ஜாதியின் பிரத்தியக்ஷத்தில் நியாய மதப்படி சையுக்த சமவேத சமவாய சம்பந்த முண்டு. வேதாந்த மதத்தில சையுக்த தாதாத்மியமுடைய தாதாத்மிய சம்பந்த முண்டு. இதனையே சையுக்தாபின்ன தாதாத்மிய மென்பா. இந்திரியத்தோடு சையுக்தமான கடமுதலியவற்றில் தாதாத்மிய மூடையன உருவ முதலியன வாம். அவற்றில் தாதாத்மிய சம்பந்தம் உருவத்தன்மை முதலிய ஜாதிக்காம. எங்ஙனம உருவமுதலியன கடமுதலியவற்றில் தாதாத்மிய முடையினவோ, அங்ஙனமே கடமுதலியவற்றோடு அபின்னமுமா மென்றுசொல்லப்படுகின்றன. அபின்னத்திற்கே தாதாத்மிய சமபந்த முண்டாகின்றது. யாண்டுச் சுரோத்திரத்தால் சத்தத்தின் சாக்ஷாத்கார முண்டாகின்றதோ, ஆண்டு நியாயமதத்திலோ சமவாய சமபந்த முண்டு. வேதாந்த மதத்தில் சுரோத்திரேந்திரியம ஆகாயத்தின் காரியமாகலின், சக்ஷுர்முதலியவற்றில் கிரியை யுண்டாவதுபோல, சுரோத்திரத்திற் கிரியை யுண்டாய்ச் சத்தமுடையதிரவியதோடு சுரோத்திரத்திற்குச் சையோக முண்டாகின்றது. அசசுரோத்திரசையுக்த திரவியததில சத்தத்தின் தாதாத்மியசமபந்த மிருக்கின்றது. எனெனின், வேதாந்த மதத்தில் சத்தம் பஞ்சபூதங்களின் குணமாயிருத்தலால் பேரிமுதலியவற்றினும் சத்தம் இருக்கின்றது. ஆகலின் சுரோத்திரத்தின் சையுத்த தாதாத்மிய சமபந்தத்தான் சத்தத்தின் பிரத்தியக்ஷ முண்டாகின்றது. சத்தத்தன்மையின் பிரத்தியக்ஷ முண்டாகுமிடத்துச் சுரோத்திரத்தின் சையுக்த தாதாத்மியமுடைய தாதாத்மியசம்பந்த மிருக்கின்றது. வேதாந்தமதத்தில எங்ஙனம சத்தத்தன்மை சாதியோ, அங்ஙனமே தாரத்தன்மை மந்தத்தன்மைகளும ஜாதியேயாம. நியாய மதத்தைப்போல ஜாதிக்கு வேறாய் உபாதியில்லை. ஆகலின் சத்தஞ்

தன்மை ஜாதிக்குச் சுரோத்திரத்தோடுள்ள சம்பந்த மெதுவோ, அசசம்பந்தமே தார்த்தன்மை மந்தத் தன்மைகளுக்குமாம். விசே ஷணத்தன்மைச் சம்பந்தமில்லே. அபாவத்தின் ஞானம் அநுபலப்தி ப்பிரமாணத்தா லுண்டாகின்றது. எவ்விந்திரியத்தானும் அபாவ த்தின் ஞானமுண்டாகிறதில்லே. ஆகலின் அபாவத்திற்கு இந்திரிய த்தோடு சமபந்தம் அபேகஷிக்கப்படுகிறதில்லே. இது நியாயமதத் தீபிகும் வேதாந்த மதத்தீபிகும் பிரத்தியகூஷவிசாரத்திலுள்ள பேதமாம்.

## உக. பிரத்தியகூப் பிரமையின் உபசங்காரம்.

இவ்வாறுரல் பிரத்தியகூப் பிரமைக்கு ஆறு பேத முண்டு. அவற்றின் கரணமும ஆறும். ஆகையால் நேத்திர முதலிய ஆறு இந்திரியங்களும் பிரத்தியகூப்பிரமாணமெனப்படும. நியாயமதத்தி லும் வாசஸ்பதிமதத்திலும ஆறுவது பிரத்தியகூப் பிரமாணம் மனமாம். பஞ்சபாதிகை யென்னும நூலின் கர்த்தாவாகிய பத்ம பாதாசாரியரது மதத்தை யநுசரித்தவாகள் மனதைப் பிரமாண மென்று கொள்ள வில்லே. சுக துக்கங்களோ சாகஷி பாஸ்யங்களா மாகலின் அவற்றின் ஞானம பிரமையன்று. விசிஷ்டஜீவனில் அந்த க்கரண பாகம் சாகஷி பாஸ்யமாம். சேதன பாகம் சுவயம் பிரகாச மாம். ஆகலின் ஜீவனது ஞானமும மானசமன்று. பிரஷ்மவித்தை யாகிய அபரோகூஷ ஞானம் பிரமை வடிவமாயினும், அதன் கரணம் சத்தமாம்; மனம் பிரமாண மன்று. ஆனல் பஞ்சபாதிகாநுசாரசித் தாந்த மெதுவோ, அதன்கண்ணும் பிரத்தியகூப் பிரமைக்கு ஆறு பேதமுண்டு. சப்தஜந்நிய பிரஷ்மப் பிரத்தியகூப் பிரமை ஆறுவ தாம். அபாவத்தின் ஞானம் அநுபலப்திப் பிரமாண ஜந்நியமாயி னும் பிரத்தியகூமாம். இவ்வாறாதையினே அநுபலப்திப்பிரமாண நிரூபணத்திற் கூறுவாம. இதனுற் பிரத்தியகூப் பிரமைக்கு ஏழு பேதங்கள் சம்பவிக்கின்றன. என்றாலும இந்நூலின்படி அபாவ ஞானத்தில் பிரத்தியகூத் தன்மை யில்லையாகலின், பிரத்தியகூ ப்பிரமைக்கு ஆறுபேத மூண்டு; ஏழில்லே. சுருக்கமாகப் பிரத்தி யகூப் பிரமாணம் சொல்லப்பட்டது.

முதற்பிரகாசம்
பிரத்தியகூப்பிரமாணநிரூபணம்
முடிந்தது.

ஓம்.

தத்ஸத்ப்ரஹ்மணேநமஃ.

# இரண்டாவது பிரகாசம்.

# அநுமானப் பிரமாணநிரூபணம்.

## ௨௨. அநுமிதியினது சாமக்கிரியின் பேதமும் சொரூபமும்.

அநுமிதிப் பிரமையின் கரணமெதுவோ அது அநுமானப் பிரமாண மெனப்படும். இலிங்க ஞானத்தாற் றோன்றும ஞான மெதுவோ, அது அநுமிதியெனப்படும். எங்ஙனம்: பருவதத்தில் புகையின் பிரத்தியக்ஷ ஞானமுண்டாய் வன்னியின் ஞானமுண்டா கின்றது; ஆண்டுப் புகையின் பிரதியக்ஷஞானம் இலிங்கஞானமெனப்படும். அதனால் வன்னியின் ஞானமுண்டாகினறமையின் பருவதத்தில் வன்னியின் ஞானம் அநுமிதியாட எதன் ஞானதத்தாற் சாத்தியத்தின் ஞான முண்டாகின்றதோ அது இலிங்க மெனப்படும். அநுமிதி ஞானத்தின் விஷயம சாத்தியமெனபபடும. அநுமிதிக்கு விஷயம் வன்னியாகலின் வன்னி சாத்தியமாம். தூம ஞானததால் வன்னியாகிய சாத்தியத்தின் ஞான முண்டாதலான் தூமீம் இலிங்கமாம். வியாப்பியத்தின் ஞானத்தால் வியாபகத்தின் ஞானமுண்டாகின்றதாகலின் வியாப்பியத்தை இலிங்கமென்பா. வியாபகத்தைச் சாத்தியமென்பர். வியாத்தியுடையதனை வியாப்பியமென்பர். வியாப்தி நிரூபகத்தைவியாபக மென்பர். அவிநாபாவரூப சம்பந்தத்தை வியாந்தி யென்பா. எங்ஙனம: தூமததில் வன்னியின் அவிநாபாவரூப சமபந்த மிருக்கின்றது; அதுவே தூமத்தில் வன்னியின் வியாப்தியாம். ஆகையால் தூமம வன்னியின் வியாப்பியமாம். அந்த வியாப்திரூப சமபநதத்தின் நிரூபகம வன்னியாம். ஆகலின் தூமத்தின் வியாபகம வன்னியாம. எஃதின்றி எது உளதாகாதோ,அதன் அவிநாபாவநப சம்பந்தம் அதன்கண் சொல்லப்படுகின்றது. வன்னி யின்றித தூம மிராதாகலின் வன்னியின் அவிநாபாவரூபசமபநதம தூமத்தின்க ணுளது. வன்னியினிடத்துத்தூமத்தின் அவிநாபாவமில்லை. ஏனெனின் ஒழுகக்காய்சுடிய இருப்புத்துண்டில் தூமமின்றி வன்னியிருக்கின்றது. ஆகையாற் தூ

த்தின் வியாப்பியம் வன்னி யன்று. வன்னியின் வியாப்பியம் தூம மாம். அங்ஙனமே உருவத்தின் வியாப்பியம் இரசமாம். பிருதிவி ஜல தேயுக்களில் உருவமிருக்கின்றது. பிருதிவியினும் ஜலத்தினும் இரச மிருக்கின்றது. ஆகையால் உருவத்தின் அவிநாபாவரூப சம் பந்தம இரசத்தின்க ணிருத்தலால் உருவத்தின் வியாப்பியம் இரச மாம. உருவத்தில் இரசதத்தின் விநாபாவம (இரசமின்றியிருத்தல்) இருக்கின்றது. தேயுவில்இரசவிநாபாவம்(இரசமின்றி உருவத்தின் சத்தை)இருக்கின்றது. ஆகையால் இரசதத்தின் வியாப்பியம் உருவ மன்று.எதனைதனின்வியபிசாரியா(பிறழ்வுடையதா)கின்றதோஅது அதன் வியாப்பிய மாகாது. அதிக தேசதத்திலிருப்பது எதுவோ, அதுவியபிசாரியெனப்படும். தூமத்தினும அதிகதேசத்திலிருக்கும் வன்னி யெதுவோ, அது தூமதத்தின் வியபிசாரியாம். இரசத்தி னும அதிக தேசத்தில் உருவ மிருக்கின்றது. ஆகையால் இரசத் தின் வியபிசாரி உருவமாம. அற்ப தேசத்தி லிருப்பது எதுவோ, அதன்கண் அவிநாபாவ சம்பததமுண்டு. அதுவே வியாப்பியமாம். வன்னியினும அற்பதேசதத்தில் தூமமுளதாம. ஆகலின் வன்னிக்கு த் தூமத்தில் அவிநாபாவரூப வியாப்தி யுண்டு. அத்தூமம் வியாப் பியமாம். உருவத்தினும அற்ப தேசத்தில் இரச மிருக்கின்றது. ஆகையால் இரசத்தில் உருவத்தின் வியாப்தியுளது. அதனையுடைய இரசம் வியாப்பியமாம். எங்ஙனம அற்பதேசத்தி லிருப்பதன்கண் அதிக தேசமுடையதின் வியாப்தி யுண்டோ, அங்ஙனமே இரண்டு பதார்த்தங்கள் சமான தேசத்தி லிருப்பன வாகுமாயின், அவற் றிற்கு மொன்றற் கொன்று வியாப்தியுண்டு. கந்தகுணமும் பிரு திவித்தன்மைச் சாதியும கேவலம் பிருதிவியின்க ணிருப்பன வாம. ஆண்டுக் கந்தத்தின் வியாப்தி பிருதிவித் தன்மையினும், பிருதிவித் தன்மையின் வியாப்தி கந்தத்திலுண்டு. அங்ங னமே சிநேக குணமும் ஜலதன்மைச் சாதியும் ஜலத்தின்க ணுண்டு. ஜலமின்றிச் சிநேகமும் ஜலத்தன்மையு மிரா. ஆகலின் சமதேசத்திலிருப்பனவா யிருத்தலின் இரண்டும் ஒன்றற்கொன்று வியாப்தியுடையன வாதலால் வியாப்பியமாம. ஏனெனின், எங்ங னம் அற்பதேசத் திருப்பதன்கண் அவிநாபாவரூப சம்பந்த மிருக்கின்றதோ, அங்ஙனமே சமான தேசத்தி லிருப்பனவாகிய பதார்த்தங்களுக்கும ஒன்றற்கொன்று அவிநாபாவமுண்டு. பிருதிவி த்தன்மையினும் அற்ப தேசத் திருப்பது கந்தம; ஜலத் தன்மையி

னும் அற்ப தேசத்திருப்பது சிநேகம். ஏனெனின், முதல் கூணைத் தில் நிர்க்குணத் திரவிய முண்டாகின்றது. இரண்டாவது கூணைத் தில் குணமுண்டாகின்றது. ஜாதி முதல்கூணைதகிலும திரவியத்தி லிருக்கின்றது. ஆகலின் கடத்தின் முதல் கூணைத்தில் கந்தத்தின் வியபிசாரியாகிய பிருதிவித்தன்மை யிருத்தலால் அதன்கண் கந்த த்தின் அவிநாபாவ சம்பந்தமாகிய வியாப்தியின் அபாவமிருக்கின் றது. உற்பத்தி கூணைதகி லிருப்பதாகிய ஜலதகில் சிநேகத்தின் வியபிசாரியாகிய ஜலதகன்மை யிருத்தலால அதன்கண் சிநேகத் தின் அவிநாபாவரூப சம்பந்தமில்லை. ஆதலாற் சிநேகத்தின் வியா ப்திக்கு ஜலத்தன்மையில் அபாவ மிருத்தலால் சிநேகத்தின் வியா ப்பியம் ஜலத்தன்மையன்று. இவ்வாற்றூல் பிருதிவித்தன்மையின் வியாப்பியம கந்தமாம்; கந்தகதின் வியாப்பியம பிருதிவித்தன்மை யன்று. அங்ஙனமே ஜலத் தன்மையின் வியாப்பியம சிநேகமாம்; சிநேகத்தின் வியாப்பியம ஜலத் தன்மை யன்று. என்றூலும் கந்த முடைமையும பிருதிவித்தன்மையும ஒன்றற்கொன்று வியாப்தி யுடையனவாம். ஆகலின் இரண்டும ஒன்றறகொன்று வியாப்பிய மாம். அங்ஙனமே சிநேகமுடைமையும ஜலத்தன்மையுமாகிய இர ண்டும் ஒன்றறகொன்று வியாப்பியமாம். ஏனெனின், கந்தத்தின் அதிகரணத்தன்மையைக் கந்தமுடைமை யென்பர். சிநேகத்தின் அதி கரணத்தன்மையைச் சிநேகமுடைமை யென்பர். எதன்கண் எநதப் பதார்ஹதம் எப்போதாயினு மிருக்குமோ, அதன்கண் அப்பதார்த் ததின் அதிகரணத்தன்மை என்றுமுளதாம். இது வியாப்திநிரூபண த்தில் ஜகதீச பட்டாசாரியா முதலியோர்களால் எழுதப்பட்டிருக் கின்றது. ஆண்டு இது பிரசங்கமாம:—அவியாப்பியவிருத்தி பதார் த்தத்தின் அதிகரணத்தன்மை வியாப்பியவிருத்தியாம. அதிகரணத் தன்மை அவியாபபியவிருத்தி யாகிறதில்லை. * அவியாப்பிய விருத்தி இருவகையாம். தேசத்தானுகிய அவியாப்பிய விருத்தியு மூண்டு. காலத்தானுகிய அவியாப்பிய விருத்தியு மூண்டு. எது பதார்த்தத் தின் ஏகதேசத்திலிருந்து ஏகதேசத தில்லாதிருக்கின்றதோ, அது தேசத்தானுகிய அவியாப்பிய விருத்தி யெனப்படும். எங்ஙனம்: பதார்த்தத்தின் ஏகதேசத்தில் சையோகமுண்டாகின்றது. அது தேசத்தானுகிய அவியாப்பிய விருத்தியாம். ஆனுல் சையோகத்தின் அதிகரணத்தன்மை பதாரத்தமுழுவதினு மிருக்கும். ஏகதேசத்தி

* தனது அத்தியந்தாபாவ ஸமானுதிகரணத தன்மை அவ்வியாப்பிய விருத்தித் தன்மையாம்.

லிராது. ஆகலின் அவியாப்பியவிருத் திசையோகத்தின் அதிகரண த்தன்மை வியாப்பிய விருத்தியாம்; அவியாப்பிய விருத்தி யன்று. இது சிதகாந்த மாம். ஒருகாலத்திலிருந்து ஒருகாலத்தில் இல்லா திருப்ப தெதுவோ, அது காலிக அவியாப்பிய விருத்தி யெனப்படும். மூற்கூறிய விதத்தாற் கந்தமுதலிய குணங்கள் காலிக அவியாப்பிய விருத்தியாம். அவற்றின் அதிகரணத்தன்மை திரவியத்தின் உற் பத்திக்ஷணத்திலு மிருக்கின்றதாகலின் கந்தமுடைமை இரச முடைமைகள் பிருதிவித்தன்மை ஜலத்தன்மைகளின் சமதேச சமகாலத் திருப்பனவாம். இது நியாய நீதியான சமாதானமாம். வேதாந்தமதத்திலோ நிர்க்குணதிரவிய மூண்டாகிறதில்லை. முதற் கண்ணே சகுணமுண்டாகின்றது. ஆகலின் கந்த ரசங்களுக்கும் பிருதிவித்தன்மை ஜலத்தன்மைகள் வியாப்பியமாம்.

## உசு. அநுமிதிஞானத்தில் வியாப்தியினது ஞானம் அபேக்ஷிக்கப்படுமாறு.

இவ்வாற்றூல் அவிநாபாவரூப சம்பந்தம் வியாப்தியும் அதனே யுடையது வியாப்பியமுமாம். எவனுக்குப் பர்வத முதலியவற்றில் வியாப்பியமாகிய தூமத்தின் பிரத்தியக்ஷ ஞானம அல்லது சத்த ஞான மூண்டாகின்றதோ, அவனுக்குப் பர்வத முதலியவற்றில் அக்கினியின் அநுமிதி ஞான முண்டாகின்றது. அங்ஙனமே இரச த்தின் ஞானத்தால் உருவத்தின் ஞான முண்டாகின்றது. ஆனல் எந்தப் புருஷனுக்குத் தூமம் வன்னி வியாப்பியமா மென்னும் ஞானம் முன் நிகழ்ந்திருக்குமோ, அவனுக்குத தூமஞானத்தால் வியாப்பியத்தன்மையின் ஸ்மரண மூண்டாய் வன்னியின் அநுமிதி யுண்டாகின்றது. வியாப்தியை வியாப்பியத்தன்மை யென்பர். அங் ஙனமே உருவத்தின் வியாப்பியம் இரசமாமென்னும் ஞானம் எவ னுக் குண்டாகின்றதோ, அவனுக்கு இரசத்தின் ஞானத்தால் இர சத்தில் உருவத்தினது ஸ்மரண முண்டாய் உருவத்தின் அநுமிதி யுண்டாகின்றது. எவனுக்கு வியாப்பியத் தன்மையின் ஞானம் முன் நிகழவில்லையோ, அவனுக்குத் தூமமுதலியவற்றின் ஞானத் தால் வன்னி முதலியவற்றின் அநுமிதி நிகழா தாகலின், வியாப்தி யின் ஞானம அநுமிதிக்குக் காரணமாம். வியாப்தி யுடையதனை வியாப்பியமென்றும, வியாப்தியினை வியாப்பியத் தன்மையென்றும் கூறுவர். அந்த வியாப்தி ஞானமும சாதகரூப காரண மன்று. ஏனெனின், தூமம் வன்னியின் வியாப்தி யுடையதா? அன்றி

என்னும் ஞானம் எவனுக்கு முன் உண்டாயிருகின்றதோ, அவனுக்குத் தூமஞானத்தால் வன்னியின் ஞானமுண்டாகாது. ஆனால் "தூமம் வன்னியின் வியாப்தி யுடையது" என்னும் நிச்சய ரூப ஞானம்எவனுக்குண்டாயிருக்கின்றதோ,அவனுக்குத்தூமஞானத்தால் வன்னியின் அநுமிதியாகிய ஞான முண்டாம. ஆகலின் வியாப்தியின் நிச்சயம் அநுமிதிக்கு ஏதுவாம. அந்த வியாப்தியின் நிச்சயம் உடனிகழ்சசி ஞானததா லுண்டாகினறது. அடுக்களை முதலியவற்றில் அடிக்கடித் தூம வன்னிகளின் உடனிகழ்ச்சியைக் கண்டு "வன்னியின்வியாப்பியம் தூமமாம" என்னும் ஞான முண்டாகின்றது. "தூமத்தின் வியாப்பியமாம வன்னி" என்னும் ஞான முண்டாகிறதில்லை. எனெனின், அடுக்களை முதலியவற்றில் வன்னியின் உடனிகழ்ச்சி எங்ஙனம் தூமத்திற் காணப் படுகின்றதோ, அங்ஙனமே தூமத்தின் உடனிகழ்ச்சி வன்னியிற் காணப்படினும் தூமத்தின் வியபிசாரமும வன்னியிற் காணப்படுகின்றது. இதனால் எதன்கண் எப் பதார்த்தத்தின் வியபிசாரம தோற்றாது உடனிகழ்ச்சி தோற்றுகின்றதோ, அதன்கண் அப்பதார்த்தத்தினது வியாப்தியின் நிசசயமுண்டாகின்றது. தூமததில் வன்னியின் வியபிசாரம் தோற்றாது, உடனிகழ்சசி தோற்றுகின்றதாகலின், தூமத்தில் வன்னியினது வியாபதியின் நிச்சய முண்டாகின்றது. வன்னியில் தூமத்தின் உடனிகழ்சசியும் தோற்றுகின்றது; வியபிசாரமும் தோற்றுகின்றது. ஆகலின், 'தூமத்தின் வியாப்பியமாம் வன்னி' என்னும் நிச்சயம் உண்டாகிறதில்லை. உடனிகழ்ச்சி யென்பது கூடவிருத்தற்காம். வியபிசார மென்பது வேறு யிருத்தற்காம். நீரினது புகையின்கண் வன்னியின் வியபிசாரமிருக்கின்றது. அக்கினி அணைந்தகாலத்து அடுக்களையி லிருக்கும் தூம மெதுவோ, அதன்கண்ணும் வன்னியின் வியபிசார மிருக்கின்றது. என்றாலும் எதன் மூலம் சேதிக்கப்பட வில்லையோ, அப்படிப்பட்ட உயாந்த தூம ரேகையில் வன்னியின் வியபிசார மில்லை. ஆகையால் விலகூணமான தூம ரேகையில் வன்னியினது வியாப்தியின் பிரத்தியகூகமாகிய நிச்சய முண்டாகின்றது. அப்படிப்பட்ட விலகூண தூம ரேகையின் பிரத்தியகூகம் பாவதமுதலியவற்றி லுண்டாய் 'தூமம் வன்னியின் வியாப்பியமாம்' என்னும் அநுபவத்தின் சம்ஸ்காரம் எழும்புகின்றது. அதன்பின் 'வன்னியுடையது பாவதம' என்னும் அநுமிதி யுண்டாகின்றது.

## உசு. சகல நையாயிகமதத்திலுமுள்ள அநுமிதியின் கிரமம்.

நியாயமதத்தில் அநுமானப் பிரசங்கத்தில் அநேக பகூஷங்களுள. அவை அவர்கள் நூல்களில் லபஷ்டமாம. ஆனல் சகல நையாயிகர் மதத்திலும் அநுமிதியின் கிரமம் இதுவாம:— மூதற் கண் அடுக்களே முதலியவற்றில ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சிக் காட்சி யுண்டாகின்றது. அதுலல் ஏதுவில் சாத்தியத்தினது வியாப்தியின் நிசயமலண்டாகின்றது. அதன்பின் பாவத முதலிய வற்றில் ஏதுவின் பிரததியகூ முண்டாகின்றது. அதன்பின் சம்ஸ்காரத்தின் எழுசகி யுண்டாய் வியாப்தியின் லமிருதி யுண்டாகின்ற்து. அதன்பின் சாதத்தியத்தினது வியாபதி விசிஷ்ட ஏதுவின் பிரத்தியகூம பகூஷதநிலுண்டாகின்றது. அதனைப் பராமரிசமென்பர். வன்னியின் வியாப்பிய தூமமுடையது மலையென்பது பிரசித்தநானமானத்தில் பராமரிசத்தின் ஆகாரமாம. சாத்திய வியாப்பிய ஏதுவுடையது பகூஷம என்பது பராமரிசத்தின் சாமானிய ரூபமாம். அதன் பின்னர வன்னியுடையது பாவதம என்னும அநுமிதி ஞான முண்டாகின்றது. இதத முறையாக அநுமிதி யுண்டாகின்றது. ஆனல் பிராசீனர (பழமையாளோர) மதத்தில் அநுமிதியின் கரணம பராமரிசமாம. மறறெலலா ஞானமூம அநுபயோகிதமாம (பிரிதேராத்ருற் பெறப்படுவதாம). அவர்கள் மதத்தில் பராமரிசமே அநுமானமாம. பராமரிசத்தின் வியாபாரம அகபடவிடினும, அவர்கள மதத்தில் வியாபாரமின்றிய காரணத்தைக் கரண மென்பர. ஆகையாற பராமரிசமே அநுமிதியின் கரணமாயிருத்தலின் அநுமானமாம. சில நையாயிகர ஞான வேதுவினை அநுமான மென்பர. ஓரகூஷததில ஏதுவின ஞானத்தை அநுமான மென்பர; வியாபதியின லமிருதியையும பராமரிசதையும் வியாபாரமென்பர. சில வியாப்தியின் லமிருதி ஞானதை அநுமான மென்பர; பராமரிசதத்தை வியாபாரமெனபர. இவ்வாறு நையாயிகர்களுக்கு அநேகமத முண்டு. ஆலல எல்லோர மதத்திலும் பராமரிசத்தின் அங்கீகாரமுண்டு. சில பராமரிசத்தைக கரணமென்பர், சில வியாபாரமென்பர். பராமரிசமின்றி யநுமிதியுண்டாகாதென்பது சகல நையாயிகர்களது மதமாம.

## மீமாம்ஸை மதம்.

மீமாம்ஸைமதம் இதுவாம்:—யாண்டுப பருவதத்தில் தூமந் தின் பிரத்தியகூடத்தால் வியாப்தியின் ஸ்மிருதியுண்டாய் வன்னி யின் அநுமிதியுண்டாய் விடுகின்றதேர, ஆண்டுப பராமரிசமின்மி யும அநுமிதி யநுபவகித்த மாம. ஆகையால் யாண்டுப் பராமரிச முண்டாய் அநுமிதி யுண்டாகின்றதேர, ஆண்டும் பராமரிசம் அநு மிதிக்குக் காரணமன்று. ஆனுற் பராமரிசம் அநியதாகித்தமென ப்படுகின்றது. எங்ஙனமு: தெய்விகமாய் வந்த கழுதை அல்லது குலால பத்தினி கடத்தில அநியதாகித்ததமாம். கரண சாமக்கிரி யினும் புறமபாயுள்ளதெதுவோ, அது அந்நியநாசித்த மெனப்படும். இவ்வாற்முன் மீமாமலை மதத்தில பராமரிசம காரண மன்று. அதன் அநுசாரிகளும பராமரிசமொன்றைவிட்டு கையாயிகாளைப போலஅநேகபதாத்தங்களை அநுமானமென்பர. சில வியாப்தியின் ஸ்மிருதியையும், சில அடுக்களை முதலியவற்றின்கண் வியாப்தி யின் அநுபவத்தையும, சில பகூடத்தில யதுவின் ஞானத்தையும அநுமான மென்பர.

## உசு. அத்வைத மதானுசாரமான அநுமிதியின் கிரமம்.

அத்வைத மானும் யாண்டு விரோத முண்டாதலில்லையோ, ஆண்டு மீமாமலையினது * பிரக்கிரியையின அநுசாரமாம். ஆக லால் அத்வைத மதத்தினும் பராமரிசம காரண மன்று ஆனல் அடுக்களை முதலியவற்றின்கண் உண்டாகும் வியாப்தியின் பிரத் தியகூடமாகிய அநுபவம யாதோ, அது அநுமிதியின கரணமாம். அந்த வியாப்தியினது அநுபவத்தின் உறபத்தி(எழுமபிய) சமஸ்கா ரம வியாபாரமாகு. பூவதத்தினுண்டாகும தூமத்தின் பிரதியகூட மெதுவோ, அது சமஸ்காரத்தினை † உற்போதகமாம். யாண்டு வியா ப்தியின் ஸ்மிருதியுண்டாய் விடுகின்றதேர, ஆண்டும ஸ்மிருதியின் உற்பத்தியால் சமஸ்காரங்களினது நாசமோ உண்டாகிற தில்லை. ஆதலால் ஸ்மிருதி சமஸ்காரம எனனும இரண்டுமுண்டு. ஆண்டும் அநுமிதியின் வியாபாரரூப காரணம சமஸ்காரமாம. வியாபதியின் ஸ்மிருதி காரண மன்று. ஏனெனின், அநுமிதியில் வியாப்தி ஸ்மி

* ஒரு பிரகாரமாகச் சொல்லப்படும விஷயம் பிரக்கிரியை யெனப்படும்.

† உற்போதகம்=எழுப்புவது, புலப்படுத்துவது.

ருதியினை வியாபாரமாகிய காரணமென அங்கீகரிக்கினும் ஸ்மிருதியின் காரணம் சம்ஸகார மென அங்கீகரித்தலும், ஸ்மிருதியில் அநுமிதியின் காரணத்தன்மையை அங்கீகரித்தலும் வேண்டும். ஆதலால்இரண்டினுமகாரணத்தன்மையைக் கற்பித்தல் † கௌரவ மாம். ஸ்மிருதியின் காரணமா யங்கீகரித்த சம்ஸகாரம் எது வோ, அதனை அநுமிதியின் காரணமாக அங்கீகரிக்கின், ஸ்மிருதியின் காரணத்தன்மையை விடுதல் ‡ இலாகவமாம். இவ்வாற்றால் வியாப்தியின் அநுபவம் காரணமும்,சம்ஸ்காரம் வியாபாரமும், அநுமிதிபயனுமாம். இது வேதாந்தபரிபாஷைமுதலிய அத்வைத நூல்களிற் சொல்லிய கிரமமாம். நையாயிகர் மதததிற் போலப் பராமரிசம் அநுமிதியின் காரணமன்று.

## உ௭. வியாப்தியினது ஸ்மிருதியின் வியாபாரத்தன்மையும் சம்ஸ்காரத்தின் அவ்வியாபாரத் தன்மையும்.

சம்ஸ்காரத்தை அநுமிதியின் வியாபாரமென அங்கீகரியாது, ஸ்மிருதியை வியாபாரமென அங்கீகரிக்கினுமை சித்தாந்தத்திற்குக் கெடுதி யில்லை. வேதாந்தபரிபாஷை முதலிய நூல்களில் விரோத மிருக்கினும், யுக்தியினுல் அர்த்த நிச்சயஞ் செய்தலால் ஆதுனிக நூல்களின் விரோதத்தாற் கெடுதி யில்லை. ஆனுற் சுருதி ஸ்மிருதிகளின் விரோதத்தா லேனும் சித்தாந்த விரோதத்தா லேனும் கெடுதியுண்டாம்.அநுமிதியின் வியாபாரரூபகாரணம் ஸ்மிருதி அல்லது சம்ஸ்காரமா மென்னும் அர்த்தத்தில் சுருதி ஸ்மிருதிகள் உதாசீனமா யிருக்கின்றன. சித்தார்ந்தமும உதாசீனமா யிருக்கின்றது. ஆதலால் வியாப்தியின் ஸ்மிருதிக்கு வியாபாரத்தன்மையைக் கூறுதலில் விரோதமில்லை. மாறுதலான சாதகயுக்தி யுளது.

ஏனெனின், வியாப்தியின் சம்ஸ்காரத்தை அநுமிதிக்குக் காரணமாகச் சொல்லு மிடத்து, அநுபூத்த சம்ஸகாரத்தால் அநுமிதியுண்டாகுமாயின், பர்வதத்தில் தூமத்தின் பிரத்தியக்ஷ

† ஒரு வஸ்துவினுலேயே ஒரு காரியம் சித்திக்கக்கூடியதா யிருக்க, அதற்குப் பல வஸ்துக்களை ஏதுவாகக் கற்பித்தலைக் கற்பனாகௌரவ மென் பர்.

‡ நண்டுக் கூறிய இலாகவம் எளிதின் முடிதலாம்; தோஷமன்று.

மின்றியும் என்றுமே அநுமிதி யுண்டாதல் வேண்டும். அதனால் உற்புத்த(புலப்பட்ட)சம்ஸ்காரம அநுமிதிக்குஏதுவாமென அங்கீகரிக்க வரும். உற்புத்த சம்ஸ்காரங்களினாலேயே ஸ்மிருதி ,யுண்டாகின்றது. ஆதலால் யாண்டு அநுமிதியின் சாமக்கிரி யுளதோ, ஆண்டுநியமமாகஸ்மிருதியின்சாமக்கிரியுண்டு. இரண்டின் சாமக்கிரிகளுமிருக்குங்காலத்துஎந்தஞான முண்டர்குமென்பதைத்*தர்ம ராஜரைக் கேட்கவேண்டும. ஒன்றற கொன்று பிரதிபந்திக்கபடுந்தன்மையும் பிரதிபந்திக்குந் தன்மையும் அங்கிகரிக்கின் கௌரவ தோஷமுண்டாகும்; † விரிகமன விரஹமு முண்டாகும்; அநுபவ விரோதமு முண்டாகும். ஏனெனின், பாவதத்தில் தூம தரிசனத்தால் தூமதத்தில் வன்னியினது வியாப்தியின் ஸ்மரணத்திற்குப் பிற்காலத்தில் அநுமிதி யுண்டாகின்றது. இது புத்திமான்களது அநுபவசித்தமா (அநுபவதத்தாற் பெறப்பட்டதா)ம். அநுமிதியால் வியாப்தியினது ஸ்மிருதியின் பிரதிபந்தம் அநுபவ விருத்தமாம். யாண்டு இரண்டு ஞானங்களின் இரண்டு சாமக்கிரிகளு முளவோ, ஆண்டு ஒரு சாமகிரிக்கு மறறோர சாமக்கிரி பிரதிபந்தகமாம். ஈண்டு அநுமிதியின் சாமக்கிரியும ஸ்மிருதியின் சாமக்கிரியும் ஓரே சம்ஸ்காரமாம். அதற்குப் பிரதிபந்திக்கப் படுவது பிரதிபந்திப்ப தெனுந்தன்மைபொருந்தாது. அன்றியும்அநுமிதியால் ஸ்மிருதிக்குப் பிரதிபந்த முளதெனின், அநுமிதி பவிஷ்ய (எதிகால)த்ததாம்; அது உண்டாகவில்லீ. அதற்குப பிரதிபந்தகத் தன்மை சம்பவியாது. வேதாந்த பரிபாஷையினும் அங்ஙனமே அதன் உரையினும் அநுமிதியால் ஸ்மிருதிக்குப் பிரதிபந்தம் எழுதப்படவில்லீ. ஏனெனின், உரையோடு கூடிய வேதாந்த பரிபாஷையில் இல்லெழுதப்பட்டிருக்கின்றது. தூம தரிசனத்தால் சம்ஸ்காரம உற்புத்தமாகின்றது. அதனற் லிலவிடத்து ஸ்மிருதி யுண்டாகின்றது; சிலவிடத்துண்டாகிறதில்லீ. யாண்டுஸ்மிருதி யுண்டாகின்றதோ, ஆண்டும் சம்ஸ்காரங்களின் நாசமோ வுண்டாகிறதில்லீ. சம்ஸ்காரம் ஸ்மிருதி யென்னு மிரண்டுமுள. ஆனல் ஸ்மிருதி சூனியமான ஸ்தலத்தில் எங்ஙனம் சம்ஸ்காரம் வியாபாரமோ, அங்ஙனமே ஸ்மிருதி

---

* தர்மராஜர் என்பவர் வேதாந்த பரிபாஷை யென்னும் நூலின் கர்த்தா.

† இரண்டில் ஒருபக்ஷத்தைநிச்சயிக்கும் யுக்தியின்மையை விரிகமன விரஹமென்பர்.

யின் இருப்பாகிய. ஸ்தலத்திலும சமஸகாரமே வியாபாரமாம்; ஸ்மிருதியன்று. இதுதர்மராஜாது நூல். அதன்கண் புத்திமான்களுக்கு இவ்வாசசரிய முண்டாகின்றது. உற்புத்த சம்ஸகாரமிருக்க, ஸ்மிருதி சூனியமான ஸ்தல மெங்ஙனமிருக்கும்? ஸ்மிருதியின் உற்பத்தியால சமஸ்காரத்திற்கு நாச முண்டாகின்றது; ஸ்மிருதியால் வேறு சமஸ்கார முண்டாகின்ற தென்பது யுக்தியோகூடிய பக்ஷமம். அதன் உபபாதனம (அடைவு) வேறு நூலகளிற் பிரசித்தமாம. இந்தப் பக்ஷத்தில ஸ்மிருதி சம்ஸ்காரமே என்னு மிரண்டு மிருப்பதாகக் கூறுதல் முறறும விருத்தமாம.

## உஅ சுவார்த்தாநுமிதி அநுமானங்களின் சொரூபம்.

ஆகையால் வியாப்தியின் அநுபவம் காரணமும், வியாப்தியின் ஸ்மிருதி வியாபாரமுமா மென்னும இப்பக்ஷம தோஷமின்றியதாம. இவ்வாற்றால் பாண்டு அநுமிதி யுண்டாகினறதோ, அண்டு அது சுவார்த்த(தன்பொருட்டு)அநுமிதி யெனப்படும. அதுவும நியாயமதத்தில் தூமத்தின் பிரத்தியக்ஷமும வியாப்தியின் ஸ்மரணமு முண்டாகியும் வன்னியின் அநுமிதி யுண்டாகிற தில்லை. இரண்டு ஞானங்களுக்கும பின்னாப் பராமரிசமென்னும மூன்றுவது ஞான முண்டாகின்றது. அங்ஙனமே அநுமிதியுமுண்டாகின்றது. 'வன்னி வியாப்பிய தூமமுடையது 'மலை' என்னும ஞானத்தைப் பராமரிச மென்பர். அதனை வேதாந்ததில அதுமிதியின் காரணமாக அங்கீகரிப்பதில்லை. இவ்வாற்றால் வாக்கியப பிரயோகமின்றி வியாத்தி ஞான முதலியவற்றால் எவ்வநுமிதி யுண்டாகின்றதோ, அது சுவார்த்தாநுமிதி யெனப்படும. அதன் காரணமாகிய வியாப்தி ஞான முதலியன சுவார்த்தாநுமானமெனப்படும.

## உக. பரார்த்த அநுமானம், அநுமிதி, தர்க்க மென்பவற்றின் சொரூபம்.

ஓர் புருடன் 'பர்வதத்தில் வன்னி, அநுமானப் பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்டது' என்கின்றான். மற்றொருவன் 'இல்லை' என்று சொல்லுகின்றான். இவ்வாறு இருவருக்கும விவாதம நேர்ந்தவிடத்து, வன்னி நிச்சயமுடைய புருஷன் தனது பிரதிவாதியை நிருவிதிக்கும பொருட்டு வாக்கியப் பிரயோகஞ் செய்கின்றான். 'அதனைப் பரார்த்தாநுமான மென்பர். அவ்வாக்கியம வேதாந்த மத

த்தில் மூன்று அவயவங்களோ யுண்டாதாம. க. பிரதிஞ்ஞை, உ. ஏது, ங. உதாகரணம என்பன வாக்கியத்தினது அவயவங்களின் பெயர் கள். க. பர்வதம வன்னியுடைத்து, உ. புகையுடைமையால, ங. யாது யாது தூமமுடைத்தது, அது அது வன்னியுடைத்து, அடுக் களோபால வென்று மிவ்வளவும மகாவாக்கியமாம. அதன்கண் மூன்று அவாந்தர வாக்கியங்களுள; அவற்றிற்குப் பிரதிஞ்ஞை முதலியன முறையே பெயராகளாம. சாததிய விசிஷ்டமான பக்ஷத்தை அறிவிக்கும வாக்கியம பிரதிஞ்ஞை வாக்கிய மெனப்படும. இவ்வியல்பினது 'பர்வதம்வன்னியுடைத்து' என்னும் வாக்கியமாம். 'வன்னி விசிஷ்டம பர்வதம்' எனனும அறிவு இவ்வாக்கியததா னுண்டாகின்றது. ஆனபி வன்னி சாத்தியம, பர்வதம பக்ஷம, ஏனெனின், அநுமிதிக்கு விஷயம எதுவோ, அது சாத்திய மெனப் படும். அநுமிதிகரு விஷயம வன்னியாகளின சாததியமாம. 'பர்வ தம் வன்னியுடைதது' என்னும அநுமிதியுண்டாகின்றது. அதற்கு ப் பர்வதமும விஷயமாகின்றது. அதனபினும சாத்தியமெனலிவேண் டும. என்றாலும வேதாந்த மதத்தில 'பர்வதம வன்னியுடைத்து' என்னும் ஞானமோ ஒன்றேயாம; ஆனல் அது பர்வத அமசததில் இருதிரியஜ ஞியமும, வன்னியமசததில தூமஞானமாகியதுமான தத்தால் தோன்றியதுமாம. ஆகையால் ஒரு ஞானததில் சாகூஷத் தன்மை அநுமிதித்தன்மை என்னுமிரண்டுதன்மங்களுள. சாகூஷ த்தன்மை யமசததின் விஷயத் தன்மை பர்வதத்தினும், அதுமிதி தன்மை யமசததின் விஷயத்தனமை வன்னியின்கணணு முள வாகலின், அநுமிதிகரு விஷயம பர்வதமன்று; கேவலம் வன்னி யாம். எவ்வதிகரணததில சாததியததை யறியும விருப்ப முண் டாய்ச சாததியத்தின் அநுமிதி வடிவ நிச்சய முண்டாகின்றதோ, அது பக்ஷ மெனப்படும. அவ்வியலபினது பர்வதம. பிரதிஞ்ஞை வாக்கியத்திறகு வேறாய் இலிங்கததை யறிவிக்கும வசனமெது வோ, அது ஏது வாக்கிய மெனபபடும. அததன்மைய வாக்கியம் 'புகை யுடைமையால்' என்பதாம. ஏது சாததியங்களின் உட னிகழ்ச்சியை யறிவிபபதாகியதிருஷ்டாந்தததைப பிரதிபாதிக்கும் வசனம் எதுவோ, அது உதாகரண வாக்கிய மெனப்படும. வாதி பிரதிவாதிகளுக்கு யாண்டு விவாதமுண்டாக வில்லையோ, யாண்டு இருவராலும நிராயிக்கப்பட்ட அறுதி முறைதோ, அது திருஷ் டாந்த மெனப்படும. அவ்வியல்பினது அடுக்களையாம. இவ்வா று

மூல் பிரதிஞ்ஞை முதலிய மூன்றன் சமுதாயமாகிய மகாவாக்கியத்தான் விவாதம நிவிருத்தியாகின்றது. மகாவாக்கியத்தைக் கேட்டும், அதிக்ஷ்ணை முதலியவற்றினுகண் வன்னியின் உடனிகழ்ச்சியாகிய தூமமிருக்கின்றது; பர்வதத்தில் வன்னியின் வியபிசாரியாகிய தூமமிருக்கின்றது. ஆகையால் பாவதத்தில் தூம மூண்டு; வன்னி யில்லையென்று பிரதிவாதி ஆக்கிரகஞ் செய்யின், அல்லது வியபிசாரத்தின் சங்கையுண்டாயின், தர்க்கத்தால் ஆக்கிரக சங்கை(சந்தேகங்)களின் நிவிருத்தியுண்டாகின்றது. அநிஷ்டத்தைச் சம்பாதித்தலை தர்க்க மென்பர். பர்வதத்தில் வன்னியின்றி த்தூம மிருக்குமாயின் தூமம வன்னியின் காரியமாகா தென்பது தர்க்கம்.இதனுல் தூமத்தில் வன்னியின் வியபிசார சந்தேகம் நீங்குகின்றது. வன்னி தூமங்களுக்குக் காரண காரியத்தன்மை இஷ்டமாம்; அவற்றின் அபாவம் அநிஷ்டமாம. ஆகையால் காரண காரியத்தன்மைகளின் பங்கம் சம்பாதிக்கப படுகின்றது, அக்காரண காரியத் தன்மைகளின் பங்கம் அநிஷ்டமாம். ஆகையால் அநிஷ்டத்தைச் சமபாதித்தல் வடிவினது தர்க்கமாம். இத்தர்க்கத்தால் பிரதிவாதியின் நிவிருத்தியும் சங்கையின் நிவிருத்தியு முண்டாகின்றன. எனெனின், வன்னி தூமங்களின் காரண காரியத் தன்மை இருவருக்கும் இஷ்டமாம; அதன் பங்கம் இருவருக்கும் அநிஷ்டமாம். வன்னியின் வியபிசாரம் தூமத்திற் கூறின் அநிஷ்டத்தின் சித்தியுண்டாகும். அப்பபத்தால் வன்னியில் வியபிசாரியாம் தூம மென்னும் வார்த்தையைப் பிரதிவாதி சொல்லான். இவ்வாற்றுன் மூன்றவயவங்களின் சமுதாயமாகிய மகாவாக்கிய மெதுவோ, அதனைப் பராரித்தாநுமான மென்பர். அதன்பின்னர் உண்டாம் அநுமிதி யாதோ, அது பராரித்தாநுமிதி யெனப்படும். அநுமானப் பிரமாணத்தால் நிச்சயஞசெய்ய, வியபிசார சங்கை யுண்டாகுமாயின், அது தர்க்கத்தால் நிவிருத்தியாகும். ஆகையால் பிரமாணத்தின் சககாரி தாக்கமாம்.

## ஈ0. வேதாந்தமதத்தில் தர்க்கத்தோடு கூடிய பராரித்தாநுமானத்தின் சொரூபம்.

வேதாந்த வாக்கியங்களால் ஜீவனிடத்து நிசசயிக்கப்பட்டிருக்கும் பிரஹ்மத்தின் அபேதம எதுவோ, அது அநுமானத்தானும் இவ்வாற்றுற் சித்திக்கின்றது:—ஜீவன் பிரஹ்மாபின்னம், சேதனத் தன்மையால், யாண்டு யாண்டுச சேதனத் 'தன்மை

யுண்டோ, ஆண்டாண்டுப் பிரஹ்மாபேத முண்டு; பிரஹ்மத்திற் போல இதுமூன்றவயவங்களின் சமுதாயமாகியமகாவாக்கியமாம். ஆகையாற் பராரித்தாநுமான மெனப்படும். ஈண்டுச் சீவன் பக்ஷம், பிரஹ்மாபேதம் சாத்தியம், சேதனத் தன்மை ஏது, பிரஹ்மம் திருஷ்டாந்தம். ஈண்டுப் பிரதிவாதியானவன் ஜீவனிடத்துச் சேதனத்தன்மையாகிய ஏதுவோ விருக்கின்றது, பிரஹ்மாபேதமாகிய சாத்தியமில்லே யென்றிவ்வாறு பக்ஷததில சேதனதன்மையாகிய ஏதுவிற்குப் பிரஹ்மாபேதரூப சாதியத்தோடு வியபிசார சங்கை செய்யின், தர்க்கத்தால் அச்சங்கையை நிவிருத்தி செய்யவேண்டுமே. ஈண்டுத் தர்க்கத்தின் சொரூபம இதுவாம:—ஜீவனிடத்துச் சேதனத்தன்மையாகிய ஏதுவை யங்கீகரித்துப் பிரஹ்மாபேதமாகிய சாதியத்தை யங்கீகரியாவிடில், சேதனத்திற்கு அத்விதீய தத்தன்மையைப பிரதிபாதிக்கும சுருதிக்கு விரோதமுண்டாகும். அநிஷ்டத்தைச சமபாதித்தல் தர்க்க மெனப்படுமே. சுருதியின் விரோதம சாவ ஆஸ்திகாகளுக்கும அநிஷ்டமாமே. வியாவஹாரிகப்பிரபஞ்சம் மித்தை, ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந தன்மையால், யாண்டு யாண்டு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந் தன்மையுண்டோ, ஆண்டு ஆண்டு மித்தியாத்துவமுண்டு, இப்பிவெள்ளி முதலியவற்றிற்போல. ஈண்டு வியாவகாரிகப் பிரபஞ்சம பக்ஷம், மித்தியாத்தன்மை சாத்தியம், ஞானத்தால் நிவிருத்திக்கபபடுந்தன்மை ஏது, இப்பிவெள்ளிமுதலியன திருஷ்டாந்தம். வியாவகாரிகப் பிரபஞ்சம் மித்தை யென்பது பிரதிஞ்ஞை வாக்கியம், ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந தன்மை யுடைமையா லென்பது ஏது வாக்கியம், யாண்டுயாண்டு ஞானத்தால நிவிருத்திக்கப்படுந்தன்மையுண்டோ, ஆண்டு ஆண்டு மித்தியாத்துவ முண்டு, இப்பிவெள்ளி முதலியவற்றிறபோலவென்பது உதாகரணவாக்கியம். ஈண்டும் பிரபஞ்சத்திற்கு ஞானத்தால் நிவிருத்திக்கப்படுந்தன்மையைஅங்கீகரித்தது மித்தியாத்தன்மையை யங்கீகரியாவிடின் சதத்(உள்ளத)திற்கு ஞானத்தால் நிவிருத்தி பொருந்தாது. அதனால் ஞானத்தால் சகல பிரபஞ்சமும் நிவிருத்தியாதலேபபிரதிபாதிக்கும சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோத முண்டாமென்னும தர்க்கத்தால் வியபிசார சங்கையின் நிவிருத்தி யுண்டாகின்றது.

---

## கக. வேதாந்தத்தில் அநுமானத்தின் பிரயோஜனம்.

இவ்வாறு வேதாந்த அர்த்தத்தின் அநுசாரிகளாகிய அநேக அநுமானங்களுள. ஆனால் வேதாந்தவாக்கியங்களால் அத்துவிதீய பிரஹ்மத்தின் எந்த நிச்சயம் சித்திக்கிறதோ, அதன் சம்பாவனை (பொருந்தம) மாத்திரத்திற்கு ஏது அநுமானப் பிரமாணமாம். சுவதந்திர அநுமானம பிரஹ்மநிசயத்திற் கேதுவன்று; வேதாந்தவாக்கிய மொழிந்த மறறைய பிரமாணங்களுக்குப் பிரஹ்மத்திற் பிரவிருத்தியில்லையென்பது சித்தாந்தமாகலின். சுருக்கமாக அநுமானப் பிரமாணம சொல்லப்பட்டது.

இரண்டாவது பிரகாசம்

அநுமானப்பிரமாணநிரூபணம்

முடிந்தது.

---

ஓம்.

தத்ஸத்ப்ரஹ்மணேநமஃ.

# மூன்றுவது பிரகாசம்.

# சப்தப்பிரமாண நிரூபணம்.

## கஉ. சாப்திப்பிரமையின் பேதம்.

சாப்திப்பிரமையின் கரணத்தைச் சப்தப்பிரமாண மென்பர். சாப்திப்பிரமை இருவகையாம். ஒன்று வியாவகாரிகம், மற்றொன்று பாரமார்த்திகம். வியாவகாரிக சாப்திப் பிரமையும் இருவகையாம். ஒன்று இலௌகிக வாக்கிய ஜந்நியம், மற்றது வைதிக வாக்கிய ஜந்நியம். 'நீலக்குடம்' என்றல் முதலியன இலௌகிக வாக்கியழம், 'வஜ்ரஹஸ்தன் புரந்தரன்' என்றல் முதலியன வைதிகவாக்கியழமாம். பதங்களின் சமுதாயத்தை வாக்கிய மென்பர். பொருளுடைய வர்ணம் (எழுத்து) அல்லது வர்ணசமுதாயம் பதமெனப்படும். அகார முதலிய வர்ணங்களும் விஷ்ணுமுதலிய பொருளுடையனவாயிருக்கின்றன. நாராயணன்முதலிய பதங்களில் வர்ணங்களின் சமுதாயம் (கூட்டம்) அர்த்தமுடையதாயிருக்கின்றது. நீலொவடிஃ - நீலம் (கூடம்என்னும் வாக்கியத்தில் வியாகரணத்தின்படி இரண்டு பதங்க

ளுள, நியாயமதத்தின்படி நான்கு பதங்களுள. வியாகரண மதத்தி லும் அர்த்தத்தை யறிவிக்குந் தன்மை நான்கு சமுதாயங்களினு முண்டு. பதம நான்கில்லை.

## சூத்ர. சாப்திப்பிரமையின் தன்மை.

ஆண்டுச் சாப்திப்பிரமையின் தன்மை, இதுவாம:—நீலம் குடம் என்னும் வாக்கியத்தைக் கேட்டகாலத்துச் சுரோதாவி ற்கு (கேட்பவனுக்கு) சகல பதங்களின் சிரவண ஞான முண் டாகின்றது. பதங்களின் சாகூதாகாரத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றது. சங்கை:—பதங்களின் அநுபவம் பதங்க ளின் ஸ்மிருதிக்கு ஏதுவாம, பதார்த்தங்களின் அநுபவம் பதார்த்தங்க ளின் ஸ்மிருதிக்கு ஏதுவாம். பதங்களின் சாகூதாகாரம் பதார்த்தங் களின் ஸ்மிருதிக்கு ஏதுவாதல் பொருந்தாது. எனெனின், எந்த வஸ்துவின் பூர்வ அநுபவ முளதோ, அதன் ஸ்மிருதி யுண்டாகும். மற்றொன்றின் அநுபவத்தால் மற்றொன்றின் ஸ்மிருதி யுண்டா காது. ஆகையால் பதங்களின் ஞானத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாதல் பொருந்தாது.

**சமாதானம்:**—சம்ஸகாரவாயிலாகப் பதார்த்தங்களின் அநு பவமே பதார்த்தங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாம; என்றாலும் உற் பூத சம்ஸ்காரங்களால் ஸ்மிருதி யுண்டாகின்றது; அதற்பூத சம்ஸ் காரங்களால் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை. அதற்பூத சம்ஸகாரங்க ளாலும் ஸ்மிருதி யுண்டாகுமாயின், அநுபவிக்கப்பட்ட பதார்த்த ங்களின் ஸ்மிருதி எப்போது முண்டாதல் வேண்டும். ஆண்டுப் பதார்த்தங்களினது சம்ஸகாரஞ்சின் உறபவத்திற்கு ஏது பத ஞானமாம். எனெனின், சமபாதிகளின் ஞானதத்தால் அங்ஙனமே சாதிருசிய பதார்த்தங்களின் ஞானதத்தால் அலலது சிநதனத்தால் சம்ஸ்காரம் உற்பூதமாகின்றது. அதனால் ஸ்மிருதி யுண்டாகின் றது. எங்ஙனம: புத்திரனைப் பார்த்துப் பிதாவின் ஸ்மிருதியும், பிதாவைப்பார்த்துப் புதிரனது ஸ்மிருதியு முண்டாகின்றன. ஆண்டுச் சமபாதியின் ஞானம் சம்ஸ்காரங்களின் உற்பவத்திற்குக் காரணமாம். அங்ஙனமே ஓர தவசியைக் கண்டு முற் கண்ட மற்றோர் தவசியின் ஸ்மிருதி யுண்டாகின்றது. ஆண்டுச் சம்ஸ் காரத்தின் உற்போதகம் (புலப்படசெய்வது) சாதிருச தரிசனமா (ஒப்புமைக் காட்சியா) ம. யாண்டு ஏகாநதததி ஓட்காரர்து

கொண்டு, அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் சிந்தனம் செய்யுமிடத்து, அதனால் அநுபவிக்கப்பட்ட பதார்த்தங்களின் ஸ்மிருதியுண்டாகின்றதோ, ஆண்டுச் சம்ஸ்காரங்களின் உற்பாதகம் சிந்தனமாம். இவ்வாற்றுற் சம்பாதி ஞான முதலியன சம்ஸ்காரத்தின் உற்போத (எழுச்சி) வாயிலாக ஸ்மிருதிக்கு ஏதுவாம். சம்ஸ்காரத்தின் உற்பத்தி வாயிலாகச் சமானி விஷயமுடைய பூர்வ அநுபவம் ஸ்மிருதிக்கு ஏதுவாம். ஆகையாற் பதார்த்தங்களின் பூர்வ அநுபவமோ பதார்த்தங்களே விஷயிக்கும சமஸ்காரத்தின் உற்பத்திவாயிலாக ஏதுவாம. பதார்த்தங்களின் சமபாதி பதம்; ஆகலாற் பதார்த்தங்களின் சமபாதிகளாகிய பதங்கள் எவையோ, அவற்றின் ஞானம் சம்ஸ்காரத்தின் உற்போத வாயிலாகப் பதார்த்தங்களின் ஸ்மிருதிக்கு ஏதுவாம. ஆகையாற் பதங்களின் ஞானத்தால் பதார்த்தங்களின் ஸ்மிருதி சமபவிக்கும. யாண்டு ஒரு சம்பந்தியின் ஞானத்தால் மற்றொரு சமபாதியின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ,ஆண்டு இரண்டுபதார்த்தங்களினது சமபாதத்தின் ஞானம் எவனுக் குண்டாகின்றதோ, அவனுக்கு ஒன்றன் ஞானத்தால் மற்றொன்றன் ஸ்மிருதி யுண்டாகும. எவனுக்குச் சம்பந்தத்தின் ஞான மூண்டாக வில்லையோ, அவனுக்கு ஒன்றன் ஞானத்தால் மற்றொன்றின் ஸ்மிருதி யுண்டாகாது. எங்ஙனம: பிதர புத்திரர்களுக்கு ஜந்ய ஜநக பாவ சம்பந்தத்தின் ஞான மூண்டாகின்றதோ, அவனுக்கு ஒருவனது ஞானத்தால் மற்றொருவனது ஸ்மிருதி யுண்டாகின்றது. எவனுக்கு ஜந்ய ஜநக பாவ சமபாதத்தின் ஞான மூண்டாக வில்லையோ, அவனுக்கு ஒருவனது ஞானத்தால் மற்றொருவனது ஸ்மிருதி யுண்டாகாது. அங்ஙனமே பதாதிறரும் பொருளிற்குந் தம்மிலுள்ள சம்பந்தமெதுவோ, அதனை விருத்தி யென்பா. பதாதிற்கும் அர்த்தத்திறகு மூள்ள விருத்தியாகிய சமபாதம் யாதோ அதன் ஞானம் எவனுகுண்டாகினறதோ, அவனுகுப பதாத்தின் ஞானதாதால் அர்த்தாதின் ஸ்மிருதி யுண்டாகும. பதாத்திற்கும் அர்த்தத்திற்கு மூள்ள விருத்தி ரூப சமபந்தம எதுவோ, அதன் ஞான மில்லாதவனுக்குப் பதாதின் ஞானதாதால் அர்தாதின் ஸ்மிருதி யுண்டாகாது. ஆதலால் விருத்தியாகிய பதாதின் ஞானம் பதார்த்தத்தின் ஸ்மிருதிக்கு ஏதுவாம்

## கூறுதல்.

அந்த விருத்தி சக்தி விருத்தி லிலக்ஷணை விருத்தி யென இரண்டு வகையாம். நியாயமதத்திலே ஈசுவரனது இச்சையே சக்தியாம். மீமாம்ஸை மதத்தில் சக்தி யென்பது ஓர் பின்ன பதார்த்தமாம். வியாகரணமதத்திலும் பாதஞ்சலமதத்திலும் வாச்சிய வாசகத்தன்மைக்குக் காரணமான பதத்திற்கும பொருளிற்குமுள்ள தாதாத்மிய சமபந்தமெதுவோ அதுவே சக்தியாம. விசாரசாகரத்தில் யோக்கியதையாகிய சக்தி வியாகரணமதத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. அது பூஷணகாரர் மதமாம. வியாகரணத்தின் மஞ்ஞூஷா வென்னும நூலில் யோக பாஷியத்தின்படி வாச்சிய வாசகபாவத்திற்கு மூலமாகிய தாதாத்மியசமபந்தமே சக்தியெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்வைத சித்தாந்தத்தில் மூலுவதும் தனதுகாரியத்தைச்செய்தலின் சாமர்த்தியமே சக்தியாம். எங்ஙனம் தந்துவில் படஞ்செய்தலின் சாமாதியமாகிய சக்தி யிருக்கின்றதோ, எங்ஙனம வண்ணியில் தாகஞ் செய்தலின் சாமர்த்தியமாகிய சக்தி யிருக்கின்றதோ, அங்ஙனமே பூங்களிலுள்ள தமது அர்த்த ஞானத்தின் சாமாதியமே சக்தியாம. ஆனால் இதனுணேப் பேதமுண்டு:—வண்ணிமுதலிய பூதார்த்தங்களிலுள்ள சாமர்த்தியமாகிய சக்திக்கு ஞானத்தின அபேக்ஷை யில்லை. சக்தி அறியப்பட்டதாகுக அல்லது அறியப படாததாகுக. இரண்டிடங்களிலும் வண்ணி முதலியவற்றுல தாகாதி காரியங்களுண்டாகின்றன. பதத்தினது சகதியின ஞான முண்டாகுமாயின், அப்போது அத்தத்தின் ஸ்மிருதியாகிய காரிய முண்டாகின்றது. சக்தியின ஞான முண்டாகாவிடின், அப்போது அர்த்தத்தின் ஸ்மிருதியாகிய காரிய முண்டாவதில்லை. ஆகையால் பதத்தின சமாஹிதியாகிய சக்தி அறியப்பட்டதாகுமாயின் அப்போது பதார்த்தங்களின் ஸ்மிருதியாகிய காரியமுண்டாகின்றது.

சங்கை :—யாண்டு அதீத (கழிந்த) பதார்த்தின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, ஆண்டுப் பதத்தின் ஸ்மரணமாகிய ஞானத்தால் அர்த்தத்தின ஸ்மிருதி யுண்டாகின்றது. அஸ்துண்டாகலாகாது; சாமர்த்தியரூப சக்தியுடைய பதத்தில் துவஸஸும் (நாசமு) உண்டாய்விடமையால் அர்தத்தின் ஸ்மிருதிகு ஏதுவாகிய பதத்தின் அபாவ மிருக்கலின்.

சமாதானம் :—மீமாமஸைகதத்தில் சகல பதங்களும் நித்திய மாம். அவற்றிற்கு உற்பத்தி நாச மூண்டாகிறதில்லை. ஆகையால் பதத்திற்குத் தோவமஸம் பொருந்தாது. பதங்களை அநித்தியமெனக் கொள்ளின், இது சமாதானமாம்:—பதார்த்த ஸ்மிருதியின் சாமர்த்தியம பதத்திலில்லை. ஆனால் பதஞானத்தில் பதார்த்தத்தினது ஸ்மிருதியின் சக்தி யுளது. யாண்டுப் பதத்தின் தோவம்ஸ மூண்டாகின்றதோ, ஆண்டும பதத்தின் ஸமரணரூப ஞானமுண்டு. யாண்டு வாத்தமான பதமுளதோ, ஆண்டுப் பதத்தின் சிராவண சாக்ஷாத்கார ஞானமுண்டு. அநத ஞானத்தில் பதார்த்தத்தினது ஸ்மிருதியின் சாமர்த்திய மிருக்கின்றது. அதுவே சக்தியாம். இத்தப் பக்ஷத்தில் சக்தி யுடையது பத மன்று; ஆனால் பதததின் ஞானமாம். இநதப் பக்ஷம் கதாதர பட்டாசாரியரால் சக்திவாத சிரஸ்தத்தில் ஞான சக்தி வாதமாக எழுதப்பட டிருக்கின்றது. இவ்வாற்றால் பதத்தின் சாமாதயிய அல்லது பததனினது ஞானத்தின் சாமர்த்தியம் சக்தியெனப்படும. இரண்டாவது பக்ஷத்திலும் பதம் சக்தி யுடையதாம என்னும் வியவகார சித்தியின்பொருட்டுப் பதத்தின் தர்மமாகியசக்தி அரோபிக்கப்படுவதாயின், எப்பதத்தின் ஞானம் எவ்வாததத்தின் ஸ்மிருதியில் சாமாதயிமுடைய தாகின்றதோ, அப்பதத்திறகு அவ்வர்த்தத்தில் சக்தி சொல்லப்படுகின்றது.

## கூடு. சாப்திப்பிரமையின் கிரமபூர்வகமாகச் சத்தியில் விவாதம்.

இவ்வாற்றுற் சக்தியோடுகூடிய பதஞானத்தால் பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றது. எவ்வளவு பதாதாதங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அவ்வளவு பதார்தாதங்களினது சம்பந்தத்தின் ஞானமாதல், சமபாதத்தோடுகூடிய சகல பதார்த்தங்களின் ஞானமாதல் வாக்கியார்ந்த ஞான மெனப்படும. அதனையே சாப்திப்பிரமை யென்ப. 'நீலோகடம் (நீலொவடம்)' என்னும் வாக்கியத்தில் க. நீலபதம், உ. ஓகாரபதம், கூ. கடபதம், ச. விஸர்க்கபத மென நான்கு பதங்க ளுள. நீலரூப விசிஷ்டத்தில் நீலபதத்தின் சக்தி யிருக்கின்றது. 'ஓகாரபதம் பொருளின்றியதாம.' இவ்வார்த்தை வியுத்பத்தி வாதமுதலிய கிரந்தங்களில் பவஸ்டமாம, அல்லது ஓகாரபதததிற்குஅபீபத அர்த்தமாம. கடபதத்திற்குக்கடத்தன்மை

விசிஷ்டத்தில் சக்தியுண்டு. * விசர்க்கத்திற்கு ஒருமையெண்ணில் சக்தி யிருக்கின்றது. சக்தியின் ஞானம, கோச்ம (நிகண்டு) வியாகரணம் (இலக்கணம) முதலிய நூல்களா லுண்டாகின்றது. நீலம் பீதம் (கருமை பொன்மை) முதலிய பதங்களுக்கு வர்ணத்தினும் வர்ண முடையதன்கண்ணும சக்தி உண்டென்பது கோசத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.விசர்க்கத்திற்கு ஒருமைச சங்கையில்லை, சக்தி யுண்டென்பது வியாகரணத்தான அறியப்படுகின்றது. கடபதத்திற்குக் கடத்தன்மை விசிஷ்டத்தில் சக்தியுண்டென்பது வியாகரண நூலிலும சக்திவாதமுதலிய தர்க்க நூல்க ளிலும எழுதப்பட்டிருக்கின்றது. நியாயசூத்திரத்தில் கௌதமராவா ஜாதி ஆகிருதி வியக்திகளில் சகலபதங்களுக்கும சக்தியுண்டென்று சொல்லியிருக்கின்றார். அவயவங்களின் சையோகதத்தை ஆகிருதி யென்பர். அநேக பதார்த்தங்களிலிருக்கும் நித்தியமாகிய ஒரு தாமமெதுவோ, அது ஜாதி யெனப்படும. அநேக கடங்களிலுள்ள நித்திய மும் ஏகமுமாகிய கடத்தன்மை சாதியாம். அங்ஙனமே ஜாதியின் ஆசிரயத்தை வியக்தியென்பர். இமமதத்திற கடபதத்திற்குக் கபால சையோகத்தோடு கூடிய கடத்தன்மை விசிஷ்டகடத்தில் சக்தியுண்டு. தீதிதிகாரசிரோமணி பட்டாசாரியர் மதத்தில் சகல பதங்களுக்கும் வியக்தி மாத்திரத்திற் சக்தி யுண்டு. ஜாதி ஆகிருதிகளிலில்லை. இம்மதத்தில் கடபதத்திற்கு வாச்சியம் கேவல வியக்தியாம். கடத்தன்மையும் கபால சையோகமும் கடபதத்திற்கு வாச்சியமாகா. எனெனின், எப்பதத்திற்கு எப்பொருளின் தன் சக்தியுண்டோ, அப்பதத்திற்கு அப்பொருள் வாச்சியமெனப்படும்; சக்கியமென்றும் சொல்லப்படும். கேவல வியக்தியில் சக்தியிருத்தலான் கேவல வியக்தியே வாசசியமாம்.

சங்கை:—கடபதத்தின் உச்சாரணத்தால் கடத்தன்மையின் தோற்றமும், கோபதத்தின் உசசாரணத்தால் கோத்தன்மையின் ஞானமும, பிராமணபதத்தின் உசசாரணத்தால பிராமணத்தன்மையின் ஞானமு முண்டாகின்றன. அஃது இமமதத்தி லுண்டாக

---

* விசர்க்கமெனபது சம்ஸ்கிருதத்தில உயிர்வர்க்கத்தின் ஈற்றிலுள்ள (ஃ) இரண்டு புள்ளி வடிவினது. தமிழில் கரியன் தேவதத்தன என்னும் வாக்கியத்தைக்கோண்டு, அதனை 'கரிய, ன், தேவதத்த, ன்' என்று நான்கு பதங்களாகப் பிரித்து முடிதத்துக்கொள்க.

லாகாது. ஏனெனின், அவாச்சிய அர்த்தத்தின் ஞானம் இலக்ஷணையின்றிப் பதத்தால் உண்டாகிறதில்லை. அவாசகிய அர்த்தத்தின் ஞானம் இலக்ஷணையின்றிப் பதத்தால் அங்கீகரிக்கின், கட பதத்தின் அவாச்சியமாகிய கடத்தன்மையின் ஞானம் எங்ஙனம் கட பதத்தால் அங்கீகரிக்கப் படுகின்றதோ, அங்ஙனமே கடபதத்தி ற்கு அவாசகியமாகிய பட முதலியவற்றின் ஞானமும கடபதத்தா லுண்டாதல் வேண்டும்.

சமாதானம்:—வாசகியத்தின் பிரதீதி பதத்தால் உண்டாகின் றது; அன்றியும் வாசகியத்திலிருக்கும ஜாதி யெதுவோ, அதன் தோற்றமும முண்டாகின்றது. ஆகலின் இது நியமமாம:—ஜாதிக்கு வேறுகிய அவாசகியத்தின் பிரதீதி யுண்டாகிற தில்லை. வாசகியத் தின்கணுள்ள ஜாதி எதுவோ, அது அவாச்சியமாகியும் தோற்று கின்றது. ஆகையால் கடத்தன்மை முதலியனவோ, அவாசகிய மாகியும் கடமுதலிய பதங்களால தோற்றுகின்றன; பட முதலிய அவாசகியம தோற்றுகிறதில்லை.

சங்கை :—வாச்சியத்தின்க ணிருக்கும் அவாசகிய சாதி யின் தோற்றம் பதங்களா லங்கீகரிகின, கடபதத்தால் பிருதிவி த்தன்மைச் சாதியின்தோற்றமுமுண்டாதல்வேணடும.ஏனெனின், கட பதத்தின் வாசகியத்தில் எப்படிக் கடத்தன்மைச சாதி யிருகின்றதோ, அதுபோலப் பிருதிவித்தன்மையு மிருக்கின்றது. ஆதலால் இரண்டும வாசகியத்தி லிருபபனவாயும அவாசகியமாயு மிருக்கின்றன. கடத்தன்மையின் தோற்றமபோலப் பிருதிவித்தன் மையின் தோற்றமு முண்டாதல் வேண்டும. கோபதத்திற்கு வாச் சியமாகிய பதம் எதுவோ, அதன்கண் கோத்தன்மையைப் போல ப்பசுத்தன்மை (விலங்குதன்மை)யுமிருக்கின்றது. ஆதலால் இர ண்டும் வாசகியமாம். அங்ஙனமே பிராமணபதத்தால் பிராமணத் தன்மையைப்போல மனிதத்தன்மையும தோற்றல்வேண்டும்.

சமாதானம்:—வாச்சியத்தன்மை யவசேதகமான அவாச் சியம் எதுவோ, அதன் தோற்றமும வாசகியத்தின் தோற்றமும் பதத்தா லுண்டாகின்றன. பிறவற்றின் தோற்ற முண்டாவதில்லை. எங்ஙனம்: கட பதத்தின் வாசகியமான கட வியக்தியின் தோற்ற மும், வாசகியத் தன்மை யவசேதகமான கடத் தன்மையின் தோறறமும கடபதத்தா லுண்டாகின்றன. பிருதிவித்தன்மை

வாச்சியமு மன்று; வாச்சியத்தன்மை யவச்சேதகமு மன்று. ஆக லின் கட பதத்தால் பிருதிவித் தன்மையின் தோற்ற முண்டாகிற தில்லே. வாச்சியத்தன்மையினும் குறைந்தவிடத் திருப்பதும் அதிக விடத் திருப்பது மாகாமல், எவ்வளவிடத்தில் வாச்சியத்தன்மை யுளதோ, அவ்வளவிடத்தி லிருப்பது எதுவோ, அது வாச்சியத் தன்மை யவச்சேதக மாம். கட பதத்தின் வாச்சியத் தன்மை சகல கட வியக்திகளினு மிருக்கின்றது. கடத் தன்மையும் சகல கட வியக்திகளினும் மிருக்கின்றது. ஆதலால் கடத் தன்மை கடத் தின் வாசசியத்தன்மையினும குறைந்தவிடத்திருப்பதும் அதிக விடத்திருப்பது மாகாமல், சமான தேசத்திருப்பதா யிருத்தலால் கட பதத்தின் வாச்சியத்தன்மை யவச்சேதகமாம். கடபதத்தின் வாசசியத் தன்மை படததி லில்லே. பிருதிவித் தன்மை படத்தி லுண்டு. ஆதலால் அதிக விடந்திருப்பதா யிருத்தலின் பிருதிவித் தன்மை கட பதத்தின் வாசசியத் தன்மை யவசசேதக மன்று. கோபதத்தின் வாசசியத்தன்மை சகல கோவியக்திகளினு முண்டு. கோத் தன்மையும சகல கோ வியக்திகளினு முண்டு. ஆகலின் கோத் தன்மை கோ பதத்தின் வாசியத் தன்மை யவசசேதக மாம் அசுவததில் கோபததின் வாசியத்தன்மை யில்லே. அதன் கண் பசுத் தன்மை யிருக்கின்றது. ஆதலால் கோ பதத்தினது வாசசியத்தினும் அதிகவிடத் திருப்பதா யிருத்தலான் கோ பத த்தின் வாச்சியத்தன்மை யவச்சேதகமே பசுத்துவமன்று. அங்ஙன மே பிராமணபதத்தின் வாச்சியத்தன்மை சகல பிராமண வியக்தி களினு முண்டு. பிராமணத் தன்மையும் சகல பிராமண வியக்தி களினு முண்டு. ஆகையால் பிராமண பதத்தின் வாச்சியத்தன்மை யவசசேதகம் பிராமணத்தன்மையாம். கூததிரியர் முதலியோரிட த்துப் பிராமணபதத்தின் வாச்சியத்தன்மை யில்லே. ஆண்டு மனித த்தன்மை யிருகின்றது. ஆதலால் அதிக விடதிருப்பதாயிருத்த லால் பிராமணபதத்தின் வாச்சியத்தன்மை யவசசேதகம மனித த் தன்மை யன்று. இவ்வாற்றால் கடமுதலிய பதங்களால் கடத் தன்மைமுதலியவற்றின் தோற்ற முண்டாகின்றது. சக்தியின்மை யால் அவை (கடதன்மை முதலியன) கடமுதலிய பதங்களின் வாச்சியமன்று; ஆனல் வாசசியத்தன்மை யவசசேதகமாம். இது சிரோமணி பட்டாசாரியரது மதமாம. கட முதலிய பதங்களுக்குச் சாதி மாத்திரத்தில் சக்தி யுண்டு; வியக்தியில்க ணில்லே யென்பது மீமாம்ஸை மதம்.

சங்கை:—எவ்வர்த்தத்தில் எப்பதத்தினது சக்தியின் ஞான மூண்டாகின்றதோ, அவ்வாத்தத்தின் ஸ்மிருதி அப்பதத்தா லுண் டாதச் சாப்திப்பிரமை யுண்டாகின்றது. பதத்தின் சக்தியின்றி ப் பதத்தால் வியக்தியின் ஸ்மிருதியும் சாப்திப்பிரமையும் உண் டாகலாகாது.

சமாதானம்:—சப்தப் பிரமாணத்தினாலோ ஜாதியின் ஞானமே யுண்டாகின்றது. அங்ஙனமாயினும் அருத்தாபத்திப் பிரமாணத் தால் வியக்தியின் ஞான மூண்டாகின்றது. பகலுண்ணுப புருஷனு க்கு இராத்திரி போஜனமின்றிப் பருமை சம்பவியாததுபோல வியக்தியின்றிக் கேவல ஜாதியில் ஒரு கிரியையும் சம்பவியாது. ஆகையால் அர்த்தாபத்திப் பிரமாணத்தால் வியக்தியின் போத மூண்டாகின்றது. "ஆவைககொண்டுவா" என்னும வாசகியத்தால் கோத்தன்மையினது கொண்டுவருதலின் ஞான மூண்டாகின்றது. அது கோவியக்தியின் கொண்டு வருதலியின்றிப பொருந்தாது. கோவியக்தியின் கொண்டு வருதலானது சமபாதகமாம; கோத தன்மையின் கொண்டு வருதலானது சமபாதகியமாம். சம்பாதக ஞானத்திற்கு ஏதுவாகிய சம்பாதகியத்தின் ஞானம் அர்த்தாபத்தீப் பிரமாணமெனப்படும. சமபாதகஞானம. பிரமையாம். இவ்விடத்து ச் சாதியின் ஞானம் பிரமாணமும, வியக்தியின் ஞானம பிரமையு மாமென்பது பட்டமீமாம்ஸகர் மதம். ஓர ஜாதிசகதிவாதி * அநு மானததால் வியக்தியின் ஞானத்தை யங்கீகரித்துளன். அது பிற நூல்களில் தெளிவாயுண்டு. கடினப் பிரசங்கத்தான் ஈண்டு எழுத ப்படவில்லை. கேவல ஜாதியில் சக்தியை யங்கீகரிப்பவர மதததில் வியக்தியின் ஞானம சத்தப் பிரமாணத்தால் உண்டாகிற தில்லை; அர்த்தாபதியால் அல்லது அநுமானத்தால் வியக்தியின் ஞான மூண்டாகின்றது. ஆனால் ஓர நூலாசிரியர ஜாதியில சுப்ஜசக்தியை யங்கீகரித் திருக்கின்றனர். அவர் மீததில் வியக்தியின் ஞான மும சப்தப் பிரமாணதாதானே யுண்டாகின்றது. அவர் அபிபபிரா யம் இதுவாம் :— சகல பதங்களின் சக்தியோ ஜாதிவிசிஷ்ட விய க்தியினுண்டி. ஆனால் சக்தியின் ஞானம் எவனுக்குண்டாயிருக்கின்

* அவயநுமானம வருமாறு.—

கடத்தன்மை வியக்தியை யாரெயித்ததாம, சாதித்தன்மையால். யாது யாது ஜாதியோ அதுஅது வியக்தியை யாசிரயித்ததேயாம்; படத்தன்மை போல.

றதோ, அவனுக்குப் பதத்தால் அர்த்தத்தின் லெமிருதியும் சாப்த போதமும் முண்டாகின்றன; பிறனுக்கில்லை. ஆண்டுக் கடபதத்தின் சக்தி கடத்தன்மையிலுண்டு. இவ்வாற்றான் ஜாதி சக்தியின்ஞானம் பதார்த்ததினது ஸ்மிருதிக்கும் சாப்தபோதத்திற்கும் ஏதுவாம். வியக்தியில் சக்தியினது ஞானத்தின் உபயோக மில்லை. வியக்தி அநந்தமாகலின் எல்லா வியக்திகளின் ஞானமும் சமபலியாது. இக்காரணத்தால் வியக்தியின்சக்தி சொரூபமாகப் பதார்த்தத்தினது ஸ்மிருதிக்கும்சாப்தபோதத்திற்கும் ஏதுவாம்.அதன்ஞானம் ஏது வன்று. இவ்வாற்றான் கட பதத்திற்குக் கடத்துவ விசிஷ்டத்திற் சக்தி யிருத்தலான் கட பதத்தின் வாச்சியமோ கடத்துவம் கடமென்னு மிரண்டுமாம். ஆதலால் கடபதத்தின் வாச்சியமாகிய கடத்தன்மை கடமென்பவற்றின் சாப்தபோதத்திற்கு ஏது கடத்தன்மையிலுள்ள சக்தியின் ஞானமாம். இப்பக்ஷத்திணைக் * குப்ஜ சக்தி வாத மென்பர். வேறு வகையாற் குப்ஜசக்தி வாதம் கதாதர பட்டாசாரியரால் சக்தி வாதத்தின் ஈற்றில் எழுதப்பட் டிருக்கின்றது. அது கடினமாகலின் ஈண்டெழுதப்படவில்லை. கட முதலிய பதங்களால் ஜாதி விசிஷ்ட வியக்தியின் ஞான முண்டாவதுபோல வியக்தியி லுள்ள ஜாதியின் சமவாய முதலிய சம்பந்தங்களின் ஞானமு முண்டாகின்றது. ஆதலால் ஜாதி வியக்தி சமபந்தமென்னும் மூன்றினும் கடமுதலிய பதங்களின் சக்தி யுண்டென்பது கதாதர பட்டாசாரியர் மதம். சகல மதங்களினும் ஜாதிவிசிஷ்ட வியக்தியில் கடமுதலிப் பதங்களுக்குச் சக்தியுண்டு. இம்மதமும் அநேக நாலாசிரியாகளால் எழுதப்பட்டிருக்கின்றதாம். ஆதலால் கடந்தன்மைவிசிஷ்டத்திலகடபதத்தின்சக்திசொல்லப்பட்டிருக்கின்றது.

## நூல். வாக்கியங்களின் பேதம்.

நீலத்தின் அபேதமுடைய ஒரு கட மிருக்கின்ற தென்பது 'இது நீலக்குடம்' என்னும் வாக்கியத்தின் அர்த்தமாம். அங்ஙனமே 'வஜ்ரஹஸ்தன் புரந்தரன் (வசிராயுததைக் கையிலுடைய வன் இந்திரன்)' என்பது வைதிக வாக்கியம். 'நீலக்குடம்' என்னும் வாக்கியத்தில் எங்ஙனம் நீலபதம் விசேஷணத்தை யறிவிப்பதும், கடபதம் விசேஷியத்தை யறிவிப்பதுமா யிருக்கின்றனவோ, அங்ஙனமே வஜ்ரிஹஸ்தன் என்னும் பதம் விசேஷணத்தை யறிவிப்

* குப்ஜம் - வளைவு.

பதும், புரந்தரனென்னும் பதம் விசேஷியத்தை யறிவிப்பதுமாம. விசேஷண பதத்தின் ஈற்றிலுள்ள னகரம் பொருளின்றியதாம், அல்லது அபேதத்தின் பொருட்டாம். விசேஷிய பதத்தின் ஈற்றி லுள்ள னகரம் ஒருமையை யுணர்த்துதற் பொருட்டாம். வஜ்ர ஹஸ்தத்தின் அபேதமுடைய ஒருபுரந்தர னுளனென்பது வாக்கிய த்தின் அர்த்தம். இவ்வாற்றுன் இலௌகிக வைதிக வாக்கியங்க ளுக்குச் சமானமான தன்மை யுண்டு. ஆனுல் வைதிக வாக்கியம் இரு வகையாம்:—ஒன்று வியாவகாரிகப்பொருளை யுணர்த்துவது, மற் றொன்று பரமார்த்த தத்துவத்தை யறிவிப்பது. பிரஹ்மத்தின் வேறுய யாவும் வியாவகாரிகப் பொருளெனப்படும், பிரஹ்மம் பர மார்த்ததத்துவ மெனப்படும். பிரஹ்மத்தை யறிவிக்கும் வாக்கிய மும்அவாந்தரவாக்கியம் மகாவாக்கியமென இருவகைப்படும். அவ ற்றுள் தத்பதார்த்தத்தின் அல்லது துவம்பதார்த்தத்தின் சொரூ பத்தை யறிவிப்பது அவாந்திர வாக்கியமாம். அது 'சத்திய ஞான அநந்தம் பிரமம்' என்னும் வாக்கியம் தத்பதத்தை யறிவிப்பதும், 'இவன் இருதயத்தினுள் உட்சோதியாயுள்ள புருஷன்' என்னும் வாக்கியம் துவம்பதத்தின், சொரூபத்தை யறிவிப்பது மாதல் போலவாம். தத்பதார்த்த துவமபதார்த்தங்களின் அபேதத்தை அறிவிக்கும் தத்துவமஸி முதலியன மகாவாக்கியமாம்.

## ஈஎ. சத்தத்தின் சக்திவிருத்தி லக்ஷணவிருத்திகளைச் சுருக்கமாகக் கூறுதல்.

ஏப்பொருளில் எப்பதத்தின் விருத்தி யுளதோ, அப்பொரு ளின் ஞானம் அப்பதத்தா லுண்டாகின்றது. அவ்விருத்தியும் சக்தி இலக்கணை யென்னும் பேதத்தால் இருவகையாம். ஈசுவரனது இச்சையை அல்லது வாச்சிய வாசகத்தன்மைச் சம்பந்தமாகிய மூலதாதான்மியத்தை அல்லது பதார்த்தஞான வேதுவாகிய சாமர் த்தியத்தைச் சக்தி யென்பர். எப்பொருளின்கண் பதத்தின் சக்தி யுண்டாகின்றதோ, அப்பொருள் பதத்தின் சக்தியமெனப்படும். சக்திய சம்பந்தத்தை இலக்ஷணையென்பர். கங்கையென்னும் பதத் தின் சக்தி பிரவாகத்தின்கணிருக்கின்றதாகலின், கங்கையென் னும் பதத்தின் சக்தியம் பிரவாகமாம். அதனேடு சையோக சம் பந்தம் தீரத்தில்(கரைக்)குளது. இவ்வாற்றுற் பதத்திற்குப் பொரு ளோடுள்ள பரம்பரைச சம்பந்த மெதுவோ, அது இலக்ஷணை

யாம். கங்கையெனனும பதததிறகுத தீரதம்தாதி பரமபரைச் சம்பந்த மிருக்கின்றது. அதுவே தீரத்தில் கங்னீகையென்னும் பதத்திற்கு இலக்ஷணை யெனப்படும். ஏனெனின், சாக்ஷாத் சம்பந்த மூள்ளதோடுள்ள சம்பந்த மெதுவோ, அது பரம்பரைச் சம்பந்த மெனப்படும். கங்கையென்னும் பதத்திற்குச் சக்திரூப சம்பந்தம் பிரவாகத்தோடுண்டு; அதனோடையோகம் தீரத்திற்குண்டு. ஆகையால் கங்கையெனும் பதத்திறகுத் தீரத்தோடி சுவ(தனது)சக்கிய சையோகரூப பரம்பரைச்சம்பந்தமுள்ளது. அதுவே இலக்ஷணையென ப்படும். இதனால் இது சித்தித்தது:—எப்பொருளோடு எப்பதத்திற்குச் சக்திரூப சாக்ஷாத் சம்பந்த முண்டாகின்றதோ, அப்பொருள் அப்பதத்தின் சக்கிய மெனப்படும். எபபொருளோடு எப்பதத்தினது சக்கியத்தின் சம்பந்த முண்டாகின்றதோ, அப்பொருள் அப்பதத்தின் இலக்ஷிய மெனப்படும. கங்கையென்னும் பதத்தின் சக்கியமாகிய பிரவாகமெதுவோ, அதற்குத் தீரமாகிய பொருளோடு சையோகசம்பந்தமிருக்கின்றது. ஆதலால் கங்கையென்னும் பதத்திற்குச் சக்கியம் பிரவாகமும், இலக்ஷியம் தீரமுமாம்.

இவ்வாற்றுற் பதத்தின் சாக்ஷாத் சம்பந்தமும் பரம்பரைச் சம்பந்தமுமாகிய சக்தி யிலக்கணைகளின் பேதத்தால் விருத்தியிருவகைப்படும். எப்பதத்தின் விருத்தி எப்புருஷனுக்கு அறியப்படாதா யிருக்கின்றதோ, அப்பதத்தின் சாக்ஷாத்காரம் அப்புருஷனுக் குண்டாகியும் பதார்த்தத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமு மூண்டாகிறதில்லை. ஆதலால் சக்தி யிலக்கணையென்னும் விருத்திகளின் ஞானம் பதார்த்த ஸ்மிருதிக்கும் சாப்தபோதத்திற்கும் ஏதுவாம்.

## ஈஅ. வாக்கியார்த்த ஞானத்தின் கிரமம்.

சாப்த போதத்தின் கிரமம் இதுவாம்:—எக்தப் புருஷனுக்குப் பதத்தின்விருதி அறியப்பட்டதாகின்றதோ, அந்தப்புருஷனுக்கு வாக்கியத்தினது சகல பதங்களின் சாக்ஷாத்காரமு மூண்டாகின்றது. எப்பதத்தின் விருத்தி எப்பொருளில் மூன் அறியப்பட்டதாயிருக்குமோ, அப்பதத்தான் அப்பொருளின் ஸ்மிருதி யுண்டாகின்றது. அதன்பின் ஒன்றற்கொன்று சம்பந்தமுடைய சகல பதார்த்தங்களின் ஞானமாகிய அல்லது சகல பதார்த்தங்களின் ஒன்றற் கொன்றுள்ள சம்பந்த ஞானமாகிய வாக்கியார்த்த ஞான

மூண்டாகின்றது. எங்ஙனம்: 'நீ ஆவைக் கொண்டுவா' என்னும் வாக்கியத்தில் ஆழுத்தலிய பதங்களெவையோ, அவற்றிற்குத் தமது பொருளில் விரூத்தியின் இவ்வியல்பினதாய ஞானம் முதலிற் புருஷனுக் குண்டாதல் வேண்டும். ஆவென்னும் பதத்திற்கு ஆக்தன்மை விசிஷ்ட பசு விசேஷ (விலங்கின் பேத)த்தில் சக்தியுண்டு. இரண்டாம் வேற்றுமைக்குச் செயப்படுபொருண்மையிற் சக்தியாம, கொண்டுவருதலிற் கொண்டுவாவென்னும்பதத்திற்குச் சக்தியாம், ஆய்விருதி புணர்ந்துகெட்ட வாவென்னும் பதத்திற்கு வினையினும் ஏவற்கண்ணும் சக்தியாம். சம்போதன போகசேதனத்தில் (விளித்தலின் சமபந்தத்தையுடைய உயர்திணையில்) நீ யென்னும் பதத்திற்குச் சக்தியிருக்கின்றது. இவ்வாற்றால் சக்திஞான முடையவனுக்கு 'நீ ஆவைக் கொண்டுவா' என்னும் வாக்கியத்திற்குச் சுரோத்திரத்தோடு சம்பந்தமுண்டாகவே, ஆ முதலிய சகல பதங்களின் சாகூத்காரமு முண்டாய் அதனால் அப் பதங்களினது சக்கியாசத்ததின் ஸ்மிருதி யுண்டாகின்றது. யாணைப் பாகனது ஞானத்தால் அவன் சம்பந்தமுடைய யாணையின் ஸ்மிருதி யுண்டாதல போலப் பதங்களின் ஞானத்தால் அவற்றின் சம்பந்தமுடைய சக்கியார்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகின்றது. 'இவன் யாணைப்பாகன்' என்று யாணைக்கும் மாவுத்தனுக்கு முள்ள சம்பந்தத்தின் ஞானம் எவனுக்குண்டாகாமல் 'மனிதன்' என்னும் ஞான முண்டாகின்றதோ, அவனுக்கு யாணைப்பாகனைக் கண்டுழியும் யாணையின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை. அதுபோல இப்பதத்திற்கு இது சக்கியமாம், அல்லது இலக்கியமாமெனச் சக்தியல்லது இலக்கணையாகிய சமபந்தத்தின் பூர்வ ஞானம் எவனுக் குண்டாகாமல், அறியப்படாத பொருளினையுடைய பதத்தின் சிராவண சாகூத்கார மூ (செவி யுணர்வு) ண்டாகின்றதோ, அவனுக்குப் பதங்களின் சிரவணத்தாலும் அர்த்தங்களின் ஸ்மிருதி யுண்டாகிறதில்லை. ஆகலின் விருத்தியோடு கூடிய பதத்தின் ஞானம் பதார்த்த ஸ்மிருதிக்கு ஏதுவாம; கேவல பதத்தின்ஞானம் ஏதுவன்று. பதங்களின் ஞானத்தால் சகலபதார்த்தங்களின் ஸ்மிருதியு முண்டாய்ச் சகல பதார்த்தங்களின் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தத்தின் ஞான முண்டாகின்றது. அல்லது பதங்களின் ஞானத்தால் ஒன்றற்கொன்று சம்பந்தமுள்ள எப்பதார்த்தங்களின் ஸ்மரண முண்டாயிருக்கின்றதோ, ஒன்றற்கொன்று சம்பந்தத்தோடு கூடிய அப்

பதார்த்தங்களின் ஞான முண்டாகின்றது. அந்தப் பதார்த்தங்களின் ஞானம் அல்லது சம்பந்தத்தோடு கூடிய பதார்த்தங்களின் ஞானம் வாக்கியார்த்த ஞானமெனப்படும்; தாப்தீப்பீரமையென்னும் சொல்லப்படும். 'ஆவைக் கொண்டுவா நீ' என்னும் வாக்கியத்தில் ஆ வென்னும் பதப் பொருட்கு இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய செயப்படு பொருண்மையில் ஆதேயத் தன்மைச் சம்பந்த முண்டு. ஆதேயத்தன்மையினை விருத்தித்துவம் (விருத்தித்தன்மை) என்பர். 'கொண்டுவா' என்பதின் பொருளாகிய கொணர்தலிற் செயப்படு பொருண்மையை நிரூபிக்குந் தன்மைச் சம்பந்த முண்டு. வாவென்பதற்கு வினை, ஏவலென இரண்டு பொருளுண்டு. ஆண்டு வினையிற்கொணர்தலின் அநுகூலந்தன்மைச் சம்பந்தமுண்டு. வினைக்கு நீ யெனனும் பதப்பொருளில் ஆசிரயத்தன்மைச் சம்பந்தமும், ஏவற்கு நீ யென்னும பதப்பொருளில விடயத்தன்மைச் சம்பந்தமு முண்டு. ஆகலின் "ஆவின்கணிருக்கும் செயப்படு பொருண்மையை நிரூபிக்கும கொணர்தலான அநுகூல வினையின் ஆசிரயமாகிய பிரேரணை (ஏவலின்) விஷயம நீ யென்னும் பதப்பொருளாம்" என்னும ஞானவாக்கியம சுரோதாவிற்குண்டாகின்றது. ஆண்டுவிருத்தி விசிஷ்ட சகல பதங்களின் ஞானமும சத்தப்பிரமாணமாம; பதங்களின் ஞானத்தாலுண்டாகும் அவற்றினது அர்த்தத்தின் ஸ்மிருதி வியாபாரமாம; வாக்கியார்த்த ஞானமு பயனும. இவ்வாறன்றி இலௌகிக வைதிக வாக்கியங்களால் அநேக விடங்களில் பதார்த்தங்களினது சம்பந்தத்தின் அல்லது சம்பந்ததோடுகூடிய பதார்த்தங்களின்ஞானமே பயனுகின்றது. என்றாலும் துவமபதார்த்தத்தின் சம்பந்தியாகிய தத்பதார்த்தத்தின் ஞானமும் தத்பதார்த்தத்தின் சம்பந்தியாகிய துவமபதார்த்தத்தின் ஞானமும் மகா வாக்கியங்களால் அங்கீகரிக்கின், "இப்புருஷன் அசங்கனே" என்றல் முதலிய சுருதி வாக்கியங்களாலே வேதாகதப் பிரதிபாத்திய (உபநிடதங்களாற் சொல்லப்படும்) பிரஹ்மத்திற்கு அசங்கத் தன்மை சொல்லப் படுகின்றமையால் அதற்குப் பாதமுண்டாகின்றது. ஆதலால் மகாவாக்கியங்களாற்சொல்லப்படுவது அகண்டபிரஹ்மமாம். வாக்கியங்கள் அகண்டார்த்தத்தை யறிவிப்பனவா மென்பதில் திருஷ்டாநுதம சம்க்ஷேபசாரீரகத்தில் ஸபஷ்டமாம்; விரிவஞ்சி யெழுதப்படவில்லை.

## ங்கூ. இலக்ஷணையின் முன்மை.

மகா வாக்கியங்களில் இலக்கணையின் கிரமம் விசார சாகரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. அதனைத் தெரிந்துகொள்க. பதத்தின் சக்கியத்தோடுள்ள சமபந்தத்தினை இலக்ஷணையென்பர். ஆதலால் பதத்திற்குப் பரம்பரைச் சம்பந்தமாகிய இலக்ஷணை யிருக்கின்றது. எனெனின், பதத்தின் சாக்ஷாத் சம்பந்தம் சக்கியத்தோடுண்டாகின்றது. அச்சக்கியத்தின் சம்பந்தம் இலக்ஷணையோ டுண்டாகின்றது; ஆதலால் சக்கியவாயிலாகப் பதத்திற்குச் சம்பந்தமிருத்தலான் பரம்பரைச் சம்பந்தமாகிய இலக்ஷணைவிருத்தி யுண்டு. இக்காரணத்தானே நூலாசிரியர்கள் இலக்ஷணை விருத்தியினை * ஜகந்நிய மெனக் கூறியிருக்கின்றனர். யாண்டுப் பதத்திற்குச் சாக்ஷாத் சம்பந்தமாகிய சக்திவிருத்தி சம்பவிக்க வில்லையோ, ஆண்டுப் பரம்பரைச் சமபந்தமாகிய இலக்ஷணைவிருத்தி அங்கீகரிக்கப்படும். இக்காரணத்தானே நூலாசிரியர்கள், யாண்டுச் சக்கியார்த்தத்தில் சொல்லுவோனது தாற்பரியஞ் சம்பவிக்கவில்லையோ,ஆண்டு இலக்ஷணைவிருத்தியை யங்கீகரித்துப் பதத்தினிலக்கியப் பொருளை யங்கீகரித்தல் தகுதியாம். யாண்டுச் சக்கியார்த்தத்தில் உரைப்போனது தாற்பரியம் சம்பவிக்கின்றதோ, ஆண்டு இலக்கியப்பொருளை யங்கீகரித்தல் தகுதியன்றென்று எழுதியிருக்கின்றார்கள். அவ்விலக்ஷணை கேவல லக்ஷணை, இலக்ஷித லக்ஷணையென்னும் பேதத்தால் இருவகையாம். பதத்திற்குச் சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்த முண்டாகுமாயின் அதனைக் கேவல லக்ஷணையென்பர். கங்கையென்னும் பதத்திற்குக் கரையினிடத்து இலக்ஷணை யுண்டாகின்றது. ஆண்டுக் கங்கையென்னும் பதத்தின் சக்கியமாகிய பிரவாகம் எதுவோ அதற்குக் கரையோடுள்ள சாக்ஷாத் சம்பந்தம் யோகமா(அவயவசக்தியா)ம் ஆகலின் கங்கையென்னும் பதத்திற்குக் கரையினிடத்துக் கேவல இலக்ஷணையாம். இலக்ஷித லக்ஷணையின் உதாரணம் இதுவாம்:— † "துவிரேபம் ஒலிக்கின்றது" என்னும் வாக்கியத்திற்கு "இரண்டு ரேபங்கள் (ரகரங்கள்) ஒலிக்கின்றன" என்னும் பொருள் பதங்களின் சக்தி

---

* ஜகந்நியம் - தாழ்ந்தது.

† துவிரேபம் என்பது இரண்டு ரகாரங்களையுடைய பதத்தின் பொருளாம். இரண்டு ரகாரங்களையுடைய பதம் பிரமரம்; அதன்பொருள் வண்டு.

யாற் றோற்றுகின்றது. அவ்வெழுத்து வடிவான ரேபத்தில் ஒலித்தல் சம்பவியாது. ஆதலால் சக்கியார்த்தத்தில் உரைப்பவனுக்குத் தாற்பரியமில்லை. ஆனால் இரண்டு ரேபங்களையுடைய பிரமரபதம் எதுவோ அதன்சக்கியத்தின்கண்ணே ரேப பதத்திற்கு இலகூணையாம். அது கேவலலகூணையோவன்று. எனெனின் எப்பொருளில் பதத்தினது சக்கியத்தின் சாகூஷாத் சம்பந்தமுண்டாகின்றதோ, அதன்கண் கேவல லகூணை யுண்டாகின்றது. துவிரேப பதத்தின் சக்கியம் இரண்டுரேபமாம். அவற்றின் அவயவித்தன்மைச் சம்பந்தம் பிரமரபதத்திலுளது. அப்பதத்தின் சக்திரூபசம்பந்தம் தனது வாச்சியமாகிய வண்டில் இருக்கின்றது. ஆதலால் சக்கிய சம்பந்தியாகிய பிரமரபதம் எதுவோ அதன் சம்பந்தமிருத்தலால் சக்கியத்தின் பரம்பரைச்சமபந்த மிருக்கின்றது; ஆகலின் இலகூஷிதலகூஷணையாம். இரண்டுரேபங்களைத் துவிரேபமென்றுகூறுவதில்லை. இரண்டு ரேபங்களுடையதனைத் துவிரேபமென்பர். இரண்டு ரேபமுடையது பிரமரபதமாம். ஆகலின் துவிரேப பதத்தின் சக்கியமாகிய பிரமரபதமெதுவோ, அதற்கு வண்டினுடு சாகூஷாத் சம்பந்த மிருத்தலால் கேவலலகூணைசமபவிக்கின்றது. என்றாலும் வியாகரணமதத்தில் அது சமாசத்தின் (*தொகைச்சொல்லின்) சக்தியாமாகலின் துவிரேப பதத்தின் சக்கியம இரண்டு ரேபங்களையுடைய பிரமரபதமாம். நியாயவைசேஷிகர் மதத்தில் சமாசசமுதாயத்திற்கு (தொகைச்சொற் றொகுதிக்கு)ச் சக்தி யங்கீகரிப்பதில்லை. ஆனால் சமாச சமுதாயத்தின் அவயவங்க ளெவையோ, அவற்றிற்கு இலகூணை விருத்தியினால் அதிக அர்த்தம் சமாசத்தின்கண் தோற்றுகின்றது. எங்ஙனம்: 'துவிரேபம' என்னும் இவ்வளவும் சமாச சமுதாயமாம். அதற்கு எப்பொருளினும் சக்தி யில்லை. ஆண்டுத் துவித்துவ (இருமைச்) சங்கை விசிஷ்டம் துவிபதத்தின் அர்த்தமாம். ரேபத்தன்மைச் சாதிவிசிஷ்ட அகூரம் ரேபபதத்தின் பொருளாம். துவிபதத்தின் சக்கியத்திற்கும் ரேபபதத்தின் சக்கியத்திற்கு முள்ள அபேதசம்பந்தம் வாக்கியார்த்த மாகுமாயின், துவித்துவ சங்கையுடையன ரேபங்களாமென்னும் அர்த்தமே சக்கியமாம். துவிரேபமுடைய பதத்தினைத் துவிரேபமென்பர். அஃது இலகூணை விருத்தியை யங்கீகரித்துக் கூறுகின்றனர்.

* துவிரேபம் என்பது தேன்மொழியினைப் போல அன்மொழித் தொகைச்சொல்.

ஆனால் இத்தூஷணப்பேதமுண்டு—நியாய வைசேஷிகமதத்தில் வாக்கியத்திற்கு இலக்ஷணை யங்கீகரிப்பதில்லை. ஏனெனின், சக்கிய சம்பந்தத்தை இலக்ஷணை யென்பர். பதசமுதாய வடிவினதாகிய வாக்கியத்திற்கு எப்பொருளினும் சக்தியில்லை. ஆதலால் வாக்கியத்தினது சக்கியத்தின் அபாவமிருத்தலான் சக்கிய சம்பந்தமாகிய இலக்ஷணை வாக்கியத்திற்குப் பொருந்தாது. பதத்திற்கு இலக்ஷணையுண்டென்னும் மதத்தில் இரேப பதத்திற்கு இரேபமுடையதன்கண் இலக்ஷணையாம். மீமாம்சைமதத்தினும் அங்ஙனமே வேதாந்தமதத்தினும் வாக்கியத்திற்கும் இலக்ஷணை யங்கீகரித்துளர். வாக்கியத்தினிலக்ஷணையில் எத்தோஷம் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அதற்கிது சமாதானமாம்:— பத சமுதாயத்தினை வாக்கிய மென்பர். அச்சமுதாயம்ஒவ்வோர்பதத்தினும்வேறன்று. ஆதலாற் பதங்களின் சக்கியமே வாக்கியத்தின் சக்கியமாம். அல்லது சக்கிய சம்பந்தம் இலக்ஷணை யன்று; போத்திய(அறியப்படுதற்)சம்பந்தம் இலக்ஷணையா மென்பர். பதத்தின் சக்கியத்தன்மை சக்திவிருத்தியா லறியப்படுவ தாதல்போல ஒன்றற்கொன்று சம்பந்தத்தோடு கூடிய பதார்த்தவடிவ அல்லது பதார்த்தங்களின் சம்பந்த வடிவ வாக்கியார்த்தம் வாக்கியத்தால் அறியப்படுவதாம். ஆதலால் பதத்தானறியப்படும் சம்பந்தமாகிய இலக்ஷணை எங்ஙனம் பதத்திற்குளதோ, அங்ஙனமே வாக்கியத்தா னறியப்படும் சம்பந்தமாகிய இலக்ஷணை வாக்கியத்திற்கு முண்டென்னும் மதத்தில் துவிரேப சமுதாயத்திற்கு இரண்டு ரேபமுடைய பதத்தின்கண் இலக்ஷணையாம். இவ்வாற்றுன் துவிரேப பதத்தான் இலக்ஷித (இலக்ஷிக்கப்பட்ட) பிரமர பததத்திற்கு வண்டினிடத்து இலக்ஷணையிருத்தலான் இலக்ஷித இலக்ஷணையெனப்படும். அதுவும் இலக்ஷணையினு ளடங்கியதேயாம். ஏனெனின், துவிரேபு பதத்தின் சக்கியமாகிய இரண்டு ரேபங்களுக்குப் பிரமர பதத்தோடு சாகூஷாத சம்பந்தமும் பிரமரமாகிய வண்டோடு பிரமர பதவாயிலாகப் பரம்பரைச் சம்பந்தமு மிருக்கின்றனவாகலின், சக்கிய சம்பந்தமாகிய இலக்ஷணையினும் இலக்ஷித லக்ஷணை வேறன்று. வியாகரண மதத்தில் துவிரேப பதத்தின் சக்கியம இரண்டு ரேபங்களையுடைய பிரமரபதமாம். அதற்கு வண்டோடு சாகூஷாத் சமபந்தமுண்டு. ஆகலின், இவ்வுதாரணம இலக்ஷித லக்ஷணையினதன்று; கேவல இலக்ஷணையினதாம். இம்மதத்தில் இலக்ஷித லக்ஷணையின் உதாரணம் 'இங்

கம் தேவதத்தன்' என்றல் முதலியனவாம். ஈண்டுச் 'சிங்கத்தோ டபின்னன் தேவதத்தன்' என்னும் வாக்கியார்த்தம் பதங்களின் சக்திவிருத்தியாற் ரோன்றுகின்றது; அது சம்பவியாது. எனெனின் பசுத்தன்மைச் சாதியும் மனிதத் தன்மைச் சாதியும் ஒன்றற் கொன்று விருத்தமாம்; ஒன்றினிடத்துச் சமபவியா. ஆகலின் சிங்க மென்னும் சொல்லிற்குச் சூரத்தன்மை குரூரத்தன்மைத் தன்ம முடைய புருஷனிடத்து இலக்ஷணைபாம். அப்புருடனேடு சிங்க மாகிய சக்கியததிற்குச் சாக்ஷாத் சம்பந்த மின்மையால் கேவல லக்ஷணையோ இல்லே. ஆனல் சூரத்தன்மை முதலியவற்ரோடு சிங்க சத்தத்தின் சகியததிற்கு ஆதேயத்தன்மைச் சமபந்தமுளது. சக்கிய சம்பந்தியாகிய சூரதன்மை முதலியவற்றிற்கு புருஷனிட டத்து ஆசிரயத்தன்மைச் சம்பந்தமுண்டு. ஆனல் சிங்கத்தின் சூர த்தன்மைக்கும் புருஷனது சூரத தன்மைகுகும அபேதம அங்கீ கரிக்கின் சிங்கத்தின் சூரத்தன்மைக்குத் தேவதததனிடத்து அதி காரணத்தன்மையின் சம்பந்தமாம. இரண்டு சூரத்தன்மைகளுக்கும் ஒன்றற்கொன்று பேத மங்கிகரிக்கின், சிங்கத்தினது சூரத்தன் மைக்குப் புருஷனிடத்துத தன்னினமுள்ள சூரததன்மையின் அதி காரணத்தன்மைச சம்பாதமுண்டு. சிங்கத்தின் சூரததன்மை தா னென்னும் சொல்லிற்குப் பொருளாம். இவ்வாற்ரூன் வாக்கியத் திற்குப் பரம்பரைச சமபாத மிருததலான், சிங்க சத்தத்திற்குச் சூரத்தன்மை முதலியகுண விசிஷ்டனிடதது இலக்ஷித லக்ஷணை யாம. சக்கியதின் பரம்பரைச சம்பந்தத்தினை இலக்ஷிதலக்ஷணை யென்பர்.

இலக்ஷித லக்ஷணையென்னும் சொல்லால் முற்கூறிய பொரு ளின் சித்தி (பெறுதி)கிலேசமுடையதாம்; ஏனெனின், இலக்ஷித லக்ஷணையெனுஞ் சொல்லின் சூடியோ சக்கியத்தின் பரமபரைச்

---

* சூடி (இகுறி) யெனபது பதத்தின் சமுதாய சக்தி (பொதுவாற் றல்). அவவாற்றலுடைய பதங்கள் மரம், நிலம் என்பனவாம. யோகம் (காரணம்) என்பது பதத்தின் அவயவங்களில் (சொல்லின் பகுதி விகுதி முதலிய வுறுப்புகளில்) உள்ள சக்தியாம். அவவாற்றலுடைய பதங்கள் அணி, மூடி முதலியனவாம். யோகப்பொருளிலிருக்கும் சூடி சக்தி யோகசூடி (காரண இடுகுறி) யாம். இவவாற்றலுடைய பதங்கள பங்கயம் முகக்கண்ணன் முதலி யனவாம். யோகப் பொருளினும் வேறிய பொருளிலிருக்கும் சூடி சக்தி யோகிகசூடிசக்தியாம். அவவாற்றலுடையபதம் உற்பிதம்முதலியன. உற்பித மென்னும பதத்திற்கு யோகப்பொருள் பிளந்துகொண்டிவரும் ம்ரம் கொடி முதலியன; சூடிப்பொருள் ஓர் யாகம்.

சம்பந்தத்தால் கோசம் (நிகண்டு) முதலியவற்றில் ஓரிடத்து மில்லை. யோகவிருத்தியால் இலக்ஷணையென்னும் சொல்லிற்கு முற்கூறிய பொருள் தோற்றுகிற தில்லை. எனெனின், இலகூதித தின் இலக்ஷணை இலகூதித இலக்ஷணையென்றிவ்வாறு ஆறும்வேற்று மைத் தோகையாகச் செய்யின், இலகூதிதம் அதாவது இலக்ஷணை விருத்தியாற் றோன்றிய தெதுவோ, அதன் இலக்ஷணை யென்பது இலகூதித லக்ஷணையென்னும் சொல்லிற்குப் பொருளாகச் சித்திக் கின்றது. துவிரேபம் ஒலிக்கின்றது, சிங்கம் தேவதத்தன் என்றல் முதலியனவாகச் சொல்லப்பட்ட இலகூதிலக்ஷணையின் உதாகரண மெதுவோ, அதில் முற்கூறிய சொரூபமுள்ள இலகூதித லக்ஷணை சம்பவியாது. எனெனின் 'துவிரேபம் ஒலிக்கின்றது' என்னும் வாக்கியத்தில் துவிரேப பதத்தால் பிரமரபதம் இலகூதித மாகின் றது. அதற்கு வண்டினிடத்து இலக்ஷணை யுண்டாகுமாயின், மூற் கூறிய அர்த்தம் சம்பவிக்கும். அவ்விரண்டு வார்த்தையு மில்லை. எனெனின், துவிரேப பதத்தினது சக்கியத்தின் சம்பந்தம் பிரமர பதத்தோ டொதாயினும் துவிரேப பதத்தால் இலகூதிதம் பிரமர பதமன்று. எனெனின் சொல்லுவானது கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி இலகூதிதமாம்; கேவல சக்கிய சம்பந்தி இல கூதிதமன்று, கேவல சக்கிய சம்பந்தி இலகூதிதமாயின், கங்கை யென்னும் பதத்தினது சக்கியத்தின் சம்பந்திகள் மீனமுதலிய அநேகமுளர்; அவை யாவுமே கங்கையென்னும் பதத்தால் இலகூதித மாதல் வேண்டும். ஆதலால் சொல்லுவான் 'குறிப்பிற்கு விடய மாகும் சக்கியசம்பந்தி இலகூதிதமாம். கங்கையென்னும் பதத்தின் சக்கிய சம்பந்தியோ அநேகமாம். என்றாலும் 'கங்கையில் இடை ச்சேரி' என்னும் வாக்கியத்தில் கேட்பவனுக்குக் கங்கையென் னும் சொல்லால் கரையின் ஞான முண்டாகின்றது. இவ்வா று கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி கேவலம் கரையாம். ஆக லின் கங்கையென்னும் பதத்தால் கரையே இலகூதிதமாம். மீன முதலியனவும் சக்கிய சம்பந்திகளா யிருக்கினும், முற்கூறிய கருத் திற்கு விடயமாதலில்லை யாகலின், கங்கையென்னும் பதத்தால் இலகூதிதமாகா. இவ்வாற்றான் துவிரேப பதத்திற்குச் சக்கியத்தின் சம்பந்தியோ பிரமரபதமாம். ஆனால் துவிரேப பதத்தால் பிரமரபத த்தின் ஞானம் கேட்பவனுக் குண்டாதல் வேண்டுமென்பது சொல்லுவான் கருத் தன்று. ஆனால் துவிரேப பதத்தால் பிரமர

பதத்தின் சக்கியமாகிய வண்டின் ஞானம் கேட்பவனுக் குண்டா தல் வேண்டுமென்பது சொல்லுவோனது கருத்தாம். ஆதலால் துவிரேப பதத்தினது சக்கியத்தின் சம்பந்தியும் •பிரமரபதமரம். சொல்லுவோனது முற்கூறிய கருத்திற்கு விடயமாதலின்மையால் துவிரேப பதத்தால் இலகூதிதம் பிரமரபத மன்று. ஒருவாற்றால் துவிரேப பதத்தால் இலகூதிதம் பிரமரபதமா மென்னும் வாக்கி தையினை அங்கிகரித்துக் கொள்வோமாயினும் பிரமர பதத்திற்கு வண்டின்கண் சக்தி யிருக்கின்றதாகலின் அதற்கு இலகூணை கூறு தல் அசங்கதமாம். இவ்வாற்றால் 'இலகூதிதமாகிய வண்டினது இலகூணை இலகூதித லகூணையாம்' என்றிவ்வாறு ஆறும்வேற்று மைத் தொகையின் பொருள் முற்கூறிய உதாரணத்திற் சம்பவி யாது. அங்ஙனமே 'சிங்கம் தேவதத்தன்' என்னும் உதாரணத் திலும் முற்கூறிய அர்த்தம் சம்பவியாது. சிங்கத்தின்க ணுள்ள சூரத்தன்மை முதலியன சிங்கசத்தத்தினது சக்கிய சம்பந்திகளா யிருக்கினும், சிங்க சத்தத்தால் சூரத் தன்மை முதலியவற்றின் ஞானம் கேட்பவனுக் குண்டாதல் வேண்டு மென்பது சொல்லு வோனது கருத்தன்று. ஆனால் சிங்க சதத்தத்தால் சிங்கத்தை யொத்த புருஷனது போதம் கேட்பவனுக் குண்டாக வேண்டுமெ ன்பது சொல்லுவானது கருத்தாம். ஆதலால் சக்கிய சம்பந்தியாயி னும் சூரத்தன்மை முதலிய குணங்கள் முற்கூறிய கருத்திற்குவிட யமாகா திருத்தலான், சிங்க சத்தத்தால் இலகூதித மன்று. அன்றி யும் ஒருவாற்றால் சிங்க சத்தத்தால் இலகூதிதமாம சூரத் தன்மை முதலிய குணங்களென்பதை ஒப்புக்கொள்ளுவோ மாயினும் அவ ற்றிற்கு இலகூணை கூறுதல் விருத்தமாம். எனெனின், சக்தியும் இலகூணையும் எழுத்துவடிவமான சத்தத்தினவாம். சூரதன்மை முதலிய குணங்கள் சத்தரூபமன்று. ஆதலால் அவற்றிறகுச சக்தி அல்லது இலகூணை பொருந்தாது. இவ்வாற்றால் "இலகூதிதமாகிய பிரமர பதத்தின் இலகூணை இலகூதித லகூணையாம்" "இலகூதித மாகிய சூரத்தன்மை முதலிய குணசமுதாயத்தின் இலகூணை இல கூதித லகூணை யாம்" என்னும இவ்வகையான பொருள் ஆறும் வேற்றுமைத் தொகையை யங்கிகரித்தலா லுண்டாகின்றது. இவ் வர்த்தத்தில் சக்கியத்தினது பரம்பரைச் சம்பந்தத்தின் ஞானம் இலகூதித லகூணை யென்னும் சொல்லா லுண்டாகிற தில்லை. முற் கூறிய உதாரணங்க ளிரண்டினும் சக்கியத்தின் பரமபரைச் சம்

பந்தமோ வண்டினிடத்தும் புருஷனிடத்துமாம். முற்கூறிய வண்ணம் இலக்ஷித இலக்ஷணையென்னும் சொல்லிற்கு*யோகப்பொருள் சம்பவியாது. என்றாலும் இனிக் கூறப்படும் வகையான் இலக்ஷித லக்ஷணை யென்னுஞ் சொல்லின் யோகப் பொருள் ஆரும் வேற்றுமைத் தொகையை யங்கீகரித்துச சக்கியத்தின் பரம்பரைச் சம்பந்தமாகவே சம்பவிக்கின்றது. சொல்லுவானது கருத்திற்கு விடயமாகும் சக்கிய சம்பந்தி இலக்ஷித சப்தத்திற்குப் பொருளாமாயினும், பாகத்தியாக லக்ஷணையினுல் சொல்லுவானது கருத்திற்கு விடயமாதலென்னும் இத்தனேப் பாகத்தைவிட்டு நின்ற சக்கிய சம்பந்தி ஈண்டு இலக்ஷித சத்தத்திற்குப் பொருளாம். அங்ஙனமே இலக்ஷணையென்னும் சொலலின் பொருளும சக்கிய சம்பந்தமாம். அதன்கண் சக்கிய பாகத்தைவிட்டு நின்ற சம்பந்தமாத்திரம் பாகததியாக லக்ஷணையால் இலக்ஷணையென்னும் சொல்லிற்குப் பொருளாம். ஆதலால் இலக்ஷிதமாகிய சக்கிய சம்பந்தியின் இலக்ஷணையாகிய சம்பந்தம் இலக்ஷித லக்ஷணை யென்னும் சொல்லிற்குப் பொருளாம. இவ்வாறுன் சக்கிய சம்பந்தியின் சமபந்தம இலக்ஷிதலக்ஷணை யென்னும சொல்லால் யோகவிருத்தியாலே சித்தமாகின்றது. அல்லது இலக்ஷித சத்தத்திற்கோ சக்கிய சமபந்தியில் பாகததியாக லக்ஷணையாம. இலக்ஷணையெனுஞ் சொல்லிற்குச் சக்கிய சமபந்தமே பொருளாம். அதற்குச் சம்பந்தமாத்திரததில் இலக்ஷணையில்லை. "இலக்ஷிதத்தான் இலக்ஷணை, இலக்ஷித லக்ஷணை" என்றிவ்வாறு மூன்றும்வேற்றுமைத் தொகையை யங்கீகரிக்கின், இஷ்டமான பொருளின் சித்தியுண்டாகின்றது. இலக்ஷிதத்தால் அதாவது சக்கிய சமபந்தவாயிலாக, இலக்ஷணை அதாவது சக்கியத்தின் சம்பந்தம என்பது இலக்ஷித லக்ஷணையென்னும் சொல்லிற்குப் பெரருளாம. சகக்கிய சம்பந்தம் சிலவிடத்து நேரேயாகின்றது; சிலவிடததுச சக்கிய சம்பநதிவாயிலாக வண்டாகின்றது. "துவிரேபம ஒலிக்கின்றது" என்றல் முதலிய விடங்களில் துவிரேப பதத்தின் சக்கியமாகிய இரண்டு ரேபங்களுக்கு வண்டோடு சம்பந்தமில்லை. அங்ஙனமே சிங்க சத்தத்தினது சக்கியத்தின் சம்பந்தியாகிய சூரத்தன்மை முதலிய குணங்களின் வாயிலாகச் சிங்கசததத்தினது சக்கியதின் சம்பநதி சூரத்தன்மை முதலிய குண விசிஷ்டத்தின்கண்ணுமாம். ஆதலால் சிங்க சத்த

* அவயவ ஆற்றலா லுணரப்படுமெ பொருளினை யோகப்பொருளென்பர்.

த்திற்கு இலக்ஷித மெனப்படும் சக்கிய சம்பந்தியாகிய சூரத்தன் மை முதலிய குணங்களின் வாயிலாக இலக்ஷணை அதாவது சிங்க சத்தத்தினது சக்கியத்தின்சமபாதம புருஷனிடத்துளதாம. ஆறும் வேற்றுமைத் தொகையை யங்கீகரிக்கின், இலக்ஷித்தம் இலக்ஷணை யென்னும் சொற்களில பாகத்தியாக லக்ஷணையை யங்கீகரித்தல் வேண்டிய. மூன்றுமவேறுறுமைத் தொகையை யங்கீகரிக்கின், இல கூணையென்னும சொல்லின் முக்கியார்தாதம நிற்கின்றது. இலக்ஷித சத்தமொன்றினும் பாகத்தியாக லக்ஷணை யங்கீகரித்தல்வேண்டும். இலக்ஷித லக்ஷணையென்னும சொல்லில் கர்மதாரய சமாசம் (பண்பு த்தொகை) அங்கீகரிக்கின் இலக்ஷிதம இலக்ஷணையென்னும் சொற்க ளிரண்டிற்கும் முக்கிய யோக அர்த்தம நிற்கின்றது. பாகத்தியாக லக்ஷணை யங்கீகரிக்க வேண்டியதிலலை. அவயவங்களின் சக்தியால் எந்தச் சத்தம் தனது பொருளைத தெரிவிக்கின்றதோ, அதனை யௌ கிக சத்தமென்பர். எங்ஙனம: * பாசகனென்னும சொல்லில 'பாச்' என்னும அவயவத்திற்குப் பாகம பொருளாம, 'அகன்' என்னும் அவயவத்திற்குக் காத்தா (செய்வோன்) என பதுபொருளாம். இவ் வாற்றுன் அவயவசக்தியால பாகஞ்செய்வோன பாசகனென்னும் சொல்லிற்குப் பொருளாயிருத்தலின், பாசகசப்தம் யௌகிக சப்த மாம். அவயவசக்தியை யோகமென்பர். இது பாரிபாஷிகசொல. சாஸ்திரத்தின் அசாதாரண சங்கேதம பரிபாஷை யெனப்படும. பரிபாஷையாற் பொருளை யறிவிக்குமசொல் பாரிபாஷிகச் சொல் லெனப்படும். இலக்ஷித சப்தத்திற்கு இலக்ஷ, இத என்னும் இரண் டும் அவயவங்களாம். அவற்றுள் இலக்ஷ என்னும பதத்திற்குப் பொருள் இலக்ஷணம்; இதவென்னும பதத்திற்குப் பொருள் சமபந் தியாம. ஆதலால் இலக்ஷண சமபாதியென்னும பொருளை யறிவிக் கும் இலக்ஷிதசத்தம யௌகிகமாம இதனால இலக்ஷணமுடையது இலக்ஷித சத்தத்தின் பொருளாம; அங்ஙனமே சக்கிய சமபந்தத் தின் பெயர் இலக்ஷணையாம். இது சாஸ்திரத்தின சங்கேதமாம். ஆதலால் இலக்ஷணையென்னும் சொல் பரிபாஷையால் சக்கிய சம

* சமைப்பவன் என்னும சொல்லில் 'சமை' என்னும் அவயவத்திற்குச் சமைத்தல் பொருளாம்; 'அன்' என்னும் சொல்லிற்குக் கர்த்தா (செய்வோன) என்பது பொருளாம். இவ்வாற்றுனே அவயவ ஆற்றலால் சமையல் செய் வோன் சமைப்பவனென்னும் சொல்லிற்குப் பொருளாதலின் சமைப்பவன் என்னும் சொல் யௌகிக (காரண)ச் சொல்லாம்.

பந்தமாகிய பொருளை யறிவிப்பதா யிருத்தலால் பாரிபாவிகமாம். 'இலகுதிதமாகிய இலகூணை இலகுதித லகூணை' என்பது பண்புத் தொகை. இலகூணமுடையதாகிய இலகூணை யென்னும் பொருள் பண்புத் தொகையாற சித்திக்கின்றது. அசாதாரண தர்மத்தை இலகூணமென்பர், சக்கியசம்பந்தத்தை இலகூணையென்பர். ஆதலால் இலகூணையின அசாதாரண தர்மம் சக்கிய சம்பந்தத்தன்மையாம். அதுவே அதன் இலகூணமாம். சக்கியத்தின் சம்பந்தம் சாகூதாத் பரம்பரையென்னும் வேறுபாட்டால இருவகைத்தாம். அநேக விடங்களில் சக்கியத்தின் சாகூதாத் சம்பந்தமாகிய இல கூணையுண்டு. 'துவிரேபம் ஒலிக்கின்றது' 'சிங்கம் தேவதத்தன்' என்றல் முதலியவற்றில் சக்கியத்தின் சாகூதாத் சம்பந்தமில்லை. என்றாலும இலகூணையின் அசாதாரண தர்மம் சக்கிய சம்பந்தத் தன்மையாம். சம்பந்தத்திலுள்ள சாகூதாத்தன்மை இலகூணையின் இலகூணத்தில் பிரவேச முடையதன்று. யாண்டுச் சக்கியத்தின் பரம்பரைச் சமபந்தமோ, ஆண்டும் சக்கிய சம்பந்தத் தன்மையாகிய தன்னிலக்கண முடையது இலகூணையாம். 'கங்கையில்இடைச்சேரி' என்றல் முதலிய உதாரணங்களில் சக்கியத்தின் சாகூதாத் சம்பந்தமாகிய இலகூணை யுளதாயினும், சம்பந்தத்தின் சாகூதாத் தன்மை இலகூணையின் இலகூணத்தில பிரவேச முடையதன்று. ஆனால் சாகூதாத் பரமபரைச் சாதாரண சம்பநதத்தன்மை வடிவ மாக இலகூணையின் இலகூணத்தில் சம்பநதமாத்திரம் பிரவேச முடையதாம். இதனாற்றான் 'சக்கியசம்பந்தமுடையது இலகூணை' எனச் சொல்லப்பட் டிருக்கின்றது. 'சக்கியத்தின் சாகூதாத் சம்பந்தம் இலகூணை' என்று சொல்லவில்லை. இவ்வாற்றான் இலகுதித அதாவது சக்கிய சமபநதத்தன்மை வடிவ தன்னிலக்கணமுடைய இலகூணை இலகுதித லகூணையெனும் சொல்லிற்கு பொருளாம். அது பரம்பரைச் சமபநத ஸ்தலத்திற் சம்பவிக்கின்றது. இலகுதித லகூணையென்னும சொல்லிற்கு முற்கூறிய பொருள் சாகூதாத் சம்பந்த ஸ்தலத்திலும் சம்பவிக்கின்றது. ஆண்டும் இலகுதித லகூணை சொல்லுதல்வேண்டும்; என்றாலும் "இலகுதிதமான லகூணை இலகுதிதலகூணை" என்று சொல்லுதலின் அபிப்பிராயம் இதுவாம்:— சக்கிய சாகூதாத்தன்மை விசிஷ்ட சம்பந்தத்தன்மை யின்றிய கேவலசக்கியசம்பந்தத்தன்மையான இலகூணமுடையதாகியில கூணை இலகுதித லகூணை யென்பதாம். ஆதலால் கேவல லகூணை கொள்ளப்படுகிறதில்லை. இவ்வாற்றாற் பண்புத்தொகையாம்.

சில நூல்களில் இவ்வாறெழுதப்பட்டிருக்கின்றது:—"சிங்கம் தேவதத்தன்" என்றல் முதலிய வாக்கியங்களில் சிங்கமுதலிய சொற்கள் கௌணி விருத்தியால் புருஷன் முதலியோரை அறிவிப்பனவா யிருக்கின்றன. எங்ஙனம் சக்தி லக்ஷணைகள் பதத்தின் விருத்திக ளாகின்றனவோ, அங்ஙனமே மூன்றாவது கௌணியும் விருத்தியாம். பதத்தின்சக்கிய அர்த்தத்தில் எந்தக்குண மிருக்கின்றதோ, அதனையுடைய அசக்கிய அர்த்தத்தில் பதத்தின் கௌணி விருத்தி சொல்லப்பட்டிருக்கின்றது. எங்ஙனம்: சிங்க பதத்தின் சக்கியத்தில் சூரத்தன்மை முதலிய குணங்க ளிருக்கின்றன; அவற்றையுடையவன் சிங்க சதத்திற்கு அசக்கியமாகிய (சக்கியமாகாத) புருடன்; அவனிடத்துச் சிங்க சத்தத்தின் கௌணி விருத்தியிருக்கின்றது. அது முற்கிரமப்படி இலக்ஷணையின் உட்பட்டதாம்.

## சக. நான்காவது வியஞ்சனவிருத்தியைக் கூறுதல்.

நான்காவது வியஞ்சனவிருத்தி அலங்கார நூல்களில் எழுதப்பட்டுளது. அதன் உதாரணம இதுவாம்:—சத்துருவின் வீட்டில் போஜனத்தின் பொருட்டுப் பிரவர்த்திதத புருஷனைப் பார்த்து 'விஷத்தைப் புசி' என்று அவனுக்குப் பிரியனுகிய மற்றோர் புருஷன் சொல்லுகிறான். ஆண்டு 'விஷத்தைச் சாப்பிடு' என்பது சக்திவிருத்தியால் வாக்கியத்தின் பொருளாம். சொல்லுவோனுக்குப் போஜனத்தின் அபாவத்தில் கருததாம். போஜனத்தில் சக்தியுடைய அப்பதத்திற்கு அபாவத்தில சம்பந்தமின்மையால் இலக்ஷணையும்பொருந்தாது. ஆதலால் சதுருவின் வீட்டிலுண்ணுதலின் நிவிருத்தி வாக்கியதத்தின் வியங்கியப்பொருளாம். வியஞ்சனவிருத்தியாற் சேறும் பொருள் எதுவோ, அது *வியங்கியப் பொருளெனப்படும். வேறு உதாரணம்:—சக்தியாகாலத்தில் அநேக புருஷர்களைப் பல காரியங்களிற் பிரவர்த்தித்தற்பொருட்டு ஒருவன் 'சூரியன் அஸ்தமித்தது' என்னும் வாக்கியத்தை யுச்சரித்தான். அதைக்கேட்டுப் பலபுருஷர்கள் அக்காலத்தில் தத்தம் கர்த்தவ்வியங்களை (தாம் தாம் செய்யவேண்டியவற்றை) நன்று தெரிந்து பிரவர்த்திக்கிறார்கள். ஆண்டு அநேக புருடர்களுக்குப் பல காரத்தவ்வியத்தின் ஞானம வியஞ்சனவிருத்தியா லுண்டாகின்றது. இவ்வாறு

* வியங்கியம்=குறிப்பு.

வியஞ்சனவிருத்தியின் அநேக உதாரணங்களை காவ்வியப்பிரகாசம் காவ்வியப் பிரதீப முதலிய நூல்களில் மமபட்டர் கோவிந்தபட்டர் முதலியோர் எழுதியிருக்கின்றனர். அவ்வநேக வுதாரணங்களும் சிங்கார ரசமுடையனவா யிருத்தலின் ஈண்டு எழுதப்படவில்லை. நியாய நூல்களில் வியஞ்சனவிருத்திக்கும் இலகூணவிருத்தியில் அடக்கம் சொல்லப்பட் டிருக்கின்றது. சக்கிய சம்பந்தமுடைய அர்த்தத்தின்ஞானமோ இலகூணவிருத்தியாற் சமபவிக்கும். சக்கி யார்த்தத்தின் சம்பந்தியாகிய அர்த்தத்தில் இலகூணை சம்பவியாது. அது சத்தத்தாற் மூற்றுமபொருட்டு வியஞ்சனவிருத்தி யங்கீகரி த்தல் வேண்டுமென்று அலங்காரநூலார் கூறுவர். அதற்குச் சமா தானம் வருமாறு:— சாகூஷாத் பரம்பரை யென்னும பேதத்தால் சம்பந்தம் இருவகையாம். அவற்றுள் சாகூஷாத் சம்பந்தமோ பரஸ் பரம் சிலவற்றிற்கே யுண்டாகின்றது; எல்லாவற்றிற்கு மூண்டா வதில்லை. பரம்பரைச் சம்பந்தமோ சகல பதார்த்தங்களுக்கும் பரஸ்பரம் சம்பவிக்கும். அதிகமாய்ச் சொல்லுவதென்ன ? கோத் தன்மை அசுவத்தன்மைகளுக்கும பரஸ்பரம்*வியதிகரணத்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. கடபாபாவமும் கடமும பரஸ்பர விரோதிக ளாம். என்றாலும் கடத்தில் கடாபாவத்தின் பிரதியோகித்தன்மைச் சம்பந்த மிருக்கின்றது. கடத்திற்குத் தனது அபாவத்தில் சுவவிரு த்திப் (தன்னிடத்திருக்கும) பிரதியோகித்தன்மையை நிரூபிக்குந் தன் மைசீசம்பந்தமிருக்கின்றது. இவ்வாற்றால் சர்வபதார்த்தங்களுக்கும் தம்மில் பரம்பரைச சம்பந்தம சம்பவிக்கின்றது. ஆதலால் வியங்கிய ப்பொருளும சக்கிய சமபந்தியாயிருத்தலின் இலகூயத்தில் அடங் கியதாம். வியஞ்சனவிருத்தியின்நிரூபணம் காவியப்பிரகாசத்திலும் அதன் உரையிலும ஜயராமபட்டாசாரியா முதலியோரால் எழுதப் பட்டிருக்கின்றது. அங்ஙனமே காவியப்பிரதீபத்திலும்அதன் உரை யாகிய உத்யோதனத்திலும் நாகோஜிப்பட்டா ல்எழுதியிருக்கின்றனர்; அதன் கண்டனமும நியாயநூல்களில் எழுதப்பட்டிருக்கின்றது. வியாகரண நூல்களிலும சிலவிடத்துக் கண்டனமும் சிலவிடத்து நிரூபணமும் எழுதப்பட்டிருக்கின்றன. அத்வைத நூல்களில் கண்டனத்தின் அல்லது நிரூபணத்தின் ஆக்கிரகம (மேற்கொள்ளல்) இல்லை. ஆதலால் நிரூபணத்தின் தன்மைமாத்திரம் அறிவிக்கப் பட்டது.

---

* வியதிகரணத்தன்மை=வேற்றுநிலைக்களத்திருத்தல்.

## சூ2. இலக்ஷணையின் பேதத்தைக் கூறுதல்.

சக்தி இலக்ஷணை யென்னும் இரண்டும் எல்லோர் மதத்திலு மூண்டு. மகாவாக்கியத்தின் அர்த்தத்தை நிரூபித்தலிலும் இரண்டு மே உபயோகமாம். அவற்றுள் சக்தியின் நிரூபணம் செய்யப்பட் டது. சக்கியத்தின் சாக்ஷாத் சம்பந்தம் பரமபரைச் சம்பந்த மெனும பேதத்தால் கேவலக்ஷணை இலக்ஷிதலக்ஷணையென இரண்டு பேதம் இலக்ஷணைக்குச் சொல்லப்பட்டது. ஜகல் லக்ஷணை (விட்ட லக்கணை) அஜகல் லக்ஷணை (விடாத லக்கணை) பாகத் தியாக லக்ஷணை (ஜகதஜகல் லக்ஷணை விட்டுவிடாத லக்கணை) யென்னும் பேதத்தால் மீண்டும் முவகை இலக்ஷணையுண்டு.

யாண்டுச் சக்கியம தோற்றுமல் கேவல சக்கிய சம்பந்தி தோற் றுகின்றதோ, ஆண்டு ஜகல்லக்ஷணை யுண்டாகின்றது. எங்ஙனம்: 'விஷத்தைப் புசி' என்னுமிடத்தில் சக்கியமாகிய விஷபோஜன த்தை விட்டுச் சக்கியசமபந்தியாகிய போஜனசீவிருத்தி தோற்றுத லால் ஜகல்லக்ஷணையாம்.

யாண்டுச சக்கியார்த்தத்தின் சம்பந்தம் சமபவிக்க வில்லை யோ ஆண்டு ஜகல் லக்ஷணை யங்கிகரிக்கப்படும். எங்ஙனம்: 'கங் கையிற் கிராமம்' என்னுமிடத்தில் பதங்களுக்கும சக்கியார்த்தங் களுக்கும் பரஸபர சமபந்தம சம்பவியாது. என்றாலும், 'விஷத்தை ப் புசி' என்னு மிடத்துச சக்கியார்த்ததின் அந்நுவயம் சம்ப விக்கும. விஷம் மரணத்திற் கேதுவாமாயினும் போஜனத்தில் விஷத்தின் அந்நுவயம் சம்பவிக்கின்றது. ஆதலால் அந்நுவயாநுப பத்தி (கொண்டுகூட்டுணர்வுநிகழாமை) இலக்ஷணைக்குப்பீஜமன்று. தாற்பரியாநுபபத்தி (தாற்பரிய வுணர்வுநிகழாமை) யே இலக்ஷணை க்குப் பீஜமாமென்று நூல்களி லெழுதப்பட்டிருக்கின்றது. அதன் அபிப்பிராயம் இதுவாம்:—அந்நுவயத்தின் அதாவது சக்கியார்த்த த்தினது சம்பந்தத் தன்மையின் அநுபபத்தி அதாவது அசம்பவம், யாண்டு நிகழுகின்றதோ ஆண்டு இலக்ஷணை யுண்டென்பது நியம மன்று. இதுவே நியமமாகுமாயின் 'தண்டத்தை உள்ளே விடு' என்னும் வாக்கியத்தில் தண்டமென்னும் சொல்லிற்குத் தண்டந் தாங்கியவனிடத்து இலக்ஷணை நிகழாது; தண்டமென்னும் சொல் லின் சக்கியத்திற்கு உள்ளேவிடுதலிற் கொண்டுகூட்டு (அந்நுவயம்) சம்பவித்தலான். ஆதலால் தாற்பரியாநுபபத்தி இலக்ஷணைக்குப்பீஜ

மாம்; அந்துவயாநுபபத்தி பீஜமன்று. தாற்பரிய மென்பது வாக்கி யத்தைப் பிரயோகஞ் செய்வோனது இசசை; அதன் அநுபபத்தி யாவது அது சக்கியார்த்தத்தில் சம்பவியாமை; இது இலக்ஷணை யை யங்கீகரித்தற்குப் பீஜமாம், அதாவது ஏதுவாம். 'தண்டத்தை உள்ளே விடு' என்னும் வாக்கியத்தில் தாற்பரியாநுபபத்தி யுண்டு. ஏனெனின், தண்டத்தை உள்ளே விடுதலாகிய சக்கியார்த்தத்தில் போஜன சமயத்தில் சொல்லுவோனது கருத்துச சம்பவியாது. ஆதலால் தண்டமெனனும்சொல்லிற்குத் தண்டந்தாங்கிய புருடனிடத திலக்ஷணையாம். அங்ஙனமே மரணத்திற்கு ஏதுவாகிய விஷபோஜ னத்தில் பிதாவின் தாற்பரியம் நிகழாதாகலின் போஜன நிவிருத்தி யில் ஜகல் லக்ஷணையாம். "கங்கையிற் கிராமம்" என்னுமிடத்துத் தாற்பரியாநுபபத்தியும் சம்பவிக்கின்றதாகலின், யாண்டுத் தாற்ப ரியாநுபபத்தி யுளதோ, ஆண்டு இலக்ஷணை யங்கீகரிக்கப்படுமென் பது நியமமாம். "கங்கையில் கிராமம" என்னுமிடத்தும் கங்கை யென்னும் சொல்லிற்குச் சக்கியமாகிய தேவநதியின் பிரவாகம் (வெள்ளம்) எதுவோ, அதனிவிட்டுச் சக்கிய சம்பநதியாகிய கரை யின் ஞானமுண்டாகின்றது; ஆகலின் ஜகல்லக்ஷணையாம்.

யாண்டுச் சாமானியமான கரையின் உணர்ச்சியில் சொல்லு வோனது கருத்தின்றி, கங்கைக்கரையில் சொல்லுவோனது தாற் பரியமுளதோ, ஆண்டுக் கங்கையென்னும் பதத்திற்குங் கங்கை க்கரையின்கண் அஜகல் லக்ஷணையாம். அஜகல் லக்ஷணையின் அசா தாரண உதாரணமோ "காகங்களினின்றும தயிர் இரகிக்கப்படுக" என்றல் முதலியவாம். சக்கியத்தோடுகூடிய சக்கிய சம்பந்தியின் ஞானம் யாண்டுளதோ, ஆண்டு அஜகல்லக்ஷணை யுண்டு. போஜனத் தின்பொருட்டுத தயிரை இரகிதத்தில்சொல்லுவோனதுதாற்பரிய மாம். அது பூனை முதலியவற்றினின்றும் தயிரை ரகிதலின்றிச் சம்பவியாது. ஆதலாற் காகமென்னும சொல்லிற்குத் தயிரைக் கெடுப்பதன்கண் அஜகல்லக்ஷணையாம். இவ்வாறே 'கவிகையாளர் செல்கின்றனர்' என்னுமிடததுக் கவிகையாளர் என்னுஞ் சொல் லிற்குக் கவிகையாளரோடுகூடிய கூட்டத்தின்கண் அஜகல்லக்ஷணை யாம். நியாயமதத்தில் நீலமுதலிய பதங்களுக்குக் குணமாத்திரத் திற் சக்தி யுண்டு. 'நீலக்குடம்' என்றல் முதலிய வாக்கியங்களில் நீலவருவ முடையதனை யறிவிக்கும் நீலமுதலிய பதங்கள் இலக்ஷ ணையா வுளவாம். ஆண்டுச சக்கியத்தோடுகூடிய சம்பந்தியின் ஞான

முண்டாகின்றதாகலின், அஜகல் லக்ஷணையாம். கோசகாரர் மதத்தில் நீல முதலிய பதங்களுக்குக் குணத்தினும் குணியினும் சக்தியுண்டு; இலக்ஷணையில்லை. வேதாந்த பரிபாஷையென்னும் தூலில் நீல முதலிய பதங்களுக்குக் குணியினிடத்து அஜகல் லக்ஷணை சொல்லப்பட்டிருக்கின்றது. அது நியாயநூலார் மதம்.

யாண்டுச் சக்கியார்த்ததின் ஏகதேசத்தைவிட்டு ஏகதேசத்தை யறிதலில் சொல்லுவோன் கருத்துளதோ, ஆண்டுப் பாகத்தியாகலக்ஷணையாம். எங்ஙனம்: 'அவனே இத்தேவதத்தன்' என்னுமிடத்துப் பாகத்தியாக லக்ஷணையாம. சுண்டுப் பரோக்ஷவஸ்து அவனென்னும் சொல்லிற்கும், அபரோக்ஷவஸ்து இவனென்னும் சொல்லிற்கும், தகர முதலிய வெழுத்துக்களே யத்தத பெயரினையுடைய புருஷ சரீரம தேவதத்தனென்னும சொல்லிற்கும் பொருளாம். அவனென்னும் சொற்பொருளோடு இவனென்னும் சொற் பொருளுக்குள்ள அபேதம் அவனெனுஞ் சொல்லிலுள்ள முதல் வேற்றுமைக்குப் பொருளாம. இவனென்னும சொற்பொருட்குத தேவதத்த னென்னும் சொற்பொருளோடுள்ள அபேதம் இவனென்னும் சொல்லிலுள்ள முதல் வேற்றுமையின் பொருளாம்; அல்லது அவன் இவன் என்னும் சொற்களிலுள்ள வேற்றுமைகள் பொருளில்லாதனவாம். சமானவிபக்தி (ஒருவேற்றுமை) யுடைய பதங்களின் சாந்தானத்தால் பதார்த்தங்களின் அபேத ஞானமுண்டாகின்றது. ஆதலால் பரோக்ஷவஸ்துவோடு அபின்னமான அபரோக்ஷ வஸ்துவின் சொரூபம தேவதத்த னென்னும் பெயரையுடைய சரீரமாம். இது வாக்கியத்தினது பதங்களின் சக்கியார்த்தமாம். அது உஷ்ண சீதலமென்பதுபோலப்பாதிதமாம் (வாதிக்கப்படுவதாம). பாதிதார்த்தத்தில் சொல்லுவோனது கருத்து நிகழ்வதன்று. ஆதலால் அவன் இவனென்னும சொற்களின் சக்கியத்தில் பரோக்ஷத்தன்மை அபரோக்ஷத்தன்மைப் பாகங்களைத் தியாகஞ் செய்து (விடடு) வஸ்துபாகத்தில் இலக்ஷணை யிருத்தலின் பாகத்தியாக லக்ஷணையாம.

• இவ்வாற்றான்மூவகை இலக்ஷணையும் பிரயோஜனவதி (பயனுடை) லக்ஷணை நீடு (இடுகுறி) லக்ஷணையென்னும் பேதத்தால் இருவகையாம். யாண்டுச் சக்தி யுடைய பதத்தினை விட்டு இலாக்ஷணிக (இலக்ஷணையுடைய) சத்தப் பிரயோகத்தில் பிரயோஜன முண்டாகின்றதோ, அது பிரயோஜனவதிலக்ஷணையெனப்படும். எங்ஙனம்:

கங்கையென் னும் பதத்திற்குக் கரையிற் பிரயோஜனவதி லக்ஷணை யாம். கரையிற் கிராமமென்று சொல்லுவோ மாயின், கரையிற் குளிர்ச்சி தூய்மை முதலியவற்றின் ஞான முண்டாகாது. கங்கை யென்னும பதத்தான் கரையையியம்விக்கின் கங்கையின் தர்ம மாகிய குளிர்ச்சி தூய்மை முதலியன கரையிற் காணப்படும். இதன்பொருட்டே வியஞ்சனை விருத்தியை அலங்காரநூலார் அங்கீ கரிக்கின்றனர். நியாயமதத்தில் குளிர்ச்சி தூய்மை முதலியன சொல்லுணர்ச்சிக்கு விடயமன்று; அநுமிதிக்கு விடயமாம். அங் ஙனமன்றோ? கங்கைக்கரை குளிர்ச்சி தூய்மை முதலியவற்றை யுடையதாம்; கங்கையென்னும சொல்லானறிவிக்கப்படுகிற் தன்மை யான், கங்கையைப்போல வென்பது அநுமானம. எவ்வாற்றானும் பிரயோஜனவதிலக்ஷணையுண்டு.

பதத்திற்கு எப்பொருளில் சக்திஇருக்கி யில்லையோ, சக்திய த்தைப்போல எப்பொருளி னுணர்ச்சி எப்பதத்தான் எல்லோரு க்கும் பிரசித்தமாகின்றதோ, அப்பொருளில் அப்பதத்திற்கு பிர யோஜன சூன்ய லக்ஷணையாகிய நிருடலக்ஷணை சொல்லப்படுகின்றது. எங்ஙனம்: நீல முதலிய பதங்களுக்குக் கோசத்தின்படி குண குணியில் சக்தியை யங்கீகரிக்கின், கௌரவதோஷ முண்டு. சக்திய த்தன்மையவச்சேதகமான ஒவ்வொரு தர்மத்தின் இலாபமும் முண் டாவதில்லையாகலின், குணமாத்திரந்திற் சக்தியுண்டு. நீலம குட மென்றன்மூதலிய வாக்கியங்களைக்கேட்டல்மாத்திரத்தானே யெல் லாப்புருடருக்கும் குணியின்உணர்ச்சி யுண்டாதல் மிகப்பிரசித்தம். ஆதலால் நீலமுதலிய பதங்களுக்குக் குணியில் பிரயோஜன சூனிய லக்ஷணை யிருத்தலின் நிருடலக்ஷணையாம். நிரூடலக்ஷணைசக்திக்குச் சமானமாம். யாதானு மோர் விலக்ஷணமான அநாதி தாற்பரிய மூணதாயின், அஃது நிரூடலக்ஷணை யுண்டு.

யாண்டுப் பிரயோஜனம் அகாந்திதாற்பரிய மென்னு மிரண்டு மில்லையோ, தாலைகிரியா தனதிசையால் இலாக்ஷணிக சத்தத் தைப் பிரயோகமின்றிப் பிரயோஜனப்படுத்துகின்றதோ, அண்டு மூன்றாவது ஜஹல்லக்ஷணையுண்டு. ஆனால் அநாதி தாற்பரியமும் பிரயோஜனமு மின்றிய இலாக்ஷணிக சத்தத்தின் பிரயோகத்தை வித்துவான்கள் நலமுடையதாகக் கருதார். இக்காரணத்தானே காவியப் பிரகாசமுதலிய சாகித்திய நூல்களில் நிரூட லக்ஷணையும் பிரயோஜனவதி லக்ஷணையும் உதாரணத்துடன் எடுத்துப்பட் டிருக்

கின்றன. ஐச்சிகலக்ஷணை எழுதப்பட வில்லை. கதாதர பட்டாசாரியர் முதலியோர் ஐச்சிகலக்ஷணையை யெழுதி யிருக்கின்றனர். அவர்கள் தாற்பரியம ஐச்சிகலக்ஷணையினது சமபாவலக்ஷணையின் கண்ணும் (பொருளதத்திலாம்). 'ஜைகிக லக்ஷணையுடைய பதத்தின் பிரயோகம் 'நலமுடையது' என்னுமபொருளில் தாற்பரியமன்று. இலக்ஷணையின் அவாந்தரபேதமாக மமபட்டா' முதலியோர்களால் மற்று மதிக மெழுதப்பட் டிருக்கின்றன. என்றாலும் வேதாந்த நூல்களில் யாண்டும எழுதபபடவில்லை யாகலின், ஞான விருப்புடையோருக்கு அவற்றை யெழுதுவதால் உபயோகமில்லை.

## சாங். சாப்தஞானத்திற்கு ஏதுவாந் தன்மையின் விசாரம்.

சக்கியதன்மை யவச்சேதகத்தில் சக்தி யிருப்பதுபோல லக்ஷியந்தன்மையவச்சேதகமான நீரத்வ முதலியவற்றிற் கங்கை முதலிய பதங்களுக்கு இலக்ஷணையில்லை. ஆனால் வியக்திமாத்திரத்தில் இலக்ஷணைவிருத்தி யுண்டு. பதத்தின் விருத்தியின்றி இலக்கியத்தன்மை யவச்சேதகத்தின் ஸ்மிருதியும் சாப்தபோதமும் முண்டாகின்றனவென்பது சப்தார்த்ததத்தை நிருணயிக்கும் நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது. மீமாம்ஸைமதத்தில் இலக்ஷணிக சத்தத்தால இலக்ஷியார்த்தத்தின் ஸ்மிருதியோ வண்டாகின்றது. இலக்ஷியார்த்தத்தின் சாப்தபோதத்திற்கு (சொலலுணர்ச்சிக்கு) ஏதுவாவது இலக்ஷணிக பதமன்று. ஆனால் இலக்ஷணிக பதத்தைச் சமீபித்துள்ள பிற்பத மெதுவோ, அது தன் சக்கியார்த்தத்தின் சாப்த போதத்திற்கும், இலக்ஷியார்த்தத்தின சாப்த போதத்திற்கும் ஏதுவாகின்றது. எங்ஙனம்: "கங்கையிற் கிராமம்' என்னும் வாக்கியத்தில் 'கங்கையென்னும் பதம கரையின்கண் இலக்ஷணிகமாம். அது கரையின் ஸ்மிருதிக்கு ஏதுவாம. கரையின்கண் சாப்த போதத்திற்கு ஏது வன்று. ஆனால் கரையின்கண் சாப்த ஞானத்திற்கு ஏதுவும், தனது சக்கியத்தில் சாப்த ஞானத்திற்கு ஏதுவும் கிராமமென்னும பதமாம. இமமதத்திறகுச சாதகமான யுக்தி இதுவாம:—இலக்ஷணிக சதத்தத்திற்குச சாப்தபோதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக்கின் சகல சாப்தபோதத்தையு முண்டாக்குந் தன்மையின் அவசியதகமான தர்மத்தின் இலாப முண்டாகாது. ஏனெனின், மீமாம்லைமதத்தில் சாப்தபோதத்தை யுண்

டாக்குந் தன்மை இலாகூணிக பதத்தின்க ணில்லே. ஆனுற் சக்த (சக்தியுடைய)பதத்தி லிருக்கின்றது. ஆகலின் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மையின் அவச்சேதகம் சக்தியாம். இலாகூணிக பதத்திற்கும் சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக் கின் அவ்வுண்டாக்குந் தன்மையினும் சக்தி அற்பதேசத்திருப்பதா யிருத்தலின், அதன் அவச்சேதகமாகாது. எது எதன் அற்பதேசத் திருப்பதும் அதிக தேசத்திருப்பதுமாகாமல், அதன்சமான தேசத் திருப்பதாகின்றதோ, அது அதன் அவச்சேதகமாம். சாப்த போத த்தை யுண்டாக்குந்தன்மை சகல சக்தபதங்களினுமிருக்கின்றது. அதன் சமான தேசத்தில் சக்தி யிருக்கின்றது. ஆகலின் சாப்த போ தத்தை யுண்டாக்குந்தன்மையின் அவச்சேதகம் சக்தியெனல் சம்ப விக்கும். இலாகூணிக பதத்தினும் சாப்தபோதத்தை யுண்டாக்குந் தன்மை யங்கீகரிக்கின் இலாகூணிகபதத்தில் சக்தியில்லே. சாப்த போதத்தை யுண்டாக்குந் தன்மை யிருக்கின்றது. ஆதலால் அற்ப தேசத் திருப்பதாதலின் சாப்தபோததத்தை யுண்டாக்குந் தன்மை யின் அவச்சேதகம் சக்தியெனல்சம்பவியாது.சக்தம் இலாகூணிக மென்னுமெல்லாப் பதங்களினு மிருப்பதான ஒரு தாமமு மில்லே. ஆகலின சாப்தபோதத்தையுண்டாக்குந்தன்மைநிரவச்சேதகமாம். அந்த நிரவச்சேதகமான உண்டாக்கும் தன்மை அப்பிரசித்தமாம். தண்டம் குலாலன் முதலியவற்றின்கண் குடமுதலியவற்றை யுண் டாக்குந்தன்மையின் அவச்சேதகம் தண்டத்தன்மை குலாலத்தன் மை முதலியனவாதலால் நிரவசேதகமான ஜ்ஞகத்தன்மை (உண் டாக்குந்தன்மை)அப்பிரசித்தமாம்.இவ்வாற்றுன் இலாகூணிகபத த்திற்குச் சாப்த போதத்தை யுண்டாக்குந தன்மை யில்லேயென் பது மீமாம்ஸகர் மதம். அது அத்வைத மதத்திற்கு மிக்க விரோதியாம். ஏனெனின், மகாவாக்கியங்களில் சகல பதங்களும இலாகூணிக மாம். அவற்றுன் சாப்தபோதத்தின் நிகழ்ச்சியின்மை யுண்டாகும். ஆதலால் இம்மதத்தின் கண்டனம் அவசியம் செய்யத்தக்கதாம். அதன்கண் இத்தோஷமுண்டு:—'கங்கையிற் கிராமம்' என்னும் வாக்கியத்தில் கிராமமென்னும பதததாற் கரையின்கண் சாப்த போதம் அங்கீகரிக்கின் கிராம பதத்திற்குக் கரையின்கண்ணும் சக்தியுண்டாதல் வேண்டும். ஏனெனின், எந்தப்பதம் இலகூணை யின்றி எப்பொருளில் சாப்த போதத்தை யுண்டாக்குவதாகின்ற தோ, அப்பதத்திற்கு அப்பொருளிற் சக்தி யுண்டென்பது நிய

மம். மீமாம்ஸகமதத்தில் கிராமபதம் இலக்ஷணையின்றிக் கரையிற் சாப்த போதத்தை யுண்டாக்குவதா யிருந்தலின் கரையின்கண் சக்தி யுண்டாதல் வேண்டும. இது நியமமாம:—சீப்பதத்தில் எப பொருளின் விருத்தியுண்டாகின்றதோ, அப்பதத்தான் அப்பொரு ளின்கண் ஸமிருதி யுண்டாம; அப்பொருளின்கண்ணே அப்பதத் தான் சாப்தபோதமு முண்டாம். மீமாம்ஸகமதத்தில் இங்ஙியமத திற்குப் பங்கமுண்டாம. ஏனெனின் மீமாம்ஸக மதத்தில் கங்கை யென்னும சொல்லின் இலக்ஷணாவிருத்தியோ கரையிலுள்ளது; நீரத தின் ஸ்மிருதியும் கங்காபதத்தாலுண்டாகின்றது. நீரத்தில சாப்த போதம் கங்காபதத்தாலுண்டாகிறதில்லை ஆனால கிராம பதத்தால் நீரத்தின் சாப்தபோத முண்டாகிறது. அதனக் கிராம பதத்திற்கு நீரத்தில் சக்தி அல்லது இலக்ஷணா விருத்தியில்லை; கிராம பதத்தி னால் நீரத்தின் ஸ்மிருதியு மில்லை. ஆதலால இமமதம் புத்திமான்க ளது ஈகைப்பிற கிடமானதாம. ஏனெனின், யாமை அரிமுதலிய ஒவ்வொரு பதத்திற்கும் அநேகம பொருள்களில் சக்தியிருக்கின்ற தோ, ஆண்டும ஒருகாலத்தில ஒருபுருடனுகரு அரியென் றுமபதத் தான் ஒரே பொருளின் ஞானமுண்டாகின்றது. அநேக பதார்த்தங் களின் ஞானம ஒருபதத்தாலுண்டாகுமாயின, அரியென்றுசொல் லுதலான் குரங்கினமேல் சூரியனிருக்கிறதென் றிவ்வாறு சாப்த போத முண்டாதல் வேண்டும. கிராமமெனனும ஒரு பதத்தால் பரஸ்பர சம்பந்தமுடைய கிராமதிரங்களின் சாப்தபோத முண்டா கின்றது. அங்ஙனமே அரியென்னும ஒரு சொல்லால், பரஸ்பர சமபந்தமுடைய வானர சூரியாகளின சாபதபோத முண்டாதல் வேண்டும. ஒரு பதத்தால இரண்டு சக்தியங்களின் சாபதபோத முண்டாகாதெனக்கூறின, அவ்வொரு பதத்தாற் றனது சகியத் தோடு தனது அசக்திய அலக்ஷியங்களினது சமபந்தத்தின சாப்த ஞானமுண்டாதல அதியசமட துரமாம. ஆதலால் 'ஔக்ஷணிகம் நாந்-ஔவிகம்-இலாக்ஷணிகம சாபதானுபவத்தின தன்று' என் னும் மீமாம்ஸையின் வசனம அரங்கதமாம (பொருத்தமுடையதா காது). அன்றியும இலாக்ஷணிகரத்ததிறகுச சாப்தானுபவத்தை யுண்டுபண்ணுந் தனமையில தோஷம சொல்லப்பட்டது; சாபத போதத்தையுண்டாக்குந தன்மையின் அவசசேதகம் கிடைக்காது எனின், அதறகுச சமாதானமு மிதுவாம:— சரகத்தில் சக்தி லக்ஷணை யென்னும் வேறுபாட்டால் இருவகை விருத்தி யுண்டு.

இலவிடத்து அர்த்தத்திற்குச் சக்தி விருத்தியும் இலவிடத்து அர்த்தத்திற்கு இலக்ஷணைவிருத்தியு முண்டு. சாப்த போதத்தை யுண்டாக்குந்தன்மை சததமாத்திரத்தி னுளதாம்; விருத்தியும சந்தமாத்திரத்தி னுளதாம. ஆதலால் அநதவுண்டாக்குந்தன்மையின் சமான தேசத்திருதலான், அதன் அவச்சேதகம் விருத்தியாம். அல்லது சாப்தபோதத்தை யுண்டாக்குநதன்மையின் அவசசேதகம யோக்கிய சத்தத் தன்மையாம். இவ்வாற்றால் இலக்ஷணைக பதாதா னும் சாப்தபோத முண்டாகின்றது.

## சச. மகாவாக்கியத்தில் இலக்ஷணையின் உபயோகமும் அதன்கண் சங்கை சமாதானங்களும்.

மகா வாக்கியங்களில ஜகல் லக்ஷணையும அஜகல் லக்ஷணையு மில்லை. ஆனல் பாகந்தியாக லக்ஷணையுண்டு. அதன்றன்மை விசார சாகரதில் எழுதபபட்டிருகின்றது. அநதப் பாகத்தியாக லக்ஷண மகா வாக்கியங்களில் இலக்ஷித லக்ஷண யன்று. ஆனல் கேவலலக்ஷணையாம். எனெனில, இலக்கிய சேதனத்தோடு வாச்சியத்திற்குச சாக்ஷாத சமபாதமுண்டு பரமபரைச் சமபநதமில்லை. யாண்டுப் பாகந்தியாகலக்ஷண யுண்டோ ஆண்டு வாச்சியதின் ஏகதேசம இலக்ஷியமாம். அவ்வாசசியத்தின் ஏகதேசததோடு வாச்சியத்திற்குச சாக்ஷாத சமபநதமுளது; ஆதலால் கேவல லக்ஷணையாம். மகாவாக்கியதால் ஞான விருபபுண்டோருக்கு அகண்ட பிரஹ்மநதின் ஞான முண்டாகுக வெனபது சுசுவரனது அநாதி தாற்பரியம். ஆதலால் அது நிருட லக்ஷணையாம; பிரயோஜனவதி லக்ஷணை யன்று. ரண்டிதுசங்கை:—வாக்கியார்தததற்கு இலக்கிய சேதனத்தோடு சமபநதம அங்கீகரிக்கின், இலக்கியார்ததத்தில் அசங்கத் தன்மைக்குக் கேடுண்டாகும. சமபாதம் அங்கீகரியாவிடின், இலக்ஷணைபொருநதாது. எனெனின், சக்கிய சமபநதத்தை அலலது போதிய சமபநதத்தை இலக்ஷணையென்பர். அது அசங்கத்திற் சமபவியாது.

இதற்குச சமாதானம்:—வாசசியார்த்தத்தில் சேதனம் ஜடமென விரண்டுபாகமுண்டு. அதன் சேதன பாகத்திற்கு இலக்கியார்ததத்தில் தாதாத்மியசமபநத முண்டு. சகல பதார்த்தங்களுக்கும் சொரூபததில் தாதாதமிய சமபநத முண்டு. வாச்சியபாகமான சேதனத்தின் சொரூபமே இலக்கியசேதனமாம். ஆதலால் வாச்சிய

த்தில் சேதன பாகத்திற்கு இலக்கிய சேதனத்தோடு தாதாதமிய சம்பந்த முண்டு. வாசியத்தில் ஜட பாகத்திற்கு இலக்கிய சேதனத்தோடு அதிஷ்டானத்தன்மைச் சமபந்த முண்டு. கற்பிதத்தின் சமபந்ததால் அதிஷ்டானத்தின் சுபாவம் கெடாது. தனது தாதாதமிய சமபந்தத்தானும் சுபாவந்திறகுக் கேடுண்டாகாது. அதனால் இலக்கியாந்ததின் அசங்கதந்தன்மை கெடாது.

மறறோர் சங்கை.— தூரபதத்திற்கு அகண்ட சேதனத்தில் இலக்ஷணை யங்கீகரித்தும், துயமபந்தத்திற்கும் அகண்ட சேதனத்தில இலக்ஷணை யங்கீகரிக்கின் புருருக்தி தோஷ (கூறியது கூறற் குற்ற) மாகுதலான், குடம குடமென்றும வாக்கியந்தினைப்போல அப்பிரமாணவாக்கிய மாகும. இரண்டு பதங்களுக்கும் இலக்கியர்த்தம வேறுகக் கொள்ளின், அபேபதத்தை யறிவிக்கு தன்மை யுண்டாகாது.

அதறகு இது சமாந்தானம்:—மாயா விசிஷ்டனும் அந்தக்கரண விசிஷ்டனும் தற்பத துவமபதங்களுக்குச் சக்கியரானர்; உபகிதர்களை இலக்கிய ராவர. பிரம்ம சேதனம இரண்டு பதங்களுக்கும் இலக்கிய மாகுமாயின் புருருக்தி தோஷமுண்டாகுமு; அதறப் பிரம்ம சேதனம இலக்கிய மன்று; மாயா வுபகிதமும அதறக் கரண வுபகிதமும இலக்கியமாம. அது உபாதிபேதத்தாற் பின்ன மாயிருத்தலின் புரருக்தியிலலை. உபகித மிரண்டும பரமாத்தமாய் அபின்னமாம். ஆதலால் அபேதாதைப் போதிக்குந்தன்மை வாக்கியந்திறகுச் சமபவிக்கினறது. இவ்வாறருல் தற்பதாந்த துவம் பதாதாதங்களின் உத்தேச விதேயதந்தன்மையை அங்கிகரித்து அபேதாதைப் போதிக்குந்தன்மை நிராதோஷமாம். தற்பதாந்தத்தில் பரோக்ஷத்தனமைப் பிரர்ந்தி நீங்குதற்பொருட்டுத் தற்பதாந்தாதை யுத்தேசித்தும் துவம பதாதாதத்தன்மை விதேயமா (அமைக்கப்பட்டதா)ம. துவம பதார்த்தாதில் பரிசுத்தன்னதன்மைப்பிராந்தி நீங்குதற்பொருட்டுத்துவமபதார்த்தாதை யுத்தேசித்தும் தற்பதாதாதத்தன்மை விதேயமாம். புருருக்தியைப் பரிகரிக்தற்பொருட்டுச் சில நூலாசிரியர அபிப்பிராயம் இதுவாம்:— இரண்டு பதங்களுதகும வேறு வேறு இலக்ஷாதை (இலக்ஷணையினலறிவிக்குது) தன்மை யங்கீகரிதகின், புருருக்தியின் சங்கை யுண்டாகின்றது. அந்த வெவ்வேறு இலக்ஷாதைத் தன்மையோ இல்லை, ஆனால் மீமாமலகரது கிரமமாக இரண்டு பதங்களும சோந்து

அகண்ட பிரஹ்மத்தின் இலக்ஷகமாம். இதனுற்றுன் பிராசீன ஆசாரியர்கள் மகா வாக்கியங்களுக்குப் பிரதிபாதிக்கும் அர்த்த மாத்திரத்தை அறிவிக்குந்தன்மை கூறியிருக்கின்றனர். உத்தேச விதேயத்தன்மைச் சூனியமான அர்த்தத்தை யறிவிக்கும் வாக்கி யம் உலகத்தில் அப்பிரசித்தமாயினும், அலௌகிக அர்த்தம் மகா வாக்கியங்களுக்காம். ஆதலால் அப்பிரசித்த தோஷ மில்லை; அதனுல் பூஷணமாம். அப்பிரசித்ததோஷ மாகுமாயின், வாக் கியத்திற்கு அசங்கமுடைய அர்த்தத்தினை யறிவிக்குந தன்மை யும் உலகத்தில் அப்பிரசித்த மாகலின், அசங்கமுடைய பிரஹ்ம த்தை யறிவிக்குந்தன்மையும மகாவாக்கியங்களுக் குண்டாகாது. எங்ஙனம உலகத்தில் அப்பிரசித்தமான அசங்கமுடைய பிரஹ்ம த்தை யறிவிக்குந தன்மை அங்கீகரிக்கப்படுகின்றதோ, அங்ங னமேஉத்தேச விதேயபாவ சூனியமான அகண்டார்த்ததன்னையறி விக்குந்தன்மையுஞ் சமபவிக்கின்றது. இவ்வாறு இலக்ஷணைப்பிரச ங்கத்தில் அநேக விசாரம பழமையான ஆசாரியர்களால் எழுத ப்பட்டிருக்கின்றது.

## சரு. இலக்ஷணையின் றிச் சக்தி விருத்தியால் மகாவாக்கியத்திற்கு அத்வைதப் பிரஹ்மத்தை யறிவிக்குந் தன்மை யுளதெனல்.

சில நவீன நூலாசிரியா இலக்ஷணையின் றிச சக்தி விருத்திமா த்திரத்தான் மகாவாக்கியங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்மதத்தை யறிவிக்குந்தன்மை யங்கீகரித்திருக்கின்றனா. அவர்கள் இவ்வாறு எழுதியிருக்கின்றனர்:—விசிஷ்ட வாசக பதத்தின் அர்த்தத்திற்கு அநிய பதத்தின் விசிஷ்ட அர்த்ததோடு யாண்டுச் சம்பந்தம் நிகழவில்லையோ, ஆண்டுப் பதத்தின்சக்தியினுனே விசேஷணத்தை விட்டு விசேஷியதனின் றோற்றமுண்டாகின்றது. எங்ஙனம்: அநித்தியம் குடம என்னும வாக்கியத்தில கடத்தன்மை விசிஷ்ட வாசக பதமாம். அதற்குஅநித்தியத்தன்மை விசிஷ்ட மான அநித்திய பதார்த்ததோடு அபேதசம்பந்தம அறிவிக்க ப்படுகின்றது. கடதன்மைச் சாதி நித்தியமாம். ஆகலின் கடத் தன்மை விசிஷ்டத்திற்கு அநித்திய பதார்த்ததோடு அபேதம் பாதிக்கப்படுவதாயிருத்தலின் அதற்கு அநித்தியபதார்த்ததோடு அபேத சம்பந்தம் நிகழாது. ஆண்டுக் கடத்தன்மையாகிய விசே

ஷணத்தை விட்டுக் கட பதத்தால் வியக்திமாத்திரத்தின் ஸமிருதியும், அநித்திய பதார்தததோடுள்ள சமபந்த ஞானமாகிய சாப்த போதமும் முண்டாகின்றன. அங்ஙனமே வீடடிற் குடமென்னும் வாக்கியததில் கடததன்மை வடிவினதாகிய விசேஷணத்தைவிட்டு க்கடபதத்தால் விசேஷியவியக்திமாதிரதின் ஸமிருதியும் சாப்த போதமும் முண்டாகின்றன. அங்ஙனமே கடத்தில உருவம் என்னும் வாக்கியத்திலும கடதத்தன்மையை விடடு வியக்தி மாத்திரத்தின் ஞான முண்டாகின்றது. எனெனின், வீடடிற்குட மென்னும் வாக்கியததான் வீடடின் ஆதேயததன்மை கடபதார்த்தத்தில் தோற்றுகின்றது. கடததன்மைச சாதியில தனது ஆசிரயமான வியக்தியின் ஆதேயத்தன்மை யுளது. ஆனால் வீட்டின் ஆதேய த்தன்மை பாதிதமாம. ஆதலால் கடதன்மையை விட்டு வியக்தி மாத்திரத்தில் வீடடின் ஆதேயத் தன்மையின் சமபந்தம் அதி விக்கப் படுகின்றது. அங்ஙனமே வீடென்னும பதார்ததத்தில் வீட்டுதத்தன்மையின் நீக்க முண்டாகின்றது. கடதத்தில் உருவம் என்னும் வாக்கியததிலும கடதத்தன்மையை விடடுத திரவியரூப வியக்தி மாத்திரத்தில் அநிகரணத தன்மையும, உருவதத்தன்மை யைவிட்டுக் குணமாத்திரத்தில ஆதேயத தன்மையும தோற்று கின்றன. ஏனெனின், கடபதாத்ததின் ஆதேயத்தன்மை யுடை யது உருவபதார்தமா மென்பது வாசியத்தின் அர்ததமாம். ஆண்டுக் கடத்தன்மையின் ஆதேயத்தனமை எதனிடத்து மில்லை. ஆதலால் கடத தன்மையை விடடு வியக்தி மாதிரம் கடபதார் த்தத்தின் அர்த்தமாம. அதன் ஆதேயதன்மை யுருவத்தன்மை ஜாதியிலில்லை. ஆனல் உருவவியக்தியின் ஆதேயத்தனமை உருவத் தன்மையிலுண்டு. ஆதலால் உருவபதாதத்தில உருவத தன் மையின் நீக்க முண்டு. அங்ஙனமே உண்டாயிறும் குடம, அழிந் தது குடம் எனறல் முதலிய வாக்கியங்களில் ஜாதி வடிவமாகிய விசேஷணத்தை விட்டு வியக்தி மாதிரம கடமுதலிய பதங்களின் அர்த்தமாம. ஏனெனின், ஜாதி நிதியம, அதறகு உற்பததி நாசம் நிகழாது. எங்ஙனம முன் வாக்கியங்களில் விசிஷட வாசக பதங் களில் சக்தி வலியானே விசேஷிய மாத்திரத்தின் ஞான முண்டா கின்றதோ, அங்ஙனமே மகாவாக்கியங்களிலும விசிஷ்டவாசக பதங்களின் சக்திவலியானே மாயை அந்தக்கரணமென்னும விசே ஷணங்களை விட்டுச சேதனமாகிய விசேஷிய மாதிரத்தின் ஞானம்

சமபவிக்கின்றது. இலக்ஷணையை யங்கீகரித்தல் நிஷ்பலமாம். ஆனல் இதருணப் பேதமாம்:—விசிஷ்டவாசக பதத்தினது வாச்சியத்தின் ஏகதேசம விசேஷியமும் ஏகதேசம் விசேஷணமுமாம்; ஜாதிவிசேஷணமும வியக்தி விசேஷியமுமாம. அவற்றுள்விசேஷிய பாகதத்தின் போதமோ சக்தியினு லுண்டாகின்றது; கேவல விசேஷணத்தின் போத முண்டாகிறதில்லே. வாசகியத்தினது விசேஷண மாத்திரத்தின் ஞானமும விசிஷ்ட வாசகதத்தினது சதகத்தின் சகதியா லுண்டாகுமாயின், அக்நித்தியம் கடமென்னும வாக்கியம் போல நித்தியம கடமென்னும வாக்கியமும கடபததத்தால் ஜாதி மாத்திரத்தை யபிவித்து கலமுடையதாதல் வேண்டும. ஆதலால் விசிஷ்ட வாசகபதத்தின் சகதியால் விசேஷிய மாதத்திரதின் தோற்ற முண்டாகின்றது. அவனே இதகேவதத்த னென்னும் வாக்கியத்திலும பிராகூதநன்மை அபிராகூத தன்மை விசேஷணங்களே விட்டு, விசேஷிய மாதத்திரதின் ஞானம சக்தி விருத்தியாலே யுண்டாகின்றது. பாகத்தியாக லக்ஷணைக்கு ஒரு உதாரணமும மிலலே. ஆதலால் ஜகல லக்ஷணை அஜகல லக்ஷணை யென்னும பேததத்தால இருவகை இலக்ஷணை அங்கீகரித்தல வேண்டும. பாகத்தியாக லக்ஷணை பொய்யாம. வேதாநத பரிபாஷையில் தர்ம ராஜர் மூத்தூறிய வெண்ணம மகா வாக்கியங்களில் இலக்ஷணையைக் கண்டித்துப் பாகத்தியாக லக்ஷணையின் சொரூபத்தையும், உதாரணத்தையும் இவ்வாறு கூறுகின்றார:—சமபீர்தாயப்படி வாசகியத்தின் ஏகதேசத்தி லிருப்பது பாகத்தியாகலக்ஷணையின் சொரூபமா மென்னும மதத்தில் வாச்சியத்தின் ஏகதேசத் திருப்பது சக்தியின் சொரூபமேயாம். அது பாகத்தியாக லக்ஷணையின் சொரூபமன்று. சக்கியத்தினும் அசக்கியத்தினு மிருப்பது எதுவோ அது பாகத்தியாக லக்ஷணை யெனப்படும. அஜகல் லக்ஷணையும சக்கிய அசக்கியங்களி லிருப்பதாயினும் யாண்டு விசேஷணத் தன்மையான் சக்கியார்த்ததின் ஞானமும், விசேஷிய தன்மையான் அசக்கியார்த்ததின் ஞானமு முண்டாகின்றனவோ, ஆண்டு அஜகல் லக்ஷணை சொல்லப்படுகின்றது. எங்ஙனம :— "நீலக்குடம்" என்னும் வாக்கியத்தில் நீலபதத்தின் சக்கியம் உருவமாம. அதன் ஞானம் விசேஷணத்தன்மையா லுண்டாகின்றது. நீல உருவத்தின் ஆசிரயமான திரவியம் அசக்கியமாம. அதன் ஞானம்விசேஷிய த்தன்மையா லுண்டாகின்றது. ஆதலால் நீலபதத்திற்கு நீலவுருவ

த்தின் ஆசிரயத்தில் அஜகல்லக்ஷணையாம். இவ்வாறு மஞ்சம் கூப்பிடுகின்றது என்னும வாக்கியத்தில் மஞ்ச பதத்தின சகயிய விசேஷணமும,அசக்கியமாகிய புருஷன் விசேஷியமுமாம;ஆதலால் அஜகல்லக்ஷணையாம. யாண்டெ சகயிய அசக்கிய மிரண்டும விசேஷிய மாகின்றனவோ, சக்கியத்தனமை யவசேதகதினும் வியாபகமான இலகியத்தன்மை யவசேதக தாமம விசேஷண மாகின்றதோ, ஆனைப் பாகத்தியாக லக்ஷணை சொல்லப் படுகின்றது. எங்ஙனம்: காகங்களினினறும் தயிர இரகிக்கப்படுக வென்னும் வாக்கியத்தில் காகமெனனும பதத்தின சக்கியமான வாயஸமும் (காக்கையு)ம், அசக்கியமான பூணை முதலியனவும் விசேஷியமாம். சக்கியத்தன்மை யவசேதக காகத்தன்மையின் வியாபகமான தயிரை யழிக்குந்தன்மை இலக்கியத்தன்மை யவசேதக விசேஷணமாம. ஏனெனின் தயிரை யழிப்பனவாகிய காகம பூணை முதலியவற்றினின்றும் தயிரை இரகிபென்பது வாக்கியத்தின பொருளாம். ஆண்டுக் காகத்தன்மை விசிஷ்டவியக்தி காகபதத்தின சக்கியமாம. அதில காகத்தன்மையை விடுத்த தயிரை யழிக்குந்தன்மை விசிஷ்டமான காகம பூணை முதலியவற்றின் ஞானம இலக்ஷணையினு லுண்டாகுதலான், காக பதத்தினது வாசியத்தின் ஒரு பாகமாகிய காகத்தன்மையின் நீகமும வியக்திபாகத்தின் ஞானமு முண்டாகின்றன. அங்ஙனமே பூணைத்தன்மை முதலியவற்றின் நீக்கமும, வியக்தியின் ஞானமு முண்டாகின்றன. ஆதலாற் பாகத்தியாக லக்ஷணையாம். அங்ஙனமே கவிகையாளர செல்கின்றனர என்னும வாக்கியத்திலும பாகத்தியாக லக்ஷணையுண்டு. ஏனெனின், கவிகை யுடையவரெலலும கவிகை யின்மையவரெலலுமாய் ஒருங்குகூடிய புருஷர செலலுகினறனரென்பது வாக்கியத்தின் பொருளாம் ஆனைக கவிகை யாளரென்னும பதத்திறகுக் கவிகையுள்ளாரும, கவிகை யிலலாதவருமாகிய இருவரும விசேஷியமாவர். சகயத்தன்மை யவசேதகமான கவிகை யுடைமை யின் வியாபகமான ஒருங்குகூடியதன்மை இலகியத்தன்மை யவச்சேதகமான விசேஷணமாம. இவ்விடத்தும கவிகையின் சம்பந்த விசிஷ்டமான கவிகையாளனென்னும பதத்தின்சக்கியமெதுவோ, அதனிடத்துக் கவிகைச் சம்பந்தமாகிய சக்கியத்தன்மை யவச்சேதகத்தினை விட்டு, ஒருங்குகூடியதன்மை விசிஷ்டனை கவிகை யாளன் அவனுக் கந்நியமானவர்க ளென்னு மிவர்களின் ஞானம்

இலக்ஷணையினு லுண்டாகுதலாலும், வாச்சியத்தின் ஒரு பாகமான கவிகைச் சம்பந்தத்தினை விட்டு ஒரு பாகமான புருஷனது ஞான மூண்டாகின்றது. ஆதலால் பாகந்தியாகலக்ஷணையாம். இவ்வாறு வேதாந்த பரிபாஷையில் பாகத்தியாக லக்ஷணையின் உதாரணம் கூறியிருக்கின்றனர், அவை யாவும சம்பிரதாயமூள்ளார் மதத்தில் அஜகல் லக்ஷணையின் உதாரணமாம். சிலவிடத்து அஜகல்லக்ஷணையின் உதாரணத்தில் சகலியாத்தம விசேக்ஷணமாம; சிலவிடத்து விசேஷியமாம். சக்கியத்தோடு கூடிய அசக்கியத்தின் தோற்றம் சமானமாம். சிறிது பேதத்தைக்கண்டு இலக்ஷணையின் பேதத்தை யங்கீகரித்தல் பயனற்றதாம எல்லா ஆசிரியாகளும அஜகல் லக்ஷணையின் உதாரணமாகக் கூறியவற்றைப் பாகத்தியாகலக்ஷணையின் உதாரணமாக இவர் கூறுவதற்கு ஆசாரியாகளது வசனத்தை விரோதித்தலே பயனம. சகலியாத்தத்தின் விசேஷணத்தன்மை விசேஷியத் தன்மைகளில் அஜகல் லக்ஷணை பாகத்தியாக லக்ஷணைகளின் பேதம அங்கீகரிக்கின், யாண்டு சக்கியாத்தத்தின் விசேஷணத்தன்மையுளதோ,ஆண்டுப பாகந்தியாக லக்ஷணையும,பாண்டுச் சகலிய அசக்கியங்க ளிரண்டின் விசேஷியத் தன்மை யுளதோ, ஆண்டு அஜகல் லக்ஷணையுமாக இவ்வாறு விபரீதத்தை அங்கீகரிக்கின் ஒரு பாதகமும் இல்லை. ஆதலால் மகா வாகியங்களிலும், அவனை இத்தேவதத்தன் னென்னும வாக்கியத்திலும் இலக்ஷணையை நிஷேதித்துப் பாகத்தியாக லக்ஷணையின் சொரூபமும உதாரணமும் கூறுதல் தாமராஜருக்குப் பபனின்மையாம. மகாவாக்கியங்களில இலக்ஷணையினை நிரூவாகம கூறிய தெதுவோ அதுவும அசங்கதமாம. ஏனெனின, கடமுதலிய பதங்களுக்குச் சாதி விசிஷ்டத்தில் சக்தியை யங்கீகரிதது, இலக்ஷணையின்றிப் பதத்தாற் கேவல வியக்தியின் ஞானம் கூறுதல யுக்தியில்லாததாம். கேவல வியக்தியில் சகதியை யங்கீகரிதது, ஜாதி விசிஷ்டவியக்தியில் அங்கீகரியாவிடின,கேவல வியகதியின் ஞானம கடமுதலியபதங்களால நிகழும; அகண யங்கீகரிக்கவில்லை. ஆனல் விசிஷ்டவாசகபதத்தின் சக்தியால் விசேஷிய மாத்திரதின போதம உண்டாகின்றதென்று தர்மராஜா எழுதியிருக்கின்றார். அது சக்திவாதமுதலிய நூல்களில் நிபுண மதியினையுடைய பண்டிதாகளுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்குவதா யிருக்கின்றது! சக்திவாதத்தில் இப்பிரசங்கம் விளகமாயுளது. சில சப்தம ஒரு தாம விசிஷ்ட தர்மியின்

வாசகமாம். சில சப்தம் அநேக தர்ம விசிஷ்ட தர்மியின் வாசக மாம்; சில சப்தம் அநேக தர்ம விசிஷ்ட அநேக தர்மியின் வாசக மாம். எப்பதத்திற்கு எப்பொருளில் சக்தியுண்டோ, அப்பதம அப்பொருளின் வாசகமெனப்படும். எங்ஙனம்: கட பதத்திற்குக் கடத் தன்மை வடிவினதாகிய ஒரு தர்ம விசிஷ்ட தர்மியிலும், கோ பதத்திற்குக் கோத்தன்மையாகிய ஒரு தர்ம விசிஷ்ட தர்மி யிலும் சக்தியுண்டு. அது அவற்றின் வாசகமாம். தேனுபதத்திற்கு ப் பிரசவமும் கோத்தன்மையுமாகிய அநேக தர்ம விசிஷ்ட ஒரு தர்மியில் சக்தியுளது. அது அதன் வாசகமாம். புஷ்பவந்தரென் னும் பதத்திற்குச் சந்திர சூரியத்தன்மை வடிவினவாகிய அநேக தர்ம விசிஷ்ட அநேக தர்மியாகிய சந்திர சூரியர்களிடத்துச் சக்தி யுளது. அப் புஷ்பவந்தரென்னும் பதம் சந்திர சூரியர்க ளிருவ ரின் வாசகமாம். எந்தத் தர்ம விசிஷ்டத்திற் சக்தியுளதோ அத் தர்மத்தை விட்டுக் கேவல ஆசிரயத்தின் ஞானம் இலக்ஷணையினு லுண்டாகின்றது. இலக்ஷணையின்றி யுண்டாவதில்லை. ஆதலால் கட முதலிய பதங்களால் கேவல வியக்தியின் போதம் இலக்ஷணை யினு லுண்டாகின்றது. அநேக தர்ம விசிஷ்ட தர்மியின் வாசகமா கிய தேனுபத மெதுவோ, அதனால் ஒரு தர்மத்தை விட்டு ஒரு தர்ம விசிஷ்ட தர்மியின் ஞானம் இலக்ஷணையின்றி யுண்டாகாது. ஆதலால் தேனுபதத்தால் பிரசவியாத கோவின் அல்லது பிரசவி த்த எருமையின் ஞானம் சக்தியினு லுண்டாகாது. சிலவிடத்துக் கோமாத்திரத்தின் ஞானமே தேனுபதத்தானுண்டாகின்றது. அது பாகத்தியாக லக்ஷணையால உண்டாகின்றது; சக்தியா லுண்டாவ தில்லை. அங்ஙனமே புஷ்பவந்த ரென்னும பதத்தான் சந்திரனை விட்டுச்சூரியனது ஞானமும் சூரியனைவிட்டுச் சந்திரனது ஞானமும் சக்தியானுண்டாகிறதில்லை. இவ்வாறு சக்திவாதத்தி லெழுதப்பட் டிருக்கின்றது. அதுவேசமபக்கிறது. சக்தியானது விசிஷ்டத்தின் கணுளது; சக்தியால் விசேஷிபதத்தின் ஞானமுண்டாமெனக் கூறு தல் முற்றும் பொருத்தமுடைய தன்று. எந்தத் தர்மமுடைய அர் த்தத்தில் பதத்தின் சக்தியுளதோ, அதனினும குறைந்த அல்லது அதிகமான அர்த்தம் இலக்ஷணையினால் தோற்றும; சக்தியினால அந்தத் தர்மமுடைய அர்த்தமே தோறுமெனபது நியமம். வியக்தி மாத்திரத்தில் சக்தியுண்டு, விசிஷ்டத்தி லில்லையெனக் கூறும் இத் தருமராஜரது அபிப்பிராய மெதுவோ, அது பொருந்

தாது. ஏனெனின், விசிஷ்ட வாசக பதத்தின் சக்தியால் விசேஷி யத்தின் ஞானமுண்டாகின்றதென்பது தர்மராஜராற் சொல்லப் பட்டது. வியக்தி மாத்திரத்தில் சக்தி விரும்பப்பட்டதாகுமாயின், வியக்தி மாத்திரத்தில் பதத்தின் சக்தியால் அதன் ஞானமுண்டா குமவண்ணங் கூறுவர். விசிஷ்ட வாசக பதத்தினைக் கூறார். வியக்தி மாத்திரத்திற சக்தி ஒருவர்மதத்தினுமில்லை. அது எலலோர்மதத்தி னும் விருத்தமாம். சிரோமணி பட்டாசாரியர வியக்தி மாத்திரத் தில் சக்தி யங்கீகரித்துளராயினும் பதத்தால் அர்த்தத்தின் ஸ்மிரு தியும சாப்தபோதமும சாதி விசிஷ்டத்தினவாக அவர மதத்தி லுண்டாகின்றன. வியக்தி மாத்திரத்தின் சாப்தபோதம் சக்தியால் ஒருவர் மதத்திலும் உண்டாவதில்லை. கடமுதலிய பதங்களுக்குச் சாதி விசிஷ்டத்திலும சக்தி யுண்டு. கேவல வியக்தியிலும் சக்தி யுண்டு. சிலவிடத்து ஜாதி விசிஷ்டத்தின் ஞானமுண்டாகின்றது. சிலவிடத்துக் கேவல வியக்தியின் ஞான முண்டாகின்றது. அரி யென்னும் சொல் பலபொருளுடையதாதல்போல எல்லாப் பதங் களும பலபொரு ளுடையனவாமென் றிவ்வாறு கூறின், இப் பொருள் முற்றும பிழைபாடையதாம. அவர நூல்களினும இப் பொருளில்லை. பிழைபாடைமைக்கு இது ஏதுவாம:—இலகூஷீண பினுல யாண்டு நிருவாக முண்டாகின்றதோ, ஆண்டுப் பலபொரு ளில சக்தியை விடுகின்றனர். ஒருபொருளில் சக்தியையும் மற்ற தில் இலகூஷீணையும்அங்கீகரிக்கின்றனர். தர்மராஜரே நீலமுதலிய சொற்களுக்குக் குணதத்திற சக்தியும், குணியில இலகூஷீணையுமாம; இரண்டினும சக்தியிருத்தல் ஒரிடத்து மிலலையென்று எழுதியிருக் கின்றனர். ஆதலால் இலகூஷீணியின் அசசத்தான் பல பொருண்மை யை யங்கீகரிபபதன்று. ஆனல் பல பொருண்மையின் அச்சத்தான் இலகூஷீணையை யங்கீகரித்தலாம். ஆகலால விசிஷ்டத்தினும் சக்தி யுண்டு; வியக்தி மாத்திரத்தினும சக்தி யுண்டென்னும் பிழைப் பொருளில் தருமராஜருக்குத் தாற்பரியமில்லை. ஆனல் விசிஷ்டத் தில் சகல பதங்களுக்கும் சக்தி யுண்டு அவ்விசிஷ்டத்தில் சக்தி பின் மான்மியத்தால சில விடத்து விசிஷ்டத்திற்கு அந்நிய பதார் த்தங்களோடு அந்வய முண்டாகின்றது. சிலவிடத்து விசேஷிய த்திற்கு அந்நிய பதார்த்தங்களோடு அந்வய முண்டாகின்றது. பாண்டு விசிஷ்டத்தில அந்வயத்திற்கு யோக்கியதை யுண்டா கின்றதோ, ஆண்டு விசிஷ்டத்தின் அந்வய போதமும், யாண்டு

விசிஷ்டத்தில் அந்துவயத்திற்கு யோக்கியதை யில்லையோ, ஆண்டி விசேஷிய மாத்திரத்தின் அந்துவய போகமும் சக்தியா னுண்டா கின்றனவென்பது நிமராஜாமதம. அது கூடாது. வெனினின்,சக்தி விசிஷ்டத்திலும, இலக்ஷணையின்றி வியக்திமாத்திரத்தின் அந்துவய போதமுமங்கீகரிக்கில் தேனுபதத்தானும்இலக்ஷணையின் றிப் பிரச வியாதகோவின் ஞானமும, பிரசவித்தருமையின் ஞானமு முண் டாதல் வேண்டும. புஷ்பவதிதென்னும பதத்தால் இலக்ஷணை யின்றிச ரூரியனென்றின் அல்லது சதந்திரனென்றின் ஞான முண் டாதல் வேண்டும. உண்டாகிறதில்லை யாகலின், அந்ததியம குடம் என்றல் முதலிய வாக்கியங்களில் குடமுதலிய பதங்களுக்கு விய க்திமாதந்திரதில் பாகதத்தியாக லக்ஷணையாம். வெகு பிரயோகங் களில் வியக்திமாதந்திரதின் ஞான முண்டாகுதலான் சகதியிலே யே ஞான முண்டாகின்ற தெனக் கூறின், அதற்குச் சமாதா னம் வருமாறு:—பிரயோக மிருதிபபாட்டால் பொருளில் சக்தியத் தன்மை யங்கீகரிக்கின் நீலமுதலிய பதங்களின் பிரயோகமிருதிப் பாடு குணியிலுளது; அதவ்ய சக்தியமாதல்வேண்டும். நீலமுதலிய பதங்களுக்குக் குணி சகியமனறு, இலக்ஷியமாமென்று தரும ராஜரும வேதாந்தசூடாமணி யென்னும் உரையில அவா புத்திரரும் எழுதியிருக்கின்றார்கள்.ஆகலால் யாண்டு விசிஷ்டவாசகபதத்தான் விசேஷிய மாத்திரதின் ஞானமுண்டாகின் றதோ, ஆண்டு முழுவ தும் பாகத்தியாக லக்ஷணையாம. ஆனால் அது நிரூட லக்ஷணையாம். நிரூட லக்ஷணைக்குச் சக்தியினும சிறிதுதான் பேதம. அதன் பிர யோக மிருதிப்பா டுண்டாகின்றது. எப்பொருளில் சதந்தப்பிர யோகத்தின மிருதிப்பாடுளதோ, அப்பொருளில் முழுவதும சக்தி யை யங்கீகரிக்கின் சாதிசக்தி வாதத்தில் வியக்தியின்ஞானம் முழு வதும இலக்ஷணையா னுண்டாகின்றது. அது பொருத்தமுடைய தாகாது. நியாயமதத்திலும இராஜ புருஷனென்றல் முதலிய வாக் கியங்களில் இராஜனென்னும் பதத்திறகு இராஜ சம்பந்தமுடைய தன்கண்முழுதும இலக்ஷணையாம.அதுஅசங்கதமாகும்(பொருத்த மின்மியதாம). இவ்வாறுரன் விசிஷ்டவாசக பதத்தான் விசே ஷிய மாதந்திரதின் ஞானம இலக்ஷணையின்றி யுண்டர்காது. ஆத லால் மகாவாக்கியங்களில் இலக்ஷணை யுண்டென்னும் சாம்பிரதா யிகமதமே ஜிஜ்ஞாசுவுக்குக் கொள்ளத்தக்கதாம. வேதாந்த வாக்கியங்களான் அசங்கப் பிரஹ்மதத்தின் ஆத்மரூபமான சாக்ஷாத்

காரமுண்டாகின்றது. அதனால் பிரவிருத்தி நிவிருத்தியின்றிய பிரஹ்மவடிவமாய் நிலித்தலாகிய பயனுண்டாகின்றது. இது அத்வைத வாதந்தின் சித்தாந்தமாம.

## சசு. மீமாம்ஸக மதம்.

அதில் மீமாமஸையை யநுசரித்தவர்கள்சங்கை யிதுவாம:— சகல வேதமும பிரவிருத்தி அல்லது நிவிருத்தியை யறிவிப்பன வாம். பிரவிருத்தி நிவிருத்திகளின்றிய பொருளை வேதம் அறி விப்பதில்லை. அறிவிக்குமாயின், பயனின்றிய பொருளை யறிவிக் கும் வேதம் அப்பிரமாணமாகும். ஆகலால் விதி நிஷேதமின்றிய வேதாந்த வாக்கியங்களுக்கு விதிவாக்கியங்களோடு சம்பந்த மிரு த்தலின் விதி வாக்கியங்களுக்கு வேதாந்த வாக்கியம் சேஷ (சாதன) மாம. சில வாக்கியங்கள் கர்மஞ் செய்வோனது சொரூப த்தை யறிவிப்பனவாம. அது துவம்பதார்த்தத்தினை யறிவிக்கும் பஞ்சகோச வாக்கியமாம. சில வாக்கியங்கள் கர்ம சேஷ (சாதன)மான தேவதையின் சொரூபத்தை யறிவிப்பனவாம். அது தற்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியமாம். ஜீவப் பிரஹ்மங்க ளின் அபேதத்தை யறிவிக்கும் வாக்கியங்களுக்குப் பொரு ளிது வாம:—காமஞ் செய்யுஞ் சீவன் தெய்வத்தன்மையை யடைகின் றன். ஆதலால் கர்மம அவசியம் செய்யத்தக்கதாம். இவ்வாறு கர்மத்தின் பயனைத் துதித்தலான அபேதத்தை யறிவிக்கும் வாக் கியம் அர்த்தவாதரூபமாம். மீமாம்ஸை மதத்தில் தேவதை மந்திர மயமாம். விக்கிர முடையதும் ஐசுவரிய முடையதுமாகிய ஒரு தே வதை யில்லையாகலின் தெய்வத்தன்மையின் அடைவைச சொல்லு தல் சம்பவியாது; என்றாலும் சம்பாவனை மாத்திரத்தால் கர்ம பலத்தின் ஸ்துதியாம். அங்ஙனமன்றோ? கிருஷ்ணப் பிரபையின் உவமை கோடிசூரியப் பிரபையாகச் சொல்லப்பட்டது. ஆண்டுக் கோடி சூரியப் பிரபை அப்பிரசிதமாம். என்றாலும் சம்பாவனை யால் உவமை சொல்லபட்டது. கோடி சூரியனது பிரபை ஒரிட த்திருக்குமாயின் கிருஷ்ணப் பிரபையின் உவமை சம்பவிக்கும். இங்ஙனமே சாவஞ்ஞத்துவம் (முற்றறிவுடைமை) முதலிய குண விசிஷ்ட பரமைசுவரிய முடைய ஓர் அற்புத தெய்வ மிருக்கின், அப்படிப்பட்ட சொரூபம கர்மஞ் செய்வோனுக்குண்டாம். இவ் வாறுசம்பாவனையால் தெய்வதத்தன்மையின் அடைவு சொல்லப்பட்

டிருக்கிறது. இவ்வாற்றுன் எல்லா வேதமும் சாகூஷாத்தாகவாவது பரம்பரையாக வாவது பிரவிருத்தி நிவிருத்திகளே யறிவிப்பன வாம். பிரவிருத்தியில் உபயோகமின்மிய பிரஹ்மஞானம் வேத வாக்கியங்களால் சம்பவியாது.

## சௌ. பிராசீன விருத்திகாரர் மதம்.

பிராசீன விருத்திகாரர் வேதாந்தியெனப் படுவர். அவர் மதம் இதுவாம்:— கர்மவிதிப் பிரகரணத்தில் வேதாந்த வாக்கியங்களில்லை; ஆதலால் பின்னப் பிரகரணத்தில் படிக்கப்பட்ட வேதாந்த வாக்கியம் கர்ம விதியின் சேஷ (சாதன) மன்று. உபாசனை விதி வேதாந்தப் பிரகரணத்தி லுளது. ஆதலால் சகல வேதாந்த வாக்கியங்களும் உபாசனு விதியிற் சேஷ (சாதன) மாம். துவம்பதார்த்தத்தை யறிவிக்கும வாக்கியம் உபாசகனது சொரூபத்தை யறிவிக்கின்றது; தத்பதார்த்தத்தை யறிவிக்கும் வாக்கியம் உபாசியத்தின் சொரூபத்தை யறிவிக்கின்றது. துவம் பதார்த்த தத்பதார்த்தங்களின் அபேதத்தை யறிவிக்கும் வாக்கியங்களுக்குப் பொருளிதுவாம்:— சமசார தசையில் ஜீவப் பிரஹ்மங்களுக்குப் பேத முண்டு. உபாசனையின் வலியால் மோகூஷ தசையில் அபேத முண்டாகின்றது. அந்வைத வாதத்திலோ என்றும் அபேதமாம். பேதத்தோற்றம் சமசாரதசையினும் பிரம (மயக்க) வடிவினதாம். இம்மதத்தில் சம்சாரதசையில் பேதமும், மோகூஷதசையில் அபேதமுமுண்டாகின்றன. மோகூஷ தசையினும் ஜீவப் பிரஹ்மங்களின் பேதத்தை யங்கீகரிப்பவர் இம்மதத்தில் தோஷம் கூறுகின்றனர். ஜீவனிடத்துப் பிரஹ்மதத்தின் பேதம் சொரூபமாக வுளதா? அல்லது உபாதியானுகியதாயுளதா? சொரூபமாகப் பேத மங்கீகரிக்கின் எத்துணைச் சொரூபமுளதோ, அத்துணைப் பேதத்தின் நிவிருத்தி யுண்டாகாது. மோகூஷ தசையில் பேதம நீங்குதற்பொருட்டு ஜீவனது சொரூபத்தின் நிவிருத்தியை யங்கீகரிக்கின், சித்தாந்தத்தின் நீக்கமும் மோகூஷத்திற்குப் புருஷார்தத்தன்மை யின்மையுமுண்டாகும். எனெனின், மோகூஷதசையில் சொரூபத்தின் நிவிருத்தியை விருத்திகாரா அங்கீகரிக்கவில்லை. ஒருவர் சித்தாந்தத்திலும் மோகூஷத்தில் சொரூபத்தின் நிவிருத்தி உண்டாகிறதில்லை. யாவராயினும் சொரூப நிவிருத்தியை மோகூஷ தசையில் அங்கீகரிக்கின் சொரூப நிவிருத்தியில் ஒரு புருஷனுக்கும் அபிலாஷை யுண்டாகாது. ஆதலால் மோகூஷத்தில் புருஷார்த்தத் தன்மையின்

இன்மை யுண்டாகும். புருஷனது அபிலாசைக்கு விஷயம் எது வோ அது புருஷார்த்த மெனப்படும். ஆதலால் ஜீவனிடத்துப்பிரஹ்ம மத்தின் பேதம சொரூபமாக அங்கீகரிக்கின், மோக்ஷ தசையில் அபேதம் சமபவியாது. ஜீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதத்தை உபாதியானுகியதாகக் கூறின் உபாதி நிவிருத்தியால் மோக்ஷதசை யில் அபேதமோ சமபவிக்கும். ஆனல் அத்வைத மதத்தினும இம் மதத்திற்குப் பேதம் சித்திக்காது. எனெனின், அத்வைத வாதத் தினும உபாதியானுகிய பேதம் அங்கீகாரமாம். உபாதியானுகிய பேதமும் மித்தையாகும். அதன் நிவிருத்தியும் அத்வைத வாதத் தைப்போலக் கேவலஞானத்தால் அங்கீகரிக்கத் தக்கதாம். மோ க்ஷத்தின் பொருட்டு உபாசனைக்கிரியை பயனற்றதாகும். விரு த்திகாரர்மதத்தில் நையாயிகர் மூதலியோர் இக்குறைக்கம் செய்கி ன்றனர். அது பொருந்தாது. எனெனின், ஜீவனிடத்துப் பிரஹ்ம த்தின் பேதம் சொரூபமாயில்லை; உபாதியானுகியதாயுளது. உபாதி மித்தையாமாயின், உபாதியானுகிய பேதமும மித்தையாம. அதன் நிவிருத்தி கேவல ஞானத்தானும். விருத்திகாரர் மதத்தில் ஆகாய மூதற்பொருள்கள் பிரளயபரியந்தம் நிலைத்துள்ளனவாம். அவை மித்தையன்று. அங்ஙனமே ஜீவனது உபாதியாகிய அந்தக்கரண மூதலியனவும் சத்தியமாம. ஞானமாத்திரத்தான் அவற்றின் நிவிரு த்தி யுண்டாகிற தில்லை. மோக்ஷ தசையில் அந்தக்கரண மூதலிய வற்றின் நாச மூண்டாகின்ற தாகலின், துவமஸி சூனியத் தன்மை வடிவினதாகிய நித்தியத்தன்மை விருத்திகாராந்தரமும பொரு ந்தாதாயினும, ஞானத்தாற் பாதிக்கப்படுதற தகுனமையின்மை வடி வினதாகிய நித்தியத்தன்மை விருத்திகாரர் மதத்தில சகல பதார் த்தங்களினும் சம்பவிக்கின்றது. இவ்வாறருன் உபாதி சத்திய மாம; அச்சத்திய உபாதியானுகிய பேதமும் சத்தியமாம. ஜல சையோகமாகியசத்திய உபாதியானுகியசீதளத்தன்மைபிருதிவியிற் சத்தியமாம; அங்ஙனமே சத்திய வுபாதியானுய பேதமும் சதிய மாம். அச்சத்திய பேதத்தின் நிவிருத்தியும் உபாதியின் நிவிருத்தி யும் ஞான மாத்திரத்தா லுண்டாகாது. ஆனல் நித்திய கர்ம வுபா சனைகளோடு கூடிய ஞானத்தான் உபாதி நீங்குதலான் மோக்ஷ தசையில் பேதம நிவிருத்தியாகின்றது. அந்வைதமதத்தில் சகல வுபாதிகளும் பேதமும் மித்தையாம். அவற்றிற்கு ஞானமாத்திர த்தால் நிவிருத்தி யுண்டாகின்றது. சமசாரதசையிலும் மித்தையா

கிய உபாதியால் பாரமார்த்திகமான அத்வைதத்தன்மை கெடாதி. ஆதலால் அத்வைத மதத்தோடு விருத்திகாரர் மதத்திற்குப் பேத முண்டி. இவ்வாறறுல் விருத்திகாரா மதத்தில் பேதத்தை யறிவிப்பன வும் அபேதத்தை யறிவிப்பனவுமாகிய வாக்கியங்களின் கதி சம்பவிக்கின்றது. சீவனிடத்துப் பிரஹ்மத்தின் பேதத்தை யறிவிக் கும வாக்கியமோ சம்சாரிக ஜீவனது சொரூபதத்தை யறிவிக்கின் றது. அபேதத்தை யறிவிக்கும வாக்கியம முக்த ஜீவனது சொரூ பத்தை யறிவிக்கின்றது. முக்த தசையினும பேததத்தை யங்கீகரி க்கின், அவர்கள் மதத்தில் அபேததத்தை யறிவிக்கும் வாக்கியங்க ளுக்குப் பாதமுண்டாகின்றது. அத்வைத வாதத்தில் எப்போதும் அபேதம் அங்கீகாரமாம. அமமதத்தில் ஜீவப் பிரஹ்மங்களின் பேதத்தை யறிவிக்கும வாக்கியங்களுக்குப் பாதமுண்டாகின்றது. ஆதலால் சமஸார தசையில் பேதமும முக்தி தசையில் அபேதமும் அங்கீகரித்தல் தகுதியாம.

இம்மதமும் நலமுடைய தன்று. ஏனெனின், சகல வேதா ந்த வாக்கியங்களும தள்ளத் தகாததும கொள்ளத்தகாதது மாகிய பிரஹ்மத்தை யறிவிப்பனவாம. விதியின் சேஷ (சாதன) மான பொருளை யறிவிப்பன வாகா. இவ்வர்த்தத்தினை உத்தர மீமாம்ஸையின் முதல் அத்தியாயத்தின் நான்காவது சூத்திரத்தின் வியாக்கியானத்தில் பாஷ்யகாரா விஸ்தாரமாய் எழுதி யிருக்கின் றனர். சில மந்த புத்தியுள்ள புருடருகளு மீமாமஸை விருத்திகா ரர் முதலியோர் மதத்தில் அதிக ஸ்ரத்தையுண்டாய்ப் புத்தி சாஸதி ரததில் பிரவேசிக்குமாயின் பாமதிநிபந்தனம் பிரஹ்மவித்தியாபரண முதலிய வியாக்கியானங்களோடு கூடிய பாஷ்ய விசாரத்தால புதநி தோஷத்தை நிவிருத்தி செய்யவேண்டும். சூத்திர பாஷ்ய விசாரத்தில் புத்தி சாமர்த்தியமுடையதன்றுயின், அவன் பாஷ்ய காரது வியாக்கியானங்களோடு கூடிய உபநிடத நூல்களை விசாரி க்கக்கடவன். அவற்றின் தாற்பரியம் தள்ளத்தகாததும் கொள்ள த்தகாததுமான பிரஹ்ம ஞானத்தின்கண்ணும. உபாசனவிதியில் தாற்பரிய மில்லை. ஏனெனின், இலௌகிக வாக்கியத்தின் தாற் பரியமோ பிரகரண முதலியவற்றுன் அறியப்படுகின்றது. அநதப் பிரகரண முதலியன காவியப்பிரகாச காவியப்பிரதீபங்களில் எழுதப் பட்டுள்ளன.

## சூத்ர. ஆறுவைதிக வாக்கியங்களினது தாற்பரியத்தின் இலிங்கம்.

வைதிக வாக்கியங்களின் தாற்பரியவுணர்ச்சிக்கு ஏது உபக்கிர மோபசங்கார முதலிய ஆறும். (க) உபக்கிரம உபசங்காரங்களின் ஒரு வடிவாந்தன்மை, (உ) அப்பியாசம், (ங) அபூர்வதை, (ச)பலம் (டு) அர்த்தவாதம, (சு) உபபத்தியென்னும்ஆறும் வைதிகவாக்கியங் களினது தாற்பரியத்தின் இலிங்கமாம். இவற்றால் வைதிக வாக்கியங் களின் தாற்பரியம் அறியப்படுதலால் இவை தாற்பரியத்தின்இலிங்க மெனப் படுகின்றன. தூமத்தான் வன்னி யறியப்படுதலால் தூமம் வன்னியின் இலிங்கமெனப்படும். உபதிடதங்கட்கு வேறுய்க் கர்ம காண்டத்தை யறிவிக்கும வேதத்திற்குத் தாற்பரியம் கர்மவிதி யின்கண்ணும, உபக்கிரமோபசங்கார முதலியன பூர்வ வேதத் தின் கர்மவிதியின்கண்ணுதாதல் ஜைமினியார் செய்யப்பட்ட பன் னிரண்டதியாயமுள்ள பூர்வமீமாம்லையின்கண் தெளிவாயுளது. உபநிஷத வடிவமான வேதத்தின் உபக்கிரமோபசங்கார முதலி யன அத்துவிதீயப் பிரஹ்மஞ்தினகண்ணவாம். ஆதலால் அத்துவி தீயப் பிரஹ்மத்தில் அவற்றிற்குத் தாறபரியமாம். எங்ஙனம்: சாந்தோக்கியத்தின் ஆறுவது அத்தியாயத்தின் உபக்கிரமத்தில் அதாவது ஆரமபத்தில அத்விதீயப் பிரஹ்ம முள்ளது. உபசங்காரத்தி லும் அதாவது முடிவிலும் அத்விதீயப்பிரஹ்மமுளது. எப்பொருள் ஆரமபத்திலுளதோ அதுவே அந்தத்தினு மிருக்குமாயின், ஆண்டு உபக்கிரமோபசங்காரங்களின் ஒரு வடிவாந்தன்மை சொல்லப்படு கின்றது. அடிக்கடி சொல்லுதற்கு அப்பியாசமென்று பெயர். சாந்தோக்கியத்தின் ஆறுவது அத்தியாயத்தில் ஒன்பதுமுறை தத் துவமஸி வாக்கியமுளது. ஆகலின், அதனுவிதீயப் பிரஹ்மத்தில் அப்பியாசமாம். பிரமாணாந்தர (வேறுபிரமாண)ங்களால் அறியப் படாத தன்மையினை அபூர்வதை யென்பர். உபதிடத வடிவமான சத்தப்பிரமாணத்தின் வேறுன பிரமாணங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்மம் விஷயமாதலில்லை. ஆகலின், அத்துவிதீயப் பிரஹ்மத்தில் அறியப்படாத தன்மை வடிவினதாகிய அபூர்வதை யுளது. அத்து விதீயப் பிரஹ்மத்தின் ஞானத்தால் மூலத்தோடு கூடியசோகமோக ங்களின் நிவிருத்தி பலமெனப் படுகின்றது. ஸ்துதியை அல்லது நிந் தையை யறிவிக்கும் வாக்கியம் அர்த்தவாத மெனப்படும். அத்துவி

தீயப்பிரஹ்மஞானத்தின் ஸ்துதி உபநிடதங்களில் தெளிவாயுளது: கூறும் பொருளிற்கு அதுகூலமான யுக்தியினை உபபத்தி யென்பர். சாந்தோக்கியத்தில் சகல பதார்த்தங்களுக்கும் பிரஹ்மத்தோடு அபேதம் சொல்லுதற் பொருட்டுக் காரியத்திற்குக் காரணத்தோடு அபேதத்தைப்பிரதிபாதித்தல அநேக திருஷ்டாந்தங்களாற் சொல்லபபட் டிருக்கின்றது. இவ்வாறே ஆறு இலிங்கங்களின் எல்லா வுபநிடதங்களுக்கும் தாற்பரியம அத்துவிதீயப் பிரஹ்மத்தின்கண்ணும. இந்த ஆறு இலிங்கங்களையும உபநிடதங்களின் வியாக்கியானங்களில பாஷியகாரா தெளிவாய் எழுதியிருக்கின்றனர். அவற்றில் வேதாந்த வாக்கியங்களுக்கு அத்துவிதீயப் பிரஹ்மத்தில் தாற்பரிய நிசசய முண்டாகின்றது. எப்பொருளில் சொல்லுவானது கருத்தின் உணாசசி யுண்டாகின்றதோ, அப் பொருளின் உணாசசி கேட்பவனுக்குச சத்தத்தா லுண்டாகின்றது. ஏனெனின், சகதத்தினது சக்தியின் அல்லது இலக்ஷணை விருத்தியின் ஞானம சப்தபோதத்தில் (சொல்லுணாசசிக்) குக் காரணமாம.

## சகு. அவாய்நிலைமுதலிய நான்கும் சாப்தபோதத்தின் சககாரிகளாமெனல்.

அவாய்நிலை (ஆகாங்ஷை) யுணாவு, தகுதி (யோக்கியதை) யுணாவு, தாற்பரியவுணாவு, ஆசதி (அண்மை) யென்னும நான்கும சககாரிகளாம ஒரு பதாத்தத்திற்கு வேறு பதாத்தத்தோடு கொண்டுகூட்டுணாவினமை அவாயநிலை(ஆகாங்ஷை)யெனப்படும். இவன் வருகின்றான் புத்திரன் இராஜனது புருஷன் நீக்கப்படுக வென்னும வாகயத்தில் இராஜ பதாத்தத்திற்குப் புதுதிர பதார்த்தகுணமே கொண்டுகூட்டுணாவுண்டாகிய பின்னர்ப் புருஷனென்னும் பதாத்தத்தோடு கொண்டுகூட்டுணர் வின்மையால் (அந்வயபோத மின்மையால்) சாபதபோத முண்டாகிறதில்லை; ஒரு பதாத்தத்தோடு அந்துவய முண்டாகிய பின்னா அந்துவய போதமின்மை வடிவினதாகிய அவாய்நிலை யின்மையான். ஸ்தூலக்கிரமம் இதுவாம்:—அவாயிநிலை என்பது இசசைக்காம.அதுசேதனத்திலிருகினும் பதத்திற்கும அர்த்தத்திற்கும் எவ்வளவுகாலம் வேறுபதார்த்தங்களோடு அந்துவயத்தின்ஞான முண்டாகவில்லையோ, அவ்வளவுகாலம் தனது அர்த்தத்தின் அந்துவயத்தின்பொரு

ட்டு வேறுபதத்தின் இச்சை சமானமாய்த் தோற்றுகின்றது. அந்து வய போதமுண்டாகியபின்னர்த் தோற்றுததெதுவோ அது அவாய் நிலை யெனப்படும். அவாய்நிலையின் சொரூபம சூக்ஷமக ரிமமாக நூல்களில் எழுதப்பட்டுளது. அது கடினமாகலின் அதன் தன்மை மாத்திரம அறிவிக்கப்பட்டது. இராஜனது புத்திரன் வருகின்றுன் என்றிவ்வாறு இராஜபதார்த்தத்திற்குப் புத்திர பதாரத்தத்தோடு அந்துவயபோதமுண்டாகியபின்னர்ப் புருஷபதார்த்ததத்தோடு அந் துவய போதத்திற்கு எதுவான அவாய்நிலை இராஜ பதார்த்தத்தி லில்லையாகலின், இராஜனது புருஷனீ நீக்கிவிடு என்னும் ஞான முண்டாகிறதில்லை. ஆனல் புருஷனீ நீக்கிவிடென்னும் ஞானமுண் டாகின்றது. அவாய்நிலையுணர்வு சாப்தபோதத்திற்கு எது வாகா வீடின் இராஜாவின் புத்திரன் வருகின்றுன்; இராஜாவின் புருஷனீ நீக்கிவிடென்னும ஞான முண்டாதல் வேண்டும். ஆதலால் அவாய் நிலை யுணர்வு சாப்த போதத்திற்கு எதுவாம. ஒரு பதார்த்தத் திற்கு வேறு பதார்த்தத்தோ டுள்ள சமபந்தம யோக்கியதை (தகுதி) யெனப்படும். தகுதியில்லா விடத்துச சொல்லுணர்சசி யுண்டாகாது. தீயால்நனைகின்றுனென்னும வாக்கியத்தில் வன்னி யின்கண்ணுள்ள கரணத்தன்மை வடிவினதாய மூன்றும் வேற்று மைப் பொருட்குத் தெளிந்தநீர் பொருளில நிரூபிக்குந தன்மைச் சமபந்த வடிவினதாய தகுதி யில்லை. ஆதலால சாப்தபோத முண் டாகிற தில்லை. சாப்தபோதத்தில் தகுதி யேதுவாகாவிடின், தீயால் நனைக்கின்றுன் என்னும வாக்கியத்தில் சாப்தபோத முண்டாதல் வேண்டும. சொல்லுவோனது இசசையைத தாற்பரிய மென்பர். எவ்வர்த்தத்தில் தாற்பரிய ஞான முண்டாக வில்லையோ, அதன் சாப்தபோத முண்டாகாது. எங்ஙனம்: மாவைக் கொண்டுவா வென்னும வாகியந்தான போஜன சமயத்தில் சொல்லுவோனது இசசையாகிய தாற்பரியம குதிரையின்கண் நிகழா தாகலின் குதிரையின் சாப்தபோத முண்டாகாது. அங்ஙனமே நடக்கும் சமயத்தில் * மாவின் சாப்தபோத முண்டாகிற தில்லை. தாற்பரிய ஞானம சாப்தபோதத்திற்கு எதுவாகாவிடின், மாவைக்கொண்டி வா வென்னும் வாக்கியதான போஜன சமயத்தில் குதிரையின் ஞானமும, நடத்தற் சமயத்தில் மாவின் ஞானமு முண்டாதல வேண்டும. ஆதலால் சாப்தபோதத்தில் தாற்பரியஞானம் எதுவாம.

* மா=மாமபழம், மாவு.

ஈண்டிவ்வாறு சங்கை யுண்டாகின்றது:— சொல்லுவானது இச்சையினீத் தாற்பரிய மென்பர். கிளியின்வாக்கியத்தில் சொலலுவானது இசசையில்லை. கிளியின் வாக்கியத்தால் சாப்த போத முண்டாகின்ற தாகலின் தாற்பரிய ஞானம சாப்த போதத்திற் கேதுவாதல சமபவியாது. மீமாமஸகர் வேதத்தை நிதியமாகக் கொள்ளுகின்றனர். அவாகள் மதததில ஈசுவரனது அங்கீகார மில்லை. வேறொருதச சீவனுமவேருதற்குக காருநாவலலன். ஆனல் வேதம நித்தியமாம். அவாகளுக்குச் சொல்லுவோனது இசைசையாகிய தாற்பரியத்தின் ஞானம வைதிக வாக்கியங்களிற் சமபவியாது.

இதற்குர சமாதானம மஞ்ஞூஷாவென்னும் நூலில் நாகோஜி பட்டர் இவ்வாறு எழுதி யிருக்கின்றனர்:— சகல சாபதபோதத்திற்கும் ஏது தாற்பரிய ஞான மாகுமாயின, இருருத் தோஷமுண்டாம். சகல சாபதருதிற்கும ஏது தாற்பரிய ஞானமன்று. ஆனல் நாகார்தத பதங் (பலபொருட்சொற) களோடு கூடிய வாக்கிய ஜனிய சாப்தபோததற்கு ஏது காறபரிய ஞானமாம். ஆதலால் தோஷமில்லை.

விவரணகிரந்தத்தில் பிரகாசாதம ஸ்ரீசரணர தாறபரிய ஞானம சாப்தபோதத்திற்குக் காரணமாதலை முற்றும் நிஷேதித திருக்கின்றனர். அவ்விருவர வாதததையும நலமுடைய தன்று. எனெனின், இவ்விருவர் மதத்தினும் வேதவாக்கியங்களின் தாறபரிய நிச்சயத்திற்கு ஏதுவாகிய பூவ மீமாம்ஸை உததர மீமாமஸைகள் பயனிலலாதனவாம. ஆதலால் தாறபரியநிச்சயம சகல சாப்தபோதததிறகும்ஏதுவாகும். கிளி வாக்கியததினும் மீமாமஸகருக்கும தாற்பரிய ஞானம சமபவிக்க வில்லை யென்பதற்குச் சமாதானம் இதுவாம்:— மீமாமஸகாகளுக்கு வேதஞ்செய்தவனது தாறபரிய ஞானமோ சமபவியாது. ஆனல் வேதமுரைப்பவனுகிய பாடகனது தாற்பரிய ஞானம் சமபவிக்கின்றது. கிளி வாகியத்தில் தாற்பரிய ஞானம் சம்பவியா விடினும கேட்பவனுக்கு அறிவிக்கும விருப்பால் ஏவ்வாக்கியம உச்சரிக்கப் படுகின்றதோ, அது அறிவித்தல் வேட்கையி னினனமான வாக்கிய மெனப்படும். கிளியின் வாக்கியம் அறிவித்தல வேட்கை யாதினது மன்று. வேதவாக்கியமும் பாடகனது அறிவித்தல் வேட்கை யாதினமாம். அறிவித்தல் வேட்கை

யாதீன வாக்கியத்தாற் றேறன்றும ஞானத்தில் தாற்பரிய ஞானம் காரணமாம். கிளிக்ரு அறிவித்தல் வேட்கை யில்லையாகலின் கிளி வாக்கியத்தாற் றேறன்றும் ஞானத்தில் தாற்பரிய ஞானம் காரண மன்று. வேதாந்த பரிபாஷையில் கிளிவாக்கியத்தினும் தாற்பரி யம் கொள்ளப்பட் டிருக்கின்றது. அது சொல்லுவோனது இச் சையாகிய தாற்பரிய மன்று. ஆனால் இஷ்டமான அர்த்தத்தின் ஞானத்தைப் பிறப்பித்தலிற் றகுதி தாற்பரியமெனச் சொல்லப் பட் டிருக்கின்றது. இவ்விஷயத்திற் சங்கை சமாதானம் மேலும் எழுதப்பட்டுளது. அது முழுவதும பயனில்லாதகாம. தாற்பரியத் தின் பொருள் சொல்லுவோனது இச்சையென்பது பிரசித்தம். அதனைவிட்டுத் தாற்பரியத்திற்குப் பாரிபாஷிகமான பொருளைக் கொண்டுக் கிளிவாக்கியத்தினும தாற்பரியத்தைச் சொல்லுவதற்கு உலகப் பிரசித்தியின் விரோதத்தையன்றி வேறு பய னில்லை. உலகப் பிரசித்தியின் விரோதமாத்திரமே பயனும. எனெனின் சுக (கிளி) வாக்கியம தாற்பரிய மூடையதன்றென்பது உலக முழு வதினும அநுபவப் பிரசித்தமாம. சுகவாக்கியம் தாற்பரிய மூடை யது என்று ஒருவரும சொல்லார. ஆதலால் அறிவித்தல் வேட்கை யாதீன வாக்கியத்தாற் றேறன்றும சாப்த போதத்தில் தாற்ப ரிய ஞானம ஏது வன்று; ஞானமில் லிய புருடனுசரிதத வாக் கியத்தால் சாபத போத முண்டாகின்றது. ஆனால அவ்வாக்கியம அறிவித்தல் வேடகை யாதீன மன்று. ஆதலால் அவ்வாத்த ஞான த்தில் தாற்பரிய ஞானம ஏதுவன்று. மௌநியாற் செய்யப்பட்ட செய்யுளில் சொல்லுவானது இசசை தாறபரியமன்று. எனெனின் உச்சாரணத்தைச செய்பவன் சொல்லுவோ னெனப்படுவன். மௌநி உசசாரணஞ செய்யா ஞலின் மௌநியின் இசசை சொல்லுவோனது இசசை யனறென்று வேதாந்த பரிபாஷை யின் உரையில் காமராஜருடைய டீகதிரா எழுதியிருக்கின்றனர்.

அது சப்தரத்ந வியாகரண நூலால கண்டிக்கப்பட்டுளது. ஆண்டு இது பிரசங்கமாம:—உசசரித்த சதத்தாற் போதமுண்டா கின்றது, உசசரித்தலின்றிச சாபதபோத முண்டாகிறதில்லை என் னும அர்த்தத்தை யறிவிகரும மகா பாஷியத்தின் வாக்கியத்தை யெழுதி உச்சரித்தலின்றிச சாப்தபோதம நிகழாதெனின், ஏகாந்த த்தில் உசசரித்தலின்றிப் புத்தகம பார்ப்பவனுக்குச் சாப்தபோத முண்டாக லாகாதென்னும சங்கையை யெழுதி யிருக்கின்றனர்.

அதற்கு, ஆண்டும் புத்தகம பார்ப்பவன் சூக்குமஉச்சாரணம செய்கின்றான் என்று சமாதானம எழுதியிருக்கின்றார். இவ்வாற்றால் மௌனியால் எழுதப்பட்ட சுலோகத்தின் உசசரித்தலைச் செய்பவன் மௌனியாவன்.

அபேத ரந்நகாரர் மதம இதுவாம்:—யாண்டுத் தாற்பரியத்தின் சாதேதக முண்டாகின்றதோ, ஆண்டுச சாப்தபோத முண்டாகிறதில்லை; அன்றியும் யாண்டுத் தாற்பரியதனது இன்மையின் நிசசய முண்டாகின்றதோ, அண்டும சாப்த போத முண்டாகிறதில்லை. யாண்டு முதலில் தாற்பரியத்தின் சாதேதக முண்டாகி, அல்லது தாற்பரிய அபாவதனது நிசசயமுண்டாகிப் பிற்காலதனில் தாற்பரியத்தின் நிசசய முண்டாய்விடுகின்றதோ, ஆண்டுச சாப்த போத முண்டாகின்றது. ஆதலால் தாற்பரியத்தின் சாதேதகத்திற்குப் பிற்காலதது நிகழும சாப்த போதத்தின்கண்ணும, தாற்பரியாபாவதனின் நிசசயதற்குப் பிற்காலதது நிகழும சாப்தபோதத்தின்கண்ணும் தாற்பரிய ஞானம் ஏதுவாம்; எல்லாச் சாப்த போததனிலும ஏதுவாகாது என்பதாம். இமமதத்தில் தோஷம் வேதாந்த சிகாமணியில் எழுதப்பட்டிருக்கின்றது. கண்டனத்தில் ஆக்கிரக மில்லையாகலின் இங்குத் தோஷ மெழுதப்பட வில்லை. விவரணகாரர் மஞ்ஞூஷாகாரர் மதத்தில் எங்ஙனம் பூர்வ உத்தர மீமாம்ஸைகள் பயனற்றவை யாமோ, அங்ஙனம் இமமதத்தில் மீமாம்ஸை பயனற்றதாகாது. ஏனெனின் இமமதத்தில் தாற்பரிய சாதேதகத்திற்குப் பின்னிகழும் சாப்த போதத்திற்குத் தாற்பரிய ஞானம் ஏதுவாம. வேதவாகியங்களில தாறபரியதனின் சாதேதக முண்டாகின்றது. அதன் நிவிருத்தி மீமாமஸையான் உண்டாகும். வேதவாகியங்களில் சாதேதகமும் அதன் நிவிருத்தியும் எங்ஙன முண்டாகுமோ, அது பூர்வ உத்தரமீமாம்ஸைகளில் ஸபஷ்டமாம.

இவ்வாற்றான் அவாய்நிலை, யோக்கியதை, தாற்பரிய மென்பன சாப்த போததற்கு ஏதுவாம. ஆனால் அவாய்நிலை முதலியவற்றின் ஞானம ஏதுவாம; சொரூபமாக அவாய்நிலை முதலியன ஏதுவாகா. ஏனெனின, யாண்டு அவாய்நிலை முதலியவை யின்றிய வாக்கியங்களில் அவாய்நிலை முதலியவற்றின் மயக்க முண்டாகின்றதோ, ஆண்டுச சாப்தபோத முண்டாகின்றது. சொரூபமாக அவாய்நிலை முதலியன ஏதுவாதலை யங்கீகரிக்கின், அவாய்நிலை முத

ஸியவற்றின் பிரமஸ்தலத்தில் சாப்தபோதம் உண்டாகாதிருத்தல் வேண்டும். அவாய்நிலை முதலியவற்றின் ஞானம ஏதுவாதலே யங்கீகரிக்கின், சாப்தபோதத்திற்குக் காரணம பிரமவடிவ ஞானமா யிருத்தலின் சாபதபோதம சம்பவிக்கும். சொரூபமாக அவாய்நிலை முதலியன ஏதுவாதலை யங்கீகரித்தின், யாண்டு அவாய்நிலை முதலி யனவிருந்தும கேட்பவனுக்கு இவ்வாக்கியம் அவாய்நிலை முதலிய வை யின்றியதெனப் பிரம முண்டாகின்றதோ, ஆண்டும் சாப்த முண்டாதல் வேண்டும். அங்ஙன முண்டாகிறதில்லை. ஆதலால் அவாய்நிலை முதலியவற்றின் ஞானம் ஏதுவாம. அந்த ஞானம பிரமமாயினுமாகுக, அல்லது பிரமையாயினுமாகுக. சாப்தபோத த்திற்கு ஏது பிரமப் பிரமைகளின் சாதாரணமான அவாய்நிலை முதலியவற்றின் ஞானமாம. பிரம சாமக்கிரியால் சாப்தபோதம பிரமமாகிற திலை; விஷயத்தின் அபாவத்தால் சாபத போதம் பிரமமாகின்றது. எங்ஙனம்: வன்னியின் வியபிசாரியாகிய பிரு திவித் தன்மையில் வன்னிவியாப்பியத்தன்மைப் பிரம முண்டாப் ப் பிருதிவித்தன்மை ஏதுவால் வன்னியுடைய பர்வதத்தில் வன்னி யின் அநுமிதி ஞான முண்டாகின்றது. அது விஷயத்தின் இரு ப்பால் பிரமையாகின்றது. விஷயமின்றிய விடத்தில் வியபிசாரி யேதுவால் அநுமிதிப்பிரம முண்டாகின்றது. ஆதலால் விஷயத்தி னிருப்பால் பிரம சாமக்கிரியினுல் அநுமிதிப் பிரமை யுண்டா கின்றது. அங்ஙனமே அவாய்நிலை முதலியவற்றின் ஞானமாகிய சாபதபோத சாமக்கிரி பிரமமாகுக, அல்லது பிரமை யாகுக. யாண்டு விஷயத்தின் இருப்புளதோ, ஆண்டெ சாப்தபோதம் பிரமையாம. யாண்டு விஷயத்தின் அபாவ முளதோ, ஆண்டெ சாப்தபோதம் பிரமமாம். ஆனுல் யாண்டு யோக்கியதை (தகுதி) யுணாவு பிரம மாகின்றதோ, ஆண்டு நியமமாகஃ சாப்த போத முண்டாகின்றது; பிரமை யுண்டாகிலதில்லை. ஏனெனின், யாண்டு ச் சாப்தபோதத்தின் விஷயமுளதோ, ஆண்டு நியமமாக யோக் கியதை யுணர்வு பிரமை யாகின்றது. யாண்டுத் தகுதி யுணர்வு பிரம மாகின்றதோ, ஆண்டு நியமமாகச சாப்த போதத்தின் விஷயமிருப்பதில்லை. ஆதலால் விஷயத்தினிருப்பால் சாப்தபோதம் பிரமையும், விஷயத்தின் இன்மையால் பிரமமுமா மென்பது நியம மாம. அவாய்நிலை முதலியவற்றின் ஊணர்வு சாப்த போதத்திற்கு ஏதுவாதலபோல ஆசக்தியும சாப்தபோதத்திற்கு ஏதுவாம். நியாய

நூல்களில் பதங்களின் சமீபத தன்மையை ஆசத்தி (அண்மை) யென்பர். வியவகித (மறைப்பட்ட) பதங்களினது அர்த்தத்தின் அந்துவயபோத முண்டாகிறதில்லை. எங்ஙனம: கிரி உண்ணபபட்டது வன்னியுடைத்து, தேவதத்தனால் என்னும வாக்கியத்தால் அந்துவயபோதம உண்டாகிறதில்லை. கிரிவன்னியுடைதது, தேவதத்தனுண்ணப்பட்டது எனக்கூறின் சாபதபோத முண்டாகின்றது. ஆதலால் பதங்களின் சமீபத் தன்மையாகிய அண்மை சாப்த போதத்திற்கு ஏதுவாம். யாண்டு அண்மையில்லாதிருக்க அண்மையின் பிரம முண்டாகின்றதோ, ஆண்டுச சாப்தபோத முண்டாகின்றது. ஆதலால் பிரமப்பிரமைகளுக்குப் பொதுவான அண்மையின் ஞானம் ஏதுவாம். சொரூபமாக ஆசததி (அண்மை) ஏது வன்று. பிற நூலகளில் இங்ஙனம எழுதப்பட்டிருக்கின்றது:— யாண்டு வியவகித பதமூலதோ ஆண்டுச சுலோக முதலியவற்றில் சாப்தபோதம் உண்டாகின்றது. ஆதலால் முற்கூறிய அண்மை சாப்தபோதத்திற்கு ஏதுவன்று. ஆனல் சக்தி அல்லது இலக்ஷணையாகிய பதத்தின் சமபநதநதானுண்டாகும் பதாத்தங்களின் வியவதானமின்றிய ஸ்மிருதி யெதுவோ, அவ்வாசததி சாப்தபோதத்திற்கு ஏதுவாம். பதங்களுக்கு வியவதான மூலதாகுக, அல்லது அவ்வியவதான மூலதாகுக. எநதப் பதாத்தநதிறகு எநதப்பதார்த்தத்தோடு அநுவயபோத முண்டாகின்றதோ, அப்பதார்த்தங்களின் ஸ்மிருதி வியவதானமின்றியதாதலவேண்டும். பதார்த்தங்களின் சாப்தபோதம ஸ்மிருதி மாத்திரத்தால் உண்டாகுமாயின், எவ்வாற்றானுயினும ஒரு பதாத்ததின் ஸ்மிருதியுண்டாகுமிடத்து அதன் சாப்தபோத முண்டாதல் வேண்டும். பதததின் சம்பநதத்தா லுண்டாகும் பதார்த்தத்தின் ஸ்மிருதியினைச் சாப்த போதத்திற்கு ஏதுவாகக் கூறுவோமாயின் எல்லாப் பதங்களுக்கும் ஆகாயத்தோடு சமவாய சம்பந்தமிருக்கின்றது. ஆதமாவினிடத்துச் சகல பதங்களுக்கும் சுவாநுகூலகிருதி (தன் அநுகூலவினைச) சம்பந்த முளது. ஆதலால் கடமுதலிய பதங்களின் சமவாய சமபநதநதால் யாண்டு ஆகாயத்தின் ஸ்மிருதியும, சுவாநுகூலகிருதி சம்பநதத்தால் யாண்டு ஆத்மாவின் ஸ்மிருதியுமுண்டாகின்றனவோ, ஆண்டு அவற்றின்ஞானம் கடத்தைக் கொண்டுவா என்றல் முதலிய வாக்கியங்களால் உண்டாதல் வேண்டும். ஆதலால் சக்தி யல்லது இலக்ஷணைவிருத்தியாகிய

பதத்தின் சம்பந்தத்தா லுண்டாகும் பதார்த்தத்தின் ஸ்மிருதி சாப்தபோதத்திற்கு ஏதுவாம். கடமுதலிய பதங்களின் சமவாய சம்பந்தம் ஆகாயத்தின்கணுளது. சுவாநுகூலகிருதி சம்பந்தம் ஆகாவின்கணுளது. சக்தியல்லது இலக்ஷணைவிருத்தியாகிய சம்பந்தம் கடமுதலிய பதங்களுக்கு ஆகாயத்தினும ஆத்மாவினு மில்லை. ஆகாயம் ககனம்முதலிய பதங்களுக்குச சக்தியாகிய சம்பந்தம் ஆகாயத்தின்க ணுளது. சுவ (தானென்னும்) பதத்திற்கும் ஆத்ம பதத்திற்கும் சக்தியாகிய சம்பந்தம் ஆத்மாவின்கணுளது. ஆதலால் ஆகாச பதத்தோடுகூடிய வாக்கியத்தால் ஆகாயத்தின் சாப்த ஞான முண்டாகின்றது. ஆத்ம பதத்தோடுகூடிய வாக்கியத்தான் ஆத்மாவின் சாப்தபோத முண்டாகின்றது. இவ்வாற்றான் எப்பதத்தின் விருத்தியாகிய சமபந்ததால் எப்பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அதன் சாப்தபோத முண்டாகின்ற தெனக் கூறினுமும 'கடந்தைக் கொண்டுவா' என்னும வாக்கியத்தால் எந்த ஞான முண்டாகின்றதோ அந்த ஞானத்தின் உற்பத்தியானது கடம, கர்மதன்மை (செயப்படு பொருண்மை), கொண்டுவருதலாகிய வினையென்னு மித்துணைப் பதங்களாலுமுண்டாதல் வேண்டும. எனெனின், இரண்டு வாக்கியங்களுக்கும பதங்களின் சக்தி சமானமாம. முதல் வாக்கியத்தால் சாப்தபோத முண்டாகின்றது, இரண்டாவதா னுண்டாகிறதில்லை. இதன்கண் இது ஏதுவாம:—யோக்கிய பதத்தின் விருத்தியால எப்பதார்த்தத்தின் ஸ்மிருதி யுண்டாகின்றதோ, அதன் சாப்தபோத முண்டாம். முதல் வாக்கியத்தின் பதம யோக்கியமாம். இரண்டாவதின் பதம் யோக்கிய மன்று. யோக்கியதை (தகுதி) யும, அயோக்கியதை (தகுதி யின்மை) யும் அநுபவததை யொட்டி அநுமிக்கத் தக்கனவாம. எப்பதங்களால் சாப்த போதம் அநுப்வ சிததமாமோ அவற்றில் யோக்கியதை யுண்டு. எப்பதங்களால் சாப்தபோதத்தின் அபாவம அநுபவசிததமாமோ அவற்றில் யோக்கியதை யில்லை. இவ்வாற்றான் யோக்கிய பதத்தின் விருத்திரூப சமபந்தந்தான் உண்டாகும மறைப்பின்றிய பதார்தங்களின் ஸ்மிருதி ஆசத்தி யெனபபடும. இவ்வியலபினதாய ஆசத்தி சொரூபமாகச் சாப்த போதத்திற்கு ஏதுவாம; அதன் ஞானம ஏதுவன்று. இவ்வாற்றால் அவாய்க்கி யுணர்வு முதலிய நான்கும சாப்தபோதத்திற்கு ஏதுவாம். இந்நான்கையும் சாப்தசாமக்கிரி யென்பா.

அதுமிதியின் சாமக்கிரி வியாப்தி ஞானமாம். பிரத்தியகூ சாமக்கிரி இந்திரியசையோக முதலியனவாம். யாண்டு இரண்டு சாமக்கிரிகளுளவோ ஆண்டு இரண்டின் பயனு முண்டாகிறதில்லே. ஏனெனின் ஒருகூணத்தில் இரண்டு ஞானங்களின் உற்பத்தியுண் டாகாது. ஞானமிரண்டற்காதாரம ஒருகூணமாகுமாயினும ஞான மிரண்ட னுற்பத்திக் காதாரம ஒருகூணமாகாது. அவ்வுற்பத்தியும் வியதிகரணத்துள்ள இரண்டு ஞானங்களுகரு ஒரு கூணததிலுண் டாகும. எங்ஙனமு: தேவதததனது ஞானமும் எஞ்ஞததனது ஞானமும வியதிகரணமாம். அவற்றின் உற்பததி ஒரு கூணத்தி லுண்டாம. என்னும சமாஞ்திகரணத்துள்ள இரண்டு ஞானங் களின் உற்பததிஒரு கூணததி லுண்டாகிறதில்லேயென்பது சித்தா நீதம். இரண்டு சாமக்கிரிகளின் பயனும ஒருகூணத்தி லுண்டாகிற தில்லே. ஆகலின் பிரபல சாமகிரியின் பயனுண்டாகின்றது. தூப் பலத்திற்குப் பாத முண்டாகினறது; பிரபலத தன்மையும தூப் பலத்தன்மையும் அநுபவதனை யொட்டி யதமிகத தக்கனவாம. எங்ஙனம்: பூதலமகடமென்பவற்றேறி நேததிரதறகுசசையோக முண்டாகின்றது. அக்காலததில கடமுடையது பூதலம் என்னும் வாக்கியதனை சிரவண முண்டாகின்றது. ஆண்டுக கடமுடையது பூதலமென்னும பிரதியகஞானத்தின் சாமக்கிரியும சாப்தஞான த்தின் சாமக்கிரியு முள். என்னும பிரத்தியகூ ஞானமுண்டாகி றது; சாப்தஞானமுண்டாகிறதில்லே. ஆகலால்சமானவிஷயமுடைய பிரத்தியகூஞானசாப்தஞானங்களின் இரண்டு சாமக்கிரிகளுமுள்ளவிட த்தும பிரதியகூஞானததின் சாமகிரி பிரபலமும், சாப்தஞான த்தின் சாமக்கிரி தாப்பலமு மாகின்றன. யாண்டுப் பூதலத்தோடு கூடிய குடத்தேறி நேததிரதிற்குச சையோகமுண்டாக, அதே காலத்தில் உனக்குப் புத்திரன் பிறநதான் என்னும் வாக்கியததின் சிரவண முண்டாகின்றதோ, ஆண்டுப் பூதலததில் கடத்தின் பிர தியகூ முண்டாகிறதில்லே; ஆனால் புதநிரனது பிறப்பின் சாப்த ஞானமுண்டாகின்றது. ஆகலால பின்னவிஷயங்களையுடைய ஞான தின் பிரதியகூ சாமக்கிரியும சாபதசாமக்கிரியு முள்ளவிடத்து, சாபத சாமக்கிரி பிரபலமும் பிரதியகூ சாமக்கிரி தூர்ப்பலமு மாகின்றன. இவவாறு பாதகிய பாதக பாவத்தை (வாக்கப்படு வது வாக்ப்படுதென்னுந் தன்மையை) விசாரிததுச சூக்ஷமதிருஷ்டி

யுள்ள புருஷன்பிரபுலதுர்ப்பலதாதன்மைகளைத்தெரிந்துகொள்ளுக. ஆனல் ஜிஞ்ஞாஸை (அறிதலவேட்கை) யில்லாவிடத்து முற்கூறிய பாத்திய பாதக பாவமுளது. யாண்டு ஒரு வஸ்துவை யறியும்வேட்கை யுண்டாகின்றதோ,மற்றொன்றை யறியும வேட்கை யுண்டாக வில்லையோ,ஆண்டு இரண்டுஞானங்களின்சாமக்கிரிகளுமிருக்கினும, ஜிஞ்ஞாவித்த் (அறியவிருமபிய) தின் ஞான முண்டாகுமேயன்றி அறியவிரும்பாததின்ஞான முண்டாகிறதிலலை. ஆதலால் அறியவிரு ம்பியதினது ஞானதத்தின் சாமக்கிரிபிரபலமும்; அறிய விரும்பாததின னதுஞானத்தின்சாமக்கிரிதாபபலமுமாம.ஞானதத்தின் இசசை ஜிஞ் ஞாஸை(அறிதல்வேட்கை)யெனப்படும;அதன்விஷயம்ஜிஞ்ஞாஸிதம் (அறியவிருமபியது) எனப்படும. ஜிஞ்ஞாஸையோடு கூடிய சாமக் கிரி முழுவதும பிரபலமாம். யாண்டு இரண்டின் ஜிஞ்ஞாஸையு முண்டாகின்றதோ, ஆண்டு தீவிரஜிஞ்ஞாஸை பாதகமாம். இக்கார ணத்தானே அத்தியான்ம நூலகளில் தீவிர ஜிஞ்ஞாசை யுள்ளவ னுக்குப் பிரஹ்மஞான முண்டாம, தீவிரஞானவிருப்ப மில்லாதவ னுக்குப் பிரஹ்மஞான முண்டாகாதென்று எழுதப்பட் டிருக் கின்றது. ஏனெனின், அறிய விரும்பும் பதார்த்தத்தின் அறிதல் வேட்கையோடு கூடிய ஞான சாமக்கிரி யுளதாயின், அதனினும் தீவிர ஞானவிருப்பதோடு கூடிய ஞான சாமக்கிரியினுல் அதற் குப் பாத முண்டாகின்றது. இல்லையாயின் ஞான விருப்போடு கூடிய சாமக்கிரியினுல் மற்றச சாமக்கிரிக்குப் பாத முண்டாகின் றது. இலௌகிக பதார்த்தங்களின் ஜிஞ்ஞாஸையும அவற்றின் பிரத்தியகூ முதலிய ஞானத்தின் சாமக்கிரியும எப்போதும் சாக் கிரகாலத்தில் சம்பவிக்கின்றன. அவற்றுல் ஞானவிருப்ப மின்றிய பிரஹ்ம ஞானத்தின் சாமக்கிரிக்குப் பாதமுண்டாகும். ஆதலால் இலௌகிக பதார்தங்களின் ஜிஞ்ஞாஸையோடு கூடிய பிரத்தி யகூமுதலிய ஞானதத்தின் சாமக்கிரியினது பாததத்தின் பொருட்டு ப் பிரஹ்மத்தின் தீவிரமான ஞானவிருப்பம வேண்டும. தீவிர ஞான விருப்பதோடு கூடிய பிரஹ்ம ஞானத்தின் சாமக்கிரியி னுல் இலௌகிக பதார்த்தங்களினது ஞானதத்தின் சாமக்கிரிக்குப் பாதம் உண்டாகின்றது. *'ஈயாதொவ்வுஹஜி ஜ்ஞாஸா' என்னும்

* இது பிரஹ்மசூத்திரத்தின் முதற்சூத்திரம். இதன்பொருள் அதன்பின் பிரஹ்மத்தின ஞானவிருப்பானது செயயத்தக்கதாம் அதாவது பிரஹ்மத்தை அறிய விரும்பவேண்டும் என்பதாம்.

சூத்திரத்திற்கும் இப்பொருளின் சண்மே தாற்பரியமாம். வியாக்கியானகாரர் விசாரத்தில் ஜிஞ்ஞாஸை யென்னும் பதத்திற்கு இலக்ஷணையைக் கூறிக் காத்தவ்விய பதத்திற்கு * அத்தியாகாரம் கூறியிருக்கின்றனராகலின், பிரஹ்மஞானத்தின்பொருட்டு வேதாந்த வாக்கியங்களின் விசாரம் செய்யவேண்டுமென்பது இச்சூத்திரத்தின் பொருளாயினும் விசார வாசகமான பதத்தைவிட்டு இலக்ஷணிகமான ஜிஞ்ஞாஸையென்னும் பதத்தைப் பிரயோகிப்பதினால் சூத்திரகாரருக்கு வாசியமும இலக்ஷியமுமாகிய இரண்டு பொருளினும தாற்பரியமாம். பிரஹ்மஜிஞ்ஞாஸை பிரஹ்ம ஞானத்திற்கு ஏதுவாமென்பது வாச்சியார்த்தம. ஓரேசொல்லான் இலக்ஷணவிருத்தி சக்திவிருத்திகளால் இரண்டு பொருள்களின். ஞான முண்டாகுதென்னும பழைமையான சொல், கங்கையில் மீன்களும இடைச்சேரியு முளவென்னும வாக்கியத்திற் பிறழ்த்லான் விகவகிகத் தக்கதன்று. கங்கையில் மீன்களும இடைச்சேரியுமுளவென்னும் வாக்கியத்தில் கங்கையென்னும் பதத்தின் வாசகியார்த்ததிறகு மீனொடு சமபந்தமும, இலக்ஷியார்த்தத்திற்கு இடைச்சேரியோடு சமபந்தமு முண்டாகினறன. ஆதலால் கங்கையில் மீனகளும் கரையில இடைச்சேரியுமுண்டென்பது வாக்கியத்தின் பொருளாம. நூலாசிரியர்கள் சூத்திரத்திற்கு * அநேகம் பொருள்கள் எழுதி யிருக்கினும அவ்வநேகம பொருள்களும் சூத்திரத்திற்குப் பூஷ்ணமாம். விசாரத்திற்போல ஜிஞ்ஞாஸையில் விதி சமபவிக்கின்றதா, இல்லையாவென்னும பொருளை யெழுதுவதில் நூல் விரியுமாகலின் ரண்டு எழுதப்படவிலலை.

## நிக. வேதாந்தத்தின் தாற்பரியமும், வேதத்தினையும் சொல்லினையும் விசாரித்தலும்:

அவாய்நிலையுணாவு முதலியன சாப்த போதத்திற்கு ஏது வாம். அவற்றில் தாற்பரிய ஞான முளது. வேத வாக்கியத்தின் தாற்பரிய ஞானதிறகு ஏது உபக்கிரம முதலியனவாம. அவ்வுபக்கிரம முதலியவறறுள் வேதாந்த வாகியங்களுக்கு அத்துவிதீயப பிரஹ்மத்தின்கண் தாற்பரிய முளதாம். உபாசனை விதியிற் சுற்ப

---

* வாக்கியமுடிதற் பொருட்டாயினும, பொருள் முடிதற் பொருட்டாயினும் எஞ்சின்ற பதங்களே வருவிதலைத்தல் அத்தியாகாரமாம். இதனையே வாக்கிய சேஷமென்றும் கூறுவர்.

அவற்றின் ஒன்றறகொன்றுள்ள விலக்ஷணத தன்மையின் சாதகமான விலக்ஷண வுணாவைக கூறுவாம:—கபாலத்தில் கடதகினை உற்பத்திக்குமுன் கபாலததில் கடமில்லையெனனும உணர்ச்சி யுண்டாகின்றது. அதறகு விஷயம் கடதத்தின் பிராகபாவமாம். ஏனெனின், பிரதியோகியின் உபாதான காரணத்தில் சாமயிகாபாவமும அதியந்தாபாவமுமோ இரா வென்னும பொருளை மேற கூறுவாம. ஆனல் தனது பிரதியோகியின் உபாதானத்தை விடடு வேறிடதில இரண்டும அபாவமாயிருக்கின்றன. ஆதலால் கபாலத்திற கடமில்லையென்னும் உணாவிற்கு விஷயம் சாமயிகாபாவமும் அதியந்தாபாவமு மன்று. கடதத்தின் உற்பத்திக்குமுன் துவமசதத்தின் சமபவ மில்லை. ஏனெனின், துவமசதத்தின் பிரதியோகி நிமித்தகாரண மாகின்றது. காரணதத்திற்குமுன் காரியம சமபவியாதாகலின் கடதத்தின் உற்பதத்திற்குமுன், கபாலத்திற் கடமில்லையெனனும உணாவிறகு விஷயம கடத துவமசமுமன்று. கடத்தின் அநந்தியோநந்தியாபாவம் கபாலததில் எப்போது மிருகினும், கபாலம் கடமன்றென்று அநந்தியோநந்தியாபாவத்தின் உணர்வுண்டாகின்றது; கபாலத்திற் கடமில்லையென்னும அந்நியோநந்தியாபாவத்தின் உணாவுண்டாகிறதில்லை. இவ்வித வுணாசசிக்கு யாது விஷயமோ அது பிராகபாவமெனப்படும. அங்ஙனமே தண்டமுதலியவற்றுன் கடத்தின் அதரிசன முண்டாகுங் காலத்துக் கபாலத்

தில் கடமில்லையென்னு முணாவுண்டாகின்றது. அவ்வுணர்விற்கு விஷயம் பிராகபாவமன்று. ஏனெனின், பிராகபாவத்தின் நாசம் பிரதியோகி வடிவமாகின்றது. கடத்தின் உற்பத்திக்குப்பின் பிராகபாவத்தின் சம்பவமின்று. மூன்றபாவமெவையோ, அவற்றின் சம்பவமும முற்கூறிய வண்ணஞசம்பவியாது. ஆதலால்தண்டமுதலிய வற்றுற்றோன்றிய கடத்தின் அதரிசன காலததில் கபாலத்திற் கடமில்லையென்னும் உணாவுண்டாகின்றது. அதற்கு விஷயம் பிரத்தோம்ஸாபாவமாம. இவ்வாற்றுன் பிராகபாவமும பிரத்துவம்சாபாவமும நா என்னும சொல்லாற் றோன்று முணர்ச்சிக்கு விஷயமாம். இது பிராசினர் மதம.

## சூசு. நவீனநியாயமதத்தில் அபாவங்களின் ஒன்றற்கொன்றுள்ள விலக்ஷணத்தன்மையின் சாதகவுணர்வு.

நவீனமதத்தில் பிரதியோகியின் உபாதான காரணத்திலும் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஏனெனின், அத்தியந்தாபாவத திற்குப் பிரதியோகியோடு ஸோதமிருகின்றது; பிறவற்றோடில்லை. யாண்டுப் பிரதியோகியில்லையோ, ஆண்டு முழுவதும அத்தியந்தாபாவமாகின்றது. ஆதலால் கடத்தின் உற்பதத்திக்குமுன்னும் பிரதியோகியின் நாசகாலத்திலும் பிரதியோகியின் அத்தியந்தாபாவ மிருத்தலான் கபாலத்திற் கடமில்லையென்னும ஞானத்திற்கு விஷயம் அத்தியந்தாபாவமாம். இவ்வித வுணர்வால் பிராகபாவப் பிரத்துவம்சாபாவங்களின் சிததி யுண்டாகிறதில்லை. ஆனல் கபாலத்தில் கடம் உண்டாகுமென்னுமுணர்வு கடத்தின் உற்பத்திக்கு முன் ணுண்டாகின்றது. அதன் விஷயம் பிராகபாவமாம. கடம துவம்ஸஞ்செய்யப்படடதென்னு முணாவினுக்கு விஷயம் துவம்ஸமாம். இவ்வாற்றுன் கடத்தினுற்பத்திக்கு முந்தியகாலத்தில் கடத்தின் அத்தியந்தாபாவம் பிராகபாவமென்னும் இரண்டும் இருக்கின்றன. அவற்றுள் கபாலத்தில் கடமில்லையென்னும் உணர்வுக்கு விஷயம் கபாலத்தில் கடத்தின் அத்தியந்தாபாவமாம். கபாலத்திற் கடமுண்டாமென்னும் உணர்விற்கு விஷயம் கபாலத்திற் கடத்தின் பிராகபாவமாம். அங்ஙனமே தண்டமுதலியவற்றுற் கபாலத்தில் கடத்தின் அதரிசனமுண்டாயின் அக்காலத்தும் கபாலத்திற் கடமிலலை; கபாலத்திற் கடம் துவமஸமாயிற்று என் றிவ்வாறு இரு

வகை யுணர்வுகளுண்டாகின்றன. அவற்றுள் மூதலுணர்விற்கு விஷ்
யம் கடத்தின் அந்நியந்தாபாவமும், இரண்டாவது உணர்விற்கு
விஷயம கபாலத்தில்கடத்தின் பிரந்துவம்ஸாபாவமுமாம். இவ்வாற்
றுன் ஈவின மதத்தில் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்கள் ந
என்னும சொலலாற் ரோன்றிய வுணர்விற்கு விடயமன்முகலான்
முத லிலக்கணம் பிராசீன மதத்தை யநுசரிததது, இரண்டாவ
திலக்கணம் இருமதங்களை யநுசரிகதுமாம். ஆதலால் இரண்டா
வது இலக்கணமே செவ்விதாம.

## சூ. அபாவத்தின் இரண்டாவது இலக்கணமும் விலகஷண வுணர்வும்.

சமபநத சாதிருசியங்களுக்கு வேறுப்அநியதத்தின் அபேகை
யுடைய வுணர்விற்கு விஷயம எதுவோ, அஃது அபாவ மெனப்
படும. இஃது இரண்டாவது இலக்கணமாம. பூதலதகில கடமில்லை
யென்னும் உணர்வுக்கு விடயம பிராகபாவமும துவமஸமும் மன்று.
ஏனெனின் பிரதியோகியின் உபாதானத்தில இரண்டு அபாவங்களு
மிருக்கின்றன. கடர்பாவதத்தின் மிரதி யோகியாகிய கடத்தின்
உபாதானம பூதல மன்று. ஆதலால் முறகூறிய வுணர்விற்கு விட
யம் இரண்டபாவங்களு மன்று. அததியநதாபாவமும் அநியோ
நியா பாவமுமோ நிதியமாம். பூதலதகில் கடாபாவம் அநித்
தியமாம. ஆதலால் கடதின் சாமயிகாபாவமே முற்கூறிய பிர
தீதி (உணர்வு) நகு விஷயமாம. வாயுவில் உருவ மில்லையென்னும்
உணர்வுக்கு விஷயம கேவலம் அததியநதாபாவமாம. அநநதமா
(நாச மிலலாதது) யிருதலால் பிராகபாவ மன்று; அநாதித
தன்மையால் துவமஸமும மன்று; எபபோதுமிருத்தலால் சாமயி
காபாவ மன்று. ஆதலால மூற்கூறிய வுணர்வுக்கு விஷயம் அததி
யந்தாபாவமாம. அங்ஙனமே வாயு உருவமுடையதன்று என்னும
உணர்வுக்கு விஷயம் அந்நியோந்நியாபாவமாம. முற்கூறிய வுணர்
வால் வாயுவில் உருவமுடையதின் பேதம விளங்குகின்றது. அங
ஙனமே கடம் பட மன்று என்னும உணர்வுக்கு விஷயம் அந்நி
யோந்நியாபாவமாம. அநியோநியாபாவத்தினையே பேதமென்பர்.

## சூசூ. அந்நியோந்நியாபாவ லக்ஷணமும், அதிற் சங்கை சமாதானமும்.

அபேதத்தை நிஷேதிக்கும் அபாவம் எதுவோ, அது அந்நியோந்நியாபாவ மெனப்படும. கடம் பட மன்று என்று கூறுதலால் கடத்திற் படத்தினது அபேதத்தின் நிஷேத முண்டாகின்றது. ஆதலால் கடத்திற் படத்தினது அபேதத்தின் நிஷேதம கடத்திற் படத்தின் அந்நியோந்நியாபாவமாம். எனினின், ந என்னும் சொல்லின் றி எதனிடத்து எது தோற்றுகின்றதோ, அதன் நிஷேதம ந என்னும சொலலா லுண்டாகின்றது. எங்ஙனம்: ந என்னும் சொலலின்றிய கடம பட மென்னும வாக்கியத்தான் நீலம குடமென்றன் முதலியவற்றைப்போலப் படத்தில் குடத்தின் அபேதம அல்லது குடத்தில் படத்தின் அபேதம் தோற்றுகின்றது. அவ்வபேதத்தின் நிஷேதம ந என்னும சொல்லா லுண்டாகின்றது. ஆனல் இத்தணைப் பேதமாம:—எந்தப் பதத்தோடு ந என்னும சொல்லின சமபந்த முண்டாகின்றதோ, அப்பதத்தினது அர்த்தத்தின் அபேதத்தினது நிஷேதம உண்டாகின்றது. எங்ஙனம்:—கடம் பட மன்று என்னும் வாக்கியத்தில் படபதத தோடு ந ஙன்னும சொல்லின் சமபந்த மிருகின்றது. ஆண்டுக்கட த்தில் படபதத்தினது அர்த்தத்தின் அபேதம் நிஷேதமாகின்றது. படம் கடமன்றுஎன்னும வாக்கியத்தில் கடப்பதத்தோடு ந என்னும பதத்தில் சம்பந்தமிருக்கின்றது. ஆண்டுக் கட பத அர்த்தத்தின் அபேத நிஷேதம படதத்தி லுண்டாகின்றது. இதனற்றுன் கடம் பட மன்று என்னும் வாக்கியத்தாற் ரேற்றும அநுயோகியாபாவம் எதுவோ, அதற்குக் கடம அநுயோகியும், படம் பிரதியோகியுமாம. அங்ஙனமே படம கடமனென்னும வாக்கியத்தாற் ரேற்றும அநுயோகியாபாவத்திற்குப் படம் அநுயோகியுமகடம் பிரதியோகியுமாம. எதன்கண் அபாவ முண்டாகின்றதோ, அது அபாவதத்தின் அநுயோகி யெனப்படும. எதன் அபாவமுண்டாகின்றதோ, அது பிரதியோகி யெனபபடும.

சங்கை:— எதன் நிஷேதம் செய்யப்படுகின்றதோ அதற்கு அபாவம் சொல்லப்படுகின்றது. அதுவே அபாவத்தின் பிரதியோகி யெனப்படுகின்றது.முன் இவ்வாறுகூறப்பட்டிருக்கின்றது:—கடம் படமன்றென்னும் வாக்கியத்தான் கடதத்தில் படத்தின் அபேதம்

நிஷேதிக்கப் படுகின்றது. படம்: கட மன்றென்னும் வாக்கியத் தால் படத்தில் கடத்தின் அபேதம் நிஷேதிக்கப்படுகின்றது. ஆத லால் கடம் படம் அன்று என்னும் வாக்கியத்தாற் ரூற்மிய அபா வதத்தின் பிரதியோகி படத்தின் அபேதமாம்; பட மன்று. அங் ஙனமே படம் கட மன்றென்னும் வாக்கியத்தாற ரூற்மிய அபா வத்தின் பிரதியோகி கடத்தின் அபேதமாம்; கட மன்று. ஆத லால் இரண்டு வாக்கியங்களிலும் அபேதத்தின் நிஷேதம் கூறவே, படத்திலும் கடத்திலும் கிரமமாகப் பிரதியோகித் தன்மையைக் கூறுதலால் விரோதமுண்டாம.

சமாதானம:—அபேத மென்பது அசாதாரண தர்மத்தின் பெயர். எது தனது சொரூபத்திலன்றி எப்பதார்த்தத்திலு மிராதோ; தன்னிடத்து மாதத்திர மிருக்குமோ, அது தனது அசாதாரண தர்ம மெனப்படும். கடத்தின் அபேதம கடத்தின்கண்ணே யிருக்கும்; பிறவற்றில் இராது. ஆதலால் கடத்தின் அபேதம கடத்தின் அசா தாரண தர்மமாம். அவ்வசாதாரண தாமமாகிய அபேதமே சகல பதார்த்தங்களுக்கும் தம்மிலுள்ள சமபந்தமாம். இவ்வாற்றுன் சகல பதார்த்தங்களின் அசாதாரண தாமமாகிய அபேத சமபந தம் தமது சொரூபத்தி லிருக்கின்றது. எந்தப் பதார்த்தத்தின் எந்தச் சமபந்தம் எதன்கணிருக்கின்றதோ, அப்பதார்த்தம அச் சமபந்தத்தால் அதன்கணிருக்கின்றதாம். எங்ஙனம: கடத்தின் சையோக சமபந்தம பூதலத்தி லிருக்கின், ஆண்டுச் சையோக சம் பந்தத்தால் பூதலத்தில கட மிருக்கின்ற தென்னும வியவகாரம் உண்டாகின்றது. ஆதலால் கடத்தின் சையோக சம்பந்தம் பூதல த்தில் இருக்கின்றது, சையோக சமபந்தத்தால் பூதலத்திற கட மிருக்கின்றது என்று சொல்லுதலில அர்த்தபேத மில்லை. அங்ஙன மே சையோகசம்பந்தத்தால் பூதலத்திற் கடாபாவமிருக்கின்றது, பூதலத்தில் கட சையோகத்தின் அபாவ மிருக்கின்றது என்று கூறுதலிலும பொருள் ஒன்றேயாம. இவ்வாறு படத்தில அபேத சம்பந்தத்தால் கடாபாவமும், படத்தில் கடத்தினது அபேத சம பந்தத்தின் அபாவமுமாகியஇரண்டும ஒத்து உடனிகழ்வனவாயிரு த்தலின் ஒரே பதாத்தமாம. சமகிய (ஒத்தஉடனிகழும,) அபா வங்கட்குப் பேத முண்டாகாது. எங்ஙனம: கடத்தன்மை யத்தி யந்தாபாவமும், கடாந்நியோந்நியாபாவமும் கடத்திற்கு வேறுய்ச் சகல பதார்த்தங்களினு மிருக்கின்றன. ஆனல் ஒரே அபாவத்தில்,

க்டத்துவாத்தியந்தாபாவத்தன்மையும் கடாந்நியோந்நியா பாவத் தன்மையுமாகிய இரண்டு தர்மங்களுள. ஒரே அபாவத்திற்குக் கட்டதன்மை கடமென இரண்டு பிரதியோகிகளுள. கடத்துவா த்தியந்தாபாவந்தன்மை வடிவால் எந்த அபாவத்திற்குக் கடத் தன்மை பிரதியோகியோ, அவ் வபாவத்திற்கே கடாநந்நியோந்நி யாபாவத்தன்மை வடிவான் கடமும் பிரதியோகி யாம். எவ்வாற் றான் ஒரே அபாவத்திறகு உருவமேபதத்தால் இரண்டு பிரதியோகிக ளிருக்கின்றனவோ, அவ்வாற்றான் உருவமேபதத்தால் ஒரேஅபாவத் திற்குப் பிரதியோகித்தன்மை யவச்சேதகமான இரண்டு சம்பந் தங்களுள. கடத்துவ அநந்நியந்தாபாவதத்தன்மை வடிவான் பிரதி யோகித்தன்மை யவசேதகமான சமவாய சம்பந்த முண்டு. கட அநந்நியோநந்நியா பாவத்தன்மை வடிவான் அவ்வபாவதத்திற்கே பிரதியோகித்தன்மை யவச்சேதகமான சமவாய சமபந்தம உண்டு. இவ்வாற்றால் பட முதலிய சகல பதார்த்தங்களிலும் உள்ள கடாபேதத்தின் அத்தியந்தா பாவமும் கடாந்நியோநந்நியாபாவ முமஒன்றும. அவ்வொருஅபாவதத்திலகடாபேத அத்தியந்தாபாவ தத்தன்மை கடாநந்நியோநந்நியாபாவத்தன்மை யென்று இரண்டு தர் மமங்களுள. கடாபேத அத்தியந்தா பாவத்தன்மை வடிவான் அவ் வபாவதத்திற்குக் கடாபேதம பிரதியோகியாம், பிரதியோகிதத ன்மை யவச்சேதகம் சொல்ப சம்பந்தமாம். ஆநந்நியோந்நியா பாவத் தன்மை வடிவான் அவ்வபாவத்திற்கே கடம பிரதியோகியாம். பிரதியோகிதத்தன்மை யவசசேதகம் அபேத சம்பந்தமாம. அவ் வபேத சமபந்தத்தினையே தாதாத்மிய மென்ப. அதன் வடிவாந் தன்மை (வியக்தித்தன்மை) யென்றுங்கூறுவர். இவ்வாற்றான் கட த்தினது அபேத நிஷேதத்தின் பிரதியோகி கடம என்று கூறு தலும பொருந்தும; விரோதமின்றி.

சுண்டு இது நிச்சயமாம:—எந்த வாக்கியத்தால் நா என்னும் சொல்லின்றி எப்பதார்த்தத்தில் எச்சம்பந்தத்தால் எப்பதார்த் தம் தோற்றுகின்றதோ, நா என்னுஞ் சொல்லோடுகூடிய அவ்வா க்கியத்தால் அப்பதார்த்தத்தில் அச்சம்பந்தத்தால் அப்பதார்த்த த்தின் நிஷேதம தோற்றுகின்றது. எங்ஙனம: நீலம் குடமென் னும் வாக்கியத்தால் கட பதார்த்தத்தில் அபேத சம்பந்தத்தால் நீல பதார்த்தம் தோற்றுகின்றது. ஏனெனின், அபேத சமபந்தத் தால் நீல விசிஷ்டம் குடமென்பது வாக்கியத்தின பொருளாம்.

ந என்னும் சொல்லோடுகூடிய சூடம நீல மன்று என்னும் வாக்கியத்தான் அபேத சம்பந்தத்தினால் நீலத்தின் நிஷேதம் கடத்தில் தோற்றுகின்றது. அங்ஙனமே கடம படமென்னும் வாக்கியத்தாலும ந என்னுஞ சொல்லின்றிப் படப் பொருளில் அபேத சம்பந்தத்தான் கடபதார்த்தந் தோற்றுகின்றது. ஏனெனின் யாண்டு இரண்டு பதங்களிலும சமான வேற்றுமை யுளதாகின்றதேனும், ஆண்டு ஒரு பதார்த்தத்தில் அபேத சமபந்தத்தால் மற்றைய பதார்த்தத்தின் தோற்ற முண்டாமென்பது நியமம. நீலம குடமென்னும வாக்கியத்திற்போல குடம படமென்னும வாக்கியத்திலும இரண்டு பதங்களுஞ சமான (ஒரு) வேற்றுமை யுடையனவாம. ஆகலின் ந என்னுஞ சொல்லின்றிக் குடம படமென்னும, வாக்கியத்தானும பட பதார்த்தத்தில் அபேத சமபந்தத்தால் குட பதார்த்தம தோற்றுகின்றது. அபேத சமபந்தத்தாற பட பதார்த்தத்தில் குட பதார்த்தஞ சமபவியாதாயினும், ஒரு பதார்த்தத்தில அபேத சம்பந்தத்தால் மற்றப் பதார்த்தம தோற்றுதற்குச சாமக்கிரி (சாதனம்) சமான வேற்றுமை யாம். அது கடம பட மென்னும வாக்கியத்தினு முளது. ஆதலால் ந என்னுஞ சொல லின்றி கடம பட மென்னும வாக்கியத்தாற் பட பதார்த்தத்தில் அபேத சமபந்தத்தாற் குட பதார்த்தந தோற்றுகின்றது. ஆனால் பட பதார்த்தத்தில் அபேத சமபந்தத்தால உண்டாகுங் குடபதார்த்தத்தின் தோற்றம் பிரம (மயக்க) வடிவமாம்; பிரமை யன்று. ஆதலால் ந என்னுஞ சொலலின்றி யொரு பதார்தத்தத்தில் எச் சமபந்தத்தால் பிறபதார்த்தத்தின் றோற்றம பிரமவடிவாகவேனும் பிரமை வடிவாகவேனும உண்டாகின்றதோ, ஆண்டு ந என்னுஞ சொல்லைச்சேர்க்கின் ஒரு பதார்தத்தத்தில் அச சமபந்தத்தால் பிறபதார்த்தத்தின் நிஷேத மூண்டாகின்றது. இவ்வாற்றான் ஒரு பதார்தத்தத்தில்அபேதசம்பந்தத்தால்வேறுபதார்த்தத்தை நிஷேதிக்கும் அபாவம் அந்நியோந்நியாபாவமெனபபடுகினறது.

## சூத்ர. நவீனக்கிரமமாகச் சம்சர்க்காபாவத்தின் நான்குபேதமும், அவற்றி னிலக்கணமும், பரீக்ஷையும்.

அதனின் வேறுகிய அபாவமெதுவோ அதனைச் சமசர்க்காபாவமென்பர். சம்சர்க்காபாவம் பிராசீன மதத்தில் நான்குவகைப்

படும்:—அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ அது பிராகபாவ மெனப்படும். தனது பிரதியோகியின் உபாதான காரணத்தில் பிரா கபாவ மிருக்கின்றது. எங்ஙனம்: கடத்தின் பிராகபாவத்திற்கு ப்பிரதியோகி கடம். அதன் உபாதான காரணமாகிய கபால த்தில கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. கபாலத்தின் உற்பத்தி க்கு முன்னும கபர்லத்தின் உபாதான காரணத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. இவ்வாற்றால் சிருஷ்டிக்குமுன் கடத் திற்குக் காரணமாகிய பரமாணு சமுதாயத்தில் கடத்தின் பிரா கபாவ மிருக்கின்றது. பரமாணு கடங்களுக்கு இடையில் உள்ள துவியணுக முதற்கபாலாவயவுள்ள அவயவிகள் எல்லாவற்றின் பிரா கபாவமும சிருஷ்டிக்குமுன் பரமாணுவி லிருக்கின்றன. இவ்வாற் றால் பிராகபாவம அநாதியும (உறபததியின்றியதும்) ஸாந்தமும (அந்தமுடையதும) ஆம. (அநாதமென்பது துவம்ரதத்திற்காம. அந ஸீயே நாசமென்பா.) கடத்தினது உற்பத்திக்குச காமக்கிரி எதுவோ, அதனால் கடத்தின் பிராகபாவத்திற்கு அந்தமுண்டாகி ன்றது. ஆதலால் கடத்தினது பிராகபாவத்தினக்தம் கடவடிவமே யாம. கடத்தினது பிராகபாவுதத்தின் துவம்சம் கடத்தினும வேற ன்று. பிரத்துவமசாபாவம் அநாதமும் கடம் ஸாந்தமுமாம. கட த்தினது ' பிராகபாவத்தின் துவமசம கடவடிவமாகுமாயின், பிர த்துவமசாபாவமுஞ் ஸாந்தமாகும. பிரததுவம்சாபாவம் அநந்த மென்னும் நியமததிற்குப் பங்கமுண்டாம. என்றாலும் துவம்சம் நாசம் அந்தமென்பன பரியாயச சொற்கள். அந்துவம்சம் இருவகை யாம். ஒன்று பாவ பதாரததத்தின் நாச வடிவமான துவம்சம். மற்றையது அபாவத்தின் நாசவடிவமான துவம்சம. பாவபதார்த் தத்தின் நாசவடிவான துவம்சமோ அபாவ வடிவமாம். அதனை யே பிரத்துவம்சாபாவமென்பா. எங்ஙனம்: குட முதலிய பாவ பதார்த்தங்களின் நாசம அபாவ வடிவமாம. அதனைப் பிரத்துவம் சாபாவமென்பர். அபாவ பதார்த்தததின் நாச வடிவினதாகிய துவம்சம் பாவரூபமாம். அதனைத் துவம்சப் பிரத்துவம்சமென்று கூறுகின்றனர். துவம்சாபாவம் பிரத்துவம்சாபாவமென்று கூறுவ தில்லை. எங்ஙனம: கடத்தின் பிராகபாவம் அபாவ பதார்த்தமாம். அதன் நாச வடிவினதாகிய துவம்சம் கடமாம., அது பாவரூபம். அதனைப் பிரத்துவம்சா பாவமென்று கூறுவதில்லை. ஆனால் கடப் பிராகபாவத்தின் நாசவடிவினதாகிய கடத்தைச சுவப்பிராக

பாவத்தின் (தனது முன்னின்மையின்) துவம்சமென்றும் பிரத்துவம்சமென்றுமே கூறுவர். இவ்வாறுரை துவம்சம் இருவகையினதாம் அவற்றுள் பாவரூப துவம்சமோ ஸாந்தமாம்; ஆனால் அபாவரூபத் துவம்சம் அகந்தமாம். ஆதலால கடப்பிராகபாவத் துவம்சமாகிய கடரூபமோ சாந்தமாம். அங்ஙனமாயினும் பிரத்துவம்சாபாவம் அகந்தமென்றும நியமத்திற்குக் கேடில்லை. இவ்வாறரை அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ அது பிராகபாவமெனப்படுகின்றது. அநாதிபாவம் அத்தியந்தாபாவமுமாம்; ஆனால் அது ஸாந்த மன்று. ஸாந்த அபாவம சாமயிகாபாவமுமாம; ஆனால் அது அநாதியன்று. வேதாந்தசித்தாந்தத்தில் அநாதிஸாந்தம மாயை; அஸ்தபாவமன்று. ஆனால் அது ஜகத்தின் உபாதான காரணமாம். அது அபாவ வடிவ மாகுமாயின் அதற்கு உபாதான காரணத்தன்மைசம்பவியாது. ஏனெனின், கட முதலியவற்றின உபாதான காரணமாகிய கபால முதலியன பாவரூபமாகவே யிருத்தல் பிரசித்தம். அபாவம எதற்கும உபாதான காரண மாகாது. ஆதலால் மாயை அபாவ ரூப மன்று; ஆனால பாவ ரூபமாம. மாயை பாவ அபாவங்களுக்கு வேறான அநிர்வசனீயமாமாகலின் பாவ வடிவத்தன்மையும் அதனிடத்தில சம்பவியாது. அங்ஙனமாயினும் அபாவரூபம மாயையன்றாகலின், பிராகபாவத்தி னிலக்கணத்தில் அபாவபதம் செல்லுதலால மாயையில் பிராகபாவத்தின் இலக்கணம செல்லாது. மாயை பாவரூபமன்றென்று சொல்லுதற்கு அபிப்பிராயம இதுவாம:—மூன்று காலத்திலும எதற்கும் பாதம் உண்டாகிறதில்லையோ, அது பரமார்த்தசத்தென்றும பாவமென்றும் சொல்லப்படும. அத்தன்மையது பிரஹ்மமாம்; மாயையன்று. ஏனெனின், ஞானதத்திற்குப் பிறகிய காலத்து மாயையின் பாதமுண்டாகின்றது. ஆதலால பரமார்த்த சதது ஸ்வரூபமான பாவமோ மாயையன்று. ஆயினும், விதிமுக வுணர்ச்சிக்கு எது விஷயமாகின்றதோ, அதுவும சத்தென்றும பாவமென்றும சொல்லப்படுகின்றது; நிஷேத முகவுணர்சிக்கு விஷயமாவது எதுவோ, அது அபாவ மெனப்படுகின்றது. நிஷேதமுகவுணர்சிகரு விஷயமாந்தன்மை மாயையிலின்று. ஆதலால் மாயையும் பாவரூபமாம்.

மாயை பிரகிருதி அவித்தை அஜ்ஞானம் என்பன பரியாயச்சொற்கள். அவித்தை அஜ்ஞானமென்னும சொற்களில் அகாரம் நிஷேத வாசகமாம, ஆதலால மாயையும் நிஷேத முகவுணர்ச்சிக்கு விஷய

மாகுதலான், அபாவரூபமே யுமென்று சொல்லுதல் வேண்டும். அங்ஙனமாயினும், அகாரத்திற்கு நிஷேதமாத்திரம் பொருளன்று; ஆனால் விரோதமுடையது, பேதமுடையது, அற்பமென்பனவும் அகாரதத்தின் பொருளாம. எங்ஙனம்: அதர்மமென்னும் சொல்லில் அகாரத்திறகு விரோதமுடையது பொருளாம். தர்ம விரோதியினை அதர்மமென்பர். அப்பிராமணன் அநாசாரியனென்னுமிடத்து அகாரத்திற்குப் பேத முடையது பொருளாம். பிராமணனின் வேறுனவன் ஆசாரியத்தன்மைக் குரியவனல்லனென்பது வாக்கியத்தின் பொருளாம. அதுதரை (உதரமிலி) தேவதத்தன் கன்னிகையென்னுமிடத்து அகாரத்திற்கு அற்ப மென்பது பொருள். அற்ப உதரமுடையவள் தேவதத்தன் கன்னிகையென்பது வாக்கியத்தின் பொருள்.எங்ஙனமஇத்துணைத்தானங்களில் அகாரத்திற்கு நிஷேதப்பொரு ளின்றே, அங்ஙனமே அவித்தை யஞ்ஞான மென்னும் சொற்களிலும் அகாரத்திற்கு நிஷேதப் பொரு ளின்று; ஆனால் விரோதிப் பொருளுளது. மாயைக்கு ஞானத்தோடு கெடுக்கப்படுவது கெடுப்பதெனுக் தன்மை விரோதமுளது; அதனால், அதனை அஞ்ஞானமென்கின்றனர். மாயைகெடுக்கப்படுவது,ஞானம் கெடுப்பது. வேதாந்தவாக்கியத்தாற்றேன்றியபிரஹ்மாகாரவிருத்தியினை வித்தையென்பர். அது மாயையின் விரோதியாகலின் மாயையை அவித்தை யென்பர். மாயை, அஞ்ஞானம், அவித்தை யென்னுஞ் சொற்களின் வாசகியமாயினும், அகாரத்திற்கு விரோதமுடைய தென்பது பொருளாகுதலான் அது பாவரூபமாம். பாவரூபமும் பிரஹ்மத்தைப்போலப் பரமார்த்த சத்துரூபமன்று. ஆனால் விதி மூகவுணர்ச்சிக்கு விஷயமாகுதலான் வியாவகாரிக சத்து ரூபமாம்.

பிராகபாவத்தின் இலக்கணத்தில் அபாவமென்னும் பதம் இராவிடின் மாயையில் இலக்கணத்தின் அதிவியாப்தி புண்டாகின்றது. ஏனெனின், மாயை அநாதியும் ஸாந்தமுமாம. ஆதலால் அநாதி ஸாந்தமாகிய அபாவ மெதுவோ, அது பிராகபாவ மெனப்படுகின்றது. ஸாதி அநந்த அபாவ மெதுவோ அது பிரத்துவம்சாபாவ மெனப்படும். சூட முதலியவற்றின் துவம்சம் தண்டமுதலியவற்று ணுண்டாகின்றது. ஆதலால் ஸாதியாம். அநந்தம் அத்தன் கண் டிக்கியோடு கூடியதாகவே யிருக்கின்றது. அநந்த அபாவம பிரத்துவம்சாபாவ்மா மெனின் அத்தியந்தாபாவத்தில் அதி

வியாப்தி யுண்டாம். ஆதலால் பிரத்துவம்சாபாவத்தின் இலக்கணத்தில் ஸாதிபெனக் கூறல் வேண்டும். அத்தியந்தாபாவம் ஸாதியன்று; ஆனால் அநாதியாம். ஸாதியபாவத்தினைப் பிரத்துவம்சாபாவமெனின் ஸாதியபாவம சாமயிகாபாவமுமாம. ஆண்டு அதிவியாப்தி யுண்டாம. சாமயிகாபாவம் அநந்த மன்று; ஸாந்தமாம. ஸாதி யநந்தத்தினைப் பிரத்துவம்சாபாவ மெனின் மோக்ஷத்தில் அதிவியாப்தி யுண்டாம். ஏனெனின் மோக்ஷம உண்டாகுதலால் ஸாதியும,முக்தனுக்கு மீண்டுஞ சமசார முண்டாகாமையின அநந்த முமாம. ஆனால மோக்ஷம பாவ ரூபமாம; அபாவரூப மன்று. ஆதலால் பிரத்துவமசாபாவதத தினிலக்கணத்தில் அபாவ மென்பதைக் கூறவேண்டும். அஞ்ஞானமும் அதன் காரியமும நிவிருத்தியாதலே மோக்ஷ மென்பா. நிவிருத்தி யென்பது துவமசதத்திற்காமாகலின் மோக்ஷமும் அபாவ ரூபமாம. ஆகலின பிரதத்துவமசாபாவதத தினிலகணதத்தில அபாவ பதத்தைச சோக்காவிடினும் மோக்ஷதத்தில் அதிவியாப்தியாதி தோஷ மினறு. ஏனெனின், இலக்கிய மல்லாததன்கண்ணும் இலக்கணஞ்செல்லுதலே அதிவியாப்தி யென்பர். அஞ்ஞான தற்காரியங்களின் துவமசம மோக்ஷதத்திறகு இலகுயித்தன்மையாதல் வெளிப்படையேயாம. சகல நாசமும் துவம்சாபாவத்தினது இலக்கணதத்தின் இலக்கியமாம. சகல நாசங்களுக்கும் உள்ளடங்கியே காரியதகேது அஞ்ஞானம நிகித்தல் வடிவினதாகிய மோக்ஷம இருகின்றது. என்றாலும கற்பிததத்தின் நிவிருத்தி அதிஷ்டான வடிவமாம. அஞ்ஞானமும அதன் காரியமும் கற்பிதமா மாகலின் அவறறின் நிவிருதி அதிஷ்டானப் பிரஹ்ம வடிவமாம். ஆதலால் அபாவரூபம மோக்ஷ மன்று. ஆனால் பிரஹ்மரூபமா யிருதலால் மோக்ஷம பாவ ரூபமாம். அதன்கண் துவமசத்தி னிலக்கணஞ் செல்லுமாயின் அதிவியாப்தி யுண்டாம். ஆதலால் ஸாதி யீநதமாகிய அபாவ மெதுவோ அது பிரத்துவம்சாபாவ மெனப்படுகின்றது. உற்பத்தி நாசமுடைய அபாவ மெதுவோ அது சாமயிகாபாவ மெனப்படுகின்றது. யாண்டு ஒருகாலத்துப் பதார்த்த மூலதாய் ஒருகாலத்து இலதாகின்றதோ, ஆண்டுப் பதாரதத சூனிய காலதது அப்பதார்த்தத்தின் சாமயிகாபாவ முண்டாகின்றது. எங்ஙனம: பூகல முதலியவற்றிற் குட முதலியன ஓர் காலதது ளளவாய் ஓர காலதது லில வாகின்றன. ஆண்டுக் கட சூனியகால சமபநதமுடைய பூகல முத

லியவற்றில் கட முதலியவற்றின் சாமயிகாபாவ மிருக்கின்றது. சமய விசேஷத்தி லுண்டாய்ச் சமய விசேஷத்தில் நஷ்டமாவ தெதுவோ அது சாமயிகாபாவ மெனப்படுகின்றது. பூதலத்தி னின்றுங் கடதத்தை வேறிடத்திற் கொண்டுபோயின, அப்போது கடத்தி னபாவம பூதலத்திலுண்டாகின்றது. அப்பூதலத்திற்றானே கட்டத்தைக் கொண்டுவரின், அப்போது கடத்தின் அபாவம் பூதலத்தில்நஷ்டமாகின்றது. இவ்வாற்றாற்சாமயிகாபாவமஉற்பத்திகாச முடையதாம். உற்பத்தியுடைய அபாவம் பிரத்துவம்சாபாவமாகின்றமையால்ஆண்டுஅதிவியாப்தி நீக்குதற்பொருட்டுச சாமயிகாபாவத்தின் இலக்கணத்தில் நாச மெனனும பதஞ சொல்லப்பட்டிருக்கின்றது. பிரதத்துவமசாபாவமும உறபத்தியுடைய அபாவமாயினும நாசமுடைய தன்று. ஆதலால நாசமென்னும பதத்தைக்கூறின் அதிவியாப்தி தோஷமின்று. நாசமுடைய அபாவத்தைச் சாமயிகாபாவ மெனின் பிராகபாவத்தில அதிவியாப்தி யுண்டாகும். ஆதலால் சாமயிகாபாவ,த்தினிலக்கணத்தில் உற்பத்தியென்னும பதம சொல்லப்பட்டிருக்கின்றது. இலக்கணத்தில் உற்பத்தியென்னும பதத்தின்பிரவேசத்தாலபிராகபாவத்தின் அதிவியாப்தியின்று. ஏனெனின, பிராகபாவத்தின் நாசமோ வண்டாகின்றது. ஆனால் அது அநாதியாயிருத்தலின் உறபத்தியாகிறதில்லை. சாமயிகாபாவத்தினிலக்கணத்தில் அபாவமென்னும சொலலிசை சேர்க்காது, உற்பத்தி நாசமுடையதனிச சாமயிகாபாவ மெனக் கூறின், கட முதலியவற்றில் அதிவியாப்தி யுண்டாம். ஏனெனின், கட முதலியனவும பூத பௌதிகமான அநேக பதார்த்தங்களும் உற்பத்தி நாசமுடையனவாயிருக்கின்றன. அபாவ பதத்தின் பிரவேசத்தால் கட முதலியவற்றிறகுப் பாவ ரூபத்துவம இருகதலான், அவற்றில் சாமயிகா பாவதத்தினது,இலகூணத்தின் அதிவியாப்தியின்று. இவ்வாறாறு பூதல முதலியவற்றில கட முதலியவற்றின் உற்பத்தி நாசமுடைய அபாவம சாமயிகாபாவமாம. அந்நியோந்நியாபாவதத்திறகு வேறாய் உற்பத்திநாசமின்றிய அபாவமெதுவோ, அது அத்தியந்தாபாவ மெனப்படும. யாண்டு எக்காலத்திலும் எப்பதார்தத மிருப்பதில்லையோ, ஆண்டு அபபதார்தத்தின் அத்தியந்தாபாவம் சொல்லப்படுகின்றது. எங்ஙனம்: வாயுவில் உருவம் எக்காலத்து மிருப்பதில்லை; ஆண்டு உருவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. அங்ஙனமே கநதமும் வாயுவில் எப்போது மிருப்ப

தில்லை. ஆதலால் வாயுவில் கந்தத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. சிநேக குணம் நீர் மாத்திரத்தி னிருக்கின்றது. பிறவற்றில் எப்போது மிருப்பதில்லை. ஆதலால் ஜல மல்லாத வேறு பதார்த்தங்களில் சிநேகத்தின் அத்தியந்தாபாவம் இருக்கின்றது. ஆதமாவினிடத்து உருவம் இரசம் கந்தம பரிசம சப்த மென்பன என்று மிருப்ப தில்லை. ஆதலால் உருவ முதலியவற்றின் அத்தியந்தாபாவம் ஆத்மாவிலிருக்கின்றது. பிருதிவியினும் ஜலத்தினும் இரசம் இருக்கின்றது. பிறவற்றில் என்று மிருப்பதில்லை. ஆதலால் பிருதிவி ஜலங்களுக்கு வேறுய பதார்த்தங்களில் இரசத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. பிருதிவித்தன்மைச சாதி பிருதிவிமாத்திரத்தி னிருகின்றது. ஜலமுதலியவற்றில் என்று மிருப்பதில்லை. ஆதலால் ஜலமுதலியவற்றில்பிருதிவித்தன்மையின்அத்தியந்தாபாவ மிருக்கின்றது. பிராமணனுக்கு வேறுய சூத்திரியா முதலியோரிடத்துப்பிராமணத்தன்மையென்றுமிருப்பதில்லை. ஆதலால் சூத்திரியர்முதலியோரிடத்துப்பிராமணத்தன்மையின் அத்தியந்தாபாவ மிருக்கின்றது. ஆகாயம காலம திக்கு ஆத்மாவென்பனவியாபகம். அவற்றில் என்றும் கிரியை யுண்டாகிற தில்லை. ஆதலால் ஆகாய முதலியவற்றில்கிரியையின் அத்தியந்தாபாவமிருக்கின்றது. பிருதிவி ஜலம் தேயு வாயு மனமென்பவற்றில் கிரியை யுண்டாகின்றது. ஓர்காலத்துக் கிரியையின் அபாவம உண்டாகின்றது. ஆதலால் பிருதிவி முதலியன கிரியை யின்றியவாருங் காலத்துப் பிருதிவி ஜலம் தேயு வாயு மனது என்பவற்றில் கிரியையின் அத்தியந்தாபாவமில்லை; அங்ஙனமே சாமயிகாபாவமு மில்லை. ஏனெனின், சாமயிகாபாவம திரவிய மாத்திரத்திற் குண்டாகின்றது. கிரியைக்குச சாமயிகாபாவம சமபவியாது என்பதை மேறகூறுவாம். ஆதலாற் சாமயிகாபாவமும் இலை. ஆனுல பிருதிவி முதலிய வைநதினும கிரியையின பிரகபாவமும துவம்லாபாவமு மிருக்கின்றன.

சூஅ. நான்கு சம்லர்க்காபாவங்களுக்கும்
பிரதியோகியோடு விரோதமும், அந்நியோந்
நியாபாவத்திற்கு அவிரோதமு முண்டெனல்.

இவ்வாற்றுற் பூதல முதலியவற்றில் யாண்டுக் கடமுதலியன ஓர் காலத்து இருநது, ஓர் காலதகிலிருப்ப தில்லையோ, ஆண்டு

'மூவுவதும் சாமயிகாபாவமாம்; அத்தியந்தாபாவ மின்று. ஏனெனின், அபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதமிருக்கின்றது. யாண்டுப் பிரதியோகி யுளதோ, ஆண்டு அபாவம் இருப்பதில்லை. ஆனல் அபாவதத்தின் அபாவம் இருக்கின்றது. யாண்டுப் பூதல முதலியவற்றில் ஓர் காலத்திற் கடமுதலியன விருந்து ஓர் காலத்தில் இருப்பதில்லையோ, ஆண்டு அத்தியந்தாபாவம் அங்கிகரிக்கின், அத்தியந்தாபாவம் நித்தியமா மாகலின் கட காலத்திலும் கடத்தின் அத்தியந்தாபாவம் இருத்தல் நேருதலான் அத்தியந்தாபாவத்திற்குத் தனது பிரதியோகியோடு விரோத மின்மையுண்டாகும். ஆதலாற் பூதல முதலியவற்றிற் கட முதலியவற்றின் அத்தியந்தா பாவம் சமபவியாது. எங்ஙனம்: கடத்தின் உற்பத்திக்கு முன் கபாலத்தில் கடத்தின் பிராகபாவம் இருக்கின்றது. கட மாகிய பிரதியோகி யுண்டாகவே கபாலத்தில் கடத்தின் பிராக பாவமிருப்பதில்லை; அதன் நாச முண்டாய்விடுகின்றது. ஆதலால் பிராகபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதம் இருக்கின்றது. அங்ஙனமே கடத்தின் பிரத்தொம்ஸாபாவம் இருக்குங் காலத்துக் கடமிருப்பதில்லை, கடமிருக்குமளவும் கபாலத்திற் கடத்தின் பிரத்துவமஸாபாவம உண்டாகிற்தில்லை. ஆதலால் பிரத்துவம்ஸாபாவத்திற்கும் பிரதியோகியோடு விரோதமிருத்தல் வெளிப்படையாம். அங்ஙனமே பூதலமுதலியவற்றிற் சையோக சம்பந்தத்தால் கடமுதலியன விருக்குமளவும் பூதல முதலியவற்றிற் கடமுதலியவற்றின் சாமயிகாபாவ மிருப்பதில்லை; ஆனல் எதுவரையில் கட முதலிய பிரதியோகி பூதல முதலியவற்றி லில்லையோ, அதுவரையில் சாமயிகாபாவ மிருக்கின்றது. கடமுதலிய பிரதியோகி வந்து விடுமாயின், அப்போது சாமயிகாபாவத்திற்கு நாச முண்டாகின்றது. வந்த கடத்தை யெடுத்துக்கொள்ளின், அப்போது சாமயிகாபாவம் மீண்டு முண்டாகின்றது. 'இதனுற்றான் சாமயிகாபாவத்திற்கு உற்பத்திநாசங்களே யங்கிகரித்திருக்கினறனர். இவ்வாற்றான் சாமயிகாபாவத்திறகும பிரதியோகியோடு விரோதம் இருப்பது வெளிப்படையாம. எங்ஙனமபிராகபாவ முதலியவற்றிற்குப் பிரதியோகியோடு விரோத மிருக்கின்றதோ, அங்ஙனமே அத்தியந்தாபாவத்திற்கும் பிரதியோகியோடு விரோதம் சொல்லுதல் வேண்டும். சகல அபாவங்களுக்கும் பிரதியோகியோடு விரோத மிருக்கின், எந்தக்காலத்திற் பூதலத்திற் கடம் வைக்கப்பட்டதாகின்ற

தோ, அந்தக் காலத்தில் கடத்தின் அந்நியோந்நியாபாவம் பூதலத்தி லிருக்கலாகாது; கட முடைய பூதலத்தில் கடத்தின் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது. ஏனெனின், பேதத்தினே அந்நியோந்நியாபாவ மென்பர். அதனைத் தன்னின் வேறுயதன்மை யென்றும், பின்னதந் தன்மை யென்றும், வேற்றுமை யென்றும் கூறுவர். கடமுடைய பூதலமு கட சொரூப மன்று;, கடத்தின் வேருய தெனப்படும். இவ்வாற்றுற் கடமுடைய பூதலத்திற் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. ஆதலால் கடத்தின் அந்நியோந்நியாபாவத்திற்குக் கட ரூபப் பிரதியோகியோடு விரோதம் இல்லே. அங்ஙனமே பட முதலியவற்றின் அந்நியோந்நியாபாவத்திற்குப் பட முதலியவற்றேடு விரோத மில்லே. ஆதலால் எல்லா அபாவங்கட்கும் பிரதியோகியோடு விரோத மிருப்பதாகக் கூறுதல் சம்பவியாது. ஆனுல் சில அபாவங்கட்குப் பிரதியோகியோடு விரோதமிருக்கின்றது; சிலவற்றிற்கு விரோதமில்லே.

பிராகபாவ முதலிய திருஷ்டாந்தத்தால் அத்தியந்தா பாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதம் சாதிக்கின், அப்போது அந்நியோந்நியா பாவ திருஷ்டாந்தத்தால் அத்தியந்தா பாவத்திற்குப் பிரதியோகியோடு அவிரோதமும சித்திக்கும். ஆதலால் கடத்தின் அந்நியோந்நியாபாவம்போலக் கடத்தின் அத்தியந்தாபாவமும் கடத்தின் அதிகரணத்தில் சம்பவிக்கின்றது.

என்றலும் கடத்தின் அதிகரணத்தில் கடத்தின் அத்தியந்தா பாவம் சம்பவிக்கிறதில்லே. ஏனெனின், அபாவம் இருவகைத்தாம்:— ஒன்று அந்நியோந்நியாபாவம், மற்றென்று சமசர்க்காபாவம். சம்சர்க்காபாவம் நால்வகைப்படும். இவ்வாற்றன ஐவகையபாவ முளவ. அவற்றுள், அபாவத்தன்மைத் தாமம எல்லாவற்றினும் சமானமாம். நிஷேதமுக வுணர்சசிக்கு விஷயமாக தன்மையும் எல்லா அபாவங்களிலும் சமானமா யிருக்கின்றது. என்றலும் அந்நியோந்நியாபாவத்தினும் நால்வகைச சமசாக்காபாவத்தில் வேற்றுமை அநேக விதமாயுளது. எந்தவாக்கியத்தில் பிரதியோகி அதியோகிகளே யறிவிக்குமபின்னவிபக்திகளே(வெவ்வேறுவேற்றுமைகளே) யுடைய பதங்க ளுளவோ, அவ்வாக்கியத்தால் சம்சர்க்காபாவத்தின் பிரதீதி யுண்டாகின்றது. எங்ஙனம: உற்பத்திக்கு முன் கபாலத்தில் கட மில்லேயென்னும வாக்கியத்தில் அதியோகி

யை யறிவிக்கும சுபால மெனனும பதம ஏழாம வேற்றுமை யீற்றதாம். பிரதியோகியை யறிவிக்கும் கட மென்னும் பதம் மூதல் வேற்றுமை யீற்றதாம். ஆண்டுப் பிராகபாவத்தின் பிரதீதி யுண்டாகின்றது. அங்ஙனமே தடி முதலியவற்றுல் கடத்தின் காட்சியின்மை யுண்டாகின்றது. அப்போது அவ்வாக்கியத்தாற் ருனே கடத் துவம்ஸத்தின் தோற்ற முண்டாகிறது. வாயுவில் உருவமில்லையென்னும் வாக்கியத்தான் வாயுவில் உருவத்தினது அத்தியந்தாபாவத்தின் தோற்ற முண்டாகின்றது. ஆண்டும் அது யோகியை யறிவிக்கும் வாயுவென்னும் பதம் ஏழாம் வேற்றுமை யீற்றதாம். பிரதியோகியை யறிவிக்கும் உருவபதம் முதல்வேற்று மை யீற்றதாம். அங்ஙனமே பூதலத்திற் கட மில்லை யென்னும் வாக்கியத்தாற் ருேன்றிய ஞானத்திற்கு விஷயம் சாமயிகாபாவ மாம். ஆண்டும் அதுயோகியை யறிவிக்கும பூதலபதம் ஏழாம் வேற்றுமை யீற்றகாம்; பிரதியோகியை யறிவிக்கும் ரூப பதம் முதல் வேற்றுமை யீற்றதாம். பூதலம் கடமன்றென்னும் வாக்கிய த்தால் பூதலத்திற் கடத்தின் அந்தியோந்நியாபாவம் தோற்று கின்றது. ஆண்டு அதுயோகியை யறிவிக்கும் பூதலபதமும் பிரதி யோகியை யறிவிக்கும் கடபதமுமாகிய இரண்டும் மூதல்வேற்று மை யீற்றவாம. இவ்வாற்ருன் பின்ன வேற்றுமை முடிபினை யுடைய பதங்களமைந்த வாக்கியத்தாற் ருேன்றும் உணர்ச்சிக்கு விஷயமாகுதன்மை சமசர்க்காபாவத்தி லுளது; அந்தியோந்நியா பாவத்திலில்லை. சமான வேற்றுமை யமைந்தினை யுடைய பதங்க ளமைந்த வாக்கியத்தாறேன்றிய வுணர்வுக்கு விடயமாந்தன்மை அந்தியோந்நியா பாவத்துண்டு, சம்சர்க்காபாவத்தி லில்லை. இவ் வாற்ருன் அந்தியோந்நியாபாவதத்தினும விலக்ஷணை சுபாவத்தினை யுடைய நால்வகைச் சம்சர்க்காபாவ மூள. ஆதலால் பிராகபாவ பிரத்தொம்மாபாவங்களின் திருஷ்டாந்தத்தால் அத்தியந்தாபாவ த்திற்குப் பிரதியோகியோடு விரோதமே பெறப்பட்டதாகின்றது; விலக்ஷண சுபாவமுடைய அந்தியோந்நியாபாவத்தின் திருஷ்டாந்த த்தால் பிரதியோகியோடு விரோத மின்மை பெறப்படுவதில்லை. சம்சர்க்கா பாவத்திற்கு அந்தியோந்நியா பாவத்தோடு மற்றும் வேற்றுமை யுண்டு.

## பாவங்கட்கும் ஒன்றற்கொன்றுள்ள விரோதமும், அந்நியோந்நியாபாவத்திற்கு அவற்றோடுள்ள அவிரோதமும்.

நால்வகைச் சம்சர்க்காபாவங்கட்கும் ஒன்றற்கொன்று விரோதமுண்டு. ஒரு சம்சாக்காபாவதத்தின் அதிகரணத்தில் மற்றச சம்சாக்காபாவங்கள் இரா. எங்ஙனம : கபாலத்தில் கடத்தின் உற்பத்திக்கு முன் கடத்தின் பிராகபாவமிருகிலறது. ஆண்டுக் கடத்தின் துவம்ஸமாவது, அத்தியநதாபாவமாவது, சாமயிகாபாவமாவது இருப்பதில்லை. அங்ஙனமே கபாலதில் கடததின் துவம்ஸமுண்டாகுங்காலத்துப் பிராகபாவமுதலிய மூன்றுசமசாக்காபாவங்களுமிருப்பதில்லை. கடத்தின அநியோநியாபாவம் கபாலதில் என்றுமிருக்கின்றது. அங்ஙனமே பூகலதில் கடத்தின் சாமயிகாபாவ மிருக்கின்றது. ஆண்டும் கடததின் பிராகபாவம், பிரத்துவம் சாபாவம, அநதியநதா பாவமென்னும மூன்று மிருப்பதில்லை. கடததின் அநியோநியாபாவம் ஆண்டும் இருக்கின்றது. அங்ஙவனமே வாயுவில் உருவதத்தின் அத்தியநதாபாவம் இருக்கின்றது. ஆண்டு உருவதத்தின் பிராகபாவ்மம, பிரத்துவம்ஸாபாவம, சாமயிகாபாவமென்னும மூன்றும இருபபதிலலை. உருவத்தின் அநியோநியாபாவம் வாயுவிலிருக்கின்றது. இவ்வாற்றுன் நால்வகைச சமசர்க்காபாவங்கட்கும் ஒன்றற் கொன்று விரோதம உண்டு. அநியோநியாபாவதத்திற்கு அவற்றோடு விரோத மிலலை. எங்ஙனம் அந்நியோநியாபாவத்திறகு மறற அபாவங்களோடு விரோதமில்லாதிருக்கினும் பிராகபாவ முதலியவற்றிறகு ஒன்றற் கொன்று விரோதமின்மை பெறப்படுவதில்லையோ, அங்ஙனமே அந்நியோநியாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோதமின்மையைக் காணுதலான் எநதச சமசர்க்காபாவத்திறகும பிரதியோகியோடு விரோதமின்மை பெறப்படுவதிலலை.

## எஎ. பிராசீனமதத்தில் அபாவங்களுக்கு ஒன்றற் கொன்றும் பிரதியோகியோடு முள்ள விரோதா விரோதங்களை விரிவாய்க் கூறுதல்.

இனி அபாவங்கட் கொன்றற் கொன்றும பிரதியோகியோடு முள்ள விரோதாவிரோதங்களை விஸ்தாரமாய்க் கூறுவாம்:— பிரதி-

யோகியின் உபாதான காரணத்தில் பிராகபாவப் பிரத்துவம்ஸாபா வங்களிரண்டுமுள. எங்ஙனம்: கடத்தின் உபாதான காரணமாகிய கபாலத்தில் கடப் பிராகபாவம் கடத்தின் உற்பத்திக்கு முன்னுளது. தண்ட முதலியவற்றில் கடத்தையுடைக்கின், அப்போது கட தத்தின் பிரத்துவம்ஸாபாவம அக்கபாலத்தின்கண்ணேயுளது. ஆத லால் பிராகபாவப் பிரத்துவமஸாபாவங்களுக் கொன்றற்கொன்று விரோதம் கூறுதல் பொருந்தாது. அங்ஙனமாயினும ஒரு காலத் தில் இரண்டு மிரா; ஆனல் வெவ்வேறு காலத்திலிருக்கும்.ஆதலால் ஒரு காலதத்தில் உடனிருத்தலின்மை வடிவினதாகிய விரோதம் பிராகபாவப் பிரதத்துவம்ஸாபாவங்கட்கு ஒன்றற் கொன்றுளது. அங்ஙனமே அத்தியந்தாபாவத்திற்கும் அவற்றோடு விரோதம் அங் கீகரித்தல் வேண்டும். அந்தியோந்நியாபாவத்திற்கு எவ்வபாவ த்தோடும் விரோத மில்லை. ஏனெனின், கபாலத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது; ஆண்டுக் கடத்தின் அநந்தியோந்நியா பாவமும் இருக்கின்றது. கபாலதத்தில் கடத்தின் பிரத்தொம்ஸா பாவமுள்ள காலத்தும் கடத்தின் அநந்தியோந்நியாபாவம் இருக் கின்றது. தந்துவில் கடத்தின் அத்தியந்தாபாவம இருக்குமிடத் தும் கடத்தின் அந்தியோந்நியாபாவம் இருக்கின்றது. பூதலதத்தில் கடத்தின் சாமயிகாபாவம் இருக்குங்காலத்தும ஆண்டுக் கடத் தின் அநந்தியோந்நியாபாவ மிருக்கின்றது. இவ்வாற்றுன் அந்தியோ ந்நியாபாவத்திற்கு எவ்வபாவதோடும விரோதமில்லை. அங்ஙன மாயினும் சம்சர்க்காபாவத்திற்கு இது சுபாவமாம்:— நால்வகைச் சம்சர்க்காபாவங்களில் ஒரு சம்சர்க்காபாவம் ஒரு காலத்திருக் கும்; மற்றைய இரா. எங்ஙனம்: கபாலத்தில் உற்பத்திக்கு முன் கடத்தின் பிராகடாவ மிருக்கின்றது. அக்காலத்தில் கடத்தின் பிரத்துவம்ஸாபாவ மிருப்பதில்லை: கடத்தின் பிரத்துவம் ஸாபாவ மிருக்குமாயின், அப்போது பிராகபாவ மிருப்பதில்லை. கபாலத் தில் கடத்தின் சாமயிகாபாவமும் அத்தியந்தாபாவமும் என்று மிருப்பதில்லை. கபாலத்தில் கடத்தின் பிராகபாவமும் பிரத் துவமஸாபாவமு மிருக்குங்காலத்துப் படத்தின் அத்தியந்தா பாவமு மிருக்கின்றது. ஆயினும், ஒரு பிரதியோகியினியுடைய இரண்டு சம்சர்க்காபாவ மிருப்பதில்லை யென்பது நியமம். வேறு பிரதியோகியினியுடைய வேறு சம்சர்க்காபாவம் இருத்தற்கு விரோதமில்லை. அங்ஙனமே பூதல முதலியவற்றில் கடத்தின் சாம

யிகாபாவ மிருக்கின், ஆண்டுக், கடத்தின், அத்தியந்தாபாவ மும், பிராகபாவமும், பிரத்துவம்ஸாபாவமு மிருப்பதில்லை. வாயு வில் உருவத்தின் அத்தியந்தாபாவ மிருக்கின், ஆண்டு உருவத்தின் பிராகபாவமுதலியன இருப்பதில்லை.

சையோக சமபந்தத்தால் ஓர் காலத்துப் பூதல முதலியவற் றிற் கட மிருக்கின்றது. சமவாய சம்பந்தத்தாற் கபாலமல்லாத பிற பதார்த்தங்களிற் கடம் என்றும இராது. ஆதலால் சமவாய சமபந்தத்தால் கடத்தின் அதந்தியபந்தாபாவம பூதல முதலியவறறி லிருக்கின்றது. சையோக சமபந்தத்தால் கடந்தின் சாமயிகா பாவ மிருக்கின்றது. ஆதலால் சாமயிகாபாவ அதந்தியந்தாபாவங் கடகு ஒன்றற்கொன்று விரோதம சமபவியாது. அங்ஙனமாயி னும் கடத்தின் சையோக சமபந்தத்தால் வரைந்து கொள்ளப் பட்ட சாமயிகாபாவந்திற்குக் கடத்தின் சையோகசமபந்தத்தால் வரைந்து கொள்ளப்படட அந்தியந்தாபாவந்தோடு விரோதம் உளது. சமவாய சமபந்தத்தால வரைந்து கொள்ளப்பட்ட அத்தி யந்தாபாவந்தோடு விரோதமில்லை. இதனால் இரகியமம பெறப் பட்டதாயிற்று:—எவ்வதிகரணத்தில் எகாலதில் எப்பதார்த்த த்திற்கு எசசம்பந்தத்தால் ஒருசம்சர்காபாவ மூளதாகின்ற தோ, அவ்வதிகரணத்தில அக்காலதில அப்பதார்த்தத்திற்கு அச்சம்பந்தத்தால் வேறு சம்சர்காபாவம உண்டாவதில்லை; வேறு சம்பந்தத்தால் உண்டாகின்றது. எச்சம்பந்தத்தால் எப் பதார்த்தம யாண்டு இருக்க வில்லையோ, ஆண்டு அப்பதார்த்தத் திற்கு அதன் சம்பந்தந்தாலீ வரைந்து கொள்ளப்படும் அபாவம் சொல்லப்படுகின்றது. பூதலதிற் சையோக சம்பந்தத்தால் ஓர் காலத்துக் கடமூளதாகின்றது ஆதலால் சையோகசம்பந்தத்தால் வரைந்துகொள்ளப்பட்ட கடத்தின் அந்தியந்தாபாவம் பூதலத்தில் என்று மில்லை. ஆனால் பூதலித்தன்மைச் சாதியிலும, பூதலத்தின் உருவமுதலிய குணங்களிலும் சையோக சம்பந்தத்தால் கடம் என்றும் இருப்பதில்லை. எனெனின், இரண்டு திரவியங்கட்குச் சையோகமுண்டாம; திரவியத்திற்கும சாதிக்கும், அங்ஙனமே திர வியத்திற்கும் குணத்திற்கும சையோக முண்டாவதில்லை. ஆதலாற் பூதலத்தன்மையிலும், பூதலத்தின் உருவ முதலிய குணங்களிலும் கடத்தின் சையோக சமபந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின்றது. பூதலத்தன்மையிலும் அங்ஙனமே

உருவமுதலிய குணங்களிலும், சமவாய சம்பந்தத்தாலும கடம ஒருகாலும் இருப்பதில்லை. எனெனின்:—

காரியத் திரவியத்திற்குத் தனது உபாதான காரணத்தில் சமவாயசம்பந்த முளதாகின்றது; பிறவற்றிலிருப்பதில்லை. குணத் தின் சமவாயம் குணியிலிருக்கும். ஜாதியின் சமவாயம் கிரியை யுடையதன்கண்ணிருக்கும். வேறிடங்களில் எங்கும சமவாய சம்பந்தமிராது. பரமாணுமுதலிய நித்தியத் திரவியங்களிலும் விசேஷ பதார்த்தத்தின் சமவாயம் கையாயிகர் அங்கீகரிக்கினும், விசேஷ பதார்த்தம அப்பிரசித்தமாம். அதனைக்கற்பித்தல் நிஷ்பிர யோஜனமாம். இஃது அத்வைத நூல்களில் வெளிப்படை. தீர்த்தி காத சிரோமணி பட்டாசாரியரும விசேஷ பதார்த்தத்தின் கண்டன மே கூறியிருக்கின்றார். ஆதலால் உபாதான காரணதனினும் குணி யினும் வியக்தியினும கிரியை யுடையதன்கண்ணுமே முறையே காரியத திரவியம் குணம ஜாதி கிரியை யென்பவற்றின் சம வாய சமபந்தமிருக்கும. வேறெதற்கும எதன்கண்ணும் சமவாய சம்பந்தமின்று. இவ்வாற்றால பூதலதனினும பூதலத்தின் உருவ முதலிய குணங்களிலும கடதனின் சமவாய சமபந்தம் என்னும் இருப்பதில்லை. ஆனால் கபாலத்திற்குக் கடத்தின் சமவாயமிருக்கின் றது. ஆதலால் கடத்தின் உபாதான காரணமாகிய கபாலத்தை விட்டுப் பிறவிடங்களில முழுவதும கடத்தின் சமவாய சம்பந்தத் தான் வரைநது கொள்ளப்பட்ட அத்தியநதாபாவ மிருக்கின்றது. கடத்தின் வேறு சமசர்க்காபாவம அவ்வத்தியநதா பாவததோ டிருப்பதில்லை. எனெனின், கடததின் பிராகபாவமும் பிரததொம் சாபாவமும கபாலமின்றிய பிறவிடங்களில் இருபபதில்லை. சாமயி காபாவம ஆண்டிருக்கும. யாண்டு ஓர காலததில் எசசம்பந்த ததால் பிரதியோகி யுளநாகின்றதோ, ஆண்டு ஓர சமபநதத்தால் எக்காலததில பிரதியோகி யிருப்பதில்லையோ, அக்காலத்து அதன் சமபநதததான் வரைநது கொளளப்படட அதநதியந்தாபாவமே உளதாகின்றது. கபாலமின்றிய பிற பதார்த்தங்களில் சமவாய சமபநதத்தான கடம என்னும் இருப்பா தில்லை. ஆதலால் கடத் தின் சமவாய சம்பநதத்தான் வரைநதுகொள்ளப்பட்ட அத்தியந தாபாவத்தின் அதிகரணததில் கடத்தின் சமவாய சமபநதததான் வரைநது கொள்ளப்பட்ட சாமயிகாபாவ மிருப்பதில்லை.

ஆராயுமிடத்துத் திரவியத்தினீ சமவாயசமீபந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் அப்பிரசித்த மாம்; திரவியத்தின் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமீமயிகாபாவமே பிரசித்தமாம். ஏனெனின், நித்தியத் திரவியமோ சமவாயசம்பந்தத்தான் எதனினு மிருப்பதில்லை.ஆதலால் நித்தியத் திரவியத்திற்குச சமவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமு மிருக்கின்றது. சமவாய சமபந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் நித்தியத் திரவியத்திற்கு ஓரிடத்து மில்லை. காரியத் திரவியத்திற்குச் சனது உபாதானகாரணத்தில் பிராகபாவம் அல்லது பிரத்துவமாபாவம் இருக்கும். ஆண்டுச சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமாவது சயவாயசம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமாவது இருப்பதில்லை. சனது உபாதான காரணத்தைவிட்டு அநிய பதார்த்தத்தில் சமவாய சமபந்தத்தால் காரியத் திரவியம் ஓர் காலத்திருந்து, ஓர காலத்திராதாயின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவ மூளதாம். உபாதான த்தின் வேருகியதில் காரியத் திரவியம் என்றும இராது. ஆதலால் உபாதானத்தின் வேறிய பதார்த்தங்களில் காரியத் திரவியத்திற்குச் சமவாய சம்பந்தத்தான் வரைநதுகொள்ளப்பட்ட சாம்யிகாபாவம் சம்பவியாது. ஆனுல் ஆண்டும சமவாய சம்பந்தசதான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே காரியத் திரவியதிற் காம். இவ்வாற்றுன் சமவாய சம்பந்தாவசின்ன சாமயிகாபாவம் திரவியத்திற்கு அப்பிரசிததமாம்.

குணக்கிரியைகளும் சமவாய சமபநதத்தான் எநதத் திரவிய நதினுண்டாய் நல்லுமாய் விடுகின்றனவோ, அத்திரவியத்தில் சமவாய சம்பநதத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் இருப்பதில்லை. ஆனுல் முதலிற் பிராகபாவமும பின்னர்ப் பிரத்துவம்சாபாவமுமுள. கடத்தின் குணக்கிரியைகள் சமவாய சமபந்தத்தால் அந்தியத் திரவியத்தில் என்றுமிரா. ஆண்டும் அவற்றின் சமவாய சம்பந்தாவச்சின்ன அத்தியந்தாபாவமுளது; சாமயிகாபாவமின்று. இவ்வாற்றுன் குணக்கிரியைகளுக்குமீ சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம்; அங்ஙனமே சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமும குணக் கிரியைகளுக்கு அப்பிரசித்த

மாம். ஏனெனின், "சையோக" சம்பந்தத்தான் குணக்கிரியைகள் ஓர காலத்திருந்து ஓர் காலத் தில்லாதிருக்குமாயின், சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்படும சாமயிகாபாவம் குணக் கிரியைகளுக் குளதாம. சையோக சமபந்ததான் குணக்கிரியை கள் எதனினும என்று மிருப்பதில்லை. ஆதலால் குணக்கிரியைக ளுக்குச் சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்படும் அத் தியந்தாபாவமே புளது. அவ்வத்தியந்தாபாவம எல்லாப் பதார்த் தங்களினு முளதாம. ஏனெனின், சையோக சம்பந்தத்தான் குண க்கிரியைகள் ஓர பதாததத்தி லிருக்குமாயின், அப்பதார்த்தத் தில சையோக சம்பந்ததான் வரைநதுகொள்ளப்பட்ட அத்தி யந்தாபாவம் குணக்கிரியைகளுக் கிராது. அச்சையோக சம்பந்தத் தான் குணக்கிரியைகளுக் காதார மொன்றும் இல்லை. ஆதலால் குணக்கிரியைகளின் சையோகசமபந்தத்தான் வரைந்துகொள்ள ப்படுமம அத்தியந்தாபாவம் கேவலாந்வயியாம். எதன் அபாவம் ஓரிடத்து மிருப்பதில்லையோ, அது கேலாந்வயி யெனப்படுகின்றது. முற்கூறிய அத்தியந்தாபாவம்முழுவதுமாம். அவ்வத்தியநதாபாவத் திற்கு அபாவம் ஓரிடத்து மிலலையாகலின் கேவலாந்நுவயி யெனப் படுகின்றது. இவ்வாற்றான் சமவாய சம்பநதத்தான் வரைந்து கொள்ளபபட்ட சாமயிகாபாவமும், சையோக சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவமும குணக்கிரியைகளுக்கு அப்பிரசித்தமாம்.

அங்ஙனமே ஜாதிக்கும் சாமயிகாபாவம் அப்பிரசித்தமாம். ஏனெனின், சையோக சமபந்தத்தாலோ ஜாதி எப்பதார்த்தத் திலும் என்று மிருப்பதில்லை. "ஆதலால் சகல பதார்த்தங்களினும் ஜாதியின் சையோக சமபந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியநதாபாவம் உளது; சாமயிகாபாவம இல்லை. அங்ஙனமே தனது ஆசிரயமாகிய வியக்தி எதுவோ, அதன்கண் சமவாய சம் பநதததான் ஜாதி எப்போதும் இருக்கின்றது. அந்த வியக்தியில் ஜாதியின் சமவாய சம்பந்தத்தான் ஒரு அபாவமும இருப்பதில்லை. எங்ஙனம் : கடத்தன்மைச் சாதி கடவியக்தியில் சமவாய சமபந்த த்தா லிருக்கின்றது. ஆண்டுக் கடத்தன்மையின் அத்தியந்தா பாவ சாமயிகாபாவங்கள் அல்லது பிராகபாவமும அங்ஙனமே துவம்ஸாபாவமும் இருப்பதில்லை. ஏனெனின், பிராகபாவப் பிர த்துவம்சாபாவங்களோ அநித்தியக்கினவாம். கடத்தன்மை நித்தி

யம்; அதற்குப் பிராகபாவப் பிரத்துவம்ஸாபாவங்கள் சம்பவியா. யாண்டுப் பிரதியோகி என்று மிராதோ, ஆனுல் அத்தியந்தாபாவ மிருக்கும். யாண்டுப் பிரதியோகி ஓர் காலதிருந்து ஓர்காலதிரு ப்பதிலலியோ, ஆண்டுச் சாமயிகாபாவ மூளதாம. கடத்தில் கீட தன்மை என்னும் சமவாய சம்பந்தததா லிருக்கின்றது. ஆத லால் கடத்தில் கடத்தன்மையின் சமவாய சமபநதத்தான் வரை ந்துகொள்ளப்பட்ட அத்தியநதாபாவமும், சமவாய சமபந்தா வச்சின்ன சாமயிகாபாவமும சமபவியா. அங்ஙனமே கடததின் வேறுன கடத்தன்மைக் காதாரமாகாத எல்லாப பட முதலிய வற்றிலும் கடத்தன்மைச சாதி சமவாய சமபநததாலை எப போது மிருப்பதில்லை. ஆதலால் அவற்றிலும கடததன்மைச சாதியின் சமவாய சம்பந்தத்தான் வரைநது கொள்ளபபட்ட சாமயிகாபாவ மில்லை. ஆனுல் சமவாய சம்பந்தத்தான் வரைநது கொள்ளப்பட்ட அததியநதாபாவ மிருக்கின்றது. இவ்வாறுன திரவியததின் வேறுன பதாரத்தங்களுகுச சாமயிகாபாவம அப் பிரசித்தமாம்.

திரவியமும் நித்திய அநித்திய பேதத்தால் இருவகைத்தாம். பிரு திவி ஜல தேயு வாயுக்கள் துவியணுக முதலிய வடிவ அநித்திய மாம. ஆகாயம, காலம, திக்கு, ஆத்மா, மனம், பரமாணு வடிவின வாகிய பிருதிவி ஜல தேயு வாயுக்கள் என்பவை நிதியத்திரவிய ங்களாம். அந்த நித்தியத் திரவியம் சமவாய சம்பந்தத்தான் ஓர் காலத்து ஒரு பதார்த்தத்தி லிருப்பதில்லை. ஆதலால் அவற் றிற்கோ சமவாய சம்பந்தத்தான் வரைநதுகொள்ளப்பட்ட சாம யிகாபாவம் ஒரிடததுமில்லை. ஆனுல் சமவாய சம்பநதத்தான் வரைநதுகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே முழுதுமாம. அங் ஙனமே அநித்தியமான துவியணுகாதி திரவியங்கள் சமவாய சம பந்தத்தால் தமது அவயவமாகிய பரமாணு முதலியவற்றி லிருக் கின்றன. அவயவமின்றிய வேறு பதாரத்தங்களில் அநித்தியத் திரவியம் சமவாய சமபந்தத்தால் என்றும் இருப்பதில்லை. அவ யவங்களில் அவயவியின் பிராகபாவப் பிரத்துவமஸாபாவங்க ளிரு க்கின்றன. ஆதலால் சமவாய சம்பந்தததான் வரைநதுகொள்ள ப்பட்ட சாமயிகாபாவம் அவயவத்தில் காரியத் திரவியத்திற் கிருப்பதில்லை. அவயவத்தின் வேறுன பதார்த்தங்களில் சமவாய சம்பந்தத்தான் அவயவமும் என்று மிருப்பதில்லை. ஆதலால் சஉ

வாய சம்பந்தத்தான் வரைக்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் ஆண்டில்லே. ஆனுற் சமவாய சம்பந்தத்தான் வரைத்துகோள்ளப்பட்ட அத்தியந்தாபாவு முளது. இவ்வாற்றுன் திரவியத்திற்கும் சமவாய சம்பந்தாவச்சின்ன சாமயிகாபாவம் அப்பிரசித்த மாம். கேவல சையோக சம்பந்தத்தான் வரைக்துகொள்ளப்பட்ட சாமயிகா பாவம் திரவியத்திற்குப் பிரசித்தமாம். அதுவும் காரியத் திரவியத் திற்காம். நித்தியத் திரவியத்திற்கோ சையோக சம்பந்தத்தான் வரைகதுகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவமே முழுவதுமாம். சாமயிகாபாவம் யாண்டும் நித்தியத் திரவியத்திற் கின்று. ஏனெனின் நித்தியத் திரவியத்திற்கு அவிருத்தி சுபாவமாம். ஆதலால் சையோக சம்பந்தத்தால் நித்தியத் திரவியம் ஒரு பதார்த்தத்தி னும் ஒருபோது மிருப்பதில்லே. நித்தியத் திரவியததிற்கும் மற் றைத் திரவியங்களோடு சையோக முளது. ஏதன் சையோகம ஏதனிடத்தி னுளதாகின்றதோ, அது அதனிடத்துச் சையோக சம்பகதத்தா னுளதாம். என்றுலும் நிதியத் திரவியத்திற்குச * சையோகவிருத்தி நியாமகமன்று. குண்டவகினிகளின சை யோகம் அக்கினியினது விருத்தியின் † நியாமகமாம்; குண்டத் தினது விருதகியின் நியாமகமன்று, அங்ஙனமே நித்தியத் திர வியத்திறகுக் காரியத் திரவியத்தோடுள்ளசையோகமும காரியத் திரவியத்தினது விருத்தியின் நியாமகமாம். நித்தியத்திரவியத்தி னது விருத்தியின் நியாமகமன்று. இக்காரணத்தான் சையோக சம்பகதத்தான் வரைக்துகொள்ளப்பட்ட சாமயிகாபாவம் நித்திய த் திரவியத்திற்கு அப்பிரசித்த மாம். சையோக சம்பந்தத்தா னுதல் சமவாய சம்பந்ததானுதல் எந்தப் பதார்த்தம் ஒன்றினு மிருப்பதில்லையோ அது அவிருத்தியெனப் படுகின்றது. நித்தியத் திரவியத்திலோ சையோக சமபந்தத்தானும சமவீய் சம்பகதத் தானும் பிறபொருள்களிருக்கும். பிறபதார்த்தங்களில் சையோக சம்பந்ததானுதல் சமவாய சம்பகதத்தானுதல் நித்தியதிரவிய மிருப்பதில்லே. ஆதலால் நித்தியத் திரவியங்களே அவிருத்தி யென் பர். இவ்வாற்றுற் சம்சர்க்காபாவம் அந்நியோந்நியாபாவ மென் னும் வேறுபாட்டால் அபாவம் இருவகைப்படும். அவற்றுள் சம்சர் க்காபாவத்திற்கு நான்கு பேதங்களுள. அந்நான்கிற்கும் ஒன்றற் கொன்று விரோதமுண்டு. அந்நான்கிறகுமே தம் பிரதியோகி

* சையோகத்தால் ஒன்றன்கணிருப்பது. † நியாமகம்=நியமிப்பது.

யோடு விரோத முண்டு. பிரதியேகியோடு விரோதம் இவ்வகை யானும்:—எந்தப் பிரதியோகி எந்தச் சம்பந்தத்தான் யாண்டை தோ, அதற்கு அச்சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அபாவம் இருப்பதில்லை. ஒரு சம்பந்தத்தால் பிரதியோகியிருக்கும்; வேறு சம்பந்தத்தால் அதன் அபாவமும் மிருக்கும். எங்ஙனம்: சையோக சமபந்தத்தாற் பூதலத்திற் கடம் இருக்குங்காலத்துச் சமவாய சம்பந்தத்தால் கடமிருப்பதில்லை. ஆதலால சையோக சம்பந்தத்தால் கட முடைய பூதலததிலும கடதத்தின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அந்தியந்தாபாவம் இருக்கின்றது. ஆதலால் எசசம்பந்தத்தால் பிரதியோகி யுளதாகினறதோ, அச்சம்பநதத்தான் வரைநதுகொள்ளப்பட்ட சமசாககாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத மிருககின்றது. சம்சாக்கா பாவத்திற்கு ஒன்றறகொன்றுள்ள விரோதமும சமான சம்பந்தத்தா லுளதாம. ஒரு சமபநதத்தான் வரைநதுகொள்ளபபட்ட ஒரு சம்சாக்காபாவம யாண்டுளதோ, ஆண்டும வேறு சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட வேறு சம்சாக்காபாவம் உண்டு எங்ஙனம்: கடமின்றிய பூதலததிற கடததின் சையோக சம்பந்தாவச்சின்ன சாமயிகா பாவ முளது. அதே கடததின் சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொளளபபட்ட அந்தியநதாபாவம அப் பூதலத்தின்கண்ணே யிருக்கினறது. இவ்வாறுன பிரதியோகியோடு சமசாக்காபாவத்திற்கு ஒரு சமபநதத்தான் விரோத மிருக்கின்றது. சமான சம்பந்தத்தாலே சமசாக்கா பாவங்களுககு ஒன்றற்கொன்று விரோதம இருககின்றது. அநியோநயாபாவத்திறகோ பிராகபாவ முதலியவறறிலும விரோதமிலலாததுபோலத் தனது பிரதியோகியோடும் விரோதமில்லை. விசாரம் செய்யின் அந்தியோந்தியாபாவதத்திறகு அநய அபாவங்களோடு விரோதமில்லையாயினும தன்று பிரதியேகியோடு அநியோநயாபாவதத்திற்குத்தான் விரோதமுளது. அலேக நூல்களில் இஃதெழுதபபடடிருக்கின்றது:—சம்சாககாபாவத்திற்குப் பிரதியோகியோடு விரோத முண்டு. அந்தியோநதியாபாவத்திறகுப் பிரதியோகியோடு விரோத மில்லை. ஆனல் பிரதியோகித் தன்மையை வரைநதுகொள்ளும் தாமத்தோடு விரோதமுண்டு. எங்ஙனம: பூதலதத்திற கடமிருக்கின் அக்காலத்தும கடத்தின அநதியோநதியாபாவமிருககின்றது. ஏனெனின், பேதத்தை அந்நியோந்நியாபாவ மென்பர். கடமுடைய பூதலமும் கடரூபமனறு; ஆனல் கடத்தின வேறும. கடத்தின்

வேறுகிய அதாவது கடத்தின் பேதமுடைய பூதலமிருக்கின்றது. பேதமுடையது, அந்நியோந்நியாபாவமுடைய தெனக் கூறுவதிற் பொருள் ஒன்றே யாம். கடமொழிந்த மற்றெல்லாப் பொருள்களும் கடத்தின் வேறும். கடத்தில் கடத்தன்மை யிருக்கின்றது. ஆண்டுக் கடத்தின் பேதவடிவமானகடாந்நியோந்நியாபாவம் இருப்பதில்லை. கடமொழிந்த மற்றப் பொருள்களினும் கடத்துவம் இருப்பதில்லை. ஆண்டு எல்லாக் கடத்திற்கும் அந்நியோந்நியாபாவ மிருக்கின்றது. இவ்வாற்றும் கடாந்நியோந்நியாபாவத்திற்குக்கடத்தோடு விரோதமில்லை; ஆனல் கடத்தன்மையோடு விரோதமிருக்கின்றது. ஆண்டுக் கடாநந்யோந்நியாபாவத்திற்குப் பிரதியோகி கடம்; பிரதியோகிந தன்மையை வரைவது கடத்தன்மை. எதன்அப்பாவமுளதோ அது பிரதியோகியெனப்படுகின்றது. பிரதியோகியிலிருக்கும் தாம மெதுவோ, அது பிரதியோகித்தன்மையை வரைவதெ(பிரதியோகித்தன்மையவச்சேதக மெ)னப்படுகின்றது. பிரதியோகி யிலிருக்கும் தாமம் அநேகமாம். எங்ஙனம்: கடத்தில் கடத்தன்மை யிருக்கின்றது. பிருதிவித் தன்மை நிரவியத் தன்மை பதார்த்தத் தன்மை முதலியனவும் கடத்திலிருக்கின்றன. அவற்றுள் பிருதிவித தன்மை முதலியனவும் கடாந்நியோந் நியாபாவத்தின் பிரதியோகித் தன்மை யவச்சேதக மாதல்வேண்டும. பிருதிவித் தன்மை முதலியன கடாந்நியோந்நியாபாவத்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதக மன்று. பிருதிவி யந்நியோந நியாபாவதத்தின பிரதியோகித் தன்மை யவச்சேதகம் பிருதிவித் தன்மையாம. நிரவியாந்நியோநியா பாவதத்தின் பிரதியோகித் தன்மை யவச்சேதகம நிரவியத் தனமையாம். கடாந்நியோந்நியா பாவத்தின் பிரதியோகித் தன்மை யவச்சேதகம பிருதிவித தனமை நிரவியத் தன்மை மூலிய வன்று; கடவடிவான பிரதியோகியிலா இருக்கின்றன. ஆகலின் கடந் தன்மையைப் போல கடாநந்யோநந்யாபாவத்திற்குப பிருதிவித்தன்மை நிரவியத்தன்மை முதலியவற்றைப் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் என்னல் வேண்டும. அங்ஙனமாயினுமஅபாவநாதை யறிவிக்கும்பதத்தோடு பிரதியோகியை யறிவிக்கும்பதத்தை உசசரிக்கின் எதத் தர்மத்தின் தோற்ற முண்டாகிறதோ, அது பிரதியோகித்தன்மை யவச்சேதக மெனபபடும். கடாநந்யோந்நியாபாவத்தினைக் கூறுவதில் பிரதியோகியை யறிவிபபது கடபதமாம. அங்ஙனமே படம்

கடமன்று என்னுமிவ்வாற்றலும் பிரதியோகியை யறிவிப்பது கட பதமாம். அதனை யுசரிக்கின் கடத்தன்மையின் உணர்ச்சி யுண்டா கின்றது. பிருதிவித்தன்மை திரவியத்தன்மை முதலியவற்றின் உணர்ச்சி யுண்டாதலில்லை. ஆதலால் கடாந்நியோந்நியா பாவத்தின் பிரதியோகித் தன்மை யவச்சேதகம் கடத்தன்மையாம்; பிருதிவி த்தன்மைமுதலியனவன்று. ஜலம் பிருதிவியன்றென்று கூறி, பிரு திவியந்நியோந்நியாபாவம் கூறின், அப்போது பிரதியோகியை யறி விப்பது பிருதிவி யென்னும் பதமாம். அதனை உசரிக்கின் பிருதிவி த்தன்மையின் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆண்டுப் பிரதியோகித் தன்மையவச்சேதகம் பிருதிவித்தன்மையாம். குணம் திரவியமன் றென்றிவ்வாறு கூறி, திரவியாதந்நியோந்நியாபாவதத்தைக் கூறின், அப்போது பிரதியோகியை யறிவிப்பது திரவிய பதமாம். அதனை யுச்சரிக்கின் திரவியத் தன்மையின் உணர்ச்சி யுண்டாகின்றது. ஆண்டுப் பிரதியோகித் தன்மை யவச்சேதகம் திரவியத்தன்மையாம். கடபதத்தை யுசரிக்கின் கடத்தன்மையி னுணர்ச்சி யுண்டாகின் றது. பிருதிவித்தன்மை மூதலியவற்றி னுணர்ச்சியுண்டாவதில்லை. இதன்கண் இது எதுவாம்:— கடபதத்திற்குக் கடத்தன்மை விசி ஷ்டத்தில் சத்தியிருக்கின்றது. அத்தத்த நாம விசிஷ்டத்தின்கண் ஏற்றப் பதத்தின் சத்தியுளதோ, அத்தத்தாமத்தின் உணர்ச்சி அப் பதத்தா னுண்டாகின்றது. இவ்வாற்றால் கடாந்நியோந்நியாபாவ த்தின் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் கடத்தன்மையாம். அது கடத்திலிருக்கும். கடாந்நியோந்நியாபாவம் கடத்திலிருப்ப தில்லை. கடத்தின் வேறுகிய சகல பதார்த்தங்களினும் கடத்தின் அந்நியோந்நியாபாவம் இருக்கின்றது. ஆண்டுக் கடத்துவ மிருப்ப தில்லை. ஆதலால் கடத்தன்மைவடிவப் பிரதியோகித்தன்மை யவ ச்சேதகத்தோடு கடாந்நியோந்நியாபாவத்திற்கு விரோத முண்டு. கடவடிவப் பிரதியோகியோடு விரோதமில்லை. சமசாக்காபாவத்திற் குப் பிரதியோகியோடு விரோதமுண்டு. இவ்வாறு அநேக நூலாசிரி யர் எழுதியிருக்கின்றனர். சமசாக்காபாவ அந்நியோந்நியாபாவங் களின் இலக்ஷணமுமிவ்வாறன்றி னையுசரித்தறியச்செய்திருக்கின்ற னர். பிரதியோகி விரோதியான அபாவமெதுவோ, அது சம்சர்க்கா பாவமென்ப்படுகின்றது. பிரதியோகித்தன்மையவச்சேதகவிரோதி யபாவம் அந்நியோந்நியாபாவமென்ப்படுகின்றது. இவ்வித லக்ஷண த்தைக் கூறுதலானும அந்நியோந்நியாபாவத்திற்குப் பிரதியோகி

யோடுஅவிரோதமே சித்திக்கிஷ்றது.ஈல்வகைச் சம்சர்க்காபாவங் கட்கும் பிரதியோகியோடுதான் விரோதம் சித்திக்கின்றது. ஆனல் நூலாசிரியர்களது இங்ஙனமெழுகிய எழுத்துக்கள் யாவும் தூல திருஷ்டியாலாம்; விசார திருஷ்டியாலில்லை. எனெனின், அத்தியந் தாபாவத்திறகு எவ்வாற்றுற் பிரதியோகியோடு விரோதமுளதோ, அவ்வாற்றுல் அந்தியோந்தியா பாவத்திற்கும் பிரதியோகியோடு விரோதமுளது. எப்பூதலத்தில் சையோக சம்பந்தத்தாற் குடம் உளதோ, அப்பூதலத்தின்கண்ணே சமவாய சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட கடத்தின் அத்தியந்தா பாவத்திற்கும் பிரதி யோகியோடு முற்றும் விரோத மின்று. ஆனல் எந்தச சம்பந்தத் தான் பிரதியோகி யுளதாகின்றதோ, அசசமபநதத்தான் வரைந்து கொள்ளப்பட்ட அத்தியந்தாபாவம் இருப்பதில்லை. ஆதலால் அபாவத்திற்குப் பிரதியோகித் தன்மை யவசசேதக சம்பந்த விசிஷ்டப் பிரதியோகியோடு விரோதமுளது. பிரதியோகித் தன்மை யவச்சேதக சம்பந்தத்தின் வேறுய சம்பந்த விசிஷ்டப் பிரதியோகி யோடு எநத அபாவதிற்கும விரோதமின்று. எச்சம்பந்தத்தான் பதார்த்தத்தின் அபாவம் சொல்லப்படுகின்றதோ அது பிரதியோகி நீநன்மை யவச்சேதக சம்பந்தமெனப்படுகின்றது. அத்தியந்தாபாவ த்தின் பிரதியோகித்தன்மை யவசசேதக சம்பந்தம் அநேகமாம். ஏனெனின், எந்த அதிகரணத்தில் ஒருசம்பந்தத்தால் எந்தப்பதார் த்தமுளதாகின்றதோ, அவ்வதிகரணத்திற்றனே வேறு சமபந்தத் தான் வரைநதுகொள்ளப்பட்ட அத்தியநதா பாவம் அப்பதார்த்த த்திற் குண்டாகின்றது. எங்ஙனம்: பிருதிவியில் கந்தம் சமவாய சம்பநதத்தால் இருக்கின்றது; சையோக சமபந்தத்தால் என்று மிருப்பதில்லை. ஆதலாற் பிருதிவியில் கந்தத்தின் சையோக சம்ப ந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியந்தாபாவ மிருக்கின் றது.ஆண்டுப்பிரதியோகித்தன்மையவசசேதகமசையோகசம்பந்த மாம். ஜலதத்தில் சையோகசம்பந்தத்தானுவது சமவாய சம்பந்தத் தானுவது கந்தமின்று. ஆனல் காலத்தானுய சம்பந்தத்தான் ஜலத் தினும் கந்தமுளது. ஆதலாற் ஜலத்தில் கநதத்தின் சையோக சம் பந்தத்தாவ் வரைந்து கொள்ளப்பட்ட அந்தியநதா பாவமும், சம வாய சம்பநதததான் வரைந்துகொள்ளப்பட்ட அந்தியந்தாபாவமு மிருக்கின்றன. ஆண்டு முதல் அபாவத்திற்குப் பிரதியோகித் தன்மை யவச்சேதகம் சையோக சம்பந்தமும், இரண்டாவது

அபாவத்திற்குப பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சமவாய சம்ப
ந்தமுமாகின்றன. காலிக சம்பந்தத்தான் ஒவ்வொரு ஜந்தியத்தி
னும் சகல பதார்த்தங்களு மிருக்கும். ஆதலால் அவியணுக முத
லிய வடிவினதாய ஜலத்தில் கந்த மிருத்தலான் ஜலதகி லிருக்கும்
கந்தாபாவதகின் பிரதியோகித் தன்மை யவசசேதகம் காலத்தா
னைய சம்பந்தமன்று. நிதகிய பதாாத்தத்தில் கூலத்தானைய சம்பந்த
த்தான் ஓர பதாாத்தமும் இருப்பதில்லை. ஆதலாற் பரமாணு வடிவ
மாகிய ஜலத்தில் கந்தத்தின் காலிக (காலத்தானைய) சமபந்தத்
தான் வரைந்துகொள்ளப்பட்ட அத்தியநதாபாவமும் இருக்கின்ற
தாகலின், பரமாணுவிலிருப்பதாகிய கந்தாபாவத்தின் பிரதியோகி
த்தன்மை யவசசேதகம் காலத்தானைய சமபந்தமாம். இவ்வாறுன்
அத்தியநதாபாவத்தின் பிரதியோகித தன்மை யவசசேதக சம்ப
ந்தம்அநேகமாம.அந்நிய அபாவஙகளின்பிரதியோகித்தன்மையவச்
சேதகம் ஒவ்வொன்றும். எங்ஙனம் : கபாலத்தில் கடத்தின் பிரா
கபாவ மிருக்கின்றது. பிறவறறில் யாண்டும் கடத்தின் பிராகபாவ
மில்லை. அக் கபாலத்தில் கடத்தின் பிராகபாவத்தின் பிரதியோகி
த்தன்மையவச்சேதகம் சமவாய சம்பநதமாம். பிராகபாவத்தின்
பிரதியோகித் தன்மை யவசசேதகம் வேறு சம்பந்தமன்று. எச்
சம்பந்தத்தான் வரைந்துகொள்ளப்பட்ட பிராகபாவம் எதற்கு
எதன்கணுளதோ, அச்சம்பந்தத்தால் அதன் உற்பத்தி அதன்கண்
உளதாகின்றதென்பது நியமம். கபாலத்தில் கடத்தின் உற்பத்தி சம
வாய சமபநதத்தான் உண்டாகின்றது; வேறு சம்பந்தத்தா னுண்
டாவதில்லை. ஆதலாற் கபாலதத்தில் கடத்தின் சமவாய சம்பந்தத்
தான் வரைந்துகொள்ளப்பட்ட பிராகபாவ மிருக்கின்றது. அதன்
பிரதியோகித் தன்மை யவசசேதகம் ஒரே சமவாய சம்பநத
மாம. அங்ஙனமே கபால சமவாயதத்தில் கடம் நஷ்டமாக வில்லை
யென்னும் உணர்வு துவம்ஸாபாவதத்திற்கு உண்டாகின்றது. ஆத
லால் துவம்ஸத்தின் பிரதியோகித் தன்மை யவசசேதகமும ஒரே
சமவாய சம்பநதமாம். அங்ஙனமே சாமயிகா பாவமும் ஜந்தியத்
திரவியத்திற்கே யாகின்றது. ஜந்தியத் திரவியத்திற்கும் சையோக
சமபந்தத்தான் வரைநது கொள்ளப்பட்ட சாமயிகா பாவமே
யாகின்றது. சமவாய சம்பநதாவசசின்ன சாமயிகாபாவம் அப்
பிரசித்தமாம். இது முன்னர் உரைக்கப்பட்டது. ஆதலால் சாம
யிகாபாவத்திற்கும் பிரதியோகித்தன்மை யவச்சேதகம் சையோக

அந்தக்கரண அவச்சினனதத்தினை ஜீவனென்னும் அநவச் சின்னதத்தினை ஈசுவரனென்னும் கொளளுமிடதது, பிரமாண்ட தத்துரு வெளியிடதுளள சேதனதத்தில் ஈசுவரதத்ன்மை உண்டா ரும் வினனின பிரமாண்டதத்தில் அநத ஜீவர்களது அநதக அந் தக்கரணஙகள் வியாபிகக படடிருகின்றன. ஆகலால் பிரமாண் டதத்தின் மதயில் அநத அநதக்கரணஙகளுகவசினன சேதனதத்தின் பெறுதி சமபவியாது. பிரமாணட தத்திறு வெளியிடதத்திலேயே ஈசு வரனது இருப்பை அஙகிகரிகினை, அநதரியாமியைப பிரதிபாதிக் கும் வசனஙகளுகு விரோதமுணடாகும். "யொவிஜ்ஞாநே திஷ்டந் விஜ்ஞாநாந் ஒகரோ யஸ்யஜ்—ஞவர ஸிஞ்ஞானதத்தில் விருபபவராய் விஞ்ஞானதத்தை உள்ளே இயகருனைறார" எனனும் வசனத்தில் விஞ்ஞானபதத்தை லயிககப்படடும் ஜீவரிதயத்தில் ஈசுவரனது இருப்பு ரொலலபபடடிருகின்றது. ஆகலால் அநதக்கரணத் தால் அநவச்சினனம் ஈசுவரன்று; மாயை அவச்சினன சேத னமே ஈசுவரனாவன். அநதக்கரண அநவாசின்னத்திற்கு ஈசுவரத் தன்மை அங்கரிக்கின், அநதக்கரணமதிகாடி சமபநதமினமையே ஈசுவரதனமையில் உபாதி என்பது திருடமாகின்றது. ஈசுவர னிடதது சருவஞ்ஞதன்மை முதலிய உபாதியினாலாகிய வாம. அபாவவடிவ உபாதியினால சாவஞ்ஞதனமை முதலிய தர் மங்கள் திருதிசகிறதிலலை.

## உ0எ. திருப்தி தீபத்தில் வித்தியாரணிய சுவாமிகள் கூறிய அந்தக்கரணத்தின் சம்பந்தம் அதன் அபாவம் என்பவற்றினது உபாதித்தன்மையின் அபிப்பிராயம்.

வித்தியாரணியசுவாமிகள திருப்திதீபத்தில இவ்ர கூறியிருக் கின்றனர:—எங்ஙனம அநதக்கரணதத்தின் சமபநதம உபாதியோ, அங்ஙனமே அநதக கரணதத்தினது சமபநததத்தின் அபாவமும உபாதியாம். எங்ஙனம இருபபுவிலங்கினால சருசாரதத்தின் நிரோ தம (தடை) உண்டாகின்றதோ, அங்ஙனமே பொன்விலங்கினா

லும் சஞ்சாரத்திற்குத் தடை உண்டாகின்றது. இவ்வாறுமுல அந்தக்கரணத்தின் சம்பந்தவடிவ பாவ உபாதியினால் ஜீவ சொரூபத்தின் போத முண்டாகின்றது. முற்கூறிய சம்பந்தத்தின் அபாவத்தால் பரமாத்ம சொரூபத்தின் போத முண்டாகின்றது. இவ்வாறு வித்தியாரணியசுவாமி அந்தக்கரணமின் றியதனியும் உபாதியெனக் கூறியிருக்கின்றனர். அதறகு இது அபிப்பிராயமாம்:—எங்ஙனம் அந்தக்கரண சம்பந்தத்தால் ஜீவ சொரூபத்தின் போத முண்டாகின்றதோ, அங்ஙனமே அந்தக்கரண மின்றியதனாலும பிரஹ்ம சொரூபத்தின போத முண்டாகுதலால் பிரஹ்மத்தினது போதத்தின் உபயோகி அந்தக்கரண மின்றியதுமாம. ஆதலால் வித்தியாரணிய சுவாமிகள் வரனத்தினாலும அபாவவடிவ உபாதியினால் ஈசுவரனிடத்துச சர்வஜ்ஞத்துன்மை முதலியவற்றின் சித்தி தோற்றுகிறதில்லை.

## உ0அ. அவச்சேதவாதத்தின் பேதபூர்வகமாக அரஸ் சமாப்தி.

ஆதலால் மாயாவசகின்ன சேதனமே ஈசுவரனுவன், ஈசுவரனது உபாதியாகிய மாயை லலா விடங்களிலு மிருக்சிறது. ஆதலால் ஈசுவரனிடத்து அந்தரியாமித்தன்மையும சமபவிக்கின்றது. அந்தக்கரண அவசகின்னத்தினை ஜீவனெனக்கொள்ளின், கர்த்தா போகதாவாகிய சேதனதின் பிரதேசம பின்னமாகும். இதனால் செய்ததின் நாசமும் செய்யாததின் அடைவு முண்டாகும். ஆதலால் அவித்தை யவசசின்ன சேதனமே ஜீவனும. அந்தக்கரண அவச்சின்ன சேதனம் ஜீவனன்று. இவ்வாறு சில நூலாசிரியர் அவச்சேதவாதத்தினையே அங்கிகரித்திருக்கின்றனர். பிரதிபிம்பத்தைப் பிரதிபாதிக்கும சுருதி, ஸ்மிருதி வசனங்களுக்கு விரோதமும் பரிகாரமும அவர்களது நூல்களில் ஸ்பஷ்டமாம்.

## உ0கு. சித்தாந்தமுக்தாவலி முதலியவற்றிற் கூறிய ஏகஜீவ (திருஷ்டிசிருஷ்டி)வாதத்தின் நிரூபணம்.

சித்தாந்தமுக்தாவலிகாரா முதலியோரது மதம் இதுவாம்:—

விருத்தம்.

"வெளிபடா மையினிற் குந்தி சுதனெனக் கன்ன வேந்தன்
இழிபடு சாதை மைந்த னெனனத்துய ருற்ற வாங்கு
மிளிர்சிதா நந்த ரூப மெய்க்கனப் பிரஹ்மந தானே
எளியதோர் ஜீவ பாவ மெய்திய தென்பர் மேலோர்."

எப்போதும் அசங்கமும் நித்தியமுக்தமுமாகிய சிதாகாரத்தப் பிரஹ்மத்தில் கற்பித அவித்தை முதலியவற்றின் சமபாகத்தால் பிரதிபிம்பிக்குந் தன்மையும் அவசின்னத்தன்மையும் சம்பவியா. எங்ஙனம் கானற்ஜலத்தால் நிரப்பப்பட்டதும், மலடிமைந்தனுகிய குலாலனுல் முயறகோடாகிய தண்டததினுல் ஆக்கப்பட்டது மாயுள்ள கடத்தின் சம்பாகத்தால் ஆகாயத்தில் பிரதிபிம்பிக்குந தன்மையலது அவச்சின்னத் தன்மை உண்டாகிறதில்லே. ஆனல் ஆகாயத்தின் சமானசத்தையுடைய ஜலம நிரம்பிய கடம் தடாகமுதலியவற்றின் சமபாகத்தினுலேயே ஆகாயத்தில் பிரதிபிம்பிக்குந தன்மையும் அவசினனத்தன்மையும உண்டாகின்றன. அவித்தையும அதன் காரியமும் பிரஹ்மசைதனயத்தின் சமானசத்தையுடையன வன்று. ஆனல் சுயமே சத்தாசூன்யமாயிருக்கின்றன. பிரஹ்மசைதன்யத்தின் சத்தையினுல சத்தையுடையன அவித்தை முதலியனவாம். ஆதலால் முயறகோடி முதலியவற்றைப்போல அந்தியங்கம் இல்லாதனவாகிய அவித்தைமுதலியவற்றேறும சேதனதத்தின் சமபாகத்தைக் கூறுதலே சமபவியாது. சம்பாகமின்றியபோது பிரதிபிம்பிக்குந்தன்மை முதலியனவோ அத்தியந்தம் தூரமாம். ஆதலால் எப்போதும ஏகரசம் பிரஹ்மமாம். அதனிட்த்து அவசின்னசைதன்மை அல்லது பிரதிபிம்பத்தன்மை வடிவ ஜீவத்தனமை சமபவிக்கிறதில்லே. ஆனல் கற்பித அஞ்ஞானத்தின் கற்பித சம்பாகத்தால பிரஹ்மத்தில் உண்டாகாமலே ஜீவத்தன்மை தோறறுகின்றது. எங்ஙனம் அதிகாரியாகிய குருதிபுத்திரனிடத்து பாதாபுத்திரதன்மையின் பிரதீதி பிரமவடிவமாயுண்டாயிறறே, அங்ஙனமே பிரதிபிமப முதலிய விகாரமின்றியே பிரஹ்மசைதன்யத்தில் ஜீவத்தன்மைப்பிரமம உண்டாகின்றது. பிரதிபிமப் வடிவ அல்லது அவயவேத வடிவ ஜீவத்தன்மையின் அடைவு உண்டாகிறதில்லே. தனது அவித்தையினுல் ஜீவதசைதன்மையை அடைந்த பிரஹ்மமே பிரபஞ்சசைதனைக் கற்பிப்பதாயிருத்தலின் சர்வஞ்ஞத்தனமை முதலிய தாமங்களோடு கூடிய ஈசவரனும் இரதப் பகுதியில் ஜீவகற்பிதனுவா. எங்ஙனமே சொப்பன கற்பித இராஜாவின் சேவையினுல சொப்பனத்தில் பலப்பிராப்தி உண்டாகின்றதோ, அங்ஙனமே சொப்பன கற்பித ஈசவர பஜனத்தினுல் பலப்பிராபதியும் சமபவிக்கின்றது. இவ்வாறு அநாதி அவித்தையின் வலியால் தனது பிரஹ்மசைதன்மையின் ஆவரணத்தால் ஜீவத்

தன்மைப் பிரமம் உண்டாகின்றது. தத்துவமஸி முதலிய வாக்கிய ஜந்திய சிரவணாத்காரத்தால் ஜீவத்தன்மைப் பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. பிரமகாலத்திலும் ஜீவத்தன்மை யிலலை. அஸல் நித்தியமுக்த சிதாநந்த சொரூபப் பிரஹ்மமே உபாதியை பரித்தினையே பாஷ்யகார வார்த்திகாசார்யர்கள் பிருகதாரணியகநின் வியாக்கியானத்தில் கர்ணனது திருஷ்டாந்தத்தால் கூயிருக்கின்றனர். குருபுத்திரனுகிய காணனுக்கு ரனசாதியின் சமபந்தத்தால் இழிந்தகுலன்மைப்பிரமம் உண்டாயிற்று. அநேகவித தோஷத்தாலுண்டாகிய துக்கத்தை அநுபவிக்கின்றவனுக்குத் தானுசசித்தநித்துள்ள குருபுத்திரத் தன்மை நிமித்தத்தாலுள்ள மேன்மையி னினறும நழுவினவனனன்.

ஒருநாள் ஏகாந்தத்தில் சூரியபகவானனவர் "நீ ராதா புத்திரனல்லன்; எனது சமபந்தத்தால் குந்தியின் உதாரகினின்றும உண்டானாய்." என்று கூறினர். இத்தனமைய சூரியனது வாக்கியத்தினால் தன்னிடத்திருந்த ஸனஜாதியின் மமபந்தத்தைவிட்டுஇயல் பாய்ச சித்நித்துள்ள குந்திபுத்திரத்தன்மை நிமித்தத்தாலுள்ள மேன்மையை அறிந்தான். அங்ஙனமே சிதாநந்த பிரஹ்மமும அநாதி அவித்தையின் சமபந்தத்தால் ஜீவதனமைய பிரமத்தை அடைந்தகாய், சுயமாகச சித்நித்துள்ள பிரஹ்மபாவத்தை மறந்து அநேகவித துக்கத்தை அநுபவிக்கின்றது.

ஒருகாலத்துத் தனது அஞ்ஞானத்தினால் கறபிதசொப்பன கற்பிதஆசாரியருக்குச சமானமான ஆசாரியா வாயிலாக மகா வாக்கிய சிரவணத்தால் தன்னைக் கோசரிக்கும வித்தையினால் அவித்தையின் நிவிருத்தி உண்டாக, நித்திய பரிபூரநாதனதை சசொரூப சைதன்னியமாக அநுபவம செய்கின்றனன். இவ்வாறு பிருகதாரணியகநின வியாக்கியானத்தில் பாஷ்யகாரர் வார்த்திக காரா எழுதியிருக்கின்றனர். ஏங்ஙனம் ஜீவனது அவித்தையா கற்பித ஆசாரியா வேத உபதேசத்தில் கேதுவாவரோ, அங்ஙன மே ஈசுவரனும் சொப்பன கற்பித இராஜாவைப்போல ஜீவகற் பிதரேயாய்ப் பஜனத்தினால் பலத்தில் கேதுவாகினறார். இமமதத் தில் ஏகஜீவவாத மூளது. ஆதலால் ஏகஜீவகற்பித ஈசுவரனும் ஏக மேயாவர். நாநா (பல) ஈசுவரரது அடைவிலலை. சுகர், வாமதேவர் முதலியோரது முக்தியைப் பிரதிபாதிக்கும சாஸதிரத்தினுலும்

சொப்பன கற்பித நாநா புருஷர்களோப்போல ஜீவாபாசர்களும் நாநாவாகச சித்திகின்றனர். நாநா ஜீவவாதம சித்திகிறதில்லே. எங்ஙனம்: சொப்பனததில ஒரு திருஷ்டாவிறகு நாநா புருஷர்கள் தோற்றுகினறார்கள். அவர்களுள் ஒருவன் பெரிய காடடில் தப்பு வழியிற் செலபவனுப்ப புலி முதலியவற்றுணடாகிய துக்கததை அநுபவிகினறான. ஒருவன் இராஜமாக்குதலி செலலுகின்றவனுய்த தனது நகரததை அடைகின்றன். ஆனல் எனறதிற திரிதலும தனது நகரததை அடைதலும பொப்பனதிருஷ்டாவிறகில்லே. ஆனல ஆபாச புருஷர்களுககு உண்டாகினறது. அங்ஙனமே அவித்தையோடி கூடிய பிரஹ்மம வடிவ ஜீவனுக்குப பாதமோகூதின் அடைவில்லே. ஆனல ஆபாச வடிவ ஜீவர்களுககுப பாதமோகூம் தோறுகின்றது.

. இப்பகூதில் யாருடைய ஞானதினல அவித்தையின் நிவிருத்தி வடிவ மோகூ முண்டாகும எனறு வினவின, அதற்கு உனது ஞானதினல் உண்டாகுமெனபது உதாரமாம். அலலது ஒருவருடைய ஞானதினலும மோகூ முண்டாகிறதில்லே யெனபது உதாரமாம. எனெனின இநத மதாதில பாதாதின அதியாதம அசதுதாதன்மை ஆகமாவிலிருகின்றது. நிதிதிய முக்தமாகிய ஆகமாவிறகு மோகூ மூண்டாகும, அல்லது உண்டாயிருகினறது எனறு கூறுதல் சமபவியாது. இவ்வபிபிராயததால் மோகூதைப் பிரதிபாதிககும வாக்கியங்களே அரித்தவாத மென்பா. பாதமிருக்கின்றது; இற்றையவரை ஒருவரும் முக்தராகவிலலே; பேல புருஷாததாதால மோகூமுண்டாகும எனனும் அபிபபிராயதாதால வாமதேவர் முதலியோர்களது முக்தியைப் பிரதிபாதிக்கும வாக்கியங்களே அரதவாதமென்று சொல்லவில்லே. எனெனின பாதமிருக்கு வாமதேவாதிகளுக்கு மோகூம் உண்டாகாதிருக்குமாயின், மேலும மோகூததை விரமபுதல் பயனின்றியதா மென்னும புதியினல் சிரவணதில பிரவிருதியின் அபாவமே யுண்டாகும. ஆதலால் ஆதமாவில பாதாதின் அதியாதாஅசதபாவமிருக்கின்றது; நிதியமுகதபிரஹ்மவடிவம ஆதமாவாம; அதற்கு மோகூம சமபவியாதெனபது உத்தம பூமியிலேறிய பித்துவானது நிச்சயமாம்.

## உக0. உகசூ. வேதாந்தசித்தாந்தத்தின் நாநாப் பிரக்கிரியைகளின் தாற்பரியம்.

## உக0. சகல அத்வைதக் கிரந்தங்களினது தாற்பரியத்தின்விஷயம்.

நித்திய முக்த ஆத்மசொரூபத்தின் ஞானத்தினுல் துக்கபரி கார சுகப்பிராப்தியின் பொருட்டு, அநேகவித காதசுவ்விய புத்தியி னுற் றோன்றுமகிலேசத்தினை நிவிருத்தியே வேதாந்த சிரவணத்தின் பயனும். ஆத்ம சொரூபத்தில பாதத்தின ஈசவடிவ அல்லது பரமாநந்ததின் பிராப்தி வடிவ மோக்ஷம் வேதாந்த சிரவணத் தின் பயனன்று. வேதாந்த சிரவணதிற்கு முன்னும் ஆத்மாவி னிடத்துப் பாதம் அறபமு மில்லை. அங்ஙனமாயினும் அத்தியந்த அசத்தாகிய பாதத்தின் பிரதீதி உண்டாகின்றது. ஆதலால் பிரம தத்தினுலேயே வேதாந்த சிரவணத்திற் பிரவிருத்தி உண்டாகின் றது. எவனுக்குப் பாதப்பிரம முண்டாகவில்லையோ, அவனுக்குப் பிரவிருத்தி உண்டாகிறதில்லை. எல்லா அதவைத சாஸ்திரங்களுக் கும் இந்தப் பக்ஷத்திற்றான் தாற்பரியம.

## உகக ஜீவேசுவரர்களிடத்துச் சகல நூலாசிரியருடைய சம்மதியின் ஒருமித்த நிச்சயம்.

இவ்வாற்றால் ஜீவேசுவரர்களது சொரூபலக்ஷணம் நூலாசிரி யர்கள் வெகு விஸ்தாரமாக எழுதியிருக்கினறனர். ஆண்டு ஜீவ னது சொரூபத்தில் ஏகத்தன்மை அநேகதன்மைகளின் விவாத மூண்டு. சகல மதங்களினும ஈசுவரன ஒருவன; சாவஞ்ஞன்; நித் திய முக்தன்; ஈசுவரனிடத்து ஆவரணதின் அங்கீகாரம் எந்த அத்வைதவாதத்தின் றூலிலும் இல்லை. ஈசுவரனிடதது ஆவரணத் தைக் கூறுவோர வேதாந்த சம்பிரதாயதறி னின்றும வெளிப் பட்டவராவர். ஆனல் நாநா அஞ்ஞான வாதத்தில் ஜீவனே ஆசிரயி த்ததாய்ப் பிரஹ்மத்தை விஷயஞ செய்வதாமஞ்ஞானம என்பது வாசஸ்பதியின் மதம். ஆண்டு ஜீவனது அஞ்ஞானத்தால் கற்பிக்க ப்பட்ட ஈசுவரனும பிரபஞ்சமும் நாநா வெனக் கொண்டிருக்கின் றனர். அங்ஙனமாயினும் ஜீவனது அஞ்ஞானத்தாற் கற்பிக்கப் பட்ட ஈசுவரனும சர்வஞ்ஞ னென்றே கொண்டிருக்கின்றனர். ஈசுவரனிடத்து ஆவரணத்தின் அங்கீகாரமில்லை.

## பிரதிபிமபத்தின் சொரூபத்தை நிரூபித்தல்.

ஜீவேசுவராகளது சொரூபதடக சிருஷிகளிலை பிரபிபிம்பத்தின் சொரூபதை நிரூபிக்கிறார் —விவரணாசார்ய பதகத்திலை கணஞ்டி முதலிய உபாதிகளை சதிகரபபட்ட சேதரிதகதின விருதி கணடதநிபுணரை முதலரிகள விசதபடு சரபரி ாபது யாணடிக திருஷ்டாவுரு பினை மடனபகாரதகளை திமுஷ்டாவனமைவுடிவர சமபதகமும சணஞ்டிபோடி னை, நிலைபதி, அணடிக சணஞ்டியோடி சமபதகமு முடனபடாது. சடிகபபட சேதரிதத திறகும் திரு நடாவுரு பினைமல சாபபனாதிறகு எதிமுக பதார்தகளிலோடிம சமபதக முணடாகிற ாபது இதிலேயே அதன சாதரகார முணடாகினறது பாணடி அதிக பதாகதகள கணஞ்டிர சொலிமுர பாலின மனோ, அணடிக சடட சேதரிதகதிலை அதிர பதாகதகளிலை ாதகாரகார முணடாகின்றது. சாபபனாதிறகு எதிமுகமாய உறபதக உருவ முடையதாயிருபபதோ, அனிட பதுக சடிசபபட சேதரிதகாற பொலடி சாதகாரகமும போதகியமதையாம. ஆதலால சாபபனாதிறகு சொலிமுரமல பாதாரதிறகு எதிரில சேதரிசரலை விருதி (நனி) பொலடினறது. தனது கொளகை நிலையே சேதரிதகதின விருதிவருகினறமதை தனனுட நியமமிலலை. இவரது முதல விவரணபபா மதகதில கணட கதினகணை ஏளன முகதினை சாதாகாரமே ணடாகினறது. அனைது முனனுகியிருகும கழுகதிலுளள முகதில சொலிமுரதனமையும, கணஞ்டி விருதாவனபயும, தனனிலைவேறுபடகளுமையுமாகிய பிரப முணடாகினறது ஆதலால சணஞ்டியில, சொலிமுரமான பிரதிபிமம் மிருகினறது, எனது முகதில வேறுபடுகினறது எனனும விவகார முணடாகினறது.

இப்பகுதியில் இது கண பயாண —ர பிமபவடிவ முகமுதலிய வறறின சாகூதாகாரமே சுடிரபபட சேதரி கதினால உணடாகுமாயின, சூரியனது பிரபா திலை சேதரிசதிறகு தடை உணடாகினறது அதலால ஜலாதினால தடிசபபட சேதரிதகதினாலும சூரியனது சாகூதாகாரம சமபவியாமையால, ஜலதிதசத திலசூரியனும வேறுபிமபதின உறபதகதியை அஙகீகரிகாதலவேணடும. உ பிமபதின சுசாகூதாகாரதினபொருட டு உப்திபோடி சமபதமுடையதாய சேதரிதகதின விருதி

தடுக்கப்படுகின்றதென்று அங்கீகரிக்கின், ஜலத்தினுள்ளிருக்கும் மணலின் சாகூஹாத்கார மூண்டாகலாகாது. இவ்விரண்டு சங்கைக்கும் இது சமாதானமாம் :— க. கேவல நேதத்ரதத்ரகு ஆகாயத்திலிருக்கும் சூரியனது பிரகாசத்தினுல் தடை உண்டாகின்றது. ஜல முதலிய உபாதியினுல் தடுக்கப்பட்ட நேத்திரத்திற்குச் சூரியப் பிரகாசத்தினுல் தடை உண்டாகிறதில்லே. உ. அங்ஙனமே * ஓர் நேத்ரவிருத்தி ஜலத்திற பிரவேசிதது அதனுள்ளிருக்கும மணலே விஷயஞ்செய்கின்றது. அதே நேத்ரத்தின் வேறு விருத்தி (ஜலத்தினுல்) தடுக்கப்பட்டதாய்ப் பிமபத்தை விஷயஞ செய்கின்றது. இது கண்டதை அநுசரித்த கறபனேயாம. ஆதலால் பிம்பத்திற் கங்நியமாகப் பிரதிபிமபமில்லேயென்பதே விவரணகாரர் மதமாம்.

## உகஉ. வித்தியாரணியசுவாமி விவரணகாரர்களது மதங்களின் வேற்றுமை.

வித்தியாரணியசுவாமிமுதலியோர் பாரமாரதிக வியாவகாரிக பிராதிபாலிக பேதத்தால் மூவகைச் சீவன் சுதியிருக்கின்றனர். வியாவகாரிக அந்தக்கரணத்திலுள்ள பிரதிபிமபத்தினே வியாவகாரிகஜீவ னெனபர். சொப்பனவஸ்தையின் பிராதிபாலிக அந்தக்கரணத்திலுள்ள பிரதிபிமபத்தினேப் பிராதிபாலிகஜீவ னென்பர். விவரணகாரா கிரமப்படி பிமபத்திற்கு வேருகப் பிரதிபிமப மில்லாமையால் ஜீவனது மூன்று பேதமு சமபவியாது. ஆதலால் மூவகை ஜீவ்வாதத்தை அநுசரித்தவாகள் பிமபப பிரதிபிமபங் ளின் பேதத்தை அங்கீகரிக்கின்றனர். அவாகள் மதத்தில் கண்ணுடி முதலிய உபாதியில் அநிவசுனீயப் பிரதிபிமபத்தின் உற்பத்தி உண்டாகின்றது. பிரதிபிமபத்தின் அதிஷ்டானம் கண்ணுடிமுதலியனவாம. பிமபத்தின் சுஷ்டானம நிமித்தகாரணமாம. நிமித்தகாரண மின்மையால் காரியத்தின் அபாவம உண்டாகிறதில்லே; பிம்பத்தின் நீக்கத்தினுல் பிரதிபிமபத்தின் அபாவ முண்டாகின்றது. அங்ஙனமாயினும், நிமித்தகாரணத்திற் கிரண்டு பேத முண்டு. ஒல்ரே காரியத்திற்கு மறைவின்றிய முறகாலத்திருப்பதாகிய நிமித்தகாரணமாம. வேறு சில காரியகாலத்திருக்கும் நிமித்தகாரண

* மணலேயும் பிம்பத்தையும் காணும் விருத்திகள் பலவாயினும் அவை விரைவிற் சுழலுதலால கொள்ளிவட்டமபோல் ஒரே விருத்தியாகக் காணப்படுகின்றன.

மாம. கடமுதலியவற்றிற்குத தனடம குலாலன்முதலியன நிமிதத காரணமாம். அவை காரியததிற்கு முனகூலதத திருபபுனவாதல் வேண்டுமெ. கட முதலியவற்றின சததைக உளதாக அவற்றின் அபேகூத இலலை. அஙஙனமேம பிரதயகூ ஞானததில சுவ (தனது) விஷயம நிமிததகாரணமாம. ஆனமி விஷயததின்சததைத ஞானகாலததில் அபேகூஷிகபபடுவதாம. அழிவிற் கெதிராமுகமான கடத் தோடு நேதரதிரததின தரமியாகமுனடாகியும, கடததின சாகூஷாத் கார முண்டாகிறதிலலை. ஆதலால ஞானகாலததில வாத்தமான கட முதலியனவே தமது சாகூஷாதகாரதறகு நிமிததகாரணமாம. தூரததுள்ள ஙகா பதாரததஙகளில ஒரூமைபபிரம முண்டாகின் றது. மததாநதகாரததுள்ள இரஜ்ஜுவில சாபபபிரம முண்டா கின்றது. ஆதலால ஒருமைபபிரமதறகு நிமிததகாரணம தூரத் திருத்தற்றன்மைத் தோஷமாம. இரஜ்ஜுவின் சாப்பபபிரமதறகு நிமிததகாரணம மநதாநதகார மென்பவற்றின் அபாவ முண்டாக, ஒருமைபபிரம சாப் பப்பிரமங்களின் அபாவம உண்டாகுதலால, காரியகாலததிருப் பனவாகிய தூரததிருதறறன்மை மநதாநதகாரமெனபன முறகூ றிய இரண்டுவித அநதியாஙகளுக்கும நிமிததகாரணமாம். அவ் வாற்றால் பிமபததின சதநிதானமும காரிய காலததிலிருப்பதே யாய்ப் பிரதிபிமப அநதியாசதறகு ஏதுவாதலால், பிமபததின் தீகதகால பிரதிபிம்பததின அபாவம சமபவிகின்றது. ஆதலால் சநநிதிபபடட பிமபமோ பிரதிபிம்பதறகு நிமிததகாரணமாம. பிரமததின் அதிஷடானமே உபாதானகாரணமெனப்படுகின்றது. ஆதலால் பிரதிபிமபதறின உபாதானகாரணம கண்ணாடி முதலி யனவாம. விவரணகாராமததில பிரதிபிமபதறின சொரூபமோ பிமபதறினும வேறன்று. ஆனால கண்ணாடியிலிருதது தறறனமை எதிராமுகததனமை பிம்பதறினும வேறாகுதனமைத தாமங்களின் உறபததி கண்டத்திருக்குமுகததி லுண்டாகினறது. அமமூன்று தாமஙகளும அநிரவசநீயமாம். அவறறின அதிஷடானவடிவ உபா தானகாரணம கண்டத்திருக்கும முகமாம. சநநிதிப்படட கண் ணாடி முதலியன நிமிததகாரணமாம். இவ்வாற்றால் சேதனததின் பிரதீபிம்பவாதத்தில் இரண்டுவித முண்டு. விவரணகாரா மதத்தில் பிரதிபிம்பத்திறகுப் பிமபதறகேறாடு அபேதமிருத்தலால் பிரதிபிம பத்தின் சொரூபம சதநியமாம. வித்தியாரணியசுவாமி முதலி

யோர்களது மதத்தில் கண்ணுடிமுதலியவற்றில் அகிரவசநீயமுகா பாசத்தின் உறபததி உண்டாகின்றது. இதனையே ஆபாசவாதம் என்பர். விவரணதத்திற்கூறிய பகூஷத்தினைப் பிரதிபிம்பவாதம் என்பர். இரண்டுபகூஷங்களின் பரஸ்பரகண்டநமும சுவபகூஷத்தின் மண்டநமும பெருநூல்களில் விளக்கமாயிருக்கின்றன ; விரிவஞ்சி எழுதபபடவில்லை.

## உகசு. இருவர்பகூஷங்களும் கொள்ளத்தக்கனவா மெனல்.

பிரதிபிமபவாதத்திலெனும ஆபாசவாதத்திலெனும ஆக்கிரகமிலலை. சேதனததில சமசாரதாமதனின சமபவமிலலை; ஜீவேசுவராகளுகுப பரஸபரம பேதமில்லை எனனும அதகரத்தை அறிவித்தறபொருடடு அநேகவிதம சொல்லபபட்டிருகின்றது. எந்தப்பகூஷத்தினல் அரங்கப் பிரஹ்மாத்மபோத முண்டாகுமோ அத்தப் பகூஷமே ஆதரிக்கத்தக்கதாம்.

## உகரு. பிம்பப்பிரதிபிம்பங்களின் அபேதபகூஷத்தின் கிரமம் அபேதத்தை அறிவித்தலில் எளிதாமெனல்.

அஙஙனமாயினுப, பிமபப் பிரதிபிமபங்களின் அபேதபகூஷத்தின் கிரமதகால் அசஙகப பிரஹ்மாதமபோதம அகாயாசமாக உண்டாகின்றது. எனெனின, சணணுடி முதலியவறறில முக முதலியவறறின் இலலைகிகப் பிரதிபிமபம் உண்டாகின்றது. ஆண்டும பிமபத்தின் சொரூபமோ எனனும ஏகரசமாம. உபாதியின சந்நிதானதத்தினல் பிமபப் பிரதிபிமபங்களின் பேதபரிம முண்டாகின்றது. அஙஙனமே பிரஹ்மசேதனமோ எனனும ஏகரசமாம. அஞ்ஞானமூதலிய உபாதிகளின சமபகதகால ஜீவத்தன்மை ஈசுவரதன்மைகளின் பிரதிவடிவப பிரம முண்டாகின்றது. இவ்வாற்றல் அசஙகசேதனததில் ஜீவ ஈசபேதஙகளின் மூற்றும் அபாவமிருகின்றது. ஜீவத்தனமை ஈசுவரத்தனமைத தாமஙக ளோ ஒன்றற்கொன்று பின்னமாய்க கறபிதமாம. ஒன்றற்கொன்று பினனமான தாமிகள கற்பிதமு மன்று. ஆதலால் பிம்பப் பிரதிபிமபஙகளின் அபேதவாதம் அதவைத மதத்திறகு அதிபயித அநுகூலமாம்.

## உகசு. ஆபாசவாதம் பிரதிபிம்பவாதத்தினும் சிறிது பேதமாமாறு.

ஆலை ஆபாசவாதத்தில எங்ஙனம அதிவசநீயம் பிரதிபிம்பமோ, அதற்கதிஷ்டானம கண்ணாடி முதலிய உபாதிகளோ, அங்ஙனமே விவரணத்திற்கூறிய பிரதிபிமப வாதத்திலும கண்ணாடியிலிருந்தற்போன்மை எதிர்முகத்தனமைமுதலிய தர்மங்கள் அநிர்வசநீயமாம.அவற்றினதிஷ்டானம் முகமுதலிய பிமபமாம.ஆதலால இரண்டுபக்ஷங்களிலும் அதிவசநீயத்திற்குப பரிணாமமுடைய உபாதாவம அஞ்ஞானமெனறு கூறுதல வேண்டும்.

## உகள. பிரதிபிம்பத்திற்கு நிழல்வடிவத்தன்மையை நிஷேதித்தல்.

சில தூலாசிரியா சாயையை (நிழலை) ப்பிரதிபிமபமெனக் கொண்டிருக்கினறனர. அது சமபவியாது. ஏனெனின ரீரம் விருக்ஷ முதலியவறறினால எவ்வளவிடதத்தில் பிரகாசத்தின் தடை உண்டாகிறதோ, அவ்வளவிடதத்தில் பிரகார விரோதியான அந்தகாரமுண்டாகின்றது. அவ்வந்தகாரதத்தினை சாயை யென்பா. அந்தகாரத்திற்கு நீலவுரு மிருத்தலால் சாயைக்கும நியமமாக நீலவுரு முண்டாகினறது. ஸ்படிக முதலானகளின் பிரதிபிமபம வெண்மையாகினறது. சொணாதத்தின் பிரதிபிமபம் பீத உரு முடையதாகின்றது. சிவப்பான மாணிக்கத்தின் பிரதிபிமபதத்தில் சிவப்பு உருவமுண்டாகினறது. பிரதிபிம்பதத்தினை சாயை வடிவமாகக் கொளளின சகல பிரதிபிம்பங்களுக்கும நீல உருவம வேண்டும. இதனால சாயை வடிவம பிரதிபிமப மன்று.

## உகஎ. பிரதிபிம்பம் பிம்பத்தினும் வேறுபிய வியாவகாரிகத் திரவியவடிவமா மென்பதை நிஷேதித்தல்.

சில இங்ஙனம கூறுகின்றனர :—அந்தகார சொரூபமாகிய சாயையினும பிரதிபிமபதத்திறகுப பேதமிருக்கினும, மீமாமஸ காமதத்தில் ஒளியின்மையை அந்தகாரமெனக் கொள்ளாது ஆலோகவிரோதியாகிய பாவரூபம் அந்தகாரமாம்; அதனிடதத்திற் கிரியை யிருத்தலாலும நீல உருவ மிருத்தலாலும அந்தகாரம் திரவியமாம்; கிரியையும குணமும திரவியதத்திலேயே யிருக்குமாக

லின் பத்தாந்திரவியம் அந்தகாரமாமெனக் கொளவதுபோல, பிரதிபிம்பமும பிருதிவி ஜல முதலியவற்றினும வேறுகிய திரவியமாம் எனறு இவ்வாறு பிரதிபிம்பத்தினைச் சுவதந்திரத்திரவியமெனக்கொளளின், அவனை, அப்பிரதிபிமபம நிதியத் திரவியமா? அல்லது அநிதியத் திரவியமா? எனறு கேட்கவேண்டும. நித்தியதிரவியமாயின் ஆகாயமுதலியவறைப்போலஉறபத்தி நாசமிலலாததாகவே யிருகுதலின், பிரதிபிமபதிற்கு உறபததி நாசம தோறறலாசாது. இதனால பிரதிபிம்பத்தினை அநித்தியத திரவிய மெனின, உபாதானதின தேசதில காரியத்திரவிய மிருக்கின்றது. ஆதலால் பிரதிபிமபதின உபாதானகாரணம் கண்ணாடி முதலியனவெனறே கொள்ளவேண்டியதாகும. கண்ணாடிமுதலிய வற்றிறகுப் பிரதிபிமபதின உபாதானதன்மை சம்பவியாது. ஏனெனின், கணணாடி முதலிய உபாதானதில் பிரதிபிம்பவடிவத திரவியதின் இருபபை அங்கீகரிகினை, அவனை இது கேடகவேண்டும:—பிரதிபிமபத்திலுளள உருவம, குறுமை நெடுமைமுதலிய பரிமாண மெனனும குணங்களும, அங்ஙனமே பிம்பதினும விபரீத எதிர்முகதனமை முதலிய தாமங்களும, கைகால் முதலிய அவயவங்களும பிரதிபிமபதில் தோறறுகினறன. அவை பிரதிபிமபதில வியாவகாரிகமா?. அலலது? மிதையாகத் தோறறுகின்றனவா? உருவம பரிமாண முதலியவற்றிற்குப் பிரதிபிம்பதில் வியாவகாரிக அபாவம அங்கீகரிதது, 'பிரதிபிமபத்தின் உருவமுதலியவறறிறகுப் பிராதிபாவிகம் அங்கீகரிக்கின், வியாவகாரிகத திரவியசொரூபபபிரதிபிமபதநின் அங்கீகாரம் நிஷ்பலமாம. பிரதிபிமபததின் உருவம பரிமாண முதலியவற்றை வியாவகாரிகமெனக் கொளளின், அறப பரிமாணமுடைய கண்ணாடியில மகா பரிமாணமுடைய அநேக பிரதிபிமபங்களின் உற்பத்தி சமபவியாது. பிரதிபிமப மிதியாத்தன்மையிலோ சரீரத்தின் மததியில் சுருஙகிய இடதில சொப்பனத்தின் மித்தையாகிய யாணை முதலியவறறின் உற்பததி உண்டாகுதலால் முற்கூறிய தோஷம் சமபவியாது. அங்ஙனமே பிரதிபிமபத்தினை வியாவகாரிகத் திரவியமெனக் கூறின், ஒருவித உருவமுடைய கண்ணாடியின் சமான உருவமுடைய பிரதிபிம்பததின் உற்பத்தியே உண்டாதல் வேண்டும. அநேகவித உருவமுடைய அநேக பிரதிபிம்பங்களின் உற்பத்தி ஒரு கண்ணாடியில் உண்டாகின்றது. ஒரு

உருவமுடைய உபாதானத்தினுல் அநேகவித உருவமுடைய அநேக உபாதேய(காரி)யங்களின் உற்பத்தியுண்டாகிறதில்லை. தர்ப்பணத்தின் இடையில் அல்லது தர்ப்பணத்திற்கு அதிரமீபத்திலுள்ள மற்றைய பதார்த்தங்கள் ஒன்றுந் தோற்றுகிறதில்லை. எதனுல் அநேகவித உருவமுடைய பிரதிபிம்பங்களின் உற்பத்தி சாமான்யகின்றதோ, அதனுல் பிரதிபிம்பத்திற்கு வியாவகாரிகத்திரவியவடிவம் கூறுதல் சமபவியாது. அனுல் தர்பணத்தின் அதிரமீபத்தில் உளள வேறெ துவுமோ பிரதிபிம்பத்திற்கு உபாதானமாகுகாணப்படுகிறதில்லை. கண்ணடியே உபாதானமெனக கொள்ளவேணடியதாகும். அது சம்பவியாது. ஏனெனில், கனமூலளதாய் அவயவங்களோடு கூடிய தாய் முன்போல விகாரமின்மியதாய்த தோறுகிகொண்டிருக்க, கண்ணடியில் குழிவு உயாவுதாடை மூகமுமூலிய அநேகவித அவயவமூலிய வேறு திரவியமாகிய பிரதிபிம்பத்தின் உற்பத்தி கூறுதல முற்றும யுக்தியீனமாம். ஆதலால் பிமபத்திறகு மேலுரைத்த வியாவகாரிகத திரவியவடிவப் பிரதிபிமப மிருக்கிறதெனனும் பக்ஷமும, தாயாவாதத்தைபோல புகங்கதமாம்.

## உகக. ஆபாசவாதப் பிரதிபிம்ப வாதங்களின் யுக்தியோடி கூடிய தன்மையைக் கூறி, இரண்டு படலங்களிலும் அஞ்ஞானம் உபாதானமாதலைக் கூறுகின்றார்.

இவ்வாற்றால சுருதிப்பட்ட கணணடி முதலியவற்றினனறும் முகமுதலிய அதிஷ்டானத்தில் பிரதிபிமபத்தன்மைமுதலிய அரிவசநீய தாமங்களை உறபத்தியாகின்றன. அலலது சுருதிப்பட்ட முகமுதலியவற்றினினறும கண்ணடிமுதலிய அதிஷ்டானத்தில அரிவசநீயப் பிரதிபிமபம உறபத்தியாகிறது என்னும இரண்டு பக்ஷமும யுக்தியோடி கூடியனவாம. அதனால அரிவசநீய தாமத்திறகு அலலது அரிவசநீய பிரதிபிமபத்திறகு உபாதானகாரணம கூறுதல் வேண்டும.

## உஉ0. மூலாஞ்ஞானத்திற்கு அல்லது, தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பத்தின் அல்லது அதன் தர்மங்களின் உபாதானத்தன்மை சம்பவியாமையின் சங்கை.

ஆண்டு ஜகத்தின் காதாரண காரணமாகிய மூலாஞ்ஞானமே பிரதிபிமபத்தன்மை முதலிய தாமங்களுக்காவது அல்லது தர்

மிகளவது உபாதானமெனக் கூறின், ஆகய முதலியவறறைப் போல; மூலாஞ்ஞானததின் காரியமாகுதலால பிரதிபிமபத தன்மை முதலிய தாமம் அல்லது தாமியாகிய பிரதிபிமபம சத தியமாதல்வேண்டும; முறறுமியபடி அநிவசநீயமாகக் கொண்டிரு க்கின்றனர. ஆதலால் மூலாஞ்ஞானதிறகு அநிவசநீயததின உபாதானதனமை சமபவியாது. அங்ஙனமே விவரணகாரா மதத தில் முகாவசின்ன சைதனதனுள்ள அஞ்ஞானதினைப பிரதி பிமபதனமை முதலிய தாமங்களுக்கு உபாதானமாகக கொண் டிருகின்றனர. வித்தியாரணியசுவாமி முதலியோர மதததில் கண் ணாடி யவசின்ன சைதனதிறகும அஞ்ஞானத்தைப பிரதிபிம பதிறகு உபாதானமாகக கொண்டிருகினறனர. ஆனல் அவ ஸ்தா (தூலா) ஞ்ஞானததின் காரியதிறகு அநிவசநீயதனமை யிருதலால சதியததின அடைவு இலலையாயினும, அதிஷ்டான ஞானதினல் அநிவசநீயதின நிவிருததி உண்டாகினறது. பிரதி பிமபாதியாசதின அதிஷ்டானம முற கூறியபடி முகாவச சினனசேதனம் அல்லது கண்ணாடி யவசின்னசேதனமாம். முகத தின் ஞானம அலலது கண்ணாடியின ஞானமே அதிஷ்டானதின ஞானமாம. அதற்குப பிறகிய காலதிலும பிரதிபிமபதின பிர தீதி எல்லோருகுகும அநுபவசித்தமாம. ஆதலால் முகாவசின்ன சேதனத்தை அலலது கணணாடி யவசின்ன சேதனதை ஆவ ரிகும அவஸ்தாஞ்ஞானமும பிரதிபிமபாதியாசதிறகு உபா தானமெனல் பொருநதாது.

## உஉக. முற்கூறிய சங்கைக்கு ஓர் நூலாசிரியரது கிரமப்படி சமாதானம்.

இநதஸ்தானததில் ஓர நூலாசிரியர இவ்வாறு சமாதானம செய்கின்றனர:—சுததிராஜதமுதலியவறறின் அத்தியாசததில் அதி ஷ்டானதினின விசேஷ ஞானதினல் ஆவரணசததி விகேஷபசததி வடிவ அஞ்ஞானதின இரண்டு அமசஙகளும நிவிருதியாகின்ற னர. அங்ஙனமாயினும, அநுபவாநுசாரமாகப பிரதிபிமபாதியா சதின அதிஷ்டான ஞானததால் அஞ்ஞானதின ஆவரணசத்தி அமசமே நிவிருதியாகின்றது. ஜீதலால அதிஷ்டான ஞானதி னல் ஆவரணசதிவடிவ அம்சதின நிவிருதி உண்டாகியும, பிரதி பிமப முதலியனவும அவற்றின் ஞானமுமாகிய விகேஷபத்திற்

கேதுவான அஞ்ஞானத்தின் அப்சம இருத்தலால், அதிஷ்டான ஞானத்திற்குப பிந்தியகாலத்திலும் பிரதிபிம்பமுதலியனே தோற் றுகின்றன. ஆதலால உபாதி அவச்சின்னசேதனத்திலுள்ள தூலாஞ் ஞானத்தின் காரியம் பிரதிபிம்பாந்தியாசமாமென்னும் பக்ஷம் சம பக்ஷிக்கின்றது.

## உஉஉ. முற்கூறிய சங்கைக்குப் பிறநூலாசிரியர் முறைப்படி சமாதானம்.

அனைவியும் பிறநூலாசிரியர் மதம இதுவாம:—கண்ணுடி முதலியவற்றிற குபாதானமாகிய மூலாஞ்ஞானமே பிரதிபிம்பாத தியாசத்திறகு உபாதானமாம். ஆதலால கணணுடி முதலியவற் றின் ஞானமுனடாகியும பிரதிபிம்பத்தின் பிரதிதி உணடாகின் றது. பிரஹ்மத்தின் ஞானத்தினால் பிரஹ்மசேதனத்தை ஆவரிக் கும அஞ்ஞானமும அதன காரியமும நிவிருத்தி அகினறன. கண்ணுடி முதலியவற்றின ஞானத்தினால கணணுடி முதலியவற றில அவசகின்ன சேதனத்தை ஆவரிகும் அஞ்ஞானத்தின நிவி ருத்தி உணடாகியும, பிரஹ்ம சொரூபத்தை ஆவரிகும அஞ் ஞானத்தின நிவிருத்தி உண்டாகிறதிலலீ. பிரஹ்மாதம சொரூ பதைத மறைகும அஞ்ஞானத்தை மூலாஞ்ஞானமெனபர. உபாதி யவசகின்ன சேதனத்தை மறைகும அஞ்ஞானத்தை அவஸ்தாஞ் ஞான மெனபர. அதனையே தூலாஞ்ஞான மெனபர. மூலாஞ்ஞானத் தோடு தூலாஞ்ஞானத்திறகுப பேதம மிருகினறதா? அலலது அபேதம மிருகினறதா? எனனும விசாரத்தைமேல் வழுதுவோம.

## உஉகூ. மூலாஞ்ஞான தூலாஞ்ஞானங்களின் பேதத்தில் சிறிது விசாரம்.

மூலாஞ்ஞானத்திறகுப பிரதிபிமபாத்தியாசத்தின் உபாதான தத்தனமையை அங்கீகரிக்கின், கணணுடி முதலியவறறைப்போல வியாவகாரிகமாகவே பிரதிபிமபம் முதலியனவும உண்டாதலவேண் டும. பிரஹ்மஞானமினறியே பிரதிபிமபத்தனமை முதலிய தாமங் களினும, அங்ஙனமே பிரதிபிம்பத்தினும மித்தியாத்தனமைப் புத்தி யிருந்தலால பிராதிபாவிகமலல. மூலாஞ்ஞானத்திறகு முறகூறிய அத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அகிகரிக்கின, பிராதிபா விகத்தன்மை சம்பவியாது. அங்ஙனமாயினும்பிரஹ்மஞானத்தினால்

நிவிருத்தியாகத்தக்க அஞ்ஞானத்தின் காரியம் வியாவகாரிகமாம். பிரஹ்ம ஞானமின்றியே நிவிருத்தியாகத்தக்க அஞ்ஞானதின் காரியம் பிராதிபாஸிகமாம். இவ்வாறு வியாவகாரிக பிராதிபாஸிகங்களுக்குப் பேதங்கூறின் முற்கூறிய சங்கை உண்டாகின்றது. அஞ்ஞானதிற்கு வேறுனதாய்த தோஷ ஜநியமாகாது, கேவல அஞ்ஞான ஜநியமாமாயின அதனை வியாவகாரிகம் என்பர். அஞ்ஞானத்திறகு வேறுனதாய்த தோஷ ஜநியமாவதைப் பிராதிபாஸிக மென்பர. இவ்வாறு வியாவகாரிகப் பிராதிபாஸிகங்களுக்குப் பேதங் கூறின முறைகூறிய சங்கை சமபவியாது. ஏனெனின் கண்ணுடி முதலிய உபாதியினுல் முகமுதலியவற்றின் சம்பந்தமுண்டாகப பிரஹ்ம சேதனத்துளள மூலாஞ்ஞானத்தின் பிரதிபிமபத்தன்மை முதலிய சமபவடிவ அல்லது பிரதிபிம்பத்தன்மைமுதலிய தாமிவடிவ பரிணாம முண்டாகின்றது. இரண்டு பகூஷங்களிலும் அதிஷ்டானம பிரஹ்மசேதனமாம.

## உஉச. ஆபாசவாதப் பிரதிபிம்ப வாதங்களில் தர்மி அல்லது தர்மத்தின் அத்தியாசத்தினது உற்பத்திக்கு உபாதானமாகத் தூலாஞ்ஞானத்தைக் கொண்டு அதிஷ்டானத்திற்குப் பேதங்கூறுதல்.

விததியாரணியசுவாமிகள மதத்தில் பிரதிபிமபதற்கு உற்பததியை அஙகிகரிகின கண்ணுடி முதலிய அவசசின்ன சேதனம அதிஷ்டானமாம. கண்ணுடி முதலிய அவசசினன சேதனத்துள்ள அஞ்ஞானம உபாதானமாம. அங்ஙனமே விவரணகாரர் மதத்தால் பிரதிபிமபதனமை முதலிய தர்மங்களின் உற்பத்தியிணியே அஙகிகரிகின், பிமபாவசசின்ன சேதனம் அதிஷ்டானமாம. பிமபாவச்சினன சேதனதது அஞ்ஞானம் உபாதானமாம். இவ்வாற்றால தாமாதநியாசபகூ தர்மியத்நியாசபகூஷங்களில் அதிஷ்டானதிற்கும உபாதானத்திறகும பேதமுண்டு என்று முன் சொல்லப்படடிருகின்றது. அது அவள்தாஞ்ஞானத்திறகு முறை கூறிய அதநியாசத்தின உபாதான தன்மையை அங்கிகரிதது கூறப்பட்டிருகின்றது.

---

## மூலாஞ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரித்து, அதிஷ்டானத்திற்குப் பேதமும் மூலாஞ் ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்திற்கு உபாதானமாந்தன்மையில் யோக்கியதையும் கூறுதல்.

மூலாஞ்ஞானத்திற்குஉபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், இரண்டுமதங்களிலும் அதிஷ்டானத்திற்குப் பேதம சம்பவியாது. மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின உபாதானத் தன்மையை அங்கீகரித்தல வேண்டும. எனினின, அவ்வஞ்ஞா னத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின உபாதானத்தன்மையை அங் கீகரிக்கின கண்ணுடி முதலியவற்றின ஞானத்தால, அல்லது முக முதலியவற்றின ஞானத்தால் அஞ்ஞானத்தின ஆவரணசக்தி அம் சத்தின் நிவிருத்தி உண்டாக விக்ஷேபசத்தி அமசத்தின ஸ்திதியை அங்கீகரிக்கின, பிரஹ்ம ஞானத்தால் பிரஹ்ம சொரூபத்தை ஆவ ரிக்கும மூலாஞ்ஞான அமசமும நஷ்டமாகும. அங்ஙனமே சுத்த மூதலியவற்றின ஞானத்தால சுத்தபரிபவசினன தேகாதனாதை ஆவரிக்கும் தூலாஞ்ஞானமசமும நஷ்டமாகும. வியாவகாரிகப் பிராதிபாஸிக விக்ஷேபத்திற்கேதுவாகிய இருவகை அஞ்ஞானமச ங்களும சேஷமாயிருக்கின, விதேககைவல்யத்திலும வியாவகா ரிகப பிராதிபாஸிக விக்ஷேபத்தின இருப்பினல் சகல சம்சாரத் தின் நீக்கமின்மையும உண்டாகும். ஆதலால் ஆவரண ஏதுவான அஞ்ஞானம்சத்தின நிவிருத்தி உண்டாக விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞானமசம எஞ்சி யிருப்பதாக கூறுதல் சமபவியாது.

## ஈஉசு. தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தி யாசத்தின் உபாதானத்தன்மையைக் கூறுவோர் மதம்.

தூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிமபாதாதியாசத்தின் உபாதா னத்தன்மையைக கூறுவோர இங்ஙனம கூறுகின்றனர் :—ஆவ ரண ஏதுவாகிய அஞ்ஞானமசத்தின நிவிருத்தி உண்டாக விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞானமசம எஞ்சியிருத்தல சுவாபாவிக மன்று. ஆஞல் விக்ஷேப ஏதுவாகிய அஞ்ஞானமசத்தின் நிவிருத்திக்குப் பிரதிபநதக முளதாயின, ஆண்டு விக்ஷேப ஏதுவாகிய அஞ் ஞானமசத்தின சேஷமிருக்கும. பிரஹ்ம ஞானத்தினல் ஆவரண

வதுவாகிய அஞ்ஞானமசத்தின் நிவிருத்தி உண்டாகியும், விகேஷப வதுவாகிய அஞ்ஞானமசதத்தின் நிவிருத்தியில் பிரதிபந்தகமான பிராரத்தகாமமிருக்கும. அவ்வளவு காலம விகேஷப வதுவாகிய அஞ்ஞானம்சதத்தின் சேஷமிருக்கும. பிராரப்த வடிவப் பிரதிபந்தகதத்தின் அபாவமுண்டாக, விகேஷப வதுவான அஞ்ஞானமசத தின் நிவிருதத உணடாகின்றது. ஆனல் இவ்வளவு பேதமுண்டு:— ஆவரிக்கும அஞ்ஞானம்சதத்தின் நிவிருத்தியோ மகாவாக்கியஜந்ய அந்தக்கரணதத்தின் பிரமை வடிவ விருத்தியினல் உண்டாகின்றது. பிராரப்தபலதத்தால எவ்வளவு வருஷம ஜீவிதமிருகின்றனோ, அது வரையிலும் முன்விருத்தியோ இருகிறதில்லை. விகேஷப நிவிருத்தியின்பொருட்டு மாணத்திற்ற மறைப்பின்றிய காலத்தில் மகாவாக்கிய விசாரத்தின் வியானம் (விதி) வித்துவானுக்கில்லை. மரணமூர்சசை காலததில் மகாவாக்கிய விசாரத்தின சமபவமுமிலலை. ஆதலால விகேஷபசத்தியின நாசத்திற கேது தததுவஞானதின சமஸ்காரத்தோடுகூடிய சேதனமாம. ஆவரணசத்தியின நாசதிற் கேது தததுவஞானமாம். எங்ஙனம மூலாஞ்ஞானதினது விகேஷபசத்தியின் நிவிருத்தியில பிரதிபந்தகம பிராரப்தகாமமோ, அஙனமே பிரதிபிம பாதத்தியாசததில விகேஷபசத்தியின நிவிருதியில் முகமுதலிய பிம்பதமதாடு கண்ணுடிமுதலிய உபாதியின் சமபந்தமே பிரதிபந்தகமாம். அதன சற்பாவதில அவரண அமசதின் நிவிருதி உண்டாகியும, பிரதிபிமப முதலிய விகேஷபதின் நிவிருதி உணடாகிறதில்லை. பிமப உபாதியின சமபந்த வடிவப் பிரதிபந்தகதத்தின் நிவிருதி உண்டாக, விகேஷபதின் நிவிருதி உணடாகின்றது. சுததிரஜத முதலிய அதியாச முண்டாயின், அண்டி அவரணத்தின் நாசத்திறகுப்பின விகேஷபதின் நிவிருதியில் பிரதிபந்தகத்தன்மையின அபாவத்தால் விகேஷபம சேஷமிராது. இவ்வாற்றல் விகேஷபநிவிருத்தியில பிரதிபந்தகதத்தின அபாவதோடு கூடிய அதிஷ்டானஞானமை வதுவாதலாலும, மோகூதசையில் பிராரப்தவடிவப் பிரதிபந்தக மில்லாமையினலும சமஸாரத்தின் உணாச்சி சமபவியாது. ஆதலால் அவரணசதத்தியின் நாசத்திற்குப் பின்னும் விகேஷபசதத்தியின் இருப்பை அஙகீகரிக்கின், முற்கூறிய தோஷமில்லாமையினல் அவஸதாஞ்ஞானததிணையும பிரதிபிம்பாத்தியாசதத்திற்கு உபாதானமாகக் கொளளுதல் உசிதமாம.

---

இங்ஙனம் கூறுதலும பொருந்தாது. எனெனின் யாண்டுத் தேவதத்தனது முகம கண்ணடிமுதலிய உபாதி என்பவற்றின் யதார்த்தசாக்ஷாத்காரமயஞ்ஞத்தனுகுண்டாகின்றதோ, அதற்குப்பிறகியகாலத்திலுமதேவதத்தனமுகத்திற்குக் கண்ணடியோடு சமபந்தமுண்டாக, யஞ்ஞத்தனுக்குத் தேவதத்தன முகத்தினுல பிரதிபிமபத்தன்மைமுதலிய தாமங்களின அத்தியாசம விவரணமதத்தி லுண்டாகின்றது. அங்ஙனமே விதத்தியாரணியசுவாமிகள் மதத்தில தேவதத்தன முகத்தின் பிரதிபிமபத்தினது அத்தியாசம் கண்ணடியி லுண்டாகின்றது. அது உண்டாகலாகாது. எனெனின் முற்கூறிய அத்தியாசத்தின நிவிருத்தியில பிமப உபாதிகளின் சமபந்தமே பிரதிபிம்பமாம. முகம அல்லது கண்ணடி வடிவ அதிஷ்டானத்தின ஞானகாலத்தில அத்தபிரதிபந்தக மிலலாதிருத்தலின், பிரதிபந்தகத்தின் அபாவத்தோடுகூடிய அதிஷ்டான மூண்டாகின்றது. விவரணகாரா மதத்தில "தேவதத்தனது முகத்தில தாப்பணத்திலிருக்குந்தனமை எதிமுகத்தனமை முதலியன இல்லை" என்னும ரூபம அத்தியாசத்திறகு விரோதியாம. விதத்தியாரணிய சுவாமிகள் மதத்தில "கண்ணடியில தேவதத்தன் முகமில்லை" எனனும ஞானம் முறகூறிய அத்தியாசத்திறகு விரோதியாம. எனெனின் இரண்டு மதங்களிலும கிரமமாகத் தேவதத்தன முகத்தில கண்ணடியி லிருத்தறதனமை எதிமுகத்தன்மை, கண்ணடியில் தேவதத்தன் முகம எனபதாக அத்தியாசத்தின வடிவத்திற்குப்பேதமிருகின்றது. அத்தகேதுவான விசேஷபசதி விசேஷட அஞ்ஞானமத்தின் நிவிருத்தியும உண்டாயிருக்கின்றது. ஆதலால் உபாதானதீதின் அபாவத்தால் முற்கூறிய லக்ஷணத்தில யஞ்ஞத்தனுக்குத் தேவதத்தனது முகத்தின் பிரதிபிம்பப் பிரமம உண்டாதல் வேண்டும. 'பிரஹ்ம சேதனத்துள்ள மூலாஞ்ஞானத்திற்கே பிரதிபிமபாத்தியாசத்தின் உபாதானத்தன்மையை அங்கிகரிக்கின், முற்கூறிய உதாரணத்தில் தேவதத்தனது முகத்தின் ஞானமும் கண்ணடியினஞானமுமுண்டாகியும,பிரஹ்மவடிவ அதிஷ்டான ஞானத்தின் அபாவத்தால் உபாதானத்தினிருப்பால் முற்கூறிய அத்தியாசம சமபவிக்கின்றது.

ஆதலால் மூலாஜ்ஞானமே பிரதிபிம்பாத்தியாசத்தீற்கு உபாதான மாமென்னும பக்ஷமே நலமுடையதாம.

## உஉ. மூலாஜ்ஞானம் உபாதானமாம் என்னும் பக்ஷத்திற் சங்கை.

ஆனல் இப்பக்ஷத்தில் இது சங்கையாம:—பிரஹ்மசைதனத்துள்ள மூலாஜ்ஞானத்திற்கு பிரதிபிம்பாத்தியாசத்தின உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின, பிரஹ்மஜ்ஞானமின்றிப பிரதிபிம்பப் பிரமத்தின நிவிருத்தி உண்டாதல வேண்டும். எனெனின அதிஷ்டானத்தின் யதாரத்தஜ்ஞானத்தினல அஜ்ஞானத்தின நிவிருத்தி வாயிலாகப் பிரமத்தின நிவிருத்தி உண்டாகிறபடி. பிரதிபிம்பபாத்தியாசத்தின அதிஷ்டானம முற்கூறிய பக்ஷத்தில பிரஹ்ம சைதனமாம. சுண்ணுடி யவரதனை சேதனம அல்லது முகாவசதினை சேதனம அதிஷ்டானமன்று. முகம சுணுடி முதலியவற்றின் ஜ்ஞானத்தால மூலாஜ்ஞானத்தின நிவிருத்தியை அங்கீகரிக்கின, உபாதானத்தின காரணத்தால முகம் சுணுடி முதலிய வியாவகாரிக பதார்த்தங்களின அபாவ முணரதல வேண்டும. ஆதலால் மூலாஜ்ஞானத்திற்கு உபாதானத்தனமையை அங்கீகரிக்கின், முகமுதலியவற்றுல பிரயோஜனமின்மையின விரோதகாலத்திலும பிரதிபிம்பாத்தியாசத்தின நிவிருத்தியாபத்தி.

## உக. இச்சங்கைக்குச் சமாதானம்.

இச்சங்கைக்கு நிஷ்காரணமாம:—அவரணசக்தி விக்ஷேபசக்தியென்னும பேதத்தால இரண்டாம சக்தியாபாடையது அஜ்ஞானமாம. பிரதிபிம்பத்தமின்றிய அதிஷ்டான ஜ்ஞானத்தினல எல்லா அஜ்ஞானத்தின நிவிருத்தியும உண்டாகின்றது. பிரபஞ்சகாமமாகிய பிரதிபந்தத்தை மிருத்திவடிவ அதிஷ்டான ஜ்ஞானமுண்டாகியபட, விக்ஷேபசக்தியாகிய அஜ்ஞானமசைதனத்தின நிவிருத்தி உண்டாகிறதில்லை. கட முதலிய அசேதன பதார்த்தகோசர ஜ்ஞானமுண்டாயின், அவ்வறிவ அஜ்ஞானத்தின் நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. ஆனல எவ்வளவுகாலம கடாதிகளின் ஸ்புரணமிருக்கின்றதோ, அவ்வளவுகாலம அந்தகாரத்தினல் அவரி(மறை)க்கப்பட்ட வீட்டின் ஏகதேசத்தில பிரபையின் பிரகாசத்தினல் அந்தகாரம் சுருங்குவதுபோல, அஜ்ஞான ஜநிய அவரணத்தின் சுருங்குதல் உண்டாகின்றது. அங்ஙனமே முகம சுணுடிமுதலி

யவற்றின் சாகூதாத்காரத்தால் பிரஹ்மத்தை மறைக்கும் மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியானது உண்டாகாவிடினும், அஞ்ஞானத்காரமேயுள்ளிய பிரதிபிம்பாத்மகியாச வடிவ விக்ஷேபத்திற்கு முகம் கண்ணாடி முதலியவற்றிலுள்ள ஞானத்தினால உபாதானத்தில் ஒடுங்குதலவடிவ சங்கோசம் உண்டாகின்றது. உபாதானத்தில் விலயமாதலேயே காரியத்தின் நாசமெனப்படும். இவ்வாறு மூல அக்ஷ்டான ஞானத்தினல அபாவத்காரமான அஞ்ஞானத்தின் நிவிருத்தியின்றிய பிரதிபிம்பாத்மகியாத்தினல பாதகவடிவ நிவிருத்தி சம்பவிப்பதாயினும், முகம கண்ணாடி முதலியவற்றின் ஞானத்தால் பிரதிபந்தகாபாவ முண்டாக, கூடியத்திற்கு உபாதானத்தில் விலயவடிவ நிவிருத்தி உண்டாகின்றது.

## உகூ. ஏகதேசியின் கிரமமாகப் பாதத்தின் இலக்ஷணம்.

இவ்வாறுமூல சமாதானத்தையில் பிரதிபிம்பாத்மகியாத்தின் பாதகம் உண்டாகுதலில்லை என்னும் சங்கித்து யுக்திகளிகந்திருக்கின்றனை. இமமதத்தில் அபாவ நிவர்த்தகத்வ பாதகமென்று கூறுவதில்லை. எனெனின “முகத்தில் கண்ணாடியிலிருக்குதற்றனமையிலில்லை, கண்ணாடியில முகமில்லை” வென்று விவரணகாரா வித்தியாரணிய சுவாமிகளின மத பேதத்தால இருவகை அதியாசத்தின் அபாவ நிசசயம சுலப அஞ்ஞானிகளுக்கும அப்பவ நிதத மாம. அதன் அபாவத்தைச சமர்த்தகமெனறு கூறுதல் சம்பவியாது. அதலால பிரஹ்மஞானமின்றிய பிரதிபிம்பாத்மகியாத்தின பாதகமில்லை எனகிகாள்ளின், அவை மதத்தில் கேவலம அதிஷ்டான சேஷத்வநிர்ணய பாத மெனபம. பிரதிபிம்பாத்மகியாத்தின் அபாவ நிசசயம முறைகூறியபடி உண்டாகியும, சமசாரதசையில் அஞ்ஞானத்தின சத்தையிருக்கலால, கேவல அதிஷ்டானம சேஷமனறு; அலல அஞ்ஞான விஷயட அதிஷ்டான மிருக்கினறது. இவ்வாறுமூல பிரதிபிம்பாத்மகமின்றிய முகம் கண்ணாடி முதலியவற்றின் சாகூதாத்காரத்தினல அதிஷ்டான ஞானமின்றிய பாதகவடிவ அஞ்ஞான நிவிருத்தியின அபாவமுண்டாகியும, தனது உபாதானத்தில் காரியத்தின விலயவடிவ சங்கோச முண்டாகினறது. உபாதான வடிவமாகக காரியம நிலைக்குலலேய சூக்ஷ்மாவஸ்தை யென்பர்.

---

## உகக. அநேக நூலாசிரியர்கள் மதப்படி பாதத்தில் இலக்ஷணமும், பிரஹ்மஜ்ஞானமின்றிப் பிரதி பிம்பாத்தியாசத்தினது பாதத்தின் சித்தியும்

அநேக நூலாசிரியா மதத்தில பிரஹ்மஜ்ஞானமின்றி மூலாஜ்ஞானத்தின் நாசமின்றியும மூலாஜ்ஞான ஜந்யப் பிரதிபிம்பாத்தியாசத்தின் பாத முண்டாகின்றது. அவர்கள் அபிப்பிராயம இது வாம்:—மித்தியாதத்வ நிசயம அல்லது அபாவநிசயம பாத மெனப்படுகின்ற தென்பது சாவ கிரந்தங்களின் நிசயமாம். அநேக இடங்களில மித்தியாதத்வ நிசயமும அபாவநிசய பதார்த்தமாகின்றது. இங்கு அதிஷ்டானமாத்திரம சேஷ மிருக்கின்றது. அஜ்ஞானம சேஷித்த திருக்கவில்லை. இவ்வபிப்பிராயத்தால் சில நூலாசிரியா அதிஷ்டானமாத்திரத்தின் சேஷமே பாதத்தின் சொரூபமெனக் கூறியிருக்கினறனர். அதிஷ்டானமாத்திரத்தின் சேஷம் பாதத்தின் லக்ஷணமன்று. பாதத்திற்கு இதுவே லக்ஷணமாயின், ஸபடகத்தில் செமமைப பிரமமுதலிய லோபாதிக (உபாதியோடுகூடிய) அத்தியாச முண்டாகினறது. அங்கு அதிஷ்டான ஞானத்திறகுப பிரதியகாலத்திலும செமபரத்தம பூவிற்கும ஸ்படிகத்திறகும பரஸபர சமபந்தவடிவப் பிரதிபந்தக மிருக்கச செமமை அத்தியாசத்தின நிவிருத்தி உண்டாகிறதில்லை. அங்ஙனமே வித்துவானுகுப பிராரப்தகாமப பிரதிபந்தக மிருக்கச சரீரமுதலியவறறின் நிவிருத்தியுண்டாகிறதில்லை. ஆதலால்அஜ்ஞானகாரிய விசிஷ்ட அதிஷ்டானம இரண்டிடங்களிலு மிருத்தலின், கேவல அதிஷ்டான சேஷத்தின் அபாவத்தால பாத வியவகார மில்லை. அது உண்டாதல்வேண்டும. சுவேத(வெண்மம) ஸ்படிகத்தின் சாஸ்ரீதகாரத்தால் செமமை அத்தியாசத்தின் பாத முண்டாகினறது. பிரஹ்ம சாக்ஷாத்காரத்தால ஜீவன்முக்த வித்துவானுக்குச் சமசாரத்தின் பாதமுண்டாகின்றது. இவ்வாறுல விசேஷபத்தோடுகூடிய அதிஷ்டானத்தில பாத வியவகாரத்தைச சகல நூலாசிரியாகளும் எழுதியிருக்கின்றனர். ஆண்டு அத்தியாத பதார்த்தத்தில் மித்தியாதத்வமை நிசயமம அலலது அபாவநிசயமே பாதத்தின் சொரூபமெனச சமபவிக்கில் றது. பிரதிபந்தகமின்றிய முகம் கண்ணாடி முதலியவற்றின ஞானத்தால் முகத்திற பிரதிபிம்பத்தன்மை முதலிய தர்மங்களின், அங்ஙனமே கண்ணாடியில்

பிரதிபிம்ப முதலிய தர்மிகளின் மித்தியாதன்மை நிச்சய முண்டாகின்றது. அங்ஙனமே அபாவ நிசய முண்டாகின்றது. ஆதலால் பிரஹ்ம ஞானமின்றிப் பிரதிபிமபாதியாசத்தின் பாத முண்டாகிறதில்லை என்று கூறுதல் பொருதமுடையதன்று.

## உகூஉ. முகம் கண்ணடி முதலிய அதிஷ்டானத்தின் ஞானம் பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருத்திக்கு ஏதுவாதல்.

அதிஷ்டான ஞானத்தினால் அத்தியாசத்தின் பாதரூப நிவிருத்தி யுண்டாதல்போல முகம கண்ணடி முதலிபவற்றின் அபரோகூஷஞானத்தினாலும பிரதிபதகமின்மிய காலத்தில பிரதிபிம்பாத்தியாசத்தின் நிவிருதி அநுபவசித்தமாம். ஆதலால் பிரதிபதகபாவத்தோடுகூடிய முகம கண்ணடி முதலியவற்றின் ஞானமும அதிஷ்டானதத்தினபோல அதியாச நிவிருத்திக்கு ஏதுவாமென்று மதிகசுத்தக்கதாம. முகம கண்ணடி முதலியவற்றின் ஞானததிறகுப பிரதிபிமபாதியாச நிவிருதியின காரணத்தன்மை சமபவிகதவும செய்கின்றது. எனெனின் சமான விஷயமுடைய ஞானததோடு அஞ்ஞானதறகு விரோதமுண்டு. பின்ன விஷயமுடைய ஞானத்தோடு அஞ்ஞானதறகு விரோதமின்று. ஆதலால் முகம கண்ணடி முதலிப ஞானதறகு முகம கண்ணடியாதி அவசசின்ன சேதனததுள்ள அவஸ்தாஞ்ஞானத்தோடுதான் விரோதமிருக்கின்றது. பிரஹ்மததை ஆச்சாதி(மறை)க்கும்மூலாஞ்ஞானத்தோடு பிரஹ்மஞானமொழிந்த மறறைய ஞானங்களுக்கு விரோதமில்லை. ஆதலால பிரஹ்மஞான விரோதியாகிய மூலாஞ்ஞானதோடு கண்ணடிமுதலிய ஞானதறகு விரோதமின்மையால், பிரதிபிமபாதியாசத்தின் உபாதானமாகிய மூலாஞ்ஞானத்தின் நிவிருதியானது இல்லையாயினும, அஞ்ஞான நிவிருத்தியின்றியும விரோதிஞானததால்பூவஞானம நிவிருத்தியாதல் அநுபவசித்தமாம்.

## உகூக. முகம் கண்ணடி முதலியவற்றின் ஞானத்திறகு மூலாஞ்ஞானத்தின் நிவிருத்தியின்றிப் பிரதிபிம்பாத்தியாசத்தைக் கெடிக்குந்தன்மை.

எங்கு இரஜ்ஜுவின் அஞ்ஞானத்தினால் சாப்பப் பிரமத்திறகுப்பின் தண்டப்பிரம முண்டாகின்றதோ, அங்குத் தண்டஞான

த்தினால் சார்ப்பத்தின் உபாதானமாகிய அவஸ்தாஞ்ஞானத்தின் நிவிருத்தியோ உண்டாகிறதில்லை. எனெனின் அதிஷ்டானதத்தின் தத்துவஞானத்தினாலேயே அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால இரஜ்ஜு ஞானமின்மி இரஜஜு சேதனத்திருக்கும் அஞஞானத்திறகு நிவிருத்தி சமபவிக்கிறதில்லை. தண்டப் பிரமத்தினாலே இரஜ்ஜு சேதனத்திருக்கும அஞஞானத்தின் நிவிருத்தி உண்டாகுமாயின, உபாதானத்தின அபாவத்தால் தண்டாத்தியாசத்தின் சொரூபமே சித்தியாது. ஆதலால் தண்ட ஞானத்தினால் அஞஞான நிவிருத்தியின்மி எங்ஙனம சாபபாதாதியாசதத்தின் நிவிருத்தி யுண்டாகினறதீதா, அங்ஙனமீம "முகத்திற் பிரதிபிம்பத்தன்மையில்லை, கண்ணடியில முகமிலலை" எனறிவ்வாறு முகம் கண்ணடிகளின ஞானம பிரதிபிமபாதாதியாசதத்திறகு விரோதியாயிருகதலின், அதனாலும பிரதிபிமபாதாதியாசதத்தின நிவிருத்தி உண்டாகின்றது. பிரதிபிமபாதாதியாசதத்தின உபாதானமாகிய மூலாஞ் ஞானத்திறகு முறகூறிய ஞானத்தினால நிவிருத்தி சமபவிகிறதில்லை. முற்கூறிய ஞானத்தினால மூலாஞஞானத்தின் நிவிருத்தியை கூறின, மூலாஞஞானத்தின் காரியமாகிய முகம கணணடி முதலிய வியாவகாரிக பதாரதங்களும நஷடமாதலவேண்டுமே. ஆதலால் முகம கண்ணடி முதலியவறறின் ஞானத்திறகு விரோதியான விஷயத்தையுடையதா யிருத்தலின, அஞ்ஞான நிவிருத்தியின்மியும பிரதிபிமபாதாதியாசதத்தைக் கெடுக்குந்தன்மை யிருக்கின்றது. பாவ்பாவங்களுக்குப் பரஸபர விரோதமுண்டி. ஆதலால் அவற்றின் ஞானமும ஒன்றற்கொன்று விரோதியாம. யாண்டி ஸ்தாணுவில் ஸ்தாணுதத்தன்மை ஞானத்திறகுப்பின் புருஷத்தன்மைப் பிரம முண்டாகின்றதீதா, ஆண்டு"ஸ்தாணுத்தன்மையில்லை" யென்னும் விரோதியாகிய பிரமஞானத்தினால் முன் பிரமாஞானத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. கடமுதலிய பூதலத்தில் கடாபாவத்தின் பிரமஞானதத்திற்குப்பின் கடதீதாடி இந்திரியதத்தின் சையோக முண்டாகக் "கடமுடையது பூதலம" என்னும விரோதியாகிய பிரமாஞானதத்தினால பூவப்பிரமஞானத்தின் நிவிருத்தியுண்டாகின்றது. யாண்டி இரஜ்ஜுவில சாப்பப் பிரமத்திற்குப்பின் தண்டப் பிரமத்தினால சாப்பப பிரமத்தின் நிவிருத்தி உண்டாகின்றதீதா, ஆண்டுத தண்டப்பிரமதத்தினால சாப்பப்பிரமதத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. இவ்வாற்றால சிலவிடத்துப் பிரமஞானதத்தினால் பிரமா

ஞானத்தின் நிவிருத்தியும, சிலவிடத்துப் பிரமஞானத்தினுல பிரமஞானத்தின நிவிருத்தியும் சிலவிடத்துப பிரமஞானத்தினுல பிரமஞானத்தின் நிவிருத்தியும உண்டாகினறன. யாண்டுப் பிரமத்தினுல் பிரமையின நிவிருத்தியும பிரமத்தினுல் பிரமத்தின் நிவிருத்தியும உண்டாகினறனவோ, ஆண்டுப் பிரமத்தின உபாதானமாகிய அஞ்ஞானத்தின இருபபிலேமிய பூவஞானத்தின நிவிருத்தி உண்டாகினறது. யாணடுப் பிரமாஞானத்தினுல பிரமத்தின் நிவிருத்தி உண்டாகினறதேர, ஆணடு அதிஷ்டானத்தின யதாரத்தஞானம பிரமையாயிருத்தலின, அஞ்ஞானத்தோடு பிரமத்தின் நிவிருத்தி உண்டாகினறது. இவ்வாறுரல அதிஷ்டானஞானமின மூலாஞ்ஞானத்தின நிவிருத்தியுமின முகம கண்ணடி முதலியவறறின ஞானத்தால பிரதிபிமபாத்தியாசத்தின நிவிருத்தி சபபவிக்கின்றது.

விசேராதிஞானத்தினுல பூரணஞானத்தின நிவிருத்தி உண்டாகின்றதென்பது நியமம். அதிஷ்டானத்தின யதாரத்த ஞானத்தினுலேயே பூவப் பிரமத்தின நிவிருத்தி யுண்டாமென்னும நியமமில்லை. ஆனுல அதிஷ்டானத்தின் யதாரத்த ஞானமின்றி அஞ்ஞானத்தின் நிவிருத்தி யுண்டாகிறதுநில்லை. ஆகலால அஞ்ஞானத்தின நிவிருத்தி கேவல அதிஷ்டானத்தின விசேஷப் பிரமையினுண்டாகினறது எனபது நியமமாம். விவரணகாரா மதத்தில முகத்தில பிரதிபிமபத்தன்மை கண்ணடியிலிருத்தறன்மை எதிர முகத்தன்மை என்னும அத்தியாசம உண்டாகினறது. அதறகு விசோரதி "முகத்தில பிரதிபிமபத்தனமை முதலியன இல்லை" என்னும ஞானமாம. விருத்தியாரணியகவாமிகளின மதத்தில "கண்ணடியில் முக" மென்னும அத்தியார முண்டாகினறது. "கண்ணடியில் முகமில்லை" என்னும ஞானம அதற்கு விரோதியாம். கையாயிகமதத்திலும பாவாபாவங்களுக்கு ஒனறறகொன்று விரோதம அங்கீகரிக்கபபடடிருக்கினறது, அவறறின ஞானங்களுக்கும விஷய விரோதத்தால விரோதம அங்கீகரிக்கபபடடிருக்கினறது. இவ்வாறறுல மூலாஞ்ஞானத்திறகுப் பிரதிபிமபாத்தியாசத்தின் உபாதானத்தனமையை அங்கீகரிக்கினை, பிமப உபாதியின் சந்நிதான வடிவப் பிரதிபந்தகமின்மையும காலத்தில முகம கண்ணடி முதலியவறறின ஞானத்தால அஞ்ஞான நிவிருத்தியின மியும முறகூறிய அத்தியாசத்தின் நிவிருத்தி சபபவிக்கின்றது.

## உகச முற்கூறிய பகுத்தில் பத்மபாதாசாரியராற் செய்யப்பட்ட பஞ்சபாதிகையின்படி தூலாஞ்ஞானத்திற்கு அத்தியாசத்தின் வ துத்தன்மையைக் கூறும் வாதியின் சங்கை.

ஆனல் இப்பகுதத்தில் இது சங்கையாம:—சாரீரகபாஷியத் திற்குப் பஞ்சபாதிகை என்னுமுரை பதமபாதாசாரியராற் செய்ய ப்பட்டிருக்கின்றது. அதற்குப் பாஷியகாரரது வசனதினுல் சர்வ ஞ்ஞத்தன்மை உண்டாயிருக்கின்றது. அதச சர்வஞ்ஞ வசன மாகிய பஞ்சபாதிகையில் இது எழுதப்பட்டிருக்கின்றது:— யாண்டுச் சாப்பம இரஜதமுதலிய பிரமமுண்டாகின்றதோ, ஆண்டு இரஜ்ஜு சுத்திகளின் ஞானத்தினுல் சர்ப்ப மிரஜத முதலியவற் றின் உபாதானமாகிய அஞ்ஞானத்தின் நிவிருத்தி உண்டாகின் றது. அஞ்ஞானத்தின் நிவிருதியினல சர்ப்ப மிரஜதமுதலிய அததியாசதின் நிவிருதி உண்டாகின்றது. இரஜ்ஜு சுத்தி முதலியவற்றின் ஞானதினைச சாப்ப மிரஜத முதலியவற்றின் நிவிருத்தியில் காரணமெனக் கொள்ளின, உபாதானத் தின் நாசத்தால் பாவகாரியந்தின நாசமுண்டாகும என்னும நிய மத்திற்குக் கேடுண்டாகும. அதிஷ்டான ஞானதினுல் அஞ்ஞா த்திற்கு நாசமுண்டாகின்றது. அஞ்ஞானதின நாசததால் அததி யாசத்திற்கு நாசமுண்டாகினறது என்று இவ்வாறு அங்கீகரிக் கின், முற்கூறிய நியமதிற்கு வியபிசாரமுண்டாகிறதில்லை. அந்த காரத்தினப்போல அஞ்ஞானமும பாவரூபமாயினும், அஞ்ஞா னம் அநாதியாயிருததலின் காரியமன்று. ஆதலால் அஞ்ஞானத் தின் நிவிருதியோ அதிஷ்டான ஞானத்தினுலும சமபவிக்கின் றது. ஆனல் பாவகாரியமாகிய சாப்பமுதலிய அத்தியாசத்தின் நிவிருத்தி உபாதானதின் நாசமினறி உண்டாகிறதில்லை. கடத துவம்சத்தின் நிவிருத்தியும் வேதாநதமததினுண்டாகின்றது. அபாவ பதார்தங்களுக்கு உபாதானகாரண மிருபபதில்லை. ஆத லால் உபாதானத்தின நாசமின்றியும கடததுவமசவடிவ காரியத் தின் நாசமுண்டாம. ஆனல கடத்துவமசம பாவமன்று. ஆதலால் உபாதான நாசத்திற்குப பாவகாரியதின் நாசததில் நியதமாக வதுவாகுந் தன்மையைப பாதுகாத்ததறகுப் பஞ்சபாதிகையில் அஞ்ஞான நிவிருதி வாயிலாக அதிஷ்டான ஞானம அத்தியாச

நிவிருத்திக் கேதுவாதல் கூறப்பட்டிருக்கிறது. அஞ்ஞான நிவிருத்தியை விட்டு அதிஷ்டானஞானம அத்தியாச நிவிருத்திக்குச் சாகூஷாத் ஏதுவாதல் நிஷேதஞ செய்யப்பட்டிருக்கின்றது. மூலாஞ்ஞானத்திற்குப் பிரதிபிமபாத்தியாசத்தின உபாதானதின் மேன்மையை அங்கீகரிக்கின், முற்கூறியபடி அஞ்ஞான நிவிருத்தியின் றியே பிரதிபிம்பாதத்தியாசத்தின் நிவிருகதி அங்கீகரிக்க வேண்டியதாகின்றது. ஆதலால் பஞசபாதிகை வசனதத்திற்கு விரோத முண்டாகும. அவஸ்தாஞஞானதத்தினை முற்கூறிய அதத்தியாசத்திற்கு உபாதானமாகக்கொள்ளின் விரோதமில்லை. ஏனெனின் அவஸ்தாஞ்ஞானதத்தினை முற்கூறிய அதத்தியாசத்திற்குஉபாதானமாகக் கூறின், அவாகள் மதத்தில் விவரணகாரா மதப்படி முகாவசசின் னசேதனதத்திருக்கும அஞஞானம் தாமாதத்தியாசதத்திறகு உபாதானமெனச் சித்திக்கின்றது. வித்தியாரணிய சுவாமிகளின மதப்படி கண்ணுடி அவசசினன சேதனத்திருக்கும அஞஞானம் தர்மி அதத்தியாசதத்திற்கு ஏதுவெனச சித்திகினறது. பிரதிபநதகமின் றிய காலதில முகஞானத்தினுல் அல்லது கண்ணுடிஞானத்தினுல் அவ்வஞ்ஞானஙகளுக்குக் கிரமமாக நிவிருத்தி உண்டாகின்றது. அஞ்ஞான நிவிருத்திவாயிலாக பிரதிபிமபாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. ஆதலால் அவஸ்தாஞஞானத்திற்குப் பிரதிபிம்பாத்தியாசதத்தின் உபாதானத் தனமையை அங்கீகரித்தல் பஞ்சபாதிகை வசனத்திற்கு அதிகூலமாம. மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அதத்தியாசதத்தின் உபாதானத்தன்மையைக் கூறுதல் பஞசபாதிகை வசனத்திற்கு விருத்தமாம. இவ்வீற்றில் முற்கூறிய அத்தியாசதத்திற்கு ஏதுவாதலில அவஸ்தாஞ்ஞானத்திற்கு அங்கீகரிகின், அதற்கு இது பூர்வபகூஷமாம.

## உகூநி. முற்கூறிய சங்கை பொருந்தாமை.

ஆனல் அவஸ்தாஞஞானதத்திற்கு ஏதுதத்தனமையை அங்கீகரிக்கினும், பஞசபாதிகை வசனத்தோடுள்ள விரோதம் பரிகாரமாகாது. அது வருமாறு:—யாண்டுத தாப்பண சமபநதமின்றிய தேவதத்தனது முகதத்தின் அலலது தேவதததமுகம பிரிநத கண்ணுடியின்சாகூஷாத்காரம யஞஞதத்தனுக்குண்டாய், அபித்தகனதத்தில் தேவதததன்னது முகத்திற்குத தாபபனதோடு சமபநத மூண்டாகின்றதோ, ஆண்டும் பிரதிபிமபாததியாசம உண்டாகின்றது.

மூலாஜ்ஞானத்திற்கு உபாதானத்தன்மையை அங்கீகரிக்கின், மூகம் கண்ணுடிமுதலிய சாகூஹாத்காரத்தினுல் அதன் நிவிருத்தி உண்டாகிறதில்லே. முகஜ்ஞானததால் முகாவச்சின்ன சேதனத துள்ள அஜ்ஞானத்தின் நிவிருதத்தியும், அங்ஙனமே கண்ணுடி ஜ்ஞானதத்தினுல் கன்ணுடி யவசசின்ன சேதனத்துள்ள அஜ்ஞான தத்தின நிவிருதத்தியும அவசிய முண்டாகின்றன. முக கண்ணுடி களின் சாகூஹாதகாரத்திற்குப் பிருதியகாலதத்தினும முக கண்ணு டிகளின சந்நிதானத்தால பிரதிபிமபாதத்தியாச முண்டாகின்றது. ஆதலால் முக கண்ணுடிகளின் சாகூஹாதகாரததால் அவஸ்தாஜ் ஜ்ஞானதத்தின் ஆவரண சதத்தி விசிஷ்ட அஜ்ஞானமசதத்தின் நாசம் உண்டாகாமையால், விசேஷ வடிவததால் அபியப்படாத அதிஷ் டானத்தினும அதத்தியாசம சம்பவிக்கின்றது. ஆண்டுக் கண்ணுடி க்கும முகதத்திற்கும் பரஸ்பரவிலேயோகமுண்டாக, பிரதிபநதகா பாவததோடுகூடிய அதிஷ்டான ஜ்ஞானத்தினுல அஜ்ஞான நிவிரு த்திவாயிலாக அத்தியாசத்தின் நிவிருத்தி கூறுதல அவஸ்தாஜ் ஜ்ஞானவாதிக்கும சமபவிகிறதில்லே. ஆனுல ஜ்ஞானதத்தினுல் சாகூஹா த் அத்தியாசத்தின் நிவிருத்திகூறுதலே சமபவிகின்றது. எனெ னின் இரஜ்ஜுஜ்ஞானதத்தினுல் சுதத்தியின் அஜ்ஞானதத்தினது நாசம் உண்டாகிறதில்லே. ஆதலால ஜ்ஞானத்தினுல அஜ்ஞானமாதத்தி த்தின் நாசமுண்டாகிறதில்லே. ஆனுல சமானவிஷயமுள்ள அஜ்ஞா னதத்திறகு ஜ்ஞானதத்தினுல நாசமுண்டாகின்றது. ஜ்ஞானத்தினுல எதன பிரதாசமுண்டாகின்றதோ, அது ஜ்ஞானத்தின் விஷய மென ப்படுகின்றது. அஜ்ஞானத்தினுல் ஆவரிகபப்படுவது யாதோ, அது அஜ்ஞானத்தின் விஷய மெனப்படுகின்றது. யஜ்ஞதத்தனுக்கு அதத்தியாசதத்திற்கு முறகாலத்தில் உண்டாகிய முக கண்ணுடிக ளின் சாகூஹ்தகாரம யாதோ, அத்னுல ஆவரணதத்தின் நாசம உண டாகுதலால் அஜ்ஞானதத்தினுலாகிய அவரண வடிவ அஜ்ஞானத் தினது விஷயகதின அபாவம முக கண்ணுடிகளி லிருக்கின்றது. ஆதலால் ஜ்ஞான அஜ்ஞானங்களின் விரோதகதைச சமபாதிக் கும சமானவிஷயகதன்மையின் பங்கதகால, முறகூறியவிடத்து அஜ்ஞான நிவிருதத்தியினலி அதத்தியாசமாதத்திரத்தின் நிவிருத்தி அவஸ்தாஜ்ஞானவாதிகளும அங்கீகரிகக வேண்டியதாகின்றது. இவ்வாற்றுல் அவஸ்தாஜ்ஞானதத்திற்கு முறகூறிய அதத்தியாசத

தின் உபாதானத்தன்மையை அங்கீகரிக்கினும் பஞ்சபாதிகை வசனத்தோடுள்ள விரோதம் பரிகாரமாகிறதில்லை.

**உகூ. மூலாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அதீதியாசத்தினது ஏதுத்தன்மையை யங்கீகரிக்கின் பஞ்சபாதிகையின் வசனத்தோடு விரோதமும், மூலாஞ்ஞானத்திற்கு ஏதுவாந் தன்மையை அங்கீகரிக்கின் அவி ரோதமும் உளதாதல்.**

அன்றியும் சூக்ஷ்மமாக விசாரிக்கின், அவைதாஞ்ஞானத்திற்கு முற்கூறிய அத்தியாசத்தின் ஏதுத்தனமையை அங்கீகரித்தலே பஞ்சபாதிகை வசனத்திற்கு விரோதமாம். மூலாஞ்ஞானத்திற்கு ஏதுத்தன்மையை அங்கீகரித்தல விரோதமன்று. அது வருமாறு:—ஞானத்தால் கேவல அஞ்ஞானத்தின் நிவிருத்தி யுண்டாகின்றது. அஞ்ஞான விவ உபாதானத்தின் நிவிருத்தியினல் அஞ்ஞான காரியத்தின நிவிருத்தி உண்டாகின்றது. இவ்வாறு பஞ்சபாதிகைவசன மிருக்கின்றது. அதற்கு இது அபிப்பிராயமன்று. பாவகாரியத்தின நாசத்தில உபாதானத்தின் நாசம் நியத வனுவாயிருத்தலின், ஞானத்தினல் அத்தியாச நிவிருத்தி சமபவிக்கிறதில்லை. ஏனென்னின உபாதானத்தின் நாசமின்றிப பாவகாரியத்தின் நாசமுண்டாகிற தில்லையெனின், பாவகாரியத்தின் நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத வனுவாம். பாவகாரியம் துஷ்யணுகமாம். அதன் உபாதானம் பரமாணுக்களாம். அவற்றிற்கு நித்தியத்தன்மை யிருத்தலால் நாசம் சம்பவியாது. ஆதலால் பரமாணு சேர்யோகத்தின் நாசத்தால் துஷ்யணுகத்தின் நாசமுண்டாகின்றது. ஆண்டுப் பாவகாரியத்தின் நாசத்தில உபாதான நாசத்தின் ஏதுத்தன்மைக்கு வியபிசாரமிருக்கின்றது. ஆதல்லாபாவகாரியத்தின் நாசத்தில் உபாதானநாசம வனுவாதலாகிய நியமத்தைப் பாதுகாக்கும் அபிபபிராயத்தினல் பஞ்சபாதிகை கூறியதன்று. கேவல ஆக்கிரகத்தினல பஞ்சபாதிகையின் வசனத்திற்கு முறைகூறிய நியமத்தைப் பாதுகாத்தலில் அபிப்பிராயமெனக்கூறின், தண்டப் பிரமத்தினல் சாபபாத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகாது. நையாயிகமதத்திலும் துஷ்யணுகத்திற்கு வேறுகிய திரவியத்தின் நாசத்தில உபாதானத்தின் நாசத்தினை ஏதுவெனக் கொண்டிருக்

கின்றனர். சகல பாவகாரியங்களின் நாசத்தில் உபாதான நாசத்தை எதுவாகக்கூறின், பரமாணுவும் மனமும நித்தியமாம்; அவற்றிற்கு நாசம் சம்பவியாமையால், அவற்றின் கிரியைக்கும் நாசமுண்டாகாது. அங்ஙனமே நித்தியமான ஆத்மாவின் ஞான முதலிய குணங்களுக்கும நித்தியமாகிய ஆகாயத்தின் சப்த முதலிய குணங்களுக்கும நாசமுண்டாகாது. ஆதலால பாவகாரியங்களின் நாசத்தில் உபாதானத்தின் நாசம் நியத வதுவாமென்று கூறுதல் அசங்கதமாம். ஆனல் சிலவிடங்களில ஆசிரயத்தின் நாசமுண்டாகக் காரியத்தின் ஸ்திதி யிருக்கிறதில்லே. ஆண்டு உபாதானத்தின் நாசமும் காரிய நாசத்திற் கேதுவாம். அங்ஙனமாயினும் காரிய நாசத்தில் உபாதானத்தின் நாசம நியத வதுவன்று. உபாதானத்தின் இருப்பில் அநிய காரணத்தினுமும காரியத்தின் நாசமுண்டாகின்றது. இவ்வாற்றல முற்கூறிய நியமசம்ரக்ஷணியின அபிப்பிராயத்தால் பஞ்சபாதிகை கூறியதன்று. ஆனல் அதிஷ்டான ஞானத்தினல் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகுமிடத்து, அதிஷ்டான ஞானத்திற்கு அதத்தியாச நிவிருத்தியில காரணத்தனமை யில்லே. அதிஷ்டான ஞானமோ அஞ்ஞான நிவிருத்திக்குக் காரணமாம. அஞ்ஞான நிவிருத்தி அத்தியாச நிவிருத்திக்குக் காரணமாம. எங்ஙனம் குலாலன் பிதா கடத்தில் பிறிதோராற்றல் பெறப்பட்ட வனுயிருத்தலின் காரணமாகாதோ, அங்ஙனமே அதத்தியாச நிவிருத்தியில் அதிஷ்டானத்தின் ஞானம பிறிதோராற்றல் பெறப்படுவதாயிருத்தலின் காரணமன்று. இவ்வாற்றல் அதிஷ்டான ஞானத்தினல் அத்தியாசத்தின் நிவிருத்தி உண்டாகுமிடத்து, ஞானத்தினல் அஞ்ஞான மாத்திரத்தின் நிவிருத்தி உண்டாகின்றது. அத்தியாசத்தின் நிவிருத்தி உபாதானமாகிய அஞ்ஞானத்தின் நாசத்தால் உண்டாகின்றது. இது பஞ்சபாதிகை வசனத்தின் அபிப்பிராயமாம். எங்கும் அத்தியாசத்தின நிவிருத்தியில் அஞ்ஞான நிவிருத்திக்கு ஏதுத்தன்மை யிருக்கின்றது என்னும அபிப்பிராயத்தால் பஞ்சபாதிகை கூறியுளதேல், தண்டப்பிரமத்தினல் அஞ்ஞான நிவிருத்தியின்மையால் சர்ப்பப்பிரமத்தின் நிவிருத்தி உண்டாகலாகாது. ஆதலால் அதிஷ்டானத்தின யதார்த்த ஞானத்தினல் அத்தியாச நிவிருத்தி உண்டாகின்றது. ஆண்டு அஞ்ஞானத்தின் நிவிருத்தியே அத்தியாச நிவிருத்திக்கு ஏதுவாமென்னும் நியமம் பஞ்சபாதிகை நூலிற் கருதப்படாதாம். அவலதாஞ்ஞானத்திற்குப்

